# நல்லைக்குமரன் மலர்

SL




யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற
சைவசமய விவகாரக்குழு

2009

55.32
நல்லை
LIPR

இதழ் 17

உ
சிவமயம்



# நல்லைக்குமரன் மலர் - 17

# 2009

பதிப்பாசிரியர் :
**நல்லையா விஜயசுந்தரம்**

**சைவசமய விவகாரக்குழு**
**யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்**

# யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றத்தின் சைவசமய விவகாரக் குழு

## நிர்வாகசபை உறுப்பினர்கள் - 2009

| | | |
|---|---|---|
| தலைவர் | : | திரு. மு. செ. சரவணபவ<br>மாநகர ஆணையாளர் யாழ்ப்பாணம். |
| செயலாளர் | : | திரு. இ. இரத்தினசிங்கம்<br>இளைப்பாறிய செயலாளர், யா.மா.ச |
| பொருளாளர் | : | திரு. து. சோமசுந்தரம்<br>சனசமூக நிலைய மேற்பார்வையாளர் |
| நிர்வாகசபை உறுப்பினர்கள் | : | திரு. நா. இரகுமார்<br>பொது சுகாதாரப் பரிசோதகர்<br>திரு.து.இராஜன்<br>தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்)<br>திருமதி. பா. சிவநந்தினி<br>நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் (தகவல் தொழில்நுட்பம்)<br>திருமதி. ஞா.மோகனசுந்தரம்<br>வேலை மேற்பார்வையாளர்<br>திரு. பு.ஆறுமுகதாசன்<br>பொது சுகாதாரப் பரிசோதகர்<br>திரு.ப.சிவஞானவேல்<br>முகாமைத்துவ உதவியாளர்<br>திரு. கு. விஜயகுமார்<br>தொழில்நுட்ப உத்தியோகத்தர் (மின்சாரம்)<br>திரு.சோ.கணேசநாதன்<br>வேலை மேற்பார்வையாளர்<br>திரு.சி.சிவராஜேஸ்வரன்<br>சுகாதார மேற்பார்வையாளர்.<br>திரு.ச.லோகசிவம்<br>சனசமூக நிலைய மேற்பார்வையாளர்<br>செல்வி.பொ.புஸ்பலதா<br>கருவியறைப் பாதுகாவலர்<br>திரு.சி.கிருஷ்ணமூர்த்தி<br>பதிவகக் காப்பாளர் |
| விளம்பர அனுசரணையாளர் | : | திரு. த. கனகசபை<br>இளைப்பாறிய பிரதம காசாளர்,<br>யாழ் மாநகரசபை, யாழ்ப்பாணம். |
| கௌரவ பதிப்பாசிரியர் | : | திரு. ந. விஜயசுந்தரம் |

உ
சிவமயம்



# சமர்ப்பணம்

நல்லூரில் வீற்றிருந்து எமை ஆளும் நல்லைக் கந்தனுக்கு இது பதினேழாவது மலர். அவனின் திவ்ய பெருங்கருணையினால் மலர் வருடந் தோறும் வெளிவருகின்றது.

அதேநேரம் எங்கள் துன்பச் சுமைகள் மனித மொழிகளில் விபரித்துவிட முடியாதவை. பதினேழாவது நல்லைக் குமரன் மலர் வெளிவரும் அதே நேரம் சுமார் மூன்று இலட்சம் தமிழ் மக்கள் முகாம்களில் அடைபட்டுள்ளனர் என்ற நெஞ்சைப் பிழியும் செய்தி மறந்து போவதற்குரியதல்ல. மிகப்பெரும் வன்னி யுத்தம் - அதனால் ஏற்பட்ட மனிதப் பேரழிவு - இன்னமும் முற்றுப்பெறாத சோகம் என எல்லாவற்றையும் தாங்கிக் கொண்டு ஆறுமுகக்கடவுள் இருக்கின் றான். அவன் எம்மைக் காத்தருள்வான் என்ற நம்பிக்கையோடு, எங்கள் பணி தொடர்கிறது.

யுத்த சூழ்நிலையிலும், எங்கள் உறவுகள் முகாம்களில் அடைபட்டு அவலப்பட்ட நிலையிலும் நல்லைக்குமரன் மலர் வெளிவருகின்றதெனில் அதற்குள் இருக்கக் கூடிய ஆழமான - ஆத்மார்த்தமான நோக்கு எங்கள் மொழி, எங்கள் சமயம், எங்கள் வழிபாடு, எங்கள் கலை கலாசாரப் பண்பாடு என்பதன் இறுக்கமான பற்றென்பது அறிதற்குரியது.

எந்தத் துன்பம் வந்தாலும் அதனைத் தாங்கி சைவம் வளர்த்த அருளாளர்கள் அவதரித்த நம் சமயம் எக்காலத்திலும் நிலைக்க வேண்டும், பாதுகாக்கப்பட வேண்டும். அதனிலும் சிவபூமி எனச் சிறப்புப் பெறும் ஈழத்தில் சைவம் தழைத்தோங்க தர்ம அமைப்புகள் உருவாக வேண்டும். சைவசமயத் திற்கென பொதுவான தலைமைத்துவமின்மையே ஈழத்திருநாட்டில் அச்சமயத் தின் பலவீனம் என்ற உண்மை உணரப்பட்டு ஏற்ற பரிகாரம் காணப்படுவது அவசியம்.

யாழ்ப்பாணத்தில் அனைத்து இந்து ஆலயங்களையும் இணைக்கும் வண்ணம் நல்லை ஆதீன சுவாமிகளின் தலைமையில் இந்த ஆண்டு அமைக்கப்பட்ட இந்து அமைப்புகளின் ஒன்றியம் - அதன் செயற்பாடுகள், அந்த அமைப்புக்கு இந்து ஆலயங்களும், பொதுமக்களும், வர்த்தக சமூகமும் வழங்கும் ஒத்துழைப்பு மனதிற்கு ஆறுதல் தருகிறது. இது சைவ சமயத்தின் ஆரோக்கியமான தலைமையின் உதயமாக அமையட்டும்.

இடம்பெயர்ந்து நலன்புரிநிலையங்களில் உள்ள இந்து மத குருமார் இதுவரை விடுவிக்கப்படவில்லை என்ற துன்பச் செய்தி எம் சமயத்தின் பெறுமானம் எந்நிலையில் உள்ளதென்பதை கோடி காட்டுகின்றது.

எங்கள் சைவசமயம் ஈழமண்ணில் ஆரோக்கியமாக மிளிரவேண்டுமாயின் முதலில் எங்கள் மதகுருமாரின் கௌரவம் பாதுகாக்கப்பட வேண்டும். ஏனையமத குருமாருக்குக் கிடைக்கக் கூடியதான கௌரவம் இவர்களுக்கும் கிடைக்க வேண்டும். இதனை உறுதி செய்யும் தார்மீகப் பொறுப்பு சைவசமய அமைப்புகளுக்கு குறிப்பாக இந்து அமைப்புகளின் ஒன்றியத்திற்கு உண்டு. இதற்காகக் குரல்கொடுப்பதும் தகுந்த நடவடிக்கை எடுப்பதும் கட்டாயமானதாகும் இது இறைவன் நமக்குத் தந்த கட்டளை என்ற கருத்தை நல்லைக் குமரனின் பதினேழாவது மலரின் கருப் பொருளாகத் தந்து,

இடம்பெயர்ந்து முகாம்களில் அடைபட்டுள்ள மக்களின் மீட்புக்காகவும், யுத்த கொடூரத்தில் இறந்து போன எங்கள் உறவுகளின் ஆத்ம ஈடேற்றத்திற்காகவும் நல்லூர்க் கந்தப் பெருமானைத் தொழுது அவன் பாத கமலங்களில் இம்மலரைச் சமர்ப்பிக்கின்றோம்.

**மேன்மை கொள் சைவநீதி**
**விளங்குக உலகமெல்லாம்**

சைவசமய விவகாரக் குழு,
யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்.

பதிப்பாசிரியர்,
**நல்லைக்குமரன் மலர்**

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| **சமர்ப்பணம்** | |
| **ஆசிச் செய்திகள்** | |
| **வாழ்த்துச் செய்திகள்** | |
| **தினமும் குமரன் திருநாமங்கள் செப்பிடுவோர்க்குச் சேரும் புண்ணியம்**<br>கவிஞர் வ.யோகானந்தசிவம் | 01-03 |
| **தேடுமெம்முன் வந்து சிரி!**<br>த.ஜெயசீலன் | 04-04 |
| **திருவருளே குருவடிவாம் திறம்**<br>சைவப்புலவர் செல்வி ஆனந்தி ஜெயரட்ணம் | 05-06 |
| **பள்ளி எழுந்தருளாயே!**<br>மலர் சின்னையா | 07-07 |
| **கூறுமடியார் குறைதீர்க்கும் குமரன்**<br>சிவநெறிக் கலாநிதி இராசையா ஸ்ரீதரன் | 08-09 |
| **உளமறிந்து இரங்காதும் இருப்பதேனோ!**<br>கவிஞர் வதிரி கண-எதிர்வீரசிங்கம் | 10-10 |
| **நல்லைச் சண்முகமாலையும் நல்லைத் திருவருக்கமாலையும்**<br>கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் | 13-15 |
| **கந்தன் திருப்பாத மகிமை**<br>திருமதி சண்முகயோகினி ரவீந்திரன் | 16-18 |
| **திருமுருகாற்றுப்படையில் முருக வழிபாடு**<br>ஸ்ரீபதிசர்மா கிருஷ்ணானந்தசர்மா | 19-21 |
| **சிலப்பதிகாரத்தில் முருக வழிபாடு**<br>ஈஸ்வரநாதபிள்ளை குமரன் | 22-29 |
| **கௌமார வழிபாட்டு மரபில் முருகக் கடவுளின் வடிவங்களும், நாமங்களும்**<br>மகேஸ்வரக்குருக்கள் பாலகைலாசநாதசர்மா | 30-44 |
| **முத்தமிழையும் சுவைத்த ஞானபண்டிதன்**<br>மு.சிவலிங்கம் | 45-49 |
| **சேவலும் மயிலும் போற்றி! திருக்கைவேல் போற்றி! போற்றி!**<br>சைவப்புலவர் வை.சி.சிவசுப்பிரமணியம் | 50-52 |
| **திருப்புகழ் காட்டும் பெண்மை**<br>முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் | 53-63 |
| **மூவர் தமிழ்**<br>சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் | 64-73 |
| **புறநானூறு கூறும் வைதிக சைவம்**<br>மட்டுவில் ஆ.நடராசா | 74-79 |
| **வைதிக தத்துவ நோக்கில் மனம்**<br>க.திலகவதி | 80-86 |
| **இராமாயணம் காட்டும் சிவவழிபாடு**<br>ந.ஜெயபாரதி | 87-91 |

பக்கம்

**இந்து திருமணச் சடங்குகள் வெளிப்படுத்தும் வாழ்வியற்பண்பாடு** 92-97
பேராசிரியர் கலைவாணி இராமநாதன்

**திருவாதவூரர் புராணம் (ஒரு சிறு ஆய்வு)** 98-103
வ.கோவிந்தபிள்ளை

**திருவருட்பயன் : பண்டிதமணி உரைச் சுருக்கம்** 104-107
ச.தங்கமாமயிலோன்

**தேர் - ஒரு வரலாற்று நோக்கு** 108-114
பேராசிரியர் வி.சிவசாமி

**இந்து பண்பாட்டுச் சிந்தனைகளை உலக அரங்கில் பரப்பிய ஈழத்து இந்து சமயப் பெரியார்கள்** 115-121
ப.கணேசலிங்கம்

**தேரடியில் தேர்ந்த சித்தர்கள்** 122-124
மயில்வாகனம் சிவயோகசுந்தரம்

**வடிவும் வண்ணமும்** 125-130
செல்வி. செல்வஅம்பிகை நடராஜா

**தாயுமானவர்** 131-133
கலாநிதி செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம்

**ஆலயந் தொழுவது சாலவும் நன்று பூசனை புரிவது போற்றுதற்குரியது** 134-137
சைவச்செம்மல் செ.மதுசூதனன்

**மருத்துவத்தில் முருகன் இலக்கிய ஆய்வு** 138-141
வைத்தியகலாநிதி க.ஸ்ரீதரன்

**இசைக்கலையும் இந்துசமயக் கோயில்களும்** 142-144
பா.பிரசாந்தனன்

**தமிழகத்தில் உள்ள இந்துக் கோயில்களும் சிற்பக்கலை வளர்ச்சியும்** 145-149
சைவப்புலவர் செ.பரமநாதன்

**ஆன்மீக வாழ்க்கை - சில கருத்துக்கள்** 150-152
க.சிவலிங்கம்

**தர்மத்தை நிலைநாட்டும் அவதார புருஷர்கள்** 153-161
கணேசன் சைவசிகாமணி

**காவிரிநாயகன்** 162-164
பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்தசர்மா

**செழுமை மிகுந்த பழமைகளுக்கு மீண்டும் புத்துயிரூட்டுவோம்!** 165-167
இ.இரத்தினசிங்கம்

**பொருள் போகுமிடம் புண்ணியமே!** 168-168
து.சோமசுந்தரம்

2009 யாழ்விருது பெறும் அரச அதிபர் உயர்திரு கே.கணேஷ் 169-170

**நன்றியுரை**

**விளம்பரம்**



# நல்லைக் குமரன் மலர்

## 2009

### ஆசி, வாழ்த்துச் செய்திகள்

- நல்லை ஆதீன முதல்வர்

  *ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய ஸ்வாமிகள்*
- திருவாவடுதுறை ஆதீன சுவாமிகள்

  *சீர்வளர் சீர் சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்*
- பருத்தித்துறை சாரதா சேவாச்சிரம சுவாமிகள்

  *சுவாமி சித்ரூபானந்தா*
- மாவை ஆதீன கர்த்தா

  *மஹாராஜஸ்ரீ சு.து. ஷண்முகநாதக்குருக்கள்*
- யாழ் மாவட்ட அரசாங்க அதிபர்

  *திரு.க.கணேஷ்*
- யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர்

  *பேராசிரியர் நா. சண்முகலிங்கன்*
- கிழக்கு மாகாண பிரதம செயலாளர்

  *திரு.வே.பொ.பாலசிங்கம்*
- யாழ் மாநகரசபை ஆணையாளர்

  *திரு.மு.செ.சரவணபவ*
- இந்துசமய கலாசார திணைக்களப் பணிப்பாளர்

  *சாந்தி நாவுக்கரசன்*



உ

குருபாதம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

ஸ்தாபகர்: ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்.
குருமஹா சந்நிதானம் ஆதி முதல்வர்.

ஆதீன முதல்வர்: **ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த** பரமாச்சாரிய சுவாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம்.
*பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம், இலங்கை.*



## நல்லை ஆதீன முதல்வரின்

## அருளாசிச்செய்தி

**அருளோங்கும் சைவ மெய்யன்பர்களே!**

யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழு இவ்வருடம் பதினேழாவது "நல்லைக் குமரன் மலரை" வெளியிட இருப்பதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றோம். நல்லூர் முருகனுக்கு நடைபெறும் திருவிழாவைச் சிறப்பிக்கும் முகமாக வெளிவரும் நல்லைக் குமரன் மலர், சைவமக்கள் மத்தியில் பெரு எழுச்சியை உண்டுபண்ணியுள்ளது.

சமயக் கருத்துக்களையும், தத்துவ விளக்கங்களையும் தரும் கட்டுரைகள், கவிதைகளைத் தாங்கி இம்மலர் வெளிவருவது மனநிறைவைத் தருவதாகும். உள்ளம் கசிந்துருகி முருகன் புகழ் பாடுவோர்க்கு இம் மலர் துணை நிற்கும். கலியுக வரதனுக்கு நாமாற்றும் கைங்கரியங்களெல்லாம் மேன்மையானவை. திரிகரண சுத்தியோடு பெருமானின் திருவடிகளை இறுகப் பற்றிக் கொண்டால், நாம் வேண்டுவனவெல்லாம் நிறைவுபெறும்.

அலங்காரக் கந்தனாக எழுந்தருளி, யாழ்ப்பாண மக்களை மட்டுமன்றி உலக மக்கள் யாவரையும் தன் அருட்கண் பார்வையினால் காத்து வரும் முருகப்பெருமானை அலங்கரிக்கும் முகமாக யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழு நல்லைக்குமரன் மலரை வெளியிட்டு ஆற்றும் அரும்பணியானது சைவமக்கள் செய்த பெரும் பேறாகும். ஒவ்வொரு ஆண்டும் இம் மலரினை வெளியிட்டு வரும் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவினருக்கும் சைவமக்களுக்கும் இறைவனுடைய ஆசிகள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

"**என்றும் வேண்டும் இன்ப அன்பு**".

நல்லை ஆதீனம்,
நல்லூர்.

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த**
**பரமாச்சாரிய ஸ்வாமிகள்**
**இரண்டாவது குருமஹா சந்நிதானம்**

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்
23-ஆவது குரு மகாசன்னிதானம்
சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக
பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்
திருவாவடுதுறை - 609 803, நாகை மாவட்டம்.
தொலைபேசி எண்: 04364 - 232021

# திருவாவடுதுறை ஆதீன சுவாமிகளின்
# அருள்வாழ்த்துரை

"நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சின் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க"

நமச்சி வாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே - அப்பர் தேவாரம்

நல்லைக் கந்தனின் வருடாந்த மகோற்சவ காலங்களில் யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவினரால் தொடர்ந்து வெளியிடப் பெற்று வரும் "நல்லைக் குமரன் மலர்" இவ்வாண்டு 17ஆவது வெளியீடாக மலர இருப்பது அறிந்து மகிழ்ச்சி அடைகின்றோம்.

"ஆதலின் நமது சத்தி, அறுமுகன் அவனும் யாமும்
பேதக மன்றால், நம்போற் பிரிவிலன், யாண்டும் நின்றான்" (கந்தபுராணம்)

என்று சிவபெருமானே திருவாய் மலர்ந்தருளி இருப்பதற்கு ஏற்ப முருகப் பெருமானுக்குச் செய்யப் பெறும் வழிபாடுகள் யாவும் சிவநெறி சார்ந்தனவே ஆகும். இத்தகைய அரிய சிவபுண்ணியச் செயல்களில் யாழ்ப்பாணம் - சைவ சமய விவகாரக் குழு இடையறாது ஈடுபட்டு வருதல் பெரிதும் பாராட்டத்தக்கது.

"நல்லைக்குமரன் மலர் - 17" சிறப்புற அமைந்து சைவ உலகில் எந்நாளும் சிவபக்தி மணம் கமழச் செய்து பொலிவுற வேண்டுமென நமது வழிபடு கடவுளாகிய அருள்மிகு ஞானப் பெருங்கூத்தன் திருவடி மலர்களைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

திருவாவடுதுறை ஆதீனம்,
நாகை மாவட்டம், திருவாவடுதுறை.

சீர்வளர் சீர் சிவப்பிரகாச தேசிக
பரமாசாரிய சுவாமிகள்
23வது குருமஹா சந்நிதானம்

# *Sri Ramakrishna Sarada Sevashrama.*

**Point - Pedro,**

**Sri Lanka.**

## பருத்தித்துறை சாரதா சேவாச்சிரம சுவாமிகளின்

## ஆசிச்செய்தி

நல்லைக்குமரன் மலர் 17ஆவதாக மலர உள்ளது. இது மிகவும் போற்றுதற்குரிய கைங்கரியம். நமது இதயக் குகையில் முருகன் வீற்றிருக்கின்றார். நமது உள்ளமானது இன்னும் முறைப்படி உருகவில்லை. நம்மிடம் பக்தி உண்டு. ஆனால் அது தீவிரமானது அல்ல. தீவிரமான பக்தி, ஆர்வமிக்க ஈடுபாடு கொண்டால் அன்றி முருகனின் திருவருள் கிட்டாது. இது முழுவதும் உண்மை. திருவாசகத்திலும், கந்தர் அலங்காரத்திலும் தீவிரமான பக்தி செயல்பாடு விளக்கப்பட்டுள்ளது.

"ஆடுகின்றிலை கூத்துஉடையான் கழற்கு
அன்புஇலை என்பு உருகிப்
பாடுகின்றிலை பதைப்பதும் செய்கிலை
பணிகிலை பாதம் மலர்
சூடுகின்றிலை சூட்டு கின்றதும் இலை
துணைஇலி பிண நெஞ்சே
தேடுகின்றிலை தெருவு தோறு அலறிலை
செய்வது ஒன்று அறியேனே."

(திருவாசகம்)

படிக்கின்றிலை பழநித் திருநாமம் படிப்பவர்தாள்
முடிக்கின்றிலை முருகா என்கிலை முசியாமல்இட்டு
மிடிக்கின்றிலை பரமானந்தம் மேற்கொள விம்மிவிம்மி
நடிக்கின்றிலை நெஞ்சமே தஞ்சம்ஏது நமக்கினியே.

(கந்தர் அலங்காரம்)

ஆகவே இப்புனித நன்னாளில் நல்லைக்கந்தன் சகலரையும், அடியேனையும் காத்தருள்வாராக.

சாரதா சேவாச்சிரமம்,
பருத்தித்துறை.

**சுவாமி சித்ரூபானந்தா**



உ

குகமயம்

# மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில்

# MAVIDDAPURAM KANTHASWAMY TEMPLE


மஹாராஜஸ்ரீ
ச. து. ஷண்முகநாதக் குருக்கள்
ஆதீன கர்த்தா – பிரதமகுரு,
மாவையாதீனம்,
மாவிட்டபுரம்,
தெல்லிப்பழை.

T.P : 021 222 5799

Maharajasri:
S.D. Shanmuganatha Kurukkal
*Governing Authority & Chief High priest*
*Mavai Aadheenam.*
*Maviddapuram, Sri Lanka.*
*TELLIPPALAI*


## மாவை ஆதீன கர்த்தாவின்

## ஆசிச் செய்தி

பார்க்குமிடமெலாம் பரம்பொருள், சிறுகுடில்களுள்ளும் மாடமாளிகைக்குள்ளும், கண்கவர் பொலிவுகளடங்கிய இல்லங்களிலும் வீற்றிருப்பதைக் காணமுடிகிறது. ஆனால் முழுமையான சிவமயமான சிந்தனைகளோ, செயற்பாடுகளோ உள்ளங்களுள் அரும்புவது குறைவு. கருவில் உருவாகி கடைசியில் எரியுண்டு சாம்பராகி கங்கையில் சங்கமிக்கத் தயாராகும் ‘மனிதன்’ தான் எதையெதையோ முன்னெடுத்து சிவமயங்களை வளர்த்து வருவதற்காக பரம்பொருளின் இருப்புக்கு ஆவன செய்கிறான். ஆனால் நினைவில் துளிரும் எண்ணங்கட்கு முறையான செயற்பாடுகள் தான் உறுதுணை தருவதில்லை. காரணம், பரம்பொருளை பரமபதியாக வளர்க்கும் மார்க்கங்களில் போதிய அறிவோ, செயற்கருமங்களோ இல்லாததுதான். உலோகாயத தாக்கங்களும் சிவமய சிந்தனைகட்கு ஆப்பு வைப்பதையும் உணரலாம்.

திருமூலர் கண்ட இச்சிவபூமி இன்று எங்கேயென அறியமுடியவில்லை. சிவமயம் பலசமய மயமாகிவிட்டது. சிவகலாசாரம், அதனோடிணைந்த நடை, உடை பாவனை யாவும் பாவச் சின்னங்களோடு உலோகாயத உல்லாசங்களால் ஆக்கிரமிக்கப்பட்டு அழிவுப் பாதையில் நகர்கிறது. இதெல்லாம் மனிதனது புத்தியில் எழுந்த செயற்பாடுகளே தான். சைவன் தன்னிலை தளர்ந்து, தன் கருமங்களைத் தளர்த்தி பிறமத சகவாச உணர்வுகளை ஏற்று அதன்வழி ஒழுகுதல், தருமச் செயல்களை மறந்து, அதர்மத்தின் ஆசான்களான பிற மதபோதகர்களது போதனைகட்கு வசமாகுதல். இத்தகைய துன்மார்க்கங்களால் ஏவப்பட்ட சைவன் சிவமயத்தையே மறைக்கவும் முன்னாகிறான். இதனாற்றான் பரம்பொருளின் இல்லங்களும் பொலிவுகுன்றி, சில இடங்களில் பராபரிப்பின்றி தாழ்வடைகிறது. இவை மன்னனுக்கு தீங்கும், மாரிவளங்குன்றி பஞ்சம் பட்டினி உலகில் உருவாகவும் அமையுமென திருமூலர்,

“முன்னவனார் கோவில் பூசைகள் முட்டிடின்
மன்னர்க்கு தீங்குள மாரிவளங் குன்றும்”

என்றெல்லாம் எப்போவோ கூறிவிட்டார். இக்கால கல்விக் கூடங்களில் கூட திருமூலர்

யாரென்றோ, சிவபூமி எதுவென்றோ சிவமயம் எனில் என்னவென்றோ அறியாத நிலையில் தான் சைவம் தாழ்ந்து கொண்டிருக்கிறது.

பரந்து விரிந்து நிற்கும் சைவ மன்றங்கள், சிவசார்பென்ற நிலையில் பற்பல செயற்பாடுகளை நவீன உத்திகளோடு முன்னெடுத்தும், சமய சஞ்சிகைகள் பொருள் தேடும் நோக்கோடு பயனற்ற கருத்துகளை மிலேச்சசார்போடு கலந்த செய்திகளை வெளியீடு செய்தும் இதுதான் சிவமயம் என நிலைநாட்ட முனைகிறார்கள். இதெல்லாம் கள்ளம் கபடம் தந்திர புத்திகளையும் கொண்ட அரசியல் ஆயாதிகளும் பறங்கிப் பட்டமுடன் பறங்கிக் கலாசாரங்களோடு, பிற மதபோதகர்களது சகவாசத்தோடு திரியும் சைவடமிளர்களது பிரயத்தனமே தான்.

நல்ல வேளை, இந்த கொடிய நரகவேதனைக்குள், யாழ் மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழு இறைவனது திருவருளால் தோற்றங் கொண்டு பதினேழு வருடகாலமாக சிவசேனை நிலையில்நின்று சிவமத சாயல்களை உயிர்ப்பித்த வண்ணம் தொண்டாற்றுகிறார்கள். இந்த பதினேழு வருடகால அட்டவணையில் வெளிக் கொணர்ந்த 'நல்லைக் குமரன் மலர்', இதுவரை காலத்திற்கேற்ற கோலமாகவோ, சூழலிற்கேற்றவாறு வழிமாறி மாறுபட்ட வகையில் விடயதானங்களை புகுத்தியோ, அல்லது பிறமத வசீகரங்களுக்கு அகப்படாது ஓர் சிவமயச் சின்னமாக நல்லைக் குமரன் மலர் வளர்ந்து வந்ததும் ஓர் தவச் செயலேதான்.

தெய்வீகச் சூழலிற்குள் ரமம்மியமான மணியோசையோடு நிறைகொண்ட மந்திர சக்திகளோடு இணைந்த கூட்டத்தினுள் யாழ். மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழு இயங்குவதும் ஓர் தவச் செயலே. சைவசமயம் எதிர்நோக்கியிருக்கும் சங்கடங்களையும் இக்குழு நன்கு ஆராய்ந்து சிவபூமியின் சிவமயங்களை துணிவோடு காப்பாற்ற வேண்டிய பெருந்தொண்டும் இவர்களிடம் அணைகிறது. சைவமக்கள் இவர்கட்கு உறுதுணை தருவதும் முக்கியம். எல்லாம் வல்ல வல்லி தேவசேனா சமேத சுப்ரமண்யப் பெருமானது திருவருட் துணைகள் இம்மன்றத்தினருக்குக் கிடைத்து சிவசேவைகளைத் துணிந்து முன்னெடுக்க இவர்கட்கு அருள்பாலிக்க வேண்டுமெனப் பிரார்த்தித்து யானும் ஆசீர்வதிக்கின்றேன்.

**மாவை ஆதீனம்**
மாவிட்டபுரம்

**மஹாராஜஸ்ரீ சு.து. ஷண்முகநாதக்குருக்கள்**
**மாவையாதீன கர்த்தா**

දිසාපති / දිස්ත්‍රික් ලේකම්
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்
Government Agent / District Secretary
දුරකථනය
தொலைபேசி } 021-222 2235
Telephone

දුරකථනය පොදු
பொது தொலைபேசி } 021-222 223
General Telephone } 021-222 223

දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය, යාපනය.
மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.
District Secretariat, Jaffna.

ෆැක්ස්
பக்ஸ் } 021-222 2355
Fax
E-mail: gajaffna@sltnet.lk

මගේ අංකය
எனது எண் } GA/JF/02
My No.

ඔබේ අංකය
உமது எண் }
Your No.

දිනය
திகதி } 05.08.2008
Date

# யாழ்ப்பாண அரசாங்க அதிபரின் வாழ்த்துச்செய்தி

பாரம்பரியமும், பண்பாட்டுப் பெருமையும் நிறையப் பெற்ற எம்மண்ணில், மேலான பெருமைகளாய் அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவான இறைவனுறை ஆலயங்கள் அமைகின்றன. இத்தகைய தெய்வீகச் சூழலின் இலக்கணமாய், அழகு, அருள், அமைதி, அளவிடற்கரிய ஒழுங்கு என்பவற்றால் எவரையும் வியக்க வைத்துள்ள நல்லூர்க் கந்தன் ஆலயத்தில் ‘‘அழகென்ற சொல்லுக்கு முருகா’’ என்று பக்தர்களால் ஆராதிக்கப்படும் அழகன் முருகன், அலங்காரக் கந்தனாய் அருளாட்சி புரிகின்றான்.

யாழ் குடாநாடு முழுமையும் பக்திக்கோலம் பூண்டு நிற்கும் நல்லூர்க் கந்தனின் மஹோற்சவ காலம் மகத்துவமானதாம். நல்லூரானை நாடிவரும் அடியார்க்கு அடியாராய் நின்று தொண்டு செய்யும் ஆர்வலர்களின் அன்புமயமான செயற்பாடுகள் ஆலயத்தோடு அமையாது, இன்று அன்பையும், அமைதியையும் அரவணைப்பையும் நாடிநிற்கும் சமுதாயத்தில், அனைத்து விடயங்களிலும் வேரூன்றி விழுதுவிட வேண்டுமென்பதே எமது பேரவா.

இடர்பல வரினும் தம் பணியில் தளராது நின்று மக்களை நல்லாற்றுப்படுத்தவும், நல்லூரான் புகழ் சொல்லவும் அயராதுழைத்து, நல்லைக்குமரன் மலராய் - தொடராய் இன்று பதினேழாவது இதழைப் பாங்குற வெளியிடும், யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக்குழுவின் பணி செவ்வனே தொடர்ந்து சிறப்புற நிகழ நல்லூரார்ச் செவ்வேளின் தாள்பணிந்து வாழ்த்துகின்றேன்.

**மாவட்ட செயலகம்,**
**யாழ்ப்பாணம்.**

**க.கணேஷ்**
**அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலாளர்**
**யாழ் மாவட்டம்.**

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
# University of Jaffna - Sri Lanka

## யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தரின் வாழ்த்துச்செய்தி

அறிவாகிய கோயிலிலே
அருளாகிய தாய் மடிமேல்
பொறிவேலுடனே வருவாய் அடியார்
புதுவாழ்வுறவே புவிமீதருள்வாய் - பாரதி

புதுவாழ்வுக்கான எங்கள் தவப்பயனாய் நல்லூர் முருகன் பெருந்திருவிழாவின் தொடக்கமும் தொடர்ச்சியும் அமைகின்றன.

நல்லூர் முருகன் ஞானமணி ஓசையிலே எல்லா மனங்களும் எழுச்சி பெறுகின்றன. எழுச்சி பெறும் மனங்களை மென்மேலும் அழகாக்கும் அறிவு வெளிச்சமாய் ஆண்டுதோறும் தவறாது வெளிவரும் நல்லைக்குமரன் மலரின் வரவினை வாழ்த்தும் இவ்வேளை மேன்மையானது.

எங்கள் பண்பாட்டின் பெருநிதியம் நல்லூர்; எங்கள் பாரம்பரியம் கண்ட பெரும் கடவுள் முருகன். தொன்மையான எங்கள் முருக வழிபாட்டின் உயிர்த்தடங்கள் தேசப் பரப்பெலாம் வியாபகமாயுள்ளன.

மாவிட்டபுரம், செல்வச்சந்நிதி, திருக்கோயில், மண்டூர், உகந்தை, கதிர்காமம் என விரிந்த முருகன் ஆலயங்களிடை நல்லூர் ராசதானி காலத்து அமைந்த நல்லூர் முருகன் ஆலயம், சூழமைவின் காண்டங்களையெல்லாம் தாண்டி என்றும் புதிதாய் எங்கள் வாழ்வின் பெரு நம்பிக்கையாய் நிமிர்ந்து நிற்கின்றது.

நிமிர்ந்த நம் பண்பாட்டின் மேன்மைகளைப் பதிவாக்கும் நல்லைக் குமரன் மலரினை எங்களுக்காக்கும் யாழ்ப்பாண மாநகரசபையின் சைவசமய விவகாரக் குழுவின் அயராப் பணியினைப் போற்றுவோம்.

யாம் இரப்பவை
பொருளும் பொன்னும் போகமுமல்ல நின்பால்
அருளுமன்பும் அறனும் மூன்றும்
உருளினர்க் கடம்பின் ஒலிதாராயோ

எனும் பரிபாடல் புலவன் கடுவன் இளவெயினார் வேண்டுதலையே எமது வேண்டுதலுமாக்குவோம்

யாழ் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி

**பேராசிரியர் நாகலிங்கம் சண்முகலிங்கன்**
**துணைவேந்தர்**

# பிரதம செயலாளர் அலுவலகம்

## கிழக்கு மாகாணம், திருகோணமலை.

## கிழக்கு மாகாண பிரதம செயலாளரின் வாழ்த்துச்செய்தி

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக் குழு தோற்றம் பெற்று இரண்டு தசாப்தங்களைத் தாண்டிய வேளையில் அதனது கடந்தகால செயற்பாடுகள் மற்றும் சமயப் பணிகள் பற்றி ஆராயும் போது காலத்திற்கு ஏற்றளவு வளர்ச்சியைக் கண்டிருப்பது எமக்கு மகிழ்ச்சிக்குரியதொரு உன்னத விடயமாகும்.

சைவசமய விவகாரக் குழு இவ்வாறானதொரு வளர்ச்சியை எய்துவதற்கு அதற்குத் தலைமைதாங்கி அதனை நிர்வகித்துவரும் அனைவரதும் பூரணமான ஒத்துழைப்பே பிரதான காரணமாகும்.

1993ம் ஆண்டு முதல் வெளியிடப்பட்டுவரும் நல்லைக் குமரன் மலரின் வரிசையில் இவ்வருடம் வெளிவரவிருப்பது 17ஆவது மலராகும். இம்மலர் தமிழ் மக்களின் கண்கண்ட தெய்வமாகிய நல்லைக் கந்தனின் உற்சவகாலத்தில் வெளிவந்து கொண்டிருப்பது போற்றுதற்குரியது.

நெருக்கடியான பல காலகட்டங்களிலும் தடையேதுமின்றி இம்மலர் வெளிவந்து கொண்டிருப்பதை எண்ணும் போது இவ்வரிய பணிக்கு குமரனது திருவருள் துணைநிற்பது புலனாகும்.

மாநகரசபையினது மக்கள் சேவையும், சைவசமய விவகாரக் குழுவினது சமயப் பணியும் வளர்ந்தோங்க வேண்டுமென நல்லைக் கந்தனின் தாள்பணிந்து உளமார வாழ்த்துகின்றேன்.

கிழக்கு மாகாணசபை
திருகோணமலை

**வே.பொ.பாலசிங்கம்**
**முன்னாள் யாழ் மாநகர ஆணையாளர்,**
**கிழக்கு மாகாண பிரதம செயலாளர்.**

யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்
JAFFNA MUNICIPAL COUNCIL

# யாழ்ப்பாண மாநகர ஆணையாளரின் வாழ்த்துச்செய்தி

உலகெங்கும் பரந்து வாழும் எமது மக்களின் தேசியத் திருவிழாவாகிய நல்லைக் கந்தனின் மகோற்சவ காலத்தில் ''கந்தபுராணக் கலாசாரமே யாழ்ப்பாணத்துக் கலாசாரம்'' எனச் சிறப்பித்துக் கூறுமளவுக்கு சுத்தம் பேணி, சுகாதாரம் காத்து, குடிநீர் வழங்கி, அடியவர்களுக்கு அவசியமான அனைத்துச் சேவைகளையும் வழங்கிவரும் பணிக்கு மேலாக, யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக்குழுவானது நல்லைக்குமரன் மலரினை கடந்த 1993ஆம் ஆண்டு முதல் வெளியிட்டு வருகின்ற வரிசையில் இவ்வருடமும் முருகனது உற்சவகாலத்தில் 17ஆவது மலரினை வெளியிட்டிருப்பது குறித்து மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

நெருக்கடியான கால கட்டங்களில் எல்லாம் சற்றும் மனந்தளராது சைவசமய விவகாரக்குழுவினர் மிகுந்த அர்ப்பணிப்புடன் மலரை வெளியிட்டு வருவதற்கு அவன் அருளே தோன்றாத் துணையாகவுள்ளது என்றால் அது மிகையாகாது.

சைவசமய விவகாரக்குழு தனது நோக்கங்களை எய்தும் பொருட்டு மேற்கொண்டு வரும் அறப்பணிகள் நன்கு விரிவடைந்து, படிமுறை வளர்ச்சி கண்டு வருவது மாநகரசபைக்குப் பெருமை சேர்ப்பதாகவே நான் உணருகின்றேன்.

சைவசமய விழுமியங்களை இளையதலைமுறையினரிடையே பரப்பி அவர்களை ஒழுக்க சீலர்களாக, நற்பிரஜைகளாக ஆக்கும் அரும்பணி மேலும் வளர்ந்தோங்க வேண்டுமென எனது சார்பிலும், யாழ் நகர மக்களின் சார்பிலும் மனதார வாழ்த்துகின்றேன்.

மாநகராட்சி மன்றம்,
யாழ்ப்பாணம்

**மு.செ.சரவணபவ**
**சைவசமய விவகாரக் குழுவின் தலைவரும்**
**மாநகர ஆணையாளரும்**

හින්දු ආගමික හා සංස්කෘතික කටයුතු දෙපාර්තමේන්තුව
இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்
**Department of Hindu Religious and Cultural Affairs**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| අධ්‍යක්ෂක / பணிப்பாளர் / Director | 2552643 | ෆැක්ස් / தொலைநகல் / Fax | 2552825 | ඊමේල් / மின் அஞ்சல் / E-Mail | hindudir@yahoo.com |
| පොදු / பொது / General | 2552641 | | | වෙබ් අඩවිය / இணையத்தளம் / Website | www.hindudept.gov.lk |
| මගේ අංකය / எனது இல / My No | | ඔබේ අංකය / உமது இல / Your No | | දිනය / திகதி / Date | 09.06.2008 |


# இந்துசமய, கலாசார திணைக்களப் பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக் குழு நல்லைக் கந்தனின் வருடாந்த மகோற்சவ வைபவத்தை முன்னிட்டு வெளியிடும் "நல்லைக்குமரன்" மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

உலகம் உய்ய வந்துதித்தனன்
ஆங்கே ஒரு திருமுருகன்

உலக மக்களின் உயர்வுக்கும், உய்வுக்கும் எனத் தோன்றிய முருகன் நல்லையம் பதியில் வீற்றிருந்து தன்னை நாடி வருபவர்களுக்கும், சிந்தையால் மனமுருகி வேண்டி நிற்பவர்களுக்கும் அருள் சுரந்து வருகின்றான்.

இப்பெருமானின் வருடாந்த மகோற்சவ காலங்களில் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக் குழு அளப்பரிய சேவைகளைச் செய்து வருவது எல்லோரும் அறிந்த விடயம். 1993ஆம் ஆண்டு முதல் இக் குழுவினரால் நல்லைக் குமரன் மலர் வெளியிடப்பட்டு வருகின்றது. சைவ சமயத்தைச் சார்ந்த மக்கள் அனைவரும் தமது சமய விழுமியங்கள், பாரம்பரியங்கள், விரத அநுட்டானங்களின் மகிமைகள், விழாக்களின் பெருமைகளை அறிந்தவர்கள் என்று கூற முடியாது. சிலர் அறிந்துளரேனும் பலர் அறியாமலே வாழ்கின்றனர். அத்தகையோர் வாசித்து அறிந்து கொள்ள வேண்டும் என்ற உயர்ந்த நோக்கில் இந்து சமய ஆய்வாளர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் இன்னும் பல அறிஞர்களின் கட்டுரைகளைத் தாங்கி வரும் நல்லைக்குமரன் மலர் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக் குழுவின் அரும் பெரும் பணியாகும்.

அவர்களின் இவ் அரிய சேவை இன்னும் பல்லாண்டு தொடர வேண்டுமென நான் மனதார வாழ்த்துகின்றேன்.

**இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்,**
**கொழும்பு - 04.**

**சாந்தி நாவுக்கரசன்**
**பணிப்பாளர்**

# நல்லைக் குமரன் மலர்

## 2009

## பாமாலைகள்


- தினமும் குமரன் திருநாமங்கள் செப்பிடுவோர்க்குச் சேரும் புண்ணியம்

  *கவிஞர் வ.யோகானந்தசிவம்*
- தேடுமெம்முன் வந்து சிரி!

  *த.ஜெயசீலன்*
- திருவருளே குருவடிவாம் திறம்

  *சைவப்புலவர் செல்வி ஆனந்தி ஜெயரட்ணம்*
- பள்ளி எழுந்தருளாயே

  *மலர் சின்னையா*
- கூறுமடியார் குறைதீர்க்கும் குமரன்

  *சிவநெறிக் கலாநிதி இராசையா ஸ்ரீதரன்*
- உளமறிந்து இரங்காதும் இருப்பதேனோ!

  *கவிஞர் வதிரி கண - எதிர்வீரசிங்கம்*

# தினமும் குமரன் திருநாமங்கள் செப்பிடுவோர்க்குச் சேரும் புண்ணியம்

கவிஞர் வ.யோகானந்தசிவம்

குமரனாய் வருவான் தீய சக்திகள்
குடிகொள் ளாமல் அழித்தே விடுவான்
இமயம் போல வீரம் கொண்டதோர்
இயல்பு தன்னை மிகுதியாய் உடையவன்
அமரர் தங்கள் அல்லல் நீங்கிட
அநீதியக் கிரமம் ஆணவ மொழிந்திடத்
தமது வேற்படை யாலே சூரன்
தாரகன் சிங்கனை வலிகெட ஒழித்தவன்

குன்றா இளமையும் அழகும் கொண்ட
குழந்தை முருகன் பெயர தாகும்
அன்பும் அருளும் ஆண்மையும் இனிமையும்
அரிய பண்புக் கிலக்கணம் ஆனவன்
ஒன்றாய்த் திரண்ட உருவமே கந்தன்
ஒருங்கே ஆற்றல் அனைத்தும் கொண்டவன்
தன்மேல் பற்றுக் கொண்ட அடியரைத்
தாங்கிக் கொள்பவன் கந்த சாமியாம்

திருமுகம் கொண்ட அறுமுகன் ஆனவன்
திசைகள் எல்லாம் நோக்கியே இருப்பவன்
பொருள்கள் அனைத்தும் தெய்வங் களினதும்
போற்றற் கரிய ஆற்றலும் கொண்டவன்
இருதயக் குகைக்குள் இருக்கின் றவனாம்
இன்னல் போக்கிக் காக்கின் றவனாம்
தருகின் றபெயரே குகன்என் பதாகும்
தாங்கியே நின்று அருள்புரி வானாம்

கங்கையில் தோன்றித் தவழ்ந்து நின்றவன்
காங்கே யனெனும் பெயரும் கொண்டவன்
திங்களைச் சூடிய சிவனின் நெற்றியில்
திகழும் கண்ணிலே தோன்றிய ஒளியவன்
சங்கரன் படைத்த ஆறு பொறிகளும்
சரவணப் பொய்கையில் ஆறு குழந்தையாய்
தாங்கிய அன்னையர் கார்த்திகைப் பெண்கள்
தம்பால் ஊட்டி வளர்த்தகாத் திகேயனாம்

சரவணப் பொய்கையில் கங்கை விட்டாள்
தாங்கியே தாமரை மலர்கள் ஏற்றன
சரவணன் என்ற நாமம் கொண்டு
சஞ்சலம் தீர்த்து அபயம் அளித்தவன்
அரனின் அருளால் வைகாசி மாதம்
ஆன நட்சத் திரமாம் விசாகம்
பரமன் குமரன் விசாகன் தோன்றினான்
பக்தர் குறைகள் போக்கி அருளினான்

சிவந்த மேனியன் செந்தமிழ் முருகன்
செவ்வேள் முருகவேள் என்று அழைப்பர்
தவமாய் வந்து அருளும் தன்மையன்
சாலவும் விரும்பிப் பக்தர் துதிப்பவன்
உவந்து ஏற்பது மயில்வா கனமாம்
உற்ற மகாமந் திரமா னதுவாம்
இவன்வீற் றிருக்கும் எடுப்பா னதோற்றம்
இலங்கிடும் ஓமென் றபிரண வமானதாம்

கொடியதாம் சேவல் அகவிருள் அகற்றிடும்
குமரன் வருவதைக் கூறியே நின்றிடும்
விடியலை வேண்டிச் சேவல் கூவிடும்
வினைகள் தீர்ப்பான் சேவற் கொடியோன்
பொடியதா கக்கிரௌஞ் சமலையை அழித்தவன்
போற்றும் அடியவர் துன்பம் துடைப்பவன்
அடியவர் அஞ்ஞா னவிருள் அகற்றிடும்
ஆயுதம் தரித்த வேலா யுதனாம்

கடம்ப மாலையை அணிந்து கொண்டவன்
கடம்பன் என்ற பெயரும் பெற்றவன்
இடமாம் குறிஞ்சிக் குரிய மரமாய்
இருப்பதும் சிவந்த கடம்ப மரமே
கடவுள் சுப்பிர மணியருக் குரிய
காரணப் பெயரும் சாமியே ஆகும்
விடமுண் டகண்டன் கொடுத்த வேலோ
வினைகள் அறுக்கும் சிறப்புக் கொண்டதாம்

பெருமை கொண்ட பெயர தாகும்
பேறு பெற்ற சுப்பிர மணியன்
அரும்பெரும் யாகம் ஆற்றும் போது
அழைத்துக் கொள்ளும் புனிதம் உடையவன்
விருப்ப முடனே வேள்வி காப்பவன்
வேதத் திற்கு முக்கிய மானவன்
அருகில் துணைவியர் வள்ளி தெய்வானை
ஆகியோர் உடனே காட்சி தருபவன்

தினமும் குமரன் திருநா மங்கள்
செப்பிடு வோர்க்குச் சேரும் புண்ணியம்
மனமும் வாக்கும் காயமும் அவனின்
மலரடி தொழுது வாழ்த்துதல் வேண்டும்
எனதென் றஅகங் கார மகாரம்
எளிதில் நீங்கும் ஏற்படும் மோட்சம்
மனமது உருகி வழிபடு குமரனை
மறைந்திடும் துன்பம் மலர்ந்திடும் இன்பம்.

---

# தேடுமெம்முன் வந்து சிரி!

த. ஜெயசீலன்

காலப் பிழையோ? கலகக்கோள் தொந்தரவோ?
நூலறுந்த பட்டமானோம்; நொந்துபோனோம் - வேலவனே
என்றெம் வினையகலும்? என்றெம் விதிதெளியும்?
இன்றும் உரைக்கலையே ஏன்?

வானமரர் துன்பமுற வந்து பிறந்தவன்நீ
சூரத் தனமழிக்கத் தோன்றியோன்நீ - வேரழிந்து
வாடுமெம் வாழ்வைமீட்க வாய்திறந்தோர் வார்த்தைசொல்லு!
தேடுமெம்முன் வந்து சிரி!

உன்வாசல் தானெம் உயிர்க்கு நிழலாகும்
உன்சுவாசம் தானெங்கள் மூச்சாகும் - உன்பாசம்
தானெம் உறவாகும்... தயைகாட்டு; எம்இடரின்
ஈனம் அழிக்க எழு!

இன்னல்கள் மீது இடிவிழநீ செய்யாயோ
துன்பப்பேய் யாவும் துரத்தாயோ? - அன்பருளி
அற்புதங்கள் காட்டாயோ? ஆறா இரணமாற்றி
நற்கதியை நாட்டு நமக்கு!

தேரேறி எங்கள் திசைமுகமும் புன்னகைக்க
வா... ராசா... அள்ளி வரம்வழங்கு - சீரோடு
நாம்வாழ வாழ்த்து... நலிவகற்று! நல்லூரின்
வீதியிலே ஞானம் விளக்கு!

பஞ்சம் பசிதுடைத்து பற்றும்தீ நூர்த்தணைக்க
கொஞ்சமுன் தீர்த்தம் கொடுத்தருளு - சஞ்சலங்கள்
போக்கியே கொஞ்சியெமைப் போஷித்துச் சூழ்ந்திருந்து
தாக்கும் தடைகள் தகர்!

# திருவருளே குருவழிவாம் திறம்

சைவப்புலவர்
செல்வி ஆனந்தி ஜெயரட்ணம் B.A.

**காப்பு**

சித்தாந்த சாத்திரத்துத் தேனமுதை யான்பருகி
சத்தான திருவருளின் தன்மைதனை - செப்பிடவே
ஐந்துகரத் தானைமுகச் சுந்தரக் கடவுளென்
சிந்தையிலே நிற்பாய் சிறந்து.

**அவையடக்கம்**

சிறந்திடும் அறிவு மாந்தர்
நிறைந்துள புவியீ தன்னில்
பரந்துள பரம் பொருளின்
திருவருள் பற்றிப் பாட
வரம்ஒன்று வாங்கி வந்தேன்
வலியிலா சிறியேன் நானும்
சிரந்தாழ்த்தி வேண்டிக் கொண்டேன்
சிறுபிழை பொறுத்துக் கொள்க.

உள்பொருள் ஒன்றே என்று
உரைத்தனர் வேதாந் தத்தோர்
அல்லவே மூன்றே என்று
அறைந்தனர் சித்தாந் தத்தோர்
தெள்ளிய அறிஞர் தந்த
சிறப்புறு சித்தாந் தத்தில்
உள்ளது உள்ள வாறே
உரைத்திடல் எந்தன் செய்கை

பதியொடு பசுவும் பாசம்
பகர்ந்திடும் மூன்றும் உண்மை
பதியினைப் பசுக்கள் நண்ண
தடுத்திடும் பாசம் மூன்றும்
சதிசெய்யும் மாயை மற்றும்
ஆணவத் தோடு கன்மம் - பர
கதியினைத் தடுத்து நிற்கும்
அறிவினை மறைத்தே நிற்கும்.

திருவருள் இயல்பு நோக்கி
சித்தியார் சொல்லும் அந்த
கருதலும் காண்டல் மற்றும்
உரையெனும் மூன்றாம் சொன்ன
பிரமாணம் கொண்டு கண்டு
பின்னுமே எண்ணி ஓர்ந்தார்
பரனையும் நண்ணி உய்ந்தார்
பரமுத்தி பெற்றார் உண்மை.

வித்தியா தத்து வங்கள்
வினையினை அறுக்கப் போதா
சுத்ததத் துவங்கள் ஐந்தும்
சிவத்தினை உணரச் செய்யும்
புத்தியை மலத்தின் நீக்கி
புதுவழி காட்டி மேலாம்
சத்தினை உணரச் செய்தல்
சகத்தினில் முத்தி என்பர்.

**ஆறாறு தத்து வங்கள்**
**ஆன்மாவை** மாயையிற் சேர்க்கும்
**வேறாக** இவற்றை நீக்கி
விளைசிவ ஞானம் நோக்கி
ஆறாத அன்பி னோடும்
ஆர்வத் தினோடும் நண்ணில்
நீறாகிப் போகும் வினைகள்
முத்தியும் சித்திக் கும்மே.

நவந்தரு பேதம் கொண்டான்
நாயகன் நம்மை எண்ணி
சிவந்தரு பேதம் ஐந்தால்
சிறந்திடும் ஐந்தொ ழில்கள்
பரந்திடும் உலகை ஆக்கி
படைத்துமே காத்தல் செய்து
புரந்திட மறைத்தல் செய்தல்
புவனத்தில் கூத்தன் ஆடல்.

ஒன்றாய் சக்தி உடனாய்
இரண்டாய் குணம் மூன்றாய்
நன்றே மறை நான்காய்
நவில்பூதம் அவை ஐந்தாய்
துன்று சுவை ஆறாய்
ஏழோசை திசை எட்டாய்
பின்னும் அவன் கொண்ட
பேதம் ஒன்ப தாமே.

அறிவாய் உருவாய் அடியரை
அகலான் வேண்டும் போதில்
குருவாய் வருவான் அருள்வான்
குவலயம் உய்ய என்றே
எரிவாய் உறுநீர் எனவே
இகம்பரம் எங்கும் பரந்து
செறிவான் அதுவே உலகிற்
செல்வமாய் வேண்டுவ தொன்றே.

அன்றால மரநிழற் கீழ்
அமர்ந்துமே மறைகள் கூறி
நின்றதால் முனிவர் நால்வர்
நிலையினில் தெளிந்தார் அன்று
சந்தான குரவர் தம்மை
தாரணி உய்யத் தந்த
எந்தையின் செயல்தான் ஈது
ஈடிலாக் கருணை ஏது?

கதிரவன் ஒளியைப் போலும்
கரந்திடும் மலங்கள் தம்மை
பெருகிடும் அருளின் பேரால்
பிறவியாம் தளையை நீக்கும்
மருளினைப் போக்கி மாயை
மாசறு காட்சி தந்து
அருளது சொரிந்து நிற்கும்
திருவருள் தனையே நிகர்க்கும்.

மருளினுள் மூழ்கி மாயும்
மன்னுயிர் மேலாம் கருணை
அருளினைப் பொழிந்து பின்னும்
ஆட்கொள்ள எண்ணித் தாமே
குருவடி வதனைத் தாங்கி
குவலயம் உய்ய இறங்கி
வருதிரு வருளை வாழ்த்தி
வையத்தின் பிறவித்துயர் தீர்ப்பாம்.

# பள்ளி எழுந்தருளாயே!

**மலர் சின்னையா**

**அதிபர், ஆசிரிய கலாசாலை கோப்பாய**

இராகம் : பௌளி தாளம் : சதுஸ்ர ஏகம் (திஸ்ர நடை)
ஆ : ஸ ரி க ப த ஸ
அ : ஸ நி த ப க ரி ஸ 15 மேள ஜன்னியம்

**பல்லவி**

பள்ளி எழும்பு முருகா
பள்ளி எழும்பு முருகா
தூக்கம் கொண்டது போதுமையா - நீ
தூக்கம் நீங்கி எழு முருகா - ஆ .... ஆ .... ஆ ....

**அனுபல்லவி**

தேவனே உன் திருமுகம் காண
தேடிவந்தோம் எழுந்திடு முருகா
பூவும் பொன்னும் பொருட்களும் உண்டு
பூசை செய்கிறோம் பள்ளி எழும்பு

**சரணம்**

பூமாலை கொண்டு வந்தோம் முருகா - உன்
பூமுகம் காணத் தவிக்கின்றோம் நாமே!
பக்தர்கள் கூடி வந்தோம் உன்னிடம்
பாடித் துதிக்கின்றோம் பள்ளி எழுவாய்

**சரணம்**

காலைப் பொழுதினில் வசந்தமும் காண
கண்ணே முருகா நீ எழுந்தருள்வாயே!
பக்தர்கள் நாம் உன்னைக் காணத் துடிக்கின்றோம்
பார்த்துப்பார்த்து மனம் மகிழ எழுவாய்

**சரணம்**

வையம் விடியுது வாழ்வு மலரவே
வாருமையா வந்தருள் புரிவாயே!
மயிலும் உசார் கொண்டு நிற்குது முருகா!
அயிலும் கையில் கொண்டு எழுந்திடு முருகா!

# கூறுமடியார் குறை தீர்க்கும் குமரன்

**சிவநெறிக் கலாநிதி இராசையா ஸ்ரீதரன்**
நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

முருகனே முத்துக்குமரனே குகனே சண்முகனே
மூக்ஷிகவாகனின் தம்பியே தகப்பன் சுவாமியே!
உருகாத மனத்தையும் உருகவைக்கும் நாமங்கொண்ட
கந்தனே கடம்பனே கார்மயில் வாகனனே முருகா!
திருமாலின் மருகனே அரனார் திருமகனே அறுமுகனே
தீராத வினை தீர்க்கும் திருமுருகனே சரவணனே!
குருபரனே சிவன் மகனே கூர்வேல் கொண்டவனே
கூறுமடியார் குறை தீர்க்கும் குமரனே சரணம் சரணம்.

தொல்லைவினை தீர்க்கும் தூயவனே சண்முகனே
தோத்தரித்தோம் உனையே ஓடியே வந்தருள்வாய்!
கல்லை யொத்த மனமும் கசிந்துருகச் செய்பவனே
கார்திகேயனே கடம்பனே கருணை புரிந்திடுவாய்!
இல்லையெனாது வரதீந்தருளும் ஈசன் திருமகனே
இணையடி தொழுதோம் திருவருள் தந்திடுவாய்!
நல்லையிலுறைபவனே ஞானவடிவேலவனே முருகா
நமக்கருள் புரியும் ஞானநாயகனே சரணம் சரணம்!

சரவணபவனே சங்கரன் மகனே சந்ததமும் உனைப்பணிந்தோம்
சாடுந் தனிவேலுடைய சண்முகனே குருபரனே!
வரமது வேண்டியே உனை வலம்வந்து வணங்கினோம்
வாழ்க்கையில் நீயே கதியென்று கரங்குவித் திட்டோம்!
பரமசிவன் பெற்றெடுத்த பாலசுப்பிரமணியனே முருகா
பாதாரவிந்தமது காட்டிப் பரமபதமெமக் கருள்வாய்!
கரமீராறு கொண்ட கந்தப் பெருமானே கார்த்திகேயனே
கடைக்கண் பாராயோ குமரேசா சரணம் சரணம்!

நல்லூரின் நாயகனே ஞானவடி வேலவனே முருகா
நமக்கருள் புரிந்திட ஏன் இந்தத் தாமதம்?
எல்லோரும் ஒற்றுமையாய் ஒருசேரத் தோத்தரித்தோம்
எங்கள் மனங்குளிர எழிற்காட்சி தாராயோ?

பல்லாண்டு காலமாய்ப் பதற்றத்துடன் வாழுகின்றோம்
பாலசுப்பிரமணியனே எம் பதற்றமது தணியாயோ?
பொல்லாத வேதனையில் துடிதுடித்து மாழ்கின்றோம்
போற்றி உனைத் தோத்தரித்தோம் குகனே சரணம் சரணம்!

நீலமயில் வாகனனே நிர்மலனே வடிவேலவனே முருகா
நீயல்லால் எமக்கருள வேறு தெய்வமில்லையே!
பாலசண்முகனே உனைப் பாடிப் பரவிப் பணிந்தோமே
பக்தர்களைக் காத்தருள்வாய் பழநிமலையானே!
ஞாலமெலாம் சுற்றிவந்து ஞானப்பழமாய் நின்றவனே
ஞானமெமக் கருளிடுவாய் ஞானபண்டிதா முருகா!
கோலமயில் மீதமர்ந்து வள்ளி தெய்வயானையுடன்
அருட்காட்சி தாராயோ சண்முகனே சரணம் சரணம்!

உந்தனையே நம்பிவந்த எம்மைக் கைவிடல் நீதியோ?
ஊரெல்லாம் கூடியே உளமாரப் பணிந்திட்டோம்
சிந்தனையே இல்லாமல் வீணாக வாழ்ந்து விட்டோம்!
சீரான வாழ்வு தந்து எம்மைக் காத்தருள வேண்டும்!
வந்தனையே செய்துன்னை வாழ்த்தி வணங்குகின்றோம்
வடிவேலெடுத்து எம்மிடியகற்ற மாட்டாயா?
நிந்தனையே செய்து நாம் நித்தம் துன்புறுதல் முறையோ?
நீதியை நிலைநாட்டிடுவாய் நிர்மலனே சரணம் சரணம்!

குன்றுதோறாடி வரும் குகனே சண்முகனே போற்றி
கூறுமடியார் குறை தீர்க்கம் குமரனே போற்றி
மன்றுளாடி மைந்தனே மால்மருகனே முருகா போற்றி
மாறுபடுஞ் சூரனை வதைத்த வேல்முருகனே போற்றி
என்றுமுனை ஏத்தினோம் ஏரம்பனின் தம்பியே போற்றி
ஏகாந்த வேலவனே எங்கள் திருக்குமரா போற்றி
நின்று நிதம் பதம் பணிந்தோம் நிர்மலனே குகனே போற்றி
நீல மயிலேறி வரும் ஸ்ரீ சண்முகனே போற்றி போற்றி!

நல்லூரிலே குடியிருக்கும் ஞானவடிவேலவனே சரணம்
நமக்கருள் புரிந்திடும் நல்லைக் குமரனே சரணம்
சொல்லி முடியாத பேரழகு உடையவனே சரணம்!
சோதிமயமானவனே சுந்தரனே முருகா சரணம்
எல்லை யிலாக் கருணையுள்ள ஏரம்பனின் தம்பியே சரணம்!
எழில்மிகு காட்சி தரும் எங்கள் தெய்வமே சரணம்!
நல்லை நகர் வீதியிலே வலம் வரும் ஞானகுருபரனே சரணம்
நல்லருள் புரிந்து காப்பாய் சண்முகனே சரணம் சரணம்!!

# உளமறிந்து இரங்காதும் இருப்பதேனோ!

கவிஞர் வதிரி கண - எதிர்வீரசிங்கம்

எடுப்பு

அழகொளிரும் ஆலயத்தில் அமர்ந்தவனே! - நல்லை
வளம் பெருக அருளாயோ! குருபரனே!

- அழகொளிரும் ...

தொடுப்பு

களங்கண்டு சூரனையும் வதைத்தவனே! - எங்கள்
உளமறிந்து இரங்காதும் இருப்பதேனோ!

- அழகொளிரும் ...

முடிப்பு

ஆறுபடை வீடுனக்கு இருந்தென்ன! நாங்கள்
ஆறவொரு வீடில்லை இங்கெமக்கு!
நீறணிந்து உந்தனையே தொழுதென்ன! - எங்கும்
நீறாகிப் போகுதையோ வாழ்வெமக்கு!

- அழகொளிரும் ...

மயிலேறி வலம்வரும் போதினிலே! - தமிழ்
மாந்தர்களின் துயரங்கள் காணவில்லையா!
துயிலாது உன்நாமம் சொல்கையிலே! - பன்னிரு
செவிகளிலும் வந்து நிதம் விழவில்லையா!

அழகொளிரும் ...

அன்னையுன் நிலையுணர்ந்து வேல்தந்தாள்! - தந்தை
ஆதிசிவனோ உன்னிடத்தில் கற்றுணர்ந்தான்!
மன்னுபுகழ் சங்கிலியன் ஆண்டமண்ணில்! - என்றும்
மாதிருவர் புடைசூழ மன்னவனாய்!

- அழகொளிரும்





# நல்லைக் குமரன் மலர்

## 2009

## கட்டுரைகள்


- நல்லைச் சண்முகமாலையும் நல்லைத் திருவருக்கமாலையும்
- கந்தன் திருப்பாத மகிமை
- திருமுருகாற்றுப்படையில் முருக வழிபாடு
- சிலப்பதிகாரத்தில் முருக வழிபாடு
- கௌமார வழிபாட்டு மரபில் முருகக் கடவுளின் வடிவங்களும், நாமங்களும்
- முத்தமிழையும் சுவைத்த ஞானபண்டிதன்
- சேவலும் மயிலும் போற்றி! திருக்கைவேல் போற்றி! போற்றி!
- திருப்புகழ் காட்டும் பெண்மை
- மூவர் தமிழ்
- புறநானூறு கூறும் வைதிக சைவம்
- வைதிக தத்துவ நோக்கில் மனம்
- இராமாயணம் காட்டும் சிவவழிபாடு
- இந்து திருமணச் சடங்குகள் வெளிப்படுத்தும் வாழ்வியற்பண்பாடு
- திருவாதவூரர் புராணம் (ஒரு சிறு ஆய்வு)
- திருவருட்பயன் : பண்டிதமணி உரைச் சுருக்கம்
- தேர் - ஒரு வரலாற்று நோக்கு
- இந்துப் பண்பாட்டுச் சிந்தனைகளை உலக அரங்கில் பரப்பிய ஈழத்து இந்து சமயப் பெரியார்கள்
- தேரடியில் தேர்ந்த சித்தர்கள்
- வடிவும் வண்ணமும்
- தாயுமானவர்
- ஆலயந் தொழுவது சாலவும் நன்று பூசனை புரிவது போற்றுதற்குரியது
- மருத்துவத்தில் முருகன் இலக்கிய ஆய்வு
- இசைக்கலையும் இந்துசமயக் கோயில்களும்
- தமிழகத்தில் உள்ள இந்துக் கோயில்களும் சிற்பக்கலை வளர்ச்சியும்
- ஆன்மீக வாழ்க்கை - சில கருத்துக்கள்
- தர்மத்தை நிலைநாட்டும் அவதார புருஷர்கள்
- காவிரிநாயகன்
- செழுமை மிகுந்த பழமைகளுக்கு மீண்டும் புத்துயிரூட்டுவோம்!
- பொருள் போகுமிடம் புண்ணியமே!
- 2009 யாழ் விருது ....

# நல்லைச் சண்முகமாலையும் நல்லைத் திருவருக்கமாலையும்

**கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன்** *M.A, Ph.D.,*
**முதுநிலை விரிவுரையாளர், மொழித்துறை,**
**சப்ரகமுவ பல்கலைக்கழகம், பெலிகுல்லோயா.**

''நல்லைச் சண்முகமாலை'' வண்ணார்பண்ணை நெ.வை.செல்லையா எனுங் கவிஞரால் இயற்றப்பட்ட மூன்று பிரபந்தங்களடங்கிய தொகுப்பு நூல். காப்புச் செய்யுள், திருமால் துதி, நாமகள் துதி என்னும் முதல் மூன்று செய்யுட்களை யுந் தவிர்த்து 102 எண்சீர் விருத்தச் செய் யுள்களாலியன்றது நல்லைச் சண்முக மாலை. கான்மிளிரும் பூங்கொடியைக் கலந்த புத்தேள் கந்தனடிக் கொருமாலை பாடுதற்கு ஐந்து கரமும் ஒற்றைமருப்புங் கொண்ட ஆம்பலடிப் போதாக மிளிரும் கணபதியை வேண்டுகின்றார் காப்புச் செய்யுளில்

**'வேள்மிளிருங் கரதலத்தான் நல்லை மேவி**
**விளங்குமாறு முகமுடைய விமலன் செவ்வேள்**
**கான்மிளிரும் பூங்கொடியைக் கலந்த புத்தேள்**
**கந்தனடிக் கொருமாலை கவின் பெற்றார்**
**வான்மிளிரும் பிறையணிந்த சிரமுமுக்கண்**
**வயங்குகர மைந்துமொற்றை மருப்புங் கொண்ட**
**தேன்மிளிரு மாம்பலடிப் போதை நாளுஞ்**
**சிரமொழிமெய் யகங் குளிரச் சிந்திப்போமே''**

என்று பாடியுள்ளார்.

'ஏழையேன் துயர் தீர்க்க உனது மனமிரங்காதா' என்று பாடுங் கவிஞர், 'நீ பெரும்புகழ் கொண்டவன்' என்பதைப் புராணக்கதைச் சம்பவங்களின் மூலம் நிறுவிச் செல்கின்றார். 'நினைத்த வெல்லாம் நிறைந்தளிக்கும் நித்திலமே', 'கச்சை கொருங் கதிர்வடிவேற் கந்தா' எனவும் சுட்டுங் கவிஞர், முருகனது தாய்மை யுணர்வை அவாவுகின்றார் 'என் குறையுன் திருச் செவியிற் புகவில்லையோ' என்னும் வினாக்குறிப்புத் தோன்ற நின்றது இச் செய்யுள்.

**'என்னமுனக்கென் குறையை யெடுத் தெடுத்தே**
**யியம்பி நின்ற யென்மீதிலே னோவையா**
**நன்றுபொழி கருணைமுக மாறுங் கண்கள்**
**நான்மூன்று முடையவனே நாடா நின்றாய்**
**வன்றுயரால் நலிவடைய விடுதியேல் யான்**
**வருதுணையுன் றனையலதிங் கறிகி லேனே**
**கன்றுதனக் கிரங்கு பசுப்போல வென்னைக்**
**கடைக்கணித் துனருள் புரிவாய் கந்தவேளே''**

என்பது கவித்துவத்தினை வெளிப்படுத் தும் முத்திரைக் கவியாக அமைநதுள்ளது.

பல்வேறு திருத்தலங்களிலுங் கோவில் கொண்டுள்ள குமரனை நல் லைப்பதியிலுங் கண்டேனேயென்னுங் கருத்தில் 45ஆவது செய்யுள் அமைகின் றது. முருகனை "இன்ப வாழ்வே" என்று அழைத்துள்ளார்.

**"பத்தர்பணி பரங்குன்றா பழனி வேலா**
**பரவை தொழுஞ்செந்தூரா பாலா வேலா**
**சித்தியொளி ரெட்டிகுடி சிக்கல் சேயூர்**
**திருத்தணிகை தண்ணீர்மலை சிகக்குன் றாரூர்**

**முத்தி தருமொருவைமலை யோகத்தின்**
**மூர்த்தியுயர் கதிர்காமாமுதிர் குன்றத்தா**
**யித்தனையுமாடல் கொண்டாயெங்குமானா**
**யீசா நல்லூராமந்த வின்பவாழ்வே".**

துன்பவாழ்வில் உழன்ற ஆன்மா சந்தோசமுறும் நிலையில் முருகனை இன்பவாழ்வெனக் கண்டு கொள்கின்றது. உனதின்பவாழ்வின் நூறாயிரங் கூறில் ஒன்றை மட்டும் எனக்குத் தந்தருள வேண்டும் என்பது வேண்டுதற் தோத்திரப் பாமாலையாம். நிரம்பி மலிந்துள்ள பிணிகள் (மண்டுபிணி) கலி நலிய அருள் செய்வாய் நல்லைப் பெருமானே என்ற பொருளில் 63ஆவது செய்யுள் அமைந் துள்ளது.

**'மண்டலத்தே மானிடராய்ப் பிறந்த பேர்கள்**
**மருவு பயனினதடியார் மலர்ப்பதத்தே**
**தொண்டு செய்து நின் கோயில் சூழ்ந்து போற்றித்**
**தொழுதுனடி பரவிவினை தொலைத்தலன்றோ**
**மிண்டு செய்த வசுரர் குழாம் மாளவெற்றி**
**வேற்படை மேற்றிடு நோக்கம் விடுத்தவேளே**
**மண்டுபிணி கலி நலிய வருள் நோக்கென்மேல்**
**வைத்தருள வேண்டும் நல்லை வைவேற்கோவே"**

**'வாயானை மனத்தானை வடிவேலானை**
**வாக்கிறந்த பூரணத்தின் வாசியானைச்**
**சேயானைத் திகழ் நல்லை மேவினானைச்**
**சீரலைவாய் கரை வளருந் தீங்கரும்பைத்**
**தாயானை வேண்டுவன தரிக்கா தென்றுந்**
**தந்தருளுஞ் சண்முகனைச் சதுர்மறைக்குந்**
**தூயானைத் தூய்மையிலார் சேய்மையானைத்**
**தொழுமடியேன் களிவளரச் சுகிக்கின்றேனே".**
**(செய்.75)**

பாராயணஞ் செய்து இறைவனை வழிபடுதற்கேற்ற சிறந்த பாடலாயமைவது மேற்போந்த பாடல். அப்பர் சுவாமிகள் அருளிய திருத்தாண்டகத்தையொத் திலங்குவது இறையழகில் அதீத ஈடுபாடு கொண்ட கவிஞரது பக்திமெய்யனுபவ மாகத் துலங்குகின்றது. இறைவனது பெரும்புகழை அடுக்கிக்கூறுவது திருத் தாண்டகத்தின் தனித்துவச் சிறப்பு.

பக்திப் பிரபந்த இலக்கிய முன் னோடியாக விளங்கும் காரைக்காலம்மை யார் பற்றிய பாடல் ஒன்று நல்லைச் சண்முகமாலையில் இடங்கொண்டு பக்தி மரபின் தொடக்கத்தினையும் அதன் தொடர்ச்சியையும் நிறுவுகின்றது. அப் பாடல் கோவில் வழிபாட்டு மரபினையும் இறைவனுண்மையையும் நிறுவும் பான் மையிலமைந்துள்ளது.

காரைக்காலம்மையார் தலை யினால் நடந்து திருக்கயிலை சேர்ந்தார். 'உனை மறவாதிருக்க வேண்டும்' என வரங் கேட்டார். அது போலவே நல்லைச் சண்முகமாலையிலும் 'உரையினால் உன்னிடம் வேண்டுதல் செய்கின்றேன் எனதுரையினை மதித்து இரங்கி ஏற்றுக் கொள் நல்லைவாழ் ஆறுமுகப்பொருளே' என்று பாடுகின்றார்.

**'விருப்பினொடு திருவாலங்காட்டின் முன்னாள்**
**மிகமெலிந்துந் தலையினால் விரும்பிச் சென்ற**
**வருத்திவளரம்மையோ நினது சீர்கொ**
**ளாலயங்கள் தனைக் காலாலடைத்துஞ் செல்லக்**
**கருத்துமிலாப் படிறனோ பேயார் சொல்லாய்**
**கந்தா செந்தூர் வளருங் கரும்பே நல்லை**
**யிருக்குமறு முகப் பொருளே யெங்ஙனுய்வே**
**னெனதுரையு மதித்திரங்கி யேற்றுக் கொள்ளே".**

இராமலிங்க சுவாமிகளது வேண்டு தற் பாடலை நிகர்த்த பாடல் இந்நூலின் கடைசிப்பாடலாகவுள்ளது. 'வேண்டும் வேண்டும்' என முடியும் பாடலது. 'இரத்தல் நிலையில் நின்று தன்னைச் சிற்றுயிருஞ் சிறு தொழிலும் பல்பிணியுங் கொண்ட

ஆன்மாவாகச் சித்திரித்துள்ளார். பதினாறு பேற்றினையும் நல்க வேண்டும் எனவரும் 102ஆவது பாடல் தினமும் பாராயணஞ் செய்துவர வேண்டிய பாடலெனலாம்.

**'பேறுபதினாறு மெனக் களித்தல் வேண்டும்**
**பெம்மானே யிவ்வுடம்பு பிரிந்து போனாற்**
**கூறுதற் கெவ்வுடம்பென நிச்சயமின்றாகும்**
**கொள்கையினாலிக்கணமே கொடுத்தல் வேண்டு**
**மாறுசமயங்களுக்கு மறிவு நீயே**
**யாதலினாலறுமுகங் கொண்டாடல் செய்தாய்**
**வீறுவடிவேற் கரனே முருகா வெந்தன்**
**விண்ணப்ப மீதுனடி வேண்டினேனே".**

இவ்வாசிரியர், சைவசித்தாந்தங் கூறும் கன்மம், மறு பிறப்புக் கொள்கை களை நிலைநிறுத்துகின்றார். பெம்மானே! இவ்வுடம்பு பிரிந்து போனாற் கூறுதற் கெவ்வுடம்பென நிச்சயமின்றாகுங் கொள் கையினால், இக்கணமே கொடுத்தல் வேண்டும் எனக் கூறுவதிலிருந்து இனி எப்பிறவி வாய்க்குமோவென்று கவன்று இப்போதே திரிகரணசுத்தியோடு உனைத் தொழுதெழவேண்டுமென்ற கருத்து அழுத்தியுரைக்கப்பட்டுள்ளது.

இனி நல்லைத் "திருவருக்கமாலை" குறித்து நோக்கலாம். "நல்லைத் திரு வருக்கமாலை" என்னும் பிரபந்தம் சர வணையூர் புலவர்மணி ஆ.தில்லைநாதப் புலவரால் (1885-1966) இயற்றப்பட்டது. இவருடைய பிரபந்தங்களிலே சிலேடை கள், யமகங்கள் விரவிக் காணப்படுகின் றன. புலவர்கள் கூடிப் பாடிச் சுவைக்கத் தக்க கற்பனை வளமும் சமய சாத்திர மரபுங் கொண்டனவாய் விளங்கும் சிறப் பைப் புலவர் கவிதைகளிற் காணலாம். எடுத்தவுடனே ஆசுகவியைப் போலப் பாடக்கூடிய புலமை வாய்ந்தவர். ஊஞ் சல், சோடசம் (16 பாடல்கள்), திருவிரட்ட மணிமாலை, திருவருக்கமாலை, அலங் காரம், சிலேடைவெண்பா, பதிகம், யமக வந்தாதி ஆதியாம் பிரபந்தங்களியற்று வதிலே தில்லைநாதப் புலவர் சமர்த்தர்.

தில்லைநாதப் புலவர் நல்லைக் கந்தசுவாமி மீது பாடியுள்ள பிரபந்தம் "நல்லைத் திருவருக்கமாலை" என்பது நூற்றைந்து பாக்களைக் கொண்ட "நல் லைத் திருவருக்கமாலை" என்னும் நூலி லிருந்து 12 பாக்கள் மட்டுமே தெய்வத் தமிழ்ப்பிரபந்தங்கள் என்னும் தொகுப்பு நூலில் இடம்பெற்றுள்ளன. இவரது பாவன்மையைக் கண்ட நல்லூர் த.கைலாச பிள்ளையும் அவரது மருகர் சோமசுந் தரமும் இக்கவிஞருக்குப் "புலவர்" என்னும் பட்டத்தையளித்துக் கௌரவித் தனர்.

**"என்னடியார் தங்களிடரேக நல்லூரில்**
**நண்ணுமரு ளானந்த நாடகனே - கண்ணிறைந்த**
**பேரின்பவாழ்வே பெருங்கருணைப் பேராறே**
**யாரின்பத் தேனேயருள்"** (செய். 3)

இடர்களையும் நல்லூரில் அருளா னந்த நாடகமாடிக் கொண்டிருப்பவன் என்று முருகன் சிறப்பிக்கப்படுவதுடன் 'என்மீது இரக்கங் காட்டாதிருக்கின்றாய்' என்று 9ஆவது செய்யுளிற் கவல்கின்றார்.

**"சேந்தா குகா முருகா வள்ளி தெய்வசேனை திருக்**
**காந்தா முதற் புலவர் காங்கேயா - பூந்தாதிற்**
**றேவினம் பண்பாடிச் செயுங்கீத நல்லூரா**
**வேனிரங்க வில்லை யினும்"**.

"சங்கமிருந்த காலத்தில் தலைமைப் புலவனாய் இருந்த புலவனே" என்று முருகப் பிரானைச் சுட்டிப்பாடியிருப்பது நோக்கத்தக்கது.

# கந்தன் திருப்பாத மகிமை

**திருமதி சண்முகயோகினி ரவீந்திரன்**
**சிரேஷ்ட விரிவுரையாளர்,**
**யாழ்.பல்கலைக்கழகம்.**

சித்தர்கள், முக்தர்கள், யோகிகள், ஞானிகள், பக்தர்கள், அடியார்கள் ஏற்றிப் பாடி வழிபாடியியற்றிவரும் தலம் நல்லைக்குமரன் கொலுவிருக்கும் நல்லூர்க் கந்தசுவாமி கோவில் ஆகும். அம்மகிமைக்குரிய சுப்பிரமணியனின் திருப்பாதங்களின் அற்புதத் தத்துவத்தை முருகனடியார்கள் அழகுற எமக்களித்துள்ளார்கள்.

குழந்தை சண்முகன், பரம்பொருள் சிவனின் நெற்றியிலிருந்து தோன்றிய ஆறு தீப்பொறிகளில் இருந்து உதயமானான். அவ் ஆறு குழந்தைகளையும் உமையம்மை வாரியணைக்க அவை ஒரு குழந்தையாயின. அம்மை அக்குழந்தைக்குக் 'கந்தன்' எனப் பெயரிட்டாள். அக்கந்தனின் மகிமைமிகு அங்கங்களுள் அவனது திருப்பாத மகிமை வார்த்தைகட்கு உட்படா ஒன்று.

குழந்தை கந்தனை உமையம்மையின் அரவணைப்பில் அகக்கண்ணால் கண்டார் முருகனருள் பெற்ற அருணகிரிநாதர். முருகன் திருப்பாதம் உமையம்மையின் திருமார்பில் ஆடுவதாகப் பின்வருமாறு கூறுகிறார் :

"**இமையமயிறமுவுமொரு திருமார்பிலாடுவதும்**"
குழந்தை சண்முகன்
"**அவனிதனிலே பிறந்து மதலையெனவே தவழ்ந்து அழகுபெறவே**" நடக்கலானான்.

அவன் தளர்நடை பழகுவதை இறைவனும் இறைவியும் மட்டுமன்றி அண்டசராசரங்களும் பார்க்கலாயின.

சரவணப் பூத்தொட்டிலிலாடிய சண்முகனின் இடையிலும் திருமார்பிலும் திருப்பாதங்களிலும் பூணப்பட்ட அணிமணிகளின் ஒலி எங்கும் கேட்டது.
"**...வுடைமணியொ டணிசகல மணிகலென**"
சரவணன் தளர்நடை பழகும் பருவம் அது.
"**எழுபிலவு நெறு நெறென முறிய**
**வடகுவடிடிய**
**இளையதளர்நடை பழகி**" (அருணகிரிநாதர்)
விளையாடினான் கந்தன்.
ஓடிவிளையாடும் பருவம் வந்தது.
"**....வளைகடல் கதற**
**வெமுபுவிவை யொரு நொடியில் வலமாக வோடுவதும்**"
**(அருணகிரிநாதர்)**

அந்த அழகிய திருக்குழந்தை ஏழுலகத்தை ஒரு நொடிப்பொழுதில் தன் அற்புதப்பாதங்களால் சுற்றி வந்தான். இவை மட்டுமா? கந்தனின் பாதங்கள் தொட்ட போது பெரும்மலைகள் இடம் பெயர்ந்தன. பெருங்கடல்கள் யாவும் அவைகளின் எல்லைகளை இழந்து ஒன்றுடன் ஒன்று சங்கமமாயின. சூரிய, சந்திரர்கள் இடம் மாறினர். மக்களும், தேவர்களும் இது தீயவர்கள் செயலோ என அஞ்சினர். தேவர்கள் நான்முகனிடம் ஓடினர். மேருமலையில் அமர்ந்திருந்த

தேவேந்திரனிடம் யாவரும் சரணடைந்து முறையிட்டனர். அத்தருணத்தில் இளமுறுவலுடன் தோன்றினான் முருகன். தன் சிறுபாதங்களால் மகாமேருவை அசைத்தான். கொடுமுடிகளைப் பறித்தெறிந்தான். "அசுரரும், யாவரும் செய்யாத பேராற்றலுடையவன் இவனே!" "இவன் இளைஞன் அல்லன். இவனோடு யாவரும் சண்டையிடுவோம்" எனக் கூறி தேவவேந்திரனும் தேவர்களும் தத்தம் ஊர்திகளிலேறி முருகனுக்கு எதிராகப் படையெடுத்து வந்தனர். கந்தனின் கணைகளால் யாவரும் மடிந்தனர். தேவேந்திரனும் மயக்கமுற்றான். வியாழபகவானின் சித்தத்தால் பின்னர் யாவரும் உயிர் பெற்றனர். முருகப்பெருமான் தன் விஸ்வரூபத்தை அவர்கட்குக் காட்ட விழைந்தார். அவ்வருங்காட்சியைத் தரிசிக்கச் சக்தி யற்ற தேவர்கள் சிவகுமாரனின் திருப்பாதங்களைச் சரணடைந்தனர்.

"**கருணைக் கடலே கந்தப் பெரும! அசுரர்களை அழித்துத் தேவர்களைக் காத்து விண்ணுலக ஆட்சியைத் தேவரீரே செய்தருள வேண்டும்**" என முறையிட்டான் தேவேந்திரன். நீர் எமக்குத்தந்த அரசை யாம் உமக்கு ஈந்தோம்; யாம் சேனாபதி யாவோம்; நீங்கள் சேனைகளாயிருங்கள் என இயம்பினான் கந்தன்.

இவ்வாறு சேனாதிபதியாகி கந்தன் சூரபத்மனின் முன் நின்றான். அவ்வேளை சண்முகனின் திருத்தோற்றத்தைப் பார்த்து சூரபத்மன் பின்வருமாறு கூறலானான்

"**ஆயிரகோடி காமர் அழகெலாந்திரண் டொன்றாகி
மேயின எனினும் செவ்வேள்
விமலமாம் சரணந்தனழகில்
தூய நல்லெழிலுக் காற்றா தென்றிடின்...**" (கச்சியப்பர்)

ஆயிரம் கோடி மன்மதர்கள் ஒன்றாகி ஒருவடிவு பெற்றால் வரும் வியத்தகு அழகைவிட செவ்வேளின் தாமரை போன்ற செம்மலர்ப் பாதங்களின் அழகு மேலானது எனப் பகைவனாகிய சூரபத்மனே கந்தன் திருப்பாத அழகை விவரிக்கின்றான்.

சூரசங்காரனின் திருநடையழகை அருணகிரிநாதர் பின்வருமாறு கூறுகிறார்:
"**இயலூநடையும் வடிவுமழகுமெழுத அரியன்**"
என்கின்றார். இயல்பாகவே இனிதாக நடக்கும் அம்முருகனின் திருப்பாத நடையழகும், அதன் வடிவும் என்னால் எழுத்தால் வரைந்து காட்ட முடியாத ஒன்று என்கின்றார்.

முருகப்பெருமானின் திருப்பாதம் சிறந்த நறுமணமுடையது. அப்பாதங்கள் அகிலங்களிலே முதன்மைப் பொருளாய் விளங்குபவை என்பதை அருணகிரிநாதர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்

"**முருகுகமழ் வதுமகில முதன்மை தருவதும் சீர்பாதம்**" எம் பெருமான் முருகனையே சதா தியானம் செய்பவரும், கடும் தவம் புரிவோரும், விரதங்கள் அனுட்டிப்பவர்களும் ஈற்றில் சென்றடையும் இடம் முருகனது திருப்பாத சரணங்களே.

"**முதலவினை முடிவிலிரு பிறையெயிறு கயிறு கொடு முதுவடவை விழிசுழல வருகாலர் தூதர் கெட**" எனும் அடிகளில் ஒருவனிடம் பாசக்கயிற்றுடன் இயம தூதர்கள் வந்து உயிரைப் பறிக்கும் தருணத்திலே அவ்வடியார்களின் சரணாலயமாக முருகன் திருப்பாதங்கள் அமைகின்றன.

எனவே அத்தகைய பாதங்களை **"விழிக்குத் துணை திருமென்மலர்ப் பாதங்கள"**.

அம்மென்மலர்ப் பாதங்கள் 'முருகா சரணம்', 'அறுமுகா சரணம்' என்று மன முருகிப் பாடியாடி அழுது தொழுது உருகுமடியார்கள் விழியருவியில் மூழ்கி யிருக்கும்.

தினைப்புனத்தில் வள்ளியை மணந்த வன் தாள்களை தியானிப்பவர்க்கு விரும் பும் வரங்களைக் கொடுப்பான் வள்ளி மணாளன்.

எத்தனை அணிமணிகளை அணிந் திருப்பினும் கந்தன் "காலுக்கணிகலம் வானோர் முடி" என அழகுறக் கூறுகிறார் அருணகிரிநாதர்.

சிறுபிராயத்தில் உலகமாயையில் சிக்கி முருகனருளால் மீண்ட அருணகிரி நாதர், பிரம்மா தன் தலையில் எழுதிய தலையெழுத்தை கந்தன் தன் காலால் அழித்தான் எனப் பின்வருமாறு கூறுகிறார்:
**"அவன் கால்பட்டழிந்ததிங் கென்றலை மேலயன் கையெழுத்தே"**.

யுகங்களின் முடிவிலே சகல உலகங் களும் பேரிருளில் ஆழ்ந்திருக்கும். அப்பேரிருளிலே நூறு கோடி சூரியர்கள் தங்கத் தேரிலேறி வரும் போது எவ்வாறு சகல உலகமும் பிரகாசிக்க, தங்க ஒளி யில் மூழ்குமோ அவ்வாறு வார்த்தை களால் வியந்து கூறமுடியாத ஒப்பில்லாத மாபெரும் சோதியாய் ... இருப்பவை முரு கனின் சீர்பாதம் என்பதைப் பின்வருமாறு அருணகிரிநாதர் கூறுவார் :

**"..குலதுரக**
**வுபலளித கனகரத சதகோடி சூரியர்கள்**
**உதயமென....**
**யுகமுடிவினிருளகல வொரு சோதி வீசுவதும்"**.

(அருணகிரிநாதர்)

மேன்மைமிகு தேவர்களின் முடிகளால் அலங்கரிக்கப்பட்டவையும் முருகனடியார் களின் இதய கமலத்தில் எழுந்தருளி யிருப்பவையுமாகிய கந்தன் திருப்பாதங் களைக் காணும் பெரும் பேறு சாதனை யாளர்களுக்கு கிடைத்தற்குரியது.

கந்தன் திருப்பாதங்களை, சிந்தித்து, வணங்கி சரணடைந்து "புந்திக்கிலேசமும் காயக்கிலேசமும்" போக்கிட வேண்டும். ஆன்மாக்கள் ஆணவம், கன்மம், மாயை எனும் மலங்களின் பிடியிலிருந்து விடுபட முருகனது
"சரணகமலாலயத்தை அரைநிமிட நேரமட்டுமாகிலும் தவமுறை தியானம் செய்ய வேண்டும்" இதனால் யான், எனது என்ற பாசபந்தங்களில் விடுபடும் பேறு கிட்டும். அப்போது குமரகுருபரசுவாமிகள் பின்வருமாறு கூறியது போல் கந்தன் திருவடிகளைத் தரிசிக்கலாம்.
**"யானெனதென்றற்ற விடமே திருவடியா.."**

(குமரகுருபரசுவாமிகள்).

**நல்லூர் சண்முக வாசல் (தெற்கு) இராஜகோபுரம் அமைக்கும் திருப்பணி 2008ம் ஆண்டு நவம்பர் மாதம் 05ம் திகதி அடிக்கல் நாட்டலுடன் ஆரம்பிக்கப்பட்டது.**

# திருமுருகாற்றுப்படையில் முருக வழிபாடு

ஸ்ரீபதிசர்மா கிருஷ்ணானந்தசர்மா
சிரேஷ்ட விரிவுரையாளர், சம்ஸ்கிருதத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

**அறிமுகம்**

பண்டைத் தமிழ் மக்களினால் போற்றப் பட்டு வந்த முருகன் வழிபாடு ஈழநாட்டிலும் தொன்மையாகப் பின்பற்றப்பட்டு வருகின்றது. கௌமார வழிபாட்டைச் சிறப்பாக எடுத்துக் குமாரதந்திரம் என்னும் ஆகமம் கூறுகின்றது. வைதிக இலக்கியங்கள் அதர்வவேதம், ஸ்கந்த சூக்தம், ஸ்கந்தபுராணம் என்பன முருகனின் பெருமைகளை எடுத்தியம்புகின்றன. இம் முருக வழிபாடு பழந்தமிழர் வழிபாட்டு மரபுகளுடன் வளர்ச்சியுற்று ஆகமம் சார்ந்த நிலையிலும் மரபுகளின் அடிப் படையிலும் இன்றுவரை சிறப்பாகப் பின் பற்றப்பட்டு வருகின்றமையைக் காணலாம்.

**திருமுருகாற்றுப்படை**

முருகப்பெருமானின் பெருமை பேசுகின்ற முழுமையான தனி நூலாக விளங்குகின்ற சிறப்புடையது இந்நூல். இந்நூலினைப் போல் சங்கத்தமிழில் வேறெந்தத் தெய்வத்தைப் பற்றியும் நூல் இல்லை எனலாம். கடைச்சங்கச் செய்யுள்களுள்ளே முதலில் அமைந்த இந்நூல் பதினொராம் திருமுறையில் வைத்து எண்ணப்படும் சிறப்புடையது. "பாவுள் முன்னுற வந்து நிற்கும் முருகாற்றுப்படை மொழிந்தான்" என சிவப்பிரகாசர் இதன் சிறப்பினைப் போற்றுவார். புறத்திணை இலக்கிய மரபைச் சார்ந்த இந்நூல் ஆசிரியப் பாவிலமைந்த முன்னூற்றுப் பதினேழு அடிகளையுடையது. பக்திச்சுவை மிக்க சிறந்த பாராயண நூலான இந்நூல் புலவராற்றுப்படை, முருகு எனவும் அழைக்கப்படும்.

ஆற்றுப்படை என்பது வழிப்படுத்துவது. வீடு பெற விழைந்து முருகக் கடவுளின் திருவருட் செல்வத்தைப் பெற்ற ஒரு அடியவன் அதனைப் பெறவிரும்பும் இன்னொரு அடியவனை முருகக் கடவுளிடம் வழிப்படுத்திப் பாடிய செய்யுளே திருமுருகாற்றுப்படை. இது ஏனைய ஆற்றுப்படைகள் போலல்லாது முருகப் பெருமானுக்குரிய சிறந்த படைவீடுகள் ஆறினையும் முறையாகக் கூறுகின்ற ஆறுபகுதியாயமைந்ததாகும். ஏனைய ஆற்றுப்படைகள் எல்லாம் அறம், பொருள், இன்பம், வீடு என்பவற்றுள் பொருளினைப் பெறுவதற்கு வழிப்படுத்துவனவாய் விளங்க, இத்திருமுருகாற்றுப்படையானது வீடுபேறாகிய கந்தழியினைப் பெறுதற்கு வழிப்படுத்துகின்றது. இறைவனே இவ்வாற்றுப்படைக்கு-திருப்பாட்டிற்குத் தலைவராயினர். ஒரு பற்றுமற்று அருளாகித் தானே நிற்கும் தத்துவம் கடந்த பொருள் பற்றுக் கோட்டினை அழித்து வீடுபேற்றினை அடையச் செய்வது, கந்தழி எனப்படும்.

ஆற்றுப்படைமரபு புலவர் அரசரைப் புகழ்வது. இம்மரபினைப் பின்பற்றித் தெய்வத்தின் மீது ஏத்திப் பாடியவர் நக்கீரர். "சேவடி படருஞ் செம்மலுள்ள மொடு நலம்புரி கொள்கைப் புலம் புரிந்து உறையுஞ் செலவு" என்னுமடிகள் மூலம் முருகனிடத்தே வழிப்படுத்துதலை உடைய பிரபந்தமான இந்நூலை இயற்றிய நக்கீரர் ஆற்றுப்படை மரபினைப் பின்பற்றி அதற்கு மறுவடிவம் கொடுத்தவராவார். பத்துப்பாட்டினுள் முருகனைப் பற்றிய பாடலாதலால் இது முதலில் வைக்கப்பட்டுப் போற்றப்படுகின்றது.

**முருக வழிபாடு**

வேத வேதாந்தங்களின் குகை எனக் கூறப்படுவது சகல பிராணிகளினதும் இதயம். இருதய கமலங்களில் வசிப்பவன் குகன். பஞ்சகிருத்தியங்களான ஐந்தொழில்களையும் நிகழ்த்துகின்ற சிவனுடைய ஈசானம் முதலான ஐந்து முகங்களுடன் சக்தியினுடைய ஒரு முகமும் சேர்ந்து ஆறுமுகமான பொருளாக நின்று அருள்புரிபவன் சண்முகன். குணங்கள் எல்லாவற்றிலும் தந்தைக்கு ஒப்பான சமத்துவமுடைய விநாயகன், சுப்பிரமணியர் ஆகிய இருவரும் சாமவேதத்தினாலேயே போற்றப்படுகின்றனர். அதர்வ வேதத்திலும் "யச்சமகேஸ்வரக யாச உமா யச்ச விநாயகக, ஸ்கந்தக" என அவனே மகேசுவரன், உமை, விநாயகன், ஸ்கந்தன் என ஒரு பொருளாகக் கூறப்பட்டிருப்பதனைக் காணலாம். "விண்ணோர் குறைக்கிரங்கி ஐந்து முகத்தொடு அதோ முகமும் தந்து" என அறுமுகனின் சிறப்பினைக் கந்தர் கலிவெண்பாவில் குமரகுருபரர் சிறப்பித்துக்கூறுகின்றார். 'திருவுருவாலும் சேயேச் சிவமெனத் தெளிதல் வேண்டும்' எனக் கந்தபுராணமும் கூறுகின்றது. இயற்கையை வேதகாலத்தின் ஆரம்ப நிலையைப் போலக் கடவுளாக வழிபடும் மரபு பற்றி "கைப்புனைந்தியற்றாக் கவின்பெறுவனப்பு" எனத் தெய்வத் தோற்றத்தினை நக்கீரர் குறிப்பிடுவதனையும் நோக்கலாம். பண்டைத் தமிழர் கைப்புனைந்தியற்றாக் கவின் பெறுவனப்பினைக் காலையில் எழுந்தருளும் இளஞாயிற்றின் பொலிவில் கண்டு போற்றியுள்ளனர். இதனை "உலகம் உவப்ப வலனோர் புதிருதரு பலபுகழ் ஞாயிறு கடற் கண்டாங்கு" என நக்கீரர் போற்றியுள்ளார். இங்கு இளஞாயிற்றின் பொலிவை நக்கீரர் உவமையாகக் கையாண்டுள்ளார். இளஞாயிற்றின் வழிபாடே முருக வழிபாடு எனவும், இளஞாயிறின் வழிபாட்டிலிருந்தே முருக வழிபாடும் தோன்றியது என்னும் அறிஞர் கூறுகின்ற கருத்தும் நோக்கத்தக்கதாகும்.

**திருமுருகாற்றுப்படையின் சிறப்புக்கள்**

இந்நூலில் பல்வேறுபட்ட விடயங்கள் விரித்துக் கூறப்படுவது நோக்கத்தக்கது. அறுமுகத்தினுடைய முருகனின் திருமுகங்கள் பற்றி இங்கு கூறப்பட்டுள்ளவற்றை நோக்கும் போது 'மா இருள் ஞாலம் மறு இன்றி விளங்க பல்கதிர் விரிந்தன்று ஒரு முகம்'. பெரிய இருளையுடைய உலகம் குற்றம் இன்றி விளங்கும் படியான பலவகையான கதிர்கள் விரிந்த ஒளிதரும் ஒருமுகம் எனவும், பக்தர்கள் ஏற்றிப் புகழும் போது விருப்பத்துடன் அவர்களுக்கு வரத்தைக் கொடுக்கும் ஒரு முகம் 'ஆர்வலர் ஏத்த அமர்ந்து இனிது ஒழுகிக் காதலின் உவர்ந்து வரம் கொடுத்தன்றே' எனவும், விதிப்படி நடக்கின்ற வேள்விகளைக் காத்து நிறைவேற்றுவது 'மந்திரவிதியின் மரபுளி வழா அந்தணர் வேள்வி ஓர்க்கும்மே' ஒரு முகம் எனவும்,

கல்வியில் ஆராய்ந்து விளக்கும் மெய்ஞ் ஞானத்தைத் தருவது ஒரு முகம்', 'எஞ்சிய பொருள்களை ஏமுறநாடி திங்கள் போலத் திசை விளக்கும்மே' எனவும், களத்திலே வேள்வியைச் செய்து வெற்றிக்கு வழி வகுப்பது 'செறுநர்த் தேய்த்துச் செல் சமம் உருக்கிக் கறுவுகொள் நெஞ்சமொடு களம் வேட்டன்றே' ஒரு முகமும் எனவும், மற்றைய முகம் 'குறவர் மறமகள் கொடி போல் நுகப்பின் மடவரல் வள்ளியொடு நகைமலர்ந்தன்றே' என வள்ளியொடு மகிழ்வாக இருக்கும் முகம் எனவும், இவ் வாறு, ஆறுமுகங்களும் தம் கருமங்களை முறைப்படி செய்கின்றன என 'ஆங்கு அம் மூவிரு முகமும் முறைநவின்று ஒழுகலின்' என அறுமுகத்தின் சிறப்பைக் கூறுகிறார்.

மேலும் வழிபடும் முறைகளையும் எடுத் துக் கூறி 'உளையாய் என் உள்ளத் துறை நீ என்றும் என்மனத்தே இருக்கத் துணையாக எழுந்தருளுவாயாக'. வேல் நமக்குத் துணையாக எப்போதும் விளங் கட்டும் என அழுத்திக் கூறுகின்றார். முரு கனுடைய திருநாமத்தைத் திரும்பத் திரும்பக் கூறுவதனால் அடியவர்கள் புதிய சக்தியைப் பெறுகிறார்கள். ஒரு முறை அவனை நினைத்தாலே தனது இரண்டு திருவடிகளையும் காட்டி இன்ன லைப் போக்கி அருளுபவன் முருகன் என அவனது திருநாமத்தைச் சொல்லு வதனால் ஏற்படும் நன்மைகள் பற்றியும் இங்கு விளக்கிக் கூறப்பட்டுள்ளது. முரு கனுக்கு அணிகலன் ஆபரணமாக விளங்குகின்ற இத் திருமுருகாற்றுப் படையைப் பாராயணம் செய்து வருவது முருகனைப் பூசை செய்வதற்கு ஒப்பான சிறப்புடையது என 'அணி முருகாற்றுப் படையைப் பூசையாகக் கொண்டே புகல்' என இங்கு கூறப்படுகின்றது. இவ்வாறு அறுபடை வீட்டினுடைய பெருமைகளை யும் அறுமுகனின் சிறப்பினையும் நன்கு எடுத்துக் கூறுகின்ற திருமுருகாற்றுப்படை யானது, முருகனை நினைந்து போற்றி வணங்குவதற்குரிய ஓர் சிறந்த நூலாகும். இதைப் பாராயணம் செய்வதனால் 'பெற வரும் பரிசில் நல்கு மதி' என பெறு வதற்கு அரிதாகிய சீவன் முக்தி என்னும் பேறு அடையப்படுகின்றது. பன்னிருகைக் கோலத்தோடு விளங்குகின்ற வானோர் குறை தீர்த்து அருளிய வேலப்பன், வீடு பேறாகிய முத்தியையும் அருளுபவன். எமது துன்பங்கள் எல்லாவற்றையும் போக்கி நினைத்த வரங்களை அருளி வாழவைப்பவன் எனச் சிறப்பாகக் கூறப் படுகின்றது.

**நக்கீரர் தாம் உரைத்த நன்முருகாற்றுப்படையைத்**
**தற்கோலநாள் தோறும் சாற்றினால் – முற்கோல**
**மாமுருகன் வந்து மனக்கவலை தீர்த்தருளித்**
**தான் நினைத்த எல்லாம் தரும்.**

**வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட தீரவேல்**
**தீரவேல் செவ்வேள் திருக்கைவேல் – வாரி**
**குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்பும் குன்றும்**
**துளைத்தவேல் உண்டே துணை.**

நல்லூர்க் கந்தனின் வசந்த மண்டபத்தின் முன்
தரிசன மண்டபத்திற்கு 2009ம் ஆண்டு யூன்
மாதம் ரெறாசோ பதிக்கப்பட்டது.

# சிலப்பதிகாரத்தில் முருக வழிபாடு

**ஈஸ்வரநாதபிள்ளை குமரன்**
**சிரேஷ்ட விரிவுரையாளர், தமிழ்த்துறை,**
**யாழ்.பல்கலைக்கழகம்.**

முருக வழிபாடு தமிழகத்தில் மிகத் தொன்மையான காலம் முதலாகவே நிலவி வருகின்றது. காலத்தால் முற்பட்ட பழந்தமிழ் நூல்களான சங்க இலக்கியங் களில் கூட இவ் வழிபாடு பற்றிய தகவல் கள் பரவலாக வருவதை அவதானிக் கலாம். சங்க இலக்கியங்களுள் பரிபாட லும் திருமுருகாற்றுப்படையும் முருக வழிபாடு பற்றிய பல தகவல்களைத் தரு கின்றன. முருகன் உறையும் திருத்தலங் கள், அங்கு நடைபெறும் வழிபாடுகள், முருகனின் அருள்மாட்சி முதலான இன்னோரன்ன தகவல்கள் அவற்றில் தரப்பட்டுள்ளன. இங்ஙனம் சங்ககாலப் பகுதியில் தனித்துவம் பெற்றிருந்த இவ் வழிபாடு அதற்கடுத்த நூற்றாண்டுகளில் எவ்வாறிருந்தது? எத்தகைய வளர்ச்சி களைக் கண்டிருந்தது என்பதை அறிவ தற்குரிய சான்றாதாரங்களைத் தரும் ஒரே இலக்கியம் சிலப்பதிகாரமாகும்.

## 1. சிலப்பதிகாரம்

சிலப்பதிகாரம் சங்க காலத்தை அடுத்து வந்த சங்கமருவிய காலத்தில் எழுந்த ஒரு காவியமாகும். இக்காவியம் சங்கமருவிய காலத்தின் பிற்பகுதியில் செய்யப்பட்டிருக்க வேண்டும் என்பது ஆய்வாளர்களது முடிபு. இக்காவியத்தில் வணிக சமுதாயத்தினரே தலைமாந்தர் களாக வருவதுடன், அவர்களின் வாழ் வியல் பற்றிய பல கருத்துக்கள் முன் வைக்கப்பட்டிருத்தலால் தமிழகத்தில் வணிக வர்க்கத்தினரின் செல்வாக்கு உச்ச நிலையிலிருந்த ஒரு காலப் பகுதி யில் இந்நூல் செய்யப்பட்டிருக்க வேண்டும் எனக் கருதப்படுகின்றது.

தமிழரின் பண்பாட்டுக் களஞ்சியமாக விளங்கி வரும் சிலப்பதிகாரம் ஒரு சமண காவியமாக இருந்தபோதிலும் அது தமிழ் நாட்டு மக்களிடையே செல்வாக்குற்றிருந்த ஏனைய மதங்கள், அவற்றின் வழிபாட்டு மரபுகள் என்பனவற்றையும் கூறிச் செல்வ தைக் காணமுடிகிறது. தமிழர்களின் பண் பாட்டினைப் பதிவுசெய்து பேணுவதில் இளங்கோவடிகளுக்கு இருந்த ஆர்வமும் விருப்புணர்வும் காவியம் முழுவதும் இழை யோடுவது கவனிக்கத்தக்கதொன்றாகும். பண்டைத்தமிழர் கலை, சமயம், இலக் கியம், சமூக, பொருளாதார, அரசியற் கட்டுமானம் என இன்னோரன்ன பல தகவல்கள் அந்நூலில் பதிவு செய்யப்பட் டுள்ளன. அந்தவகையில் தமிழர்கள் மத்தி யில் தொன்றுதொட்டு சிறப்பிடம் பெற்றி ருந்த முருக வழிபாடு பற்றிய பல முக்கிய தகவல்களையும் இக் காவியம் கூறிச்செல் கின்றது. இச் சிலப்பதிகாரத் தகவல்கள் முருக வழிபாடு சங்கமருவிய காலத்திலும் மிக விதந்துரைக்கத்தக்க இடத்தினைப் பெற்றிருந்தமையை எடுத்துக் காட்டுகின்றன.

**2. ஆலயம்**

முருக வழிபாடு ஆலய அமைப்புடன் வளர்ச்சி பெற்றிருந்த நிலையைச் சிலப்பதிகாரம் எடுத்துக்காட்டுகின்றது. ஏனைய தெய்வங்களுக்கு கோவிலும் கோட்டமும் எடுத்துச் சிறப்பித்தமை போலவே முருகனுக்கும் அழகான ஆலயம் அமைத்து வழிபட்டு வந்துள்ளமை பற்றி இளங்கோவடிகள் கூறுகின்றார்.

**"பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்**
**அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்"** [1]

என வருதல் காண்க. முருகப் பெருமானை திருமுருகாற்றுப்படை குறிப்பிடுவது போல்

**"ஆர்வலர் ஏத்த மேவரு நிலையினும்**
**வேலன் தைஇய வெறிஅயர் களனும்**
**காடும் காவும் கவின்பெறு துருத்தியும்**
**யாறும் குளனும் வேறுபல் வைப்பும்**
**சதுக்கமும் சந்தியும் புதுப்பூங் கடம்பும்**
**மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையினும்**
**மாண் தலைக் கொடியொடு....."** [2]

எனும் இடங்களில் கண்டு வழிபடும் நிலை மாறி, கோவில்களை அமைத்து வழிபட்ட நிலையைச் சிலப்பதிகாரம் எடுத்துக் காட்டுகின்றது. முருகப்பெருமானுக்கு அமைக்கப்பட்ட ஆலயத்தை 'அணிதிகழ் கோவில்' என இளங்கோவடிகள் சுட்டுவது கவனிக்கத்தக்கதாகும். ஆலயம் ஒன்றிற்குரிய அமைப்புக்களும், அழகியல் வேலைப்பாடுகளும் அதில் அமைந்திருக்க வேண்டும் என்பது இதனால் பெறப்படுகின்றது. சங்ககாலத்திலும், சங்கமருவிய காலத்திலும் அமைக்கப்பட்டிருந்த கோவில்கள் அழிபொருள்களால் கட்டப்பட்டிருந்தமையினால் அவற்றின் சிதைவுகளைத் தானும் பிற்காலங்களில் பெறமுடியாமற் போயிற்று. இந்நிலையில் இலக்கியங்களில் வரும் கோவில்கள், கோவில் அமைப்புமுறைகள் பற்றிய தகவல்கள் குறிப்பிட்டு நோக்கத்தக்கவையாகும். முருக வழிபாடு ஆலய அமைப்புக்களுடன் கூடிய செந்நெறி அந்தஸ்தினைப் பெற்ற தன்மையையும் இதன் மூலம் உணர்ந்து கொள்ள முடிகின்றது.

**3. ஆறுபடைவீடு**

முருக வழிபாட்டில் சிறப்பிடம் பெறுபவை ஆறுபடை வீடுகளாகும். முருகன் காட்சிக்கெளியனாக வேலனின் வெறியாட்டுக்களம் முதலான பல இடங்களிலும் வெளிப்பட்டு அருள் பாலித்தாலும் ஆறுபடை வீடுகளிலேயே அவன் விரும்பி உறைவான் என்பது தமிழ் மக்களின் உறுதியான நம்பிக்கையாகும். இந்நம்பிக்கை சங்க இலக்கியங்களில் கூட எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. திருமுருகாற்றுப்படை, பரிபாடல் போன்றவற்றில் ஆறுபடை வீடுகள் பற்றிய குறிப்புகள் நேரடியாக இடம்பெறுகின்றன. திருமுருகாற்றுப்படை ஆன்மீக நாட்டங் கொண்ட ஒருவனை ஆறுபடைவீடுகளிலும் எழுந்தருளியுள்ள ஆண்டவனிடத்திலே வழிப்படுத்தும் நோக்கம் கொண்டது. திருப்பரங்குன்றம், திருச்செந்தூர் (திருச்சீரலைவாய்), திருவாவினன் குடி (பழனி), திருவேரகம், பழமுதிர்ச்சோலை எனும் தலங்களிலும் பொதுவாகக் குன்றுகள் தோறும் உறைந்தருளும் முருகப்பெருமானின் தோற்றப் பொலிவு, அழகு, அருட் செயல்கள் என்பன அங்கு விதந்து பேசப்படுகின்றன. இங்ஙனம் முருக வழிபாட்டில் முதன்மை பெற்று விளங்கும் ஆறுபடைவீடுகள் பற்றிய செய்திகள் சிலப்பதிகாரத்திலும் இடம்பெறுவதைக் காணலாம். சிலப்பதிகாரத்தின் வஞ்சிக்காண்டத்திலுள்ள குன்றக்குரவையில்

**"சீர்கெழு செந்திலும் செங்கோடும் வெண்குன்றும்**
**ஏரகமும் நீங்கா இறைவன் கை வேலன்றே"** [3]

என வரும் பாடல் நோக்கத்தக்கது. இங்கு முருகனின் ஆறுபடைவீடுகளுள் திருச் செந்தூர், திருச்செங்கோடு, சுவாமிமலை, திருவேரகம் என்பன குறிக்கப்படுகின்றன. 'செந்தில்' என்பது திருச்செந்தூரைக் குறிக்கும். அவ்விதமே 'வெண்குன்று' என்பது சுவாமிமலையைக் குறித்தது. இவற்றுள் திருச்செங்கோடு ஆறுபடை வீடுகள் வரிசையில் புதிதாக இடம்பெற்றி ருத்தல் நோக்கத்தக்கதாகும்.

**4. கூத்துகள்**

முருகனுக்கு நாட்டார் நிலையில் நிகழ்த்தப்படும் வழிபாடுகள் குறித்தும் சிலப்பதிகாரத்திலே குறிப்புகள் உள. மக்கள் ஒருமித்து நிகழ்த்தும் இவ்வழிபாடு பற்றி திருமுருகாற்றுப்படை, பரிபாடல் என்பவையும் குறிப்பிடுகின்றன. திரு முருகாற்றுப்படை, பழமுதிர்ச்சோலையைச் சூழ உள்ள ஊர்களில் நடைபெறும் இவ் வாறான வழிபாட்டு மரபு பற்றிச் சுருக்க மாகக் குறிப்பிடுகின்றது.

**"சிறுதினை மலரொடு விரைஇ மறிஅறுத்து**
**வாரணக் கொடியொடு வாயிற்பட நிறீஇ**
**ஊர்ஊர் கொண்ட சீர்கெழு விழவினும்"** [4]

என வருதல் நோக்கத்தக்கதாகும். முற்றி லும் தமிழ்மரபு சார்ந்த இவ்வழிபாட்டு மரபுகளை சிலப்பதிகாரமும் பதிவு செய் துள்ளது. முருகன் கூத்துப்பிரியனாக பழந் தமிழ் இலக்கியங்களிலே காட்டப்பட்டுள் ளான். குன்றுகள் தோறும் நடன மாடி மகிழ்வது அவனுக்குப் பிடித்தமான செயல் என இலக்கியங்கள் சுட்டுகின்றன. முருகப்பெருமானின் பிரதிநிதியாகப் பார்க்கப்படுகின்ற வேலனும் வெறியாட் டயர்வின் பின்னதாக சிவந்த ஆடை அணிந்து செவ்வலரி மாலை சூடி குன்றங் களில் மலை சாதிப் பெண்களுடன் கூடி ஆடுவது பற்றி இலக்கியங்களிலே குறிப் புண்டு. இத்தகைய முருகனுக்குப் பிடித்த கூத்து வகைகளை இளங்கோவடிகள் ஆங் காங்கே சுட்டிக்காட்டுகிறார். சிலப்பதிகாரம் அரங்கேற்று காதையில் மாதவி பயின்ற பதினொரு ஆடல் வகைகள் ஒன்றாக 'அறுமுகன் ஆடுங்குடை' என்பது குறிப் பிடப்படுகின்றது. குடைக்கூத்து எனச் சுட்டப்படும் இந் நடனம் பற்றிக் கடலாடு காதையில் மேலும் விளக்கம் செய்கிறார் இளங்கோவடிகள்.

**"......மாக்கடல் நடுவண்**
**நீர்த்திரை அரங்கத்து நிகர்த்து முன்நின்ற**
**சூர்த்திறம் கடந்தோன் ஆடிய துடியும்**
**படைவீழ்த்து அவுணர் பையுள் எய்த**
**குடைவீழ்த்து அவர் முன் ஆடிய குடையும்"** [5]

என வருதல் காண்க. சூரனைக் கொன்று அவுணர்களை அடக்கிய முருகப் பெரு மான், அவர்கள் கண்டு அஞ்சும்படியாக ஆடிய கூத்தே குடைக்கூத்து எனச் சொல் லப்பட்டது. அக்கூத்தினை ஆடி முரு கனை மகிழ்விப்பது பண்டைத் தமிழரின் வழக்காறாக இருந்துள்ளது. கடலாடு காதையில் இருந்து தரப்பட்டுள்ள மேற் போந்த வரிகளில் 'துடிக்கூத்து' என ஒன்றும் குறிப்பிடப்பட்டுள்ளதைக் காண லாம். 'துடி' என்னும் வாத்தியத்தினை இசைத்து ஆடும் நடனமே துடிக்கூத்து எனப்பட்டது. சூரனைச் சங்கரித்த முருகன் அவ்வுக்கிரமும் பெருமிதமும் பொருந்த இந்நடனத்தினை ஆடினான் எனக்குறிப்பிடு கின்றார் இளங்கோவடிகள்.

முருகனைக் குரவைக் கூத்தாடியும் வழிபடும் வழக்கம் இருந்துள்ளது. குர வைக் கூத்தினைக் குறவர்களே பெரிதும் ஆடினர். திருமுருகாற்றுப்படையிலும்

**"குன்றகச் சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து**
**தொண்டகச் சிறுபறைக் குரவை அயர"** [6]

என வருதல் காண்க. முருகனை மருமகன் உறவு கொண்டாடும் மலைவாழ் மக்கள் அவ் உரிமையுடன் வாழ்த்திப்பாடும் பாடல்களையும் அப்பாடல்களோடு இணைந்த ஆட்டத்தினையும் குரவைக் கூத்தில் காணலாம். முருகனின் பெருமைகள், அவனது வீரம், சூரனை அழித்து தேவரைக் காத்த பெருந்திறன், அருட்சிறப்பு என்பனவற்றை பழமரபுக் கதைகள், புராணக்கதைகள் என்பவற்றுடன் இணைத்துக் குரவைக் கூத்தில் பாடியும் ஆடியும் வந்தனர்.

"உரையினி மாதராய்! உண்கண் சிவப்பு
புரைதீர் புனல்குடைந்து ஆடின் நோமாயின்
உரவுநீர் மாகொன்ற வேல் ஏந்தி ஏத்திக்
குரவை தொடுத்தொன்று பாடுகம்வா தோழி" [7]

எனச் சிலப்பதிகாரத்தில் வருதல் காண்க. பண்டைத் தமிழரின் கலைகளில் ஒன்றான இக்கூத்துமுறை சமய உணர்வு தமிழகத்தில் கோலோச்சிய காலங்களில் சமயத்துடன் இணைந்து வளர்ச்சி பெற்றிருக்கவேண்டும். குரவைப்பாடலுள் அக உணர்வையும் பாடலாசிரியர்கள் கலப்பதை குன்றக் குரவையை உற்று நோக்குவோர் கண்டுணர்வர்.

**5. வெறியாட்டு**

முருக வழிபாட்டில் வெறியாட்டு முறையும் பிரபல்யம் பெற்றிருந்தது. வெறியாட்டில் ஈடுபடும் வேலன் மீது முருகன் காட்சி தந்து குறிசொல்வான் என்னும் நம்பிக்கை பண்டைக்காலம் முதலாகவே தமிழர் மத்தியிலே இருந்தது. வெறியாடும் வேலனை முருகனின் பிரதிநிதியாகவே கண்டு வழிபடும் மரபைச் சங்க இலக்கியங்கள் மிகத் தெளிவாக எடுத்துக் காட்டின. சங்ககாலத்தில் அகவாழ்விலும் புறவாழ்விலும் வெறியாட்டு நிகழ்ந்து வந்துள்ளதைக் காணலாம். அகவாழ்விலே தலைவன் மீது தீராத காதல் கொண்டு உடல் மெலிவும், உளவருத்தமும் அடையும் தலைவியின் நிலையைக் கண்ட தாய், தந்தையர் அவளுக்கு நிகழ்ந்தது என்ன என்பதை அறிந்து கொள்ளுதற்காக வெறியாட்டினை நிகழ்த்துவிப்பது வழக்கமாகும். வெறியாட்டு நிகழ்வில் வேலன் வெறியாடி, தனக்கும் தனது தலைவருக்கும் இடையேயான காதலை வெளிப்படுத்திவிடுவானோ என்ற ஐயம் தலைவியர் மாட்டு இருந்ததை சங்க இலக்கியங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

அதே போலவே புறவாழ்வில் போரில் வெற்றி வேண்டியும் படையெடுத்துச் செல்லுதற்குரிய காலத்தை அறிதற்பொருட்டும் வெறியாட்டு நிகழ்ந்ததற்கான சந்தர்ப்பங்கள் உள. திருமுருகாற்றுப்படை, வேலனின் வெறியாட்டு களம் பற்றியும் அவனின் தோற்றப் பொலிவு பற்றியும் குறவர் குலத்தவருடன் கூடி அவனாடும் குரவைக் கூத்துப்பற்றியும் தகவல்களைத் தருவதைக் காணலாம்.

"பைங்கொடி நறைக்காய் இடைஇடுபு வேலன்
அம்பொதிப் புட்டில் விரைஇக் குளவியொடு
வெண்கூதாளம் தொடுத்த கண்ணியன்
நறுஞ்சாந்து அணிந்த கேழ்கிளர் மார்பிற்
கொடுந்தொழில் வல்விற் கொலைஇய கானவர்
நீடுஅமை விளைந்த தேக்கள் தேறல்
குன்றகச் சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து..." [8]

என வேலனின் வெறியாட்டு களம் பற்றிய வர்ணனை வருவதைக் காண்க. சிலப்பதிகாரத்திலும் வெறியாட்டு நிகழ்வு குறித்த தகவல்கள் வருகின்றன. இங்கும் அகப்பாடல் மரபைத் தழுவியே வெறியாட்டுப் பற்றிய பாடல்கள் அமைந்துள்ளன. தலைவனால் தனக்கு உண்டாய காதல் நோயினை அறியாது தாய் தந்தையர் ஒழுங்குபடுத்திய வெறியாட்டை தலைவி

கிண்டல் செய்து தோழிக்குக் கூறுவதாக இப்பாடல்கள் அமைந்துள்ளன. எனது உடல் வாட்டம் காதல் நோயினால் வந்தது என்பதை அறியாது தாய் தந்தையர் அழைத்தமைக்காக வரும் வேலனும் அவன் மேல் வரும் முருகனும் உண்மை யிலேயே 'மடையர்களே' எனத் தலைவி எள்ளி நகையாடுவதும் கவனிக்கத்தக்க தாகும். சுவை மிக்க இவ் அகப்பாடல்கள் சிலப்பதிகாரக் குன்றக் குரவைக்குத் தனி அழகு சேர்த்துள்ளன. எடுத்துக் காட்டாகப் பின்வரும் பாடல்களை நோக்கலாம்.

**"ஆய்வளை நல்லாய் இதுநகையா கின்றே**
**மாமலை வெற்பன்நோய் தீர்க்கவரும் வேலன்**
**வருமாயின் வேலன் மடவன் அவனின்**
**குருகு பெயர்க்குன்றம் கொன்றான் மடவன"**

**"செறி வளைக்கை நல்லாய் இதுநகையா கின்றே**
**வெறிகமழ் வெற்பன் நோய் தீர்க்க வரும்வேலன்**
**வேலன் மடவன் அவனினும் மடவன்**
**ஆலமர் செல்வன் புதல்வன் வருமாயின்"** [9]

எனினும் வேலன் வெறியாடும் போது அவன் மீது பிரசன்னமாகும் முருகப் பெருமான் நடந்த உண்மை களைத் தாய் தந்தையரிடம் சொல்லிவிடு வானோ என்ற பயமும் பெண்களிடம் இருந்ததைச் சிலப்பதிகாரம் கூறுகின்றது. இதனால் முருகனைப் பணிந்து தம்மைத் தம் காதலரோடு கூட்டிவைக்கும்படி அவர் கள் இரந்து கேட்கின்றனர்.

**"கயிலைநன் மலையிறை மகனைநின் மதிநுதல்**
**மயிலியல் மடவரல் மலையர் தம் மகளார்**
**செயலைய மலர்புரை திருவடி தொழுதேம்**
**அயல்மணம் ஒழியருள் அவர்மணம் எனவே"**

**"மலைமகள் மகனை நின் மதிநுதல் மடவரல்**
**தலைமலை உறைதரு குறவர் தம் மகளார்**
**நிலைஉயர் கடவுள் நின் இணையடி தொழுதேம்**
**பலரறி மணமவர் படுகுவர் எனவே"** [10]

என வருதல் காண்க.

**6. வேல் வழிபாடு**

முருகப் பெருமானை அவன் சின்னமாகிய வேலில் கண்டும் மக்கள் வழிபட்டு வந்ததைச் சிலப்பதிகாரம் குறிப் பிடுகின்றது. முருகனின் ஆயுதமாகக் கையிலே திகழும் வேல் முருகனின் சக்தியின் ஒரு சின்னமாகக் கருதப்பட்டு வந்தது. இவ்வேல் வணக்கமுறை மிகவும் பழங்காலத்திலிருந்தே திராவிட மக்கள் மத்தியில் நிலவி வந்தமைக்குச் சான்று கள் பலவுள்ளன. பெருங்கற்பண்பாட்டுக் காலத்துக்குரியதாகக் கிடைக்கப்பெறும் ஈமச்சின்னங்களில் வேற்சின்னங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை இவ் வழி பாட்டின் தொன்மையை எமக்குணர்த்து வதாக உள்ளது. வேலைக் கையிலே தாங்கிய முருகப் பெருமான் 'வேலவன்' என அழைக்கப்பட்டான். பிற் காலங்களில் முருகனுக்கும் அவனது சின்னமாகிய வேலுக்கும் இடையிலே தொடர்பு கற்பித் துப் பல புராணக்கதைகள் எழுந்தன. சிலப்பதிகாரம் அப் புராணக் கதைகளைக் கூறி வேல் வழிபாட்டை முன்னிறுத்து கின்றது.

**"பாரிரும் பௌவத்தி னுள்புக்குப் பண்டொருநாள்**
**சூர்மா தடிந்த சுடரிலைய வெள்வேலே"**
**"பிணிமுக மேற்கொண்டு அவுணர் பீடழியும் வண்ணம்**
**மணிவிசும்பிற் கோனேத்த மாறட்ட வெள்வேலே"**
**"வருதிகிரி கோலவுணன் மார்பம் பிளந்து**
**குருகுபெயர்க் குன்றம் கொன்ற நெடுவேலே"** [11]

என வேற்படையின் சாதனைகளை பட்டியலிட்டுக் காட்டுகின்றார் இளங் கோவடிகள். வேற்படையின் பெருமை அது முருகன் திருத்தலத்தில் இருப்பதே என்பதை

**"அணிமுகங்கள் ஓர்ஆறும் ஈராறு கையும்**
**இணையின்றித் தானுடையான் ஏந்திய வேலன்றே"**
**"சரவணப்பூம் பள்ளியறைத் தாய்மார் அறுவர்**
**திருமுலைப்பால் உண்டான் திருக்கை வேலன்றே"** [12]

எனச் சுட்டுவதால் அறியக் கூடியதாக வுள்ளது. அதேபோலவே கண்ணகியை வர்ணிக்கும் மற்றோர் இடத்தில் அறுமுக னையும் அவன் கைவேலையும் இளங் கோவடிகள் சுட்டுகின்றார்.

**"அறுமுக ஒருவன் ஓர்பெறுமுறை இன்றியும்**
**இறுமுறை காணும் இயல்பினன் அன்றே**
**அம்சுடர் நெடுவேல் ஒன்றும் நின் முகத்துச்**
**செங்கடை மழைக்கண் இரண்டா ஈத்து"** [13]

எனும் தொடர்களில் முருகனின் வேல் கண்ணகியின் கண்களுக்கு உவமையாக் கப்பட்டமை காண்க.

**7. கடம்பமரம்**

முருக வழிபாட்டில் கடம்பமரமும் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. முருகன் கடம்ப மரத்தில் விரும்பி உறைபவன். கடம்ப மாலையினை விரும்பி அணிபவன் என்றெல்லாம் இலக்கியங்கள் போற்றுகின் றன. இதனாலேதான் முருகன் 'கடம்பன்' என்றும் வழங்கப்பட்டான். திருமுருகாற் றுப்படை, திருப்பரங்குன்றத்தில் மதாளித்து வளர்ந்து நிற்கும் கடம்ப மரங்கள் பற்றிப் பின்வருமாறு கூறுகிறது.

**"கார்கோள் முகந்த கமஞ்சூல் மாமழை**
**வாள்போழ் விசும்பில் வள்உறை சிதறித்**
**தலைப்பெயல் தலைஇய தண்நறுங் கானத்து**
**இருள்படப் பொதுளிய பராரை மராஅத்து**
**உருள்பூந் தண்தார் புரளும் மார்பினன்"** [14]

சிலப்பதிகாரம் முருகனைக் 'கடம் பன்' என்றே அழைக்கின்றது.

**"கறிவளர் தண்சிலம்பன் செய்தநோய் தீர்க்க**
**அறியாள்மற்று அன்னை அலர்கடம்பன் என்றே"** [15]

அன்றியும், முருகன் விரும்பியணி யும் மாலையாகக் கடம்ப மாலையை அது பல இடங்களிலும் சுட்டுகின்றது.

**"கார்க் கடப்பந் தாரெம் கடவுள் வருமாயின்"** [16]
**"கடம்புகூடி உடம்பிடி ஏந்தி"** [17]

என வருந் தொடர்களால் இதனையறியலாம்.

**8. புராணக்கதைகள்**

முருகனைப் பற்றிய புராணக் கதைகள் சிலப்பதிகாரத்தில் அதிகளவில் பயின்று வந்துள்ளன. பிற்காலச் சங்க இலக்கியங்களான பரிபாடல், திருமுருகாற் றுப்படை என்பனவற்றிலும் முருகனுடன் தொடர்புபட்ட புராணக்கதைகள் அதிகள வில் எடுத்தாளப்பட்டுள்ளமையைக் காண லாம். குறிப்பாக முருகனின் பிறப்பு, சூரனைச் சங்கரித்தமை, சிவனுக்குக் குருவாக இருந்தமை முதலான புராணச் செய்திகளை இவற்றில் அடிக்கடி சந்திக்க முடிந்தது.

முருக வழிபாடு முழுக்க முழுக்க திராவிட மக்களுக்கேயுரிய சிறப்பான வழிபாடு. எனினும் காலப்போக்கில் ஆரிய மயமாக்கத்தின் விளைவாக அவ் வழி பாட்டில் மாற்றங்கள் ஏற்பட்டன. ஆரியர் களின் தெய்வமான 'ஸ்கந்தனுக்கும்' திராவிட மக்களின் தெய்வமான முரு கனுக்கும் இடையிலே ஓர் இணைப்பு ஏற்பட்டது. இந்நிலையில் வடமொழி புராணக் கதைகளில் வரும் ஸ்கந்தனுக் குரிய பண்புகளும் அருட் செயல்களும் முருகனுக்குரியதாக மாற்றப்பட்டன. அன்றியும் வள்ளி மணாளனாக இருந்த முருகனுக்கு ஆரியவழிவந்த தெய்வ யானையும் மணமகளாக்கப்பட்டாள். வள்ளி, தெய்வயானை இருவருக்கும் முருகன் மணாளனாகப்பட, 'சுப்பிரமணிய வழிபாடு' தமிழர்களிடத்திலே நிலைபெற் றது. ஆரியமயமாக்கத்தால் முருகவழி பாடு மாற்றமுறுகின்ற ஒரு சூழலிலேயே திருமுருகாற்றுப்படையும் பரிபாடலும் எழுந்திருக்க வேண்டும். இவ்விரு இலக் கியங்களிலும் திராவிட வழிபாட்டு நடை முறைகளும் ஆரிய வழிபாட்டம்சங்களும் கலந்திருப்பதைக் காணலாம். இதேநிலை

ஒன்றையே சிலப்பதிகாரமும் எடுத்துக் காட்டுகிறது. ஆரியவழிபாட்டு நடைமுறைகளும் திராவிட வழிபாட்டு நடைமுறைகளும் அங்கு கலந்துவருகின்றன.

வடமொழி 'ஸ்கந்த புராணங்களில்' கூறப்பட்டமை போன்று ஆறுமுகமும் பன்னிரு கைகளும் கொண்ட முருகவழிபாடு நிலைபெற்ற சூழல் ஒன்றைச் சிலப்பதிகாரம் காட்டுகின்றது.

**"அணிமுகங்கள் ஓராறும் ஈராறும் கையும்**
**இணையின்றித் தானுடையான்.."** [18]

அதே போலவே சூரனை முருகன் வென்ற செய்தி 'சூர்மா தடிந்த' என்பதாலும்

**"உரவுநீர் மாகொன்ற வேல் ஏந்தி ஏத்திக்**
**குரவை தொடுத்தொன்று பாடுகம் வா தோழி"** [19]

எனும் வரிகளாலும் சுட்டப்படுவதைக் காணலாம். இன்னும் சரவணப் பொய்கையில் முருகன் பிறந்த வரலாறு

**"சரவணப் பூம் பள்ளியறைத் தாய்மார் அறுவர்**
**திருமுலைப்பால் உண்டான்...."** [20]

என்னும் தொடரால் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. கிரௌஞ்ச மலையைப் பிளந்து அரக்கனை முருகன் அழித்தசெய்தி

**"வருதிகிரி கோலவுணன் மார்பம் பிளந்து**
**குருகுபெயர்க் குன்றம் கொன்ற நெடுவேலே"** [21]

என வருவதனால் அறியலாம். இது போன்ற புராணக்கதைகள் சிலப்பதிகாரத்தில் பயின்றுவரும் இடங்கள் பலவாகும்.

**9. வள்ளி மணவாளன்**

முருகப் பெருமான் வள்ளியை மணந்த செய்தியும், வள்ளி மணாளனாக அருள்பாலிக்கும் செய்தியும் சிலப்பதிகாரத்தில் தரப்பட்டுள்ளன. திராவிட மக்களுக்கேயுரிய முருக வழிபாட்டில் முருகன் - வள்ளி இணைப்பு முக்கியமான தொன்றாகும். முருகன் குறவர் மகளான வள்ளியை மணந்த செய்தியைப் பெருமையுடனும் சுவையாகவும் கூறிவருந்தன்மையை தமிழ் இலக்கியங்களிலே கண்டு கொள்ளக் கூடியதாகவுள்ளது. சிலப்பதிகாரமும்,

**"மலைமகள் மகளை நின் மதிநுதல் மடவரல்**
**குலமலை உறைதரு குறவர் தம்மகளார்"**

என்றும்

**"குறமகள் அவள் எம் குலமகள் அவளொடும்**
**அறுமுக ஒருவ நின் அடியிணை தொழுதேம்."** [22]

எனவும் முருகன் வள்ளிமணாளனாகக் காட்சி தருவது பற்றிச் சுட்டுகிறது.

இவற்றை நோக்குகின்றபோது முருக வழிபாடு சிலப்பதிகார காலத்திலும் சிறப்புற்றிருந்தமை புலனாகும். கோவிலும் கோட்டமும் அமைத்து வழிபடப்பட்ட அதேவேளை, தமிழ்மக்களுக்கேயுரிய பாரம்பரிய வழிபாட்டு நடைமுறைகளிலும் முருகன் அங்கு வணங்கப்பட்டு வந்துள்ளதைக் காணமுடிகின்றது. முருக வழிபாடு பற்றிய நம்பிக்கைகள், சடங்காசாரங்கள், பண்பாட்டு நடைமுறைகள், புராணக்கதைகள் எனப் பல தரவுகள் சிலப்பதிகாரத்தில் தரப்பட்டுள்ளன. இத்தரவுகள் சங்க காலத்தில் செல்வாக்குற்றிருந்த முருக வழிபாடு சிலப்பதிகார காலத்தில் மேலும் இன்னொரு தளத்தில் வளர்த்தெடுக்கப்பட்டிருந்த நிலையினை எடுத்துக்காட்டுகின்றன.

## அடிக்குறிப்புக்கள்:

1. சிலப்பதிகாரம், இந்திரவிழவு ஊரெடுத்த காதை, வரிகள் 90-91.
2. திருமுருகாற்றுப்படை, வரிகள் 221-227.
3. சிலப்பதிகாரம், குன்றக்குரவை, பாடல் 7.
4. திருமுருகாற்றுப்படை, வரிகள் 218-220.
5. சிலப்பதிகாரம், கடலாடுகாதை, வரிகள் 49-53.
6. திருமுருகாற்றுப்படை, வரிகள் 199-200.
7. சிலப்பதிகாரம், குன்றக்குரவை, பாடல் 6.
8. திருமுருகாற்றுப்படை, வரிகள் 190-198.
9. சிலப்பதிகாரம், குன்றக்குரவை, பாடல்கள் 11-12.
10. சிலப்பதிகாரம், குன்றக்குரவை, பாடல்கள் 15-16.
11. சிலப்பதிகாரம், குன்றக்குரவை, பாடல்கள் 7-9.
12. சிலப்பதிகாரம், குன்றக்குரவை, பாடல்கள் 8-9.
13. சிலப்பதிகாரம், மனையறம் படுத்த காதை, வரிகள் 49-52.
14. திருமுருகாற்றுப்படை, வரிகள் 7-12.
15. சிலப்பதிகாரம், குன்றக்குரவை, பாடல் 10.
16. சிலப்பதிகாரம், குன்றக்குரவை, பாடல் 13.
17. சிலப்பதிகாரம், குன்றக்குரவை 10, வரி 5.
18. சிலப்பதிகாரம், குன்றக்குரவை, பாடல் 8.
19. சிலப்பதிகாரம், குன்றக்குரவை, பாடல் 6-7.
20. சிலப்பதிகாரம், குன்றக்குரவை, பாடல் 9.
21. சிலப்பதிகாரம், குன்றக்குரவை, பாடல் 9.
22. சிலப்பதிகாரம், குன்றக்குரவை, பாடல் 16-17.

# கௌமார வழிபாட்டு மரபில் முருகக் கடவுளின் வடிவங்களும், நாமங்களும்

**மகேஸ்வரக்குருக்கள் பாலகைலாசநாதசர்மா**

*M.A, M.Phil.*

**சமஸ்கிருத விரிவுரையாளர்,**

**சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகம்,**

**கிழக்குப் பல்கலைக்கழகம்.**

**அறிமுகம்**

இந்து சமய வரலாற்று மரபிலே முருகனை முழுமுதற் தெய்வமாகக் கொண்டு வழிபாடு செய்து வரும் சமயப் பண்பாட்டு மரபு கௌமாரம் எனச் சிறப்பித்துக் கூறப்படுகின்றது. இப்பிரிவிலே முருகனே உயர் தெய்வமாகக் கூறப்பட்டு அவருக்குரிய அனைத்து வழிபாட்டு அம்சங்களும் சிறப்பாகவும் தனியாகவும் சமய இலக்கியங்களிலே கூறப்பட்டுள்ளன. இவ்வாறு கூறப்பட்டுள்ளவற்றை தனித்து நோக்குகின்றபோது முருகனின் பல்வேறு வடிவங்களும் அவற்றுக்குரிய நாமங்களையும் சிறப்பாகக் காணமுடிகின்றது.

**வழிபாடு**

ஒரு நாமம் ஓருருவம் ஒன்றுமிலார்க்கு ஆயிரம் திருநாமம் பாடிப் பரவுவது வழிபாடு. வழிபாட்டிற்குரிய முதல் அங்கமாகத் திகழ்வது இறைவன் திருவுருவம். இப்படியன், இந்நிறத்தன் என்று எழுதிக் காட்டொணா இறைவனை நம் முன்னோர் எப்படியெல்லாம் கண்டு மகிழ்ந்து வணங்கி நமக்கும் காட்டிச் சென்றுள்ளனர் என்பதை நினைக்கும்போது வியப்பாகவே உள்ளது. இறைவன் தனது பெருங்கருணையால் வேண்டுவார்க்கு வேண்டும் வடிவங்களில் திருக்காட்சி தந்தருளியதோடு, அக்கோலங்களில் தன்னை வழிபடுவோர்க்கும் என்றும் அருளைச் சொரிகின்றான். இதுவே இந்து சமயத்தின் தனிச் சிறப்பும் மாண்பும் ஆகும்.

**"ஸ்கந்த" என்ற சொல் விளக்கம்**

இவ்வுலகுக்கு எந்நாளும் அருள் புரிவதற்காக வெளிப்பட்ட ஒரு மின்னல் சக்தியே முருகன், "ஸ்கந்த" என்ற வடமொழிச் சொல்லுக்கு "வெளிப்படுதல்" என்று பொருள். மேகத்திலிருந்து மின்னல் வெளிப்படுதல் போன்று சிவஜோதியிலிருந்து வெளிப்பட்ட ஆறு பொறிகள், ஆறுமுக சுவாமியாகி 'ஸ்கந்தன்' எனப் பெயர் கொண்டது.

ஆகவே சிவசக்தி ஜோதியில் ஜனித்த பேரொளிப் பிழம்பாக முருகன் திகழ்கின்றான். அவன் பராக்கிரமசாலி, பேரருட் சக்தி வடிவினன். ஞான பலமும் முருகனுக்கே அதிகம் என்று காட்டவே சிவபெருமானும் முருகவேளிடம் உபதேசம் பெற்றுக் கொண்டார்.

**ஞானக்கினியாக முருகன்**

தீப்பொறியாகத் தோன்றி, வானிலிருந்து வாயுவால் சுமந்து வரப்பெற்று கங்கையில் விடப்பெற்று, சரவணப் பொய்கையில் வளர்ந்த முருகன் தீ, வான், வாயு, நீர், பூமி என்னும் ஐம்பூதத் தொடர்புடையவனாகத் திகழ்கின்றான். நெருப்பையும் எரிக்கும் ஞானக்கினியாக முருகன் விளங்குகின்றான்.

தந்தை - நெருப்பு; தாய் - நீர் (கங்கை); மகனோ ஜோதி வடிவினன்; தந்தை - ஸ்தாணு (மரம்); தாய் - அபர்ணா (கொடி); மகனோ விசாகன் (கீழ்க்கன்று) என்ற நயமும் முருகன் தத்துவத்தில் காணப்படுகின்றது.

**முருகனிடத்தின் மூன்று சக்திகள்**

சிவபெருமானின் ஐந்து முகத்தோடு சக்தியின் முகமும் (சித்சக்தியாகிய ஆறா வதறிவுக்குப் பொருளாவது அதோ முகம்) சேர்ந்து ஆறுமுகமாயிற்று. முருகனிடத்தில் மூன்று சக்திகள் உள்ளன அவை:

| | | |
|---|---|---|
| 1. இச்சா சக்தி | - | (விழைவாற்றல்) வள்ளி - இகம் |
| 2. கிரியா சக்தி | - | (செயலாற்றல்) தெய்வயானை - பரம் |
| 3. ஞானசக்தி | - | (அறிவாற்றல்) வேல் - வீடு |

இச்சா சக்தியின் வடிவமே வள்ளியம்மை. இவள் கரிய நிறம் உடையவள்; முருகனின் வலப்பாகத்தில் வீற்றிருப்பார்; கையில் தாமரை ஏந்தியிருப்பார்; போகியாய் இருந்து உயிர்க்குப் போகத்தைப் புரிதல் இறைவன் தன்மையாதலின், உலகில் இல்வாழ்க்கை நடத்தற் பொருட்டு முருகன் வள்ளியம்மையாரொடு தன் ஒரு திருமுகத்தாற் பேசி, மகிழ்ந்து நகையமர்ந்திருக்கின்றான்.

முருகனின் மற்றொரு சக்தி தெய்வானை. இவ்வம்மையை "மறுஇல் கற்பின் வாணுதல்" என்று நக்கீரர் போற்றுவார். கிரியா சக்தியாகிய தெய்வானையம்மை செந்நிறம் வாய்ந்தவர்; முருகனின் இடப்பால் விளங்குபவர்; கருங்குவளை மலரைக் கையில் ஏந்தியிருப்பவர்.

முருகனிடம் அமைந்த மூன்றாவது சக்தி ஞானசக்தி. அதுவே வேலாயுதமாக விளங்குகின்றது. வெல்லும் தன்மையுடையது வேல்; எல்லாவற்றையும் வெல்வது அறிவாற்றல். அறிவு ஆழமும், கூர்மையும் உடையது. "சக்திதன் வடிவே தென்னில் தடையிலா ஞானமாகும்" என்பது சிவஞானசித்தியார் வாக்கு. ஞானமே அஞ்ஞானத்தை வெல்லவல்லது".

**முருகனுக்கு மூன்று மயில்கள்**

முருகன் என்றவுடன் அவனது மயிலும் சேவலும் நம் கண் முன் நிற்கின்றன. முருகனுக்கு மூன்று மயில் வாகனம் இருந்தது. இந்திரனும் மயிலாக முருகனைத் தாங்கினான். சூரன் அழிந்த பின் அவனது ஒரு பாதி மயிலாகியது. மயில் தனது அழகால் யாவரையும் மயக்கவல்லது; எனவே அதனை மாயை என்பர். கோழி ஊர்த்துவ மாயை; மயில் அதோமாயை. கோழி நாததத்துவம் எனில் மயில் விந்து தத்துவம். நாதம் ஒலி வடிவினது; விந்து ஒளி வடிவினது; விந்து தத்துவம் ஆகிய மயில் கண் கவரும் ஒளியுடையதாய்ப் பலவகை நிறங்களைக் கொண்டு திகழ்தல் காணலாம். தோகையை விரித்து ஆடும் மயிலின் தோற்றம் ஓங்காரம் போல் ஒளிர்தல் பற்றியே "ஓங்காரத்துள்ளே முருகன் உருவங்கண்டு தூங்குதல் வேண்டும்" என்று கந்த புராணம் கூறுகின்றது. சேவலாகிய கோழி

ஒளியை விரும்புவது. எனவே அது அறியாமை இருளைப் போக்கி மெய்யறி வாகிய ஒளியைப் பரப்பும் முருகனின் கொடியாக விளங்குவது பொருத்தமே. வைகறையில் கோழி கூவுதல், ஓங்கார மந்திரத்தை ஒலி வடிவால் உலகுக்கு உணர்த்துவதாகும். முருகப் பெருமான் கோழிக் கொடி ஏந்தி நம்மையெல்லாம் சிவஞானப் பேரொளியைத் துய்க்கச் செய்தருளுகின்றார்.

**பல்வேறு வடிவங்கள்**

முருகனுடைய பல்வேறு வடிவங்கள் பற்றியும் கோயில்கள் பற்றியும் பண்டைய வடமொழிப் புராண நூல்களிலும் ஆகமங் களிலும் விரிவாகக் காட்டப் பெற்றுள்ளன. ஊரின் வடபுறத்தில் தான் முருகனுக்குக் கோயில்கள் கட்ட வேண்டும் என்று அக்கினி புராணம் கூறும். (தச்சூர் வடக்காகும் மார்க்கத்தமர்ந்த பெருமாளே என்று திருப்புகழில் அருணகிரிநாத சுவாமிகள் கூறுவது இதனை உறுதிப்படுத்தும். தற்காலத்தில் இத்தலம் ஆண்டார்குப்பம் என வழங்கப்படுகின்றது. ஊருக்குக் கிழக் குத் திசை நீங்கலாக ஏனைய திசைகளில் முருகனுக்குக் கோயில் கட்டலாம்).

**பிரஹத் ஸம்ஹிதை**

குப்தர் காலத்தைச் சேர்ந்த "பிரஹத் ஸம்ஹிதை" என்னும் நூல் (கி.பி. 5ஆம் நூற்றாண்டு) முருகனை இளைஞனாக மயில் மீது அமர்ந்த கோலத்தில் கையில் வேலுடன் விளங்கு மாறு அமைக்க வேண்டும் என்று குறிப்பிடு கின்றது.

**விஷ்ணு தருமோத்தரம்**

"விஷ்ணு தருமோத்தரம்" என்ற நூலில் முருகவேள் ஆறுமுகங்களுடனும் நான்கு கைகளுடனும் கோழியும் மணியும், இடக்கையில் வெற்றிக் கொடியும் வேலும் கொண்டவனாகவும் காட்டப்படுகின்றது.

**சமரங்கன சூத்திரதாரம்**

"சமரங்கன சூத்திரதாரம்" என்ற நூலில் முருகன் அழகிய இளம் பிள்ளை யாக ஒரு முகம் அல்லது ஆறுமுகங்கள் கொண்டவனாகக் காட்டப்படுகின்றார். நக ரங்களில் வைக்கப் பெறும் வடிவங்களில் 12 கரங்களும், கிராமங்களில் வைக்கப் பெறும் வடிவங்களில் இரண்டு கரங்களும், ஏனைய இடங்களில் ஆறு கரங்களும் இருக்கலாம் எனக் கூறப்படுகின்றது.

**சிவபுராணம்**

"சிவபுராணத்தில்" முருகவேள் நான்கு கரங்கள் கொண்டவராகக் காட்டப் பெறுகின்றார். "குமார தந்திரம்" என்ற நூலில் முருகப்பெருமானுக்குத் திருக் கோயில் அமைக்கும் விதம் பற்றி விரி வாகக் கூறப்பட்டுள்ளது.

**தியானரத்னாவளி**

"தியானரத்னாவளி" என்ற நூலில் முருகன் வடிவங்களை மூன்று வகை யாகக் காணலாம். அவர் சாத்துவிக வடிவம் ஏற்கும் போது ஒரு முகமும், இரு கரங்களும் கொண்டு திகழ்கின்றார். அவரது கரங்களில் சக்தி ஆயுதமும் தாம ரையும் திகழ்கின்றன. அவரது இராஜஸ வடிவத்தில் ஒரு முகமும், நான்கு கரங் களும் முறையே வஜ்ரம், சக்தி, அபய, வரதம் என்ற நிலையில் அமைகின்றன. தாமஸ வடிவத்தில் ஆறு முகமும் பன் னிரு கரங்களும் கொண்டு காட்சியளிக் கின்றார். சக்தி, வஜ்ரம், வாள், திரிசூலம், பாசம், தனுசு, சக்கரம், கேடயம், குக் குடம், அங்குசம் ஆகிய ஆயுதங்களுடன்

இரு கரங்கள் அபயவரதமாகத் திகழ் கின்றன.

**சனத்குமார பிரச்ன குமாரதந்திரம்**

"சனத்குமார பிரச்ன குமாரதந் திரம்" என்ற நூலில் முருகனது பதினாறு வடிவங்கள் கீழ்க்கண்டவாறு காட்டப்படு கின்றன.

| | |
|---|---|
| 1. ஞானசக்திதரன் | 2. ஸ்கந்தன் |
| 3. அக்னிஜாதா | 4. சௌரபேயன் |
| 5. காங்கேயன் | 6. சரவணபவன் |
| 7. கார்த்திகேயன் | 8. குமாரன் |
| 9. சண்முகன் | 10. தாரகாரி |
| 11. சேனாபதி | 12. குகன் |
| 13. பிரம்மசாரி | 14. சிவதேசிகன் |
| 15. கிரௌஞ்சதாரி | 16. சிகிவாகனர் |

பேரறிஞர் டி. ஏ. கோபிநாதராவ் அவர்கள் குமாரதந்திரம் என்ற நூலில் மற்றொரு வகையான 16 வடிவங்களைக் காட்டுகின்றார்.

| | |
|---|---|
| 1. சக்திதரன் | 2. ஸ்கந்தன் |
| 3. தேவசேனாபதி | 4. சுப்ரமணியன் |
| 5. கஜவாகனன் | 6. சரவணபவன் |
| 7. கார்த்திகேயன் | 8. குமாரன் |
| 9. சண்முகன் | 10. தாரகாரி |

11. சேனானி
12. பிரம்மசாஸ்தா
13. வள்ளி கல்யாணசுந்தரர்
14. பாலசுவாமி
15. கிரௌஞ்சபேதனர்
16. சிகிவாகனர்

**ஶ்ரீதத்வநிதி**

மைசூர் கிருஷ்ணராஜா என்பவர் தொகுத்த "ஶ்ரீதத்வநிதி" என்ற நூலில் 17 வடிவங்கள் கூறப்பட்டுள்ளன. அதில் சனத்குமார ப்ரச்ன குமாரதந்திரம் என்ற சிற்ப நூலில் கூறப்பட்ட 16 வடிவங்களு டன் வேலாயுத சுப்ரமண்யர் என்ற வடிவ மும் சேர்ந்துள்ளது. (இந்நூலைத் தஞ்சை சரஸ்வதிமஹால் நூல்நிலையம் பதிப்பித் துள்ளது).

**திருப்புகழில் முருகன்**

அருணகிரிநாத சுவாமிகள் முருகப் பெருமானைப் பாடியுள்ள பாங்கில் காணும் போது, முருகவேளின் வடிவங்களைக் கீழ்க்கண்டவாறு பிரித்துக் குறிப்பிடலாம்.

**குழந்தை வடிவங்கள் :**

1. பாலசுப்பிரமண்யன்
2. காங்கேயன்
3. கார்த்திகேயன்
4. குழந்தைவேலன்
5. சரவணபவன்
6. ஸ்கந்தன்

**பிரமசாரி வடிவங்கள் :**

1. தேசிக சுப்ரமண்யன்
2. குருபரன்
3. ஞானசக்திதரன்

**தவ வடிவம் :**

யோகாசார்ய மூர்த்தி

**பராக்ரம வடிவங்கள் :**

1. அஜாரூடர்
2. பிரம்மசாஸ்தா
3. வில்லேந்திய வேலன்
4. கஜாரூடர்
5. சேனாதிபதி
6. சிகிவாகனர்
7. தாரகாரி
8. கிரௌஞ்சபேதனர்
9. சகலகலாவல்லப மூர்த்தி
10. வராஹோன்மத்த பங்கமூர்த்தி

**தேவியருடன் கூடிய வடிவங்கள் :**

1. தேவசேனாதிபதி
2. வள்ளி கல்யாணமூர்த்தி
3. சண்முகர்
4. குமாரர்

**பிற வடிவங்கள் :**

1. குகன்
2. ஹ்ருதயகமல மூர்த்தி (இதயத் தாமரையில் விளங்குபவர்)
3. சிவனை வழிபடும் முருகன்
4. சதாசிவ மூர்த்தி
5. யாகரட்சக மூர்த்தி (யாகம், வேள்வியைக் காப்பவர்)
6. விசுவரூப மூர்த்தி
7. நடனமூர்த்தி
8. அகத்தியருக்கு உபதேசம்

**தலமூர்த்திகள் :**

1. சிதம்பரம் வடிவங்கள்
2. காஞ்சி குமர வடிவங்கள்
3. சீர்காழி திருஞானசம்பந்த முருகன்
4. திருச்செந்தூர் வடிவங்கள் (அலைவாயுகந்த பெருமாள், குமாரவிடங்கர்)
5. திருத்தணிகை வடிவங்கள்
6. திருப்பழநி வடிவங்கள்
7. திருவருணை வடிவங்கள்

என்று இவ்வாறாகத் திருப்புகழில் அருணகிரிநாதர் முருகனது வடிவங்களைப் போற்றுகின்றார்.

**ஞானசக்திதரன்**

ஞானசக்தியைத் தரித்தவன் என்று பொருள்தரும். இத் திருப்பெயருடன் விளங்கும் முருகவேள் ஞானசக்தியாகிய வேலினைத் தமது வலக்கையில் ஏந்தி இடக்கையைக் கட்யவலம்பித (இடுப்பில் வைத்த) முத்திரையுடன் காட்சியளிக்கும் இவ்வடிவம் குமாரதந்திரத்தில் ஒரு முகமும் இரு கரங்களும் கொண்ட கோலமாகக் காட்டப்படுகின்றது.

திருத்தணிகை மூலவர் ஞானசக்திதரர் வடிவம். திருச்சி மாவட்டம் பழவூரிலும் தஞ்சை மாவட்டம் திருவையாறு அருகில் உள்ள திருக்கண்டியூரிலும் (அஷ்ட, வீரட்டதலம்) ஞானசக்திதரர் வடிவம் வலக்கையில் ஜபமாலையும் இடக்கரத்தில் வஜ்ர சக்தியும் கொண்டு திகழ்கிறார். இவரை "ஞானஸ்கந்தர்" என்று அழைக்கிறார்கள். ஞானசக்திதரர் வடிவ அமைப்பை (குமார தந்திரத்தில் உள்ளது போல்) தணிகைப் புராணம் காட்டுகின்றது.

வெற்றியைத் தரும் வேலைக் கையிலேந்தியவன் ஆதலின் இம்மூர்த்தியை வழிபட, எடுத்த காரியம் யாவிலும் வெற்றிகிட்டும்.

**கந்தசுவாமி**

"ஸ்கந்தன்" என்று வடமொழியிலும் "கந்தன்" என்று தமிழிலும் போற்றப் பெறுகின்றான். முருகன், ஸ்கந்தன் என்ற சொல்லுக்கு வெளிப்படுபவன் என்று பொருள். கந்து – நடுதறி; யாவர்க்கும் பற்றுக் கோடாய்த் திகழ்பவன்; ஆன்மாவைக் கட்டும் தடுதறி. "கந்து" என்ற சொல்லுக்குத் தண்டாயுதம் என்று பொருள் கொண்டால் தண்டாயுதம் கொண்டவன் என்ற பொருளும் வரும். சுவாமிமலையில் சுவாமிநாதப் பெருமான் கந்தசுவாமி வடிவமே.

நின்ற கோலத்தில் ஒரு முகமும் இரு கரங்களும் கொண்டவர் கந்தசுவாமி. வலக்கரத்தில் தண்டாயுதமும் இடக்கரம் குளங்கத்திலும் (இடுப்பில் ஊன்றியவாறு)

உருத்திராக்கம், மணிவடம் அணிந்து கோவணதாரியாக விளங்குகிறார் என்று குமாரதந்திரம் காட்டுகிறது.

ஸ்ரீதத்வ நிதியில் "ஒரு முகமும் நான்கு கரங்களும் முறையே அபயம், வரதம், கோழி, வஜ்ரசக்தி கொண்டு திகழ் கின்றன. தாமரைமீது அமர்ந்து கரண்ட மகுடமுடன் விளங்குகிறார் கந்தன்". தணிகைப் புராணத்தில் கூறப்படும் கந்தன் திருவுருவம் பழநி தண்டாயுதபாணியையே உறுதிப்படுத்தும்.

கந்தன் எனும் சொல் அரும்பெரும் சொல். கந்தரனுபூதி, கந்தரலங்காரம், கந்தரந்தாதி, கந்தர்கலிவெண்பா, கந்த புராணம், கந்தசஷ்டி என்பவை இதனை வலியுறுத்தும். கொங்குநாட்டில் பல திருக் கோயில்களில் கந்தசுவாமி திருவுருவமே காணப்படுகின்றது என்பது குறிப்பிடத் தக்கது. சர்வகாரியங்களும் சித்திபெற ஸ்கந்த மூர்த்தியை வழிபடுதல் வேண்டும்.

**தேவசேனாதிபதி**

தேவயானையின் கணவன் என்ற பொருள்படும். இப்பெயர் தேவசேனையுடன் விளங்கும் முருகனைக் காட்டுகின்றது. தேவேந்திரன் மகளாக ஐராவதத்தால் வளர்க்கப்பெற்ற தேவயானையைத் திருப் பரங்குன்றத்தில் முருகவேள் திருமணம் செய்து கொண்டதைக் கந்தபுராணம் விரித்துக் கூறுகின்றது.

தேவசேனாதிபதி வடிவத்தில் முருக வேள் ஆறுமுகங்களும் பன்னிரு கரங் களும் கொண்டவராய்த் தேவயானை யம்மையைத் தனது இடப்பாகத்தில் ஒரு கையால் அணைத்த நிலையிலும், மற் றொரு கரம் 'அஞ்சேல்' என்று அடியார் களுக்கு அபயம் அளிக்கவும், ஏனைய 10 கரங்களிலும் முறையே சக்தி, சூலம், அம்பு, வாள், தண்டு, வஜ்ரசக்தி, கோழிக் கொடி, வில், கேடயம், தாமரை மலர் ஆகியவற்றைத் தாங்கி விளங்குகின்றார்.

ஸ்ரீதத்துவநிதியில் 'ஒரு முகமும், நான்கு கரங்களையும் கொண்டு சங்கம், சக்ரம், அபயவரத முத்திரையுடன் விளங்கு கிறார்' என்று கூறும் இவ்வரிய அமைப் பைச் சென்னி மலையில் கண்டு இன்புற லாம். தணிகைப் புராணத்தில் தேவசேனாதி பதி வடிவம் தெய்வ யானையைத் தழு விய கோலமாகவே காட்டப்பெறுகின்றது. மங்களகரமான மணவாழ்வு பெறத் தேவ சேனாதிபதி மூர்த்தியை வழிபட வேண்டும்.

**சுப்பிரமணியர்**

வேதத்துக்கும் வேதியர்களுக்கும் முதல்வர் என்னும் பொருள் கொண்ட முருகவேள் திருப்பெயரே சுப்பிரமணியர் என்பதாகும். பாம்பன் சுவாமிகள் கருத்தின்படி இன்பத்தினையே இயல்பாக வுடைய சிவபரம்பொருளினின்றும் தோன்றி, அதனின் வேறல்லதாய் விளங்குபவன் (சு-பிரமம், ந்யம் (ணியம்) சு-சுகம், ஆனந்தம். பிரம்ம - சிவபரம்பொருள், ந்யம் (ண்யம்) - அதனின்றும் தோன்றி ஒளிர்வது. சிவபிரானும் முருகனும் தம்முள் ஒருவரேயன்றித் தமக்குள் பேதம் இல்லாதவர் என்பதும் பெறப்படும்.

ஒரு முகமும் இரு கரங்களும் கொண்ட இவ்வடிவத்தில் முருகவேள் தனது வலக்கையால் அபயமுத்திரை காட்டி, இடக்கையை இடுப்பில் வைத்த வராய்த் திகழ்கிறார். மற்றொரு குறிப்பில், ஒரு முகமும், நான்கு கைகளும் முறையே கோழி, தாமரை, அபயவரத முத்திரை

யுடன் தோள்களில் கேயூரமும் மார்பில் மாலைகளும் கொண்டு திகழ்கிறார். தணிகைப்புராணம் காட்டும் சுப்பரமணி யர் திருவுருவம் ஒரு முகமும், இரு கரங் களும் கொண்டு அமைகிறது.

அஷ்டவீரட்டத் தலங்களில் ஒன் றான திருக்கடவூர் அருகிலுள்ள திரு விடைக்கழி சுப்பிரமண்யர் இத் திருக் கோலத்திலேயே திகழ்கிறார். அவரது புன்முறுவல் பூத்தலர்ந்த பூங்குமுதச் செவ்வாயின் அழகொன்றே போதும்! அந்தத் திருக்கை வடிவேலழகிய பெரு மானை பார்த்துக் கொண்டே நிற்கலாம் - எவ்வளவு நேரம் வேண்டுமானாலும்!

ஆனந்தத்தையே சொரூப லட் சணமாக உடைய சுப்பிரமணிய மூர்த் தியை வழிபட, வினைகள் நீங்கி ஆனந்தப் பேறு பெறலாம்.

**களிற்றூர்திப் பெருமான் (கஜ வாகனர்)**

முருகவேள் யானையை வாகன மாகக் கொண்டு எழுந்தருளிய கோலம் இது. கஜாரூடர், கஜவாகனர் என்றும் அழைக்கப்பெறுவார். மிகப் பழமையான கோயில்கள் பலவற்றில் முருகன் சந்நிதி யின் முன்பாக யானை வாகனமே இருக் கக் காணலாம். (திருத்தணிகை, சுவாமி மலை, உத்தரமேரூர்). ஐராவதம், முருக வேளுக்கு வாகனமாக இருந்ததைக் கந்த புராணம் காட்டுகிறது.

சங்க இலக்கியங்களில் யானை வாகனத்தில் முருகன் வருவதைப் பற்றிய குறிப்புக்கள் உள்ளன. அருள் செய்வதற் கும் போர் புரிவதற்கும் எழுந்தருளும் போது, முருகவேள் "பிணிமுகம்" என்னும் யானைமேற் செல்வார். அடியார் துயர் தீர்க்க முருகவேள் யானை வாகன மேறி வருவதைச் சிதம்பரம் திருப்புகழில் அருணகிரியார் குறிப்பிடுவார்.

ஆண் யானை மீது முருகவேள் ஒரு முகமும் நான்கு கரங்களும் கொண்டு எழுந்தருளும் இக் கோலத்தில், குக்குடம், சக்தி ஏந்தியும் அபயவரதமாக இரு கரங் களுமாகக் குமாரதந்திரம் காட்டுகிறது. மற்றொரு குறிப்பில் வேல், வாள், கோழிக் கொடி, வரதமுத்திரை கொண்டதாக விளங்குகிறார்.

சிதம்பரம் கீழ்க்கோபுர வாயிலில் உள்ள கஜாரூடர் திருவுருவத்தை அருண கிரிநாதர் கீழ்க் கோபுர வாயில் முருக னைப் பாடும்போது குறிப்பிடுகிறார். திரு மருகல், வள்ளிமலை அருகில் உள்ள மேல்பாடி, ஆகிய கோயில்களில் கஜ வாகன வடிவங்கள் உள்ளன.

களிற்றூர்திப் பெருமானின் திரு வுருவ அமைப்பினைத் தணிகைப்புராணம், குக்குடம் (கோழி), வாள், வேல் ஆகிய வற்றுடன் ஒரு கரம் வரதமுத்திரையிலும் உள்ளதாகக் காட்டுகிறது. கஜவாகனப் பெருமானை வழிபடத் துன்பங்கள் நீங்கி மனநிம்மதி உண்டாகும்.

**சரவணபவன்**

சிவபெருமான் நெற்றிக் கண்ணி லிருந்து வெளிப்பட்ட ஆறு தீப்பொறிகள் ஆறு குழந்தைகளாகி நாணற்புல் நிறைந்த சரவணப் பொய்கையில் தாமரை மலர் களில் வீற்றிருந்தன (சரம் - நாணல்). சரவணன் என்பது சிவபிரானையும் திரு மாலையும் குறிக்கும் பெயர் என்றும், முருகனுக்குச் சரவணபவன் எனப் பெயர் வழங்குவதால் அவன் அவ்விருவர் தம்

இயல்புகளையும் பொருந்தி நிற்பவன் **என்றும்** திருச்செந்தூர்ப் புராணம் கூறும்.

குமார தந்திரம் 'ஆறுமுகங்களும் பன்னிரு கரங்களும் கொண்டு, சக்தி, மணி, கோழிக்கொடி, தாமரைமலர், கோழி, பாசம், தண்டம், உளி, அம்பு, வில் ஆகிய வற்றுடன் அபய வரதமாகவும் மஞ்சள் வர்ண மேனியாய்த் திகழ்கிறார் என்று ரைக்கும்.

ஸ்ரீதத்வநிதி, ஒரு முகமும், ஆறு கரங்களும் கொண்ட சரவணபவன் சிங் கத்தின் மீது எழுந்தருளியுள்ளதாகக் குறிப்பிடுகிறது. ஆறு கரங்களில் முறையே மலர் அம்புகள், கரும்பு வில், கத்தி, கேடயம், வஜ்ரம், கோழி ஆகியவை ஏந்தி யுள்ள இவ்வரிய அமைப்பைச் சென்னி மலையில் கண்டுகளிக்கலாம். திருப்போரு ரில் சரவணபவன் ஒரு முகம் நான்கு கரங்களுடன் சிம்ம வாகனத்தில் காட்சி யளிக்கிறார். ஆறுமுகம் பன்னிருகரங்கள் கொண்ட சரவணபவன் வடிவைத் தணி கைப்புராணமும் குறிப்பிடுகின்றது. மங் கலம், ஒளி, கொடை, சத்துவம், வீரம் ஆகிய பேறுகளை இம்மூர்த்தியை வழிபடப் பெற்று இன்புறலாம்.

**கார்த்திகேயன்**

கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பெற்றதால் கார்த்திகேயன் என்று போற்றப்பெறும் முருகன், வடஇந்தியாவில் பெரும்பாலும் இப்பெயரிலேயே அழைக் கப்பெறுகின்றான். ஆறுமுகங்களும் ஆறு கரங்களும் கொண்ட கார்த்திகேயன் வடி வத்தில் சக்தி, வாள், குலிசம் (வச்சிரம்), கேடயம் ஆகிய ஆயுதங்களுடன் இரு கரங்கள் அபய வரதமாகவும் ஏழு ஞாயிறு வண்ணமுடன் விளங்குவதாகவும் குமார தந்திரம் கூறுகிறது. தணிகைப் புராணமும் இவ்வடிவத்தையே கார்த்திகேயனாகக் காட்டுகிறது.

கும்பகோணம் ஆதிகும்பேச்வர சுவாமி கோயிலில் விளங்கும் கார்த்தி கேயன் ஆறுமுகமும், ஆறு கரங்களும் கொண்டு கரங்களில் முறையே ஜப மாலை, கட்கம் (சுத்தி), வஜ்ரம், கேடயம் ஆகியவற்றுடன் வலது கரம் அபய முத்திரையுடனும் இடக்கை மடித்துள்ள அமைப்பிலும் உள்ளான்.

தாராசுரம் ஐராவதேச்வரர் கோயி லில் கார்த்திகேய வடிவம் ஆறு முகத் துடன் ஒரு கரம் அபய முத்திரையையும், மற்றவைகளில் ஜபமாலை, சுத்தி, வாள், கேடயம், கோழி ஆகியவை ஏந்தியும் மயில் வாகனத்துடன் விளங்குகிறார். மணிமகுடம் தரித்த ஆறுமுகங்கள் மிகவும் அற்புதமாக உள்ளன.

ஸ்ரீதத்வநிதியில் 'கார்த்திகேயன் வடிவம் ஒரு முகமும், பத்துக் கரங்களும் கொண்டதாகவும் அவைகளில் சூலம், சக்கரம், அங்குசம், சக்தி, தோமரம் (உலக்கை), பாசம், சங்கம், வஜ்ரம் ஆகி யவைகளுடன் இரு கரங்கள் அபய வரத மாகவும் உள்ளன. அவரருகே மயில் நிற்கின்றது. அவர், தலையில் வில்ப பத்ரம் அல்லது பழம் சூடியுள்ளார் என்று கூறுகிறது. கார்த்திகேயனைக் கார்த்திகை நாளில் பூஜிப்போர் இகபர சௌபாக்கி யங்களைப் பெறுவர்.

**குமாரசுவாமி**

சுவாமி என்ற சொல்லும் குமரன் என்ற சொல்லும் முருகனையே குறிப்பன. சிவபிரான் தமது நெற்றிக் கண்ணினால்

மாரனை எரித்தார். அது நிக்கிரகம். அவர் தமது நெற்றிக் கண்ணிலிருந்து குமாரனை அளித்தார் - அது அநுக்கிரகம்.

குமாரன் என்ற சொல்லுக்கு மலப் பிணியை அழிப்பவன் என்று பொருள், குமார தந்திரத்தில் குமாரர் வடிவம் ஒரு முகமும் நான்கு கரங்களில் சக்தி, வாள், கோழிக்கொடி, கேடயம் ஆகியவை ஏந்தியும் காட்டப்பெறுகிறார். இவ்வமைப் பைக் கங்கை கொண்ட சோழபுரம் - ராஜேந்திர சோழன் கட்டிய பெருங்கோயி லில் பஞ்சலோகப் படிமத்தில் கண்டு மகிழலாம். தணிகைப் புராணத்தில் குறிப் பிடப்பெறும் குமாரர் வடிவம் ஒரு முகமும் நான்கு கரங்களும் கொண்டு அருகே வள்ளி நிற்கக் காட்சியளிக்கிறார்.

குற்றாலத்துக்கருகிலுள்ள குமாரர் கோயிலில் குமாரர் வள்ளியுடன் திகழ் கிறார். இவரது இரண்டு கரங்கள் ஒன்று அபயமாகவும் மற்றொன்று வரதமாகவும் உள்ளது. 'ஸ்ரீதத்வ நிதியில் குமார சுவாமி ஒரு முகமும் இரண்டு கரங்களில் சுத்தி, கேடயம் ஆகியவைகளுடன் மற்ற இரண்டு கரங்கள் அபய, வரதமுத்திரை களுடன் குறிப்பிடப்பெறுகிறது. ஆணவ மலநீக்கம் பெற இப்பெருமானை வணங்கு தல் வேண்டும்.

**ஷண்முகர் (ஆறுமுக சுவாமி)**

முருகவேள் அடியார்களுக்கு அஞ்சுமுகம் (இடுக்கண்) தோன்றும் போதெல்லாம் தமது ஆறுமுகம் கொண்டு ஆறுதல் தந்தருள் புரிகின்றான். இறை மைக் குணங்கள் ஆறு. ஞானம், ஐசு வரியம், திரு, வீரியம், வைராக்யம், புகழ் என்ற ஆறும் அவரது முகங்களாகத் திகழ்கின்றன. ஆறுமுகப் பெருமான் தமது வலப் பக்கத்தில் வள்ளியம்மையாரையும், இடப் பக்கத்தில் தெய்வானையம்மை யாரையும் மயில்மீது இவர்ந்தோ உடனி ருக்கவோ அமைந்த கோலம் இவ்வடிவம். இப்பெருமான் தனது வலக்கைகளில் வேல் (சக்தி), அம்பு, வாள், கோழிக்கொடி, திகிரி (கதை) ஆகியவைகளுடன் ஒரு கரம் அபயமாகவும் இடக்கைகள் ஒன்று வரதமாகவும் மற்றவைகளில் வச்சிரம், வில், கேடயம், தாமரைமலர், சூலம் ஆகி யவை ஏந்தியும் விளங்குகின்றார். ஆறு முகப் பெருமான் பன்னிரு கரங்களிலும் கொண்ட ஆயுதங்கள் ஆறு வகைகளில் வேறுபடுகின்றன.

திருச்செந்தூரில் ஆறுமுகப்பெரு மான், மயிலாப்பூர், குன்றக்குடி, பொர வச்சேரி, திண்ணிம் ஆகிய தலங்களில் அமைந்துள்ள சண்முகப்பெருமான் திரு வுருவ அமைப்புகள் சிறப்பானவை. நக் கீரர் திருமுருகாற்றுப்படையிலும், குமர குருபர சுவாமிகள் கந்தர் கலிவெண்பா விலும், அருணகிரிநாதர் திருப்புகழிலும் ஆறுமுகச் சிறப்பு அருமையாகக் கூறப் பட்டுள்ளது. குமாரதந்திரத்திலும், ஸ்ரீதத்வ நிதியிலும் ஆறுமுகப் பெருமான் பன்னிரு கரங்களுடன் விளங்குவதாகவே கூறப்பட் டுள்ளது. ஷண்முகனுக்கு இருமருங்கிலும் ஜயை, விஜயை என்னும் இரு தேவியர் விளங்குகின்றனர் என்று ஸ்ரீதத்வநிதி குறிப்பிடுகின்றது.

சிறுவாபுரியில் சண்முகர் உற்சவ மூர்த்தி சிறப்பாக உள்ளது. ஆறுமுகனை வழிபடுவோர் சிவனையும் சக்தியையும் ஒருங்கே வழிபட்ட பலனை அடைவர் என்று சாத்திரங்கள் கூறுகின்றன.

**தாரகாரி (தாரகாந்தகர்)**

சூரபன்மனின் இளையதம்பி தாரகாசுரன் மாயையில் வல்லவன். கிரவுஞ்சம் என்னும் தனது மலையுள் புகுமாறு செய்து முருகனின் நவவீரர்களுள் முதன்மையான வீரவாகுதேவர் முதலியோரை மயக்கமுறச் செய்தான். தமது ஞானவேலால் முருகவேள் தாரகனை அழித்து, மாயையை வென்று அருள்புரிந்த கோலமே தாரகாரி.

குமாரதந்திரம் இவ்வடிவை ஆறுமுகம், பன்னிரு கரங்களுடன் காட்டுகிறது. இரு கரங்கள் அபய, வரதமாகவும் ஏனையவைகளில் சக்தி, உலக்கை, வாள், சக்கரம், பாசம், வஜ்ரம் (குலிசம்), வில், கேடயம், கொடி (வல்லி), அங்குசம் ஆகியவை தரித்தும் விளங்குகிறார் என்று கூறும். விராலிமலையில் விளங்கும் பெருமான் தாரகாரி வடிவமே என்பது குறிப்பிடத்தக்கது. தணிகைப் புராணம் காட்டும் தாரகாரி வடிவம் குமாரதந்திரத்தை ஒத்திருக்கின்றது. இவ்வடிவ அமைப்பை உத்தரமேரூர் கந்தப் பெருமான் ஆலயத்தில் கண்டு இன்புறலாம்.

ஸ்ரீதத்வநிதியில் தாரகாந்தர் வடிவம் ஒரு முகம் ஆறு கரங்களுடன் யானை மீது அமர்ந்த கோலமாகக் காட்டப்படுகிறது. இம்மூர்த்தியை வழிபட்டு உலக மாயையிலிருந்து விடுபடலாம்.

**சேனானி (சேனாதிபதி)**

"வீரர்களுள் யான் சேனானியாகத் (முருகனாகத்) திகழ்கிறேன்" என்று கண்ணபிரான் கீதையில் கூறுகிறார். வீரர்களுள் பெருவீரன் - மாவீரன் முருகன். வீரம் பெற விரும்புவோர் முருகனை வழிபடுவர். மௌரியப் பேரரசில் கோட்டையில் சேனானியின் வடிவம் அமைத்த செய்தியைச் சாணக்கியரின் அர்த்தசாஸ்திரம் பேசுகின்றது.

சூரபதுமனை வெற்றி கொள்ளத் தேவர் படைகளுக்குத் தலைமையேற்ற முருகன், சேனதிபதியான இக்கோலத்தில் ஆறுமுகமும் பன்னிரு கரங்களுடன் திகழ்கிறார். குமாரதந்திரம் இரு கரங்கள் அபய வரதமாகவும், சக்தி, வாள், சூலம், சக்கரம், அங்குசம், வஜ்ரம், தாமரைமலர், பாசம், தண்டாயுதம், கதை ஆகியவை ஏனைய கரங்களிலும் உள்ளன என்றுரைக்கும். வானவர் தலைவனான சேனானியின் வடிவத்தைத் தேவிகாபுரம் பெரிய நாயகி அம்மன் கோயிலில் தரிசித்து இன்புறலாம். தணிகைப் புராணத்தில் முசலம், அம்பு, வில் ஆகியவை இருக்குமென்று குமாரதந்திரத்திலிருந்து மாறுபட்டு உள்ளது. போரிலும் பந்தயத்திலும் வெற்றி பெற இம்மூர்த்தியை வழிபடுதல் அவசியம்.

**பிரம்மசாஸ்தா**

படைப்புத் தொழில் செய்யும் நான்முகன் (பிரமன்) கொண்ட செருக்கை அடக்கித் தானே பிரமனது படைப்புத் தொழிலை மேற்கொண்ட கோலமே பிரம்மசாஸ்தா (பிரம்மனைத் தண்டித்தவர்) எனப்படும். குமாரதந்திரம் இக்கோலம் ஒரு முகம், நான்கு கரங்கள் கொண்டதாகக் குறிப்பிடுகிறது. முன் இருகரங்கள் அபயம், குறங்கத்திலும், பின் இரு கரங்கள் அட்சமாலை, கமண்டலமுடன் திகழ்கின்றன.

தொண்டை நாட்டில் பெரும்பாலான திருக்கோயில்களில், பிரம்மசாஸ்தா வடிவத்தையே காண்கிறோம். காஞ்சிபுரம், குமரகோட்டம், சிறுவாபுரி, யாகசாலை போன்றவற்றைக் குறிப்பிடலாம். சென்னை

யில் வலசரவாக்கத்தில் மாபெரும் பிரம்ம சாஸ்தா வடிவம் உள்ளது. பூவிருந்த வல்லி அருகில் உள்ள வாயிலாநல்லூ ரிலும் சோழர் காலத்துப் பிரம்மசாஸ்தா வடிவம் உண்டு.

செங்கல்பட்டு அருகிலுள்ள ஆனூ ரில் பிரம்மசாஸ்தா, முன் வலக்கையில் தாமரை மலர் கொண்டு விளங்குகிறார். இவரை பாலசுவாமியும் பிரம்மசாஸ்தாவும் இணைந்த கோலமான 'பாலபிரம்ம சாஸ்தா' என அழைக்கலாம். பிரம்ம சாஸ்தா வடிவத்தை வழிபாடு செய்வோர் பிரம்மவித்தைகள் கைவரப்பெற்றுச் சகல கலாவல்லவனாக 'புந்தி நிறை அறிவாள னாக'த் திகழலாம்.

**வள்ளி கல்யாணசுந்தரர்**

முருகப் பெருமானது திருப்பெயர் களுள் 'வள்ளிக் கணவன்', 'வள்ளி மணாளன்', 'வள்ளிக்காந்தன்' ஆகியவை மிகச் சிறப்பானவை. உலகில் இல் வாழ்க்கை இனிது நடத்தற் பொருட்டே, முருகன் வள்ளியம்மையை மணந்து கொண்டு அவளுடன் இனிதுறப் பேசி நகையமர்ந்தருள்கின்றான் என்று ஞான நூல்கள் கூறும். இவ்வடிவை வள்ளி கல் யாண சுந்தரர், வள்ளி மணாளர் என்று குமாரதந்திரம் குறிப்பிடுகிறது. பிரம்ம சாஸ்தா கோலத்தில் வலப்புறம் வள்ளி யுடன் காட்சியளிக்கும் அமைப்பே இவ்வடி வமாகும். அருகில் திருமால் தாரைவாத் துக் கொடுப்பார்.

சிறுவாபுரி முருகன் திருக்கோயி லில், முருகன் வள்ளியின் கரம் பற்றி யுள்ள 'வள்ளி மணவாளக் கோலம்' பஞ்சலோகப் படிமத்தில் உலகில் எங்கும் காண இயலாத அற்புதப் படைப்பு. திருப் போரூரில் தூண் சிற்பமாக இவ்வடிவம் காணக் கிடைக்கிறது. வள்ளி கல்யாண மூர்த்தியை வழிபடத் திருமணங்கள் உரிய காலத்தில் நடைபெறும். தடைப் பட்ட திருமணங்கள் முதலான தொல்லை கள் நீங்கி இன்ப மயமான இல்வாழ்வுப் பேறு கிட்டும்.

**பாலசுவாமி**

அழகும் இளமையும் கொண்ட அற்புதமான வடிவமே பாலசுவாமி. இவ் வடிவில் ஒரு முகமும் இரு கரங்களும் கொண்டு, வலக்கையில் தாமரை மலரும் இடக்கை குறங்கத்திலும் (இடுப்பிலும்) உள்ளன. திருவடிகளில் தண்டைகள் அணிந்து காட்சியளிக்கும் இக்கோலத் தைத் தணிகைப் புராணமும் குமாரதந்தி ரமும் எடுத்துரைக்கின்றன.

சென்னை அருகே போரூரில் உள்ள பாலமுருகன், வலக்கரத்தில் சக்தி ஆயுதமும் இடக்கரத்தில் நீலோற்பவ மலரும் கொண்டு அழகாகக் காட்சியளிக் கிறார். இம்மூர்த்தி ஞானசக்திதரனும் பால சுவாமியும் இணைந்த கோலமாக "ஞான சக்தி பாலன்" என்றழைக்கலாம். திருவை யாறு அருகிலுள்ள திருக்கண்டியூரில் இவ்வடிவை 'வீரஸ்கந்தர்' என்றழைக்கி றார்கள். பொன்னேரி அருகிலுள்ள ஆண் டார்குப்பம் கோயிலில் இருகரங்களும் இடுப்பில் வைத்த அபூர்வ அமைப்பாகும். பாலசுவாமியை வழிபட உடற்குறைகள் நீங்கி அழகான உடலமைப்பும், வனப்பும், தேக சௌக்யமும் ஏற்படும்.

**கிரௌஞ்சபேதனர்**

கிரௌஞ்சம் - அன்றிற்பறவை. அதன் வடிவமாகிய மாயமலையாகத் திகழ்ந்த தாரகாசுரனை அழித்த வடிவம் இது.

இவ்வடிவைக் குமாரதந்திரம் ஆறுமுகமும் எட்டுக் கரங்களும் கொண்டவராகக் காட்டு கின்றது. சக்தி வேல், வாள், அம்பு, வஜ்ர சக்தி, கேடயம், வில் ஆகியவற்றுடன் அபயவரதமாக இருகரங்களும் உள்ள இவ்வடிவைத் தணிகைப் புராணமும் காட்டுகின்றது.

ஸ்ரீதத்வநிதி இக்கோலத்தை ஒரு முகமும் நான்கு கரங்களும் கொண்ட தாகக் காட்டுகின்றது. கரங்கள் முறையே அபயவரதமாகவும், மலரம்பு, கரும்பு, வில் தாங்கியும் உள்ளன. அருகே மயில் நிற்கின்றது. மற்றொரு வகையில் மயில் வாகனத்தில் அமர்ந்து இருகைகளிலும் வேல் கொண்டு கிரௌஞ்ச மலையைத் துளைக்கும் தோற்றமுடன் விளங்குகிறார். இவ்வமைப்பை நான்குநேரி அடுத்த திருக் குறுங்குடி திருமால் கோயில், மயிலாடு துறை அருகிலுள்ள புஞ்சை (திருநனி பள்ளி) கோயிலிலும் கண்டு வணங்கலாம். மனத்தில் சஞ்சலங்கள், துன்பங்கள் நீங் கவும் இடர்களை வெல்லவும் இம்மூர்த் தியை வழிபட வேண்டும்.

**சிகிவாகனர் (மயில் ஊர்திப் பெருமாள்)**

மயில் மீது வந்து நமது மையல் நீக்கி அருளும் மாமுருகன் திருக் கோலமே சிகிவாகனர் வடிவமாகும். ஒரு முகமும் நான்கு கரங்களும் கொண்டு மயிலில் அமர்ந்து திகழ்கிறார். அபயவரத மாகவும் சக்திவேலும், வஜ்ரமும் கொண் டுள்ள இவ்வடிவைக் குமாரதந்திரம் ஆறு விதமாகக் காட்டுகின்றது. தமிழ்நாட்டில் பெரும்பாலும் கோயில்களில் உற்சவ மூர்த்தி வடிவம் இவ்வமைப்பிலேயே உள்ளது. தணிகைப் புராணமும் இவ்வடி வைப் பாங்குறக் காட்டுகிறது.

மயிலூர்திப் பெருமாளை மற வாமல் வணங்குவோர் அனைத்தையும் பெற்று இன்ப வாழ்வு பெறுவர்.

**ஞானசக்தி சுப்ரமண்யர்**

'ஒரு முகம் மந்திரவிதியின் மரபு வளர் அந்தணர் வேள்ளி ஓர்க்கும்மே' என்று திருமுருகாற்றுப்படையில் நக்கீரர் போற்றியவாறு தெய்வீக யாகாக்கினியை வளர்ப்பதற்கு அக்னியைப் போன்று இரண்டு முகங்களும், எட்டுக் கரங்களும் கொண் டுள்ள இவ்வடிவமே அக்னிஜாதர் என்ற ழைக்கப்படுகிறது. வஜ்ரம், குக்குடம், கேடயம், ஆஜ்ய (நெய்) பாத்திரம், சுரு வம் (யாகத்தீயில் நெய்யிடப் பயன்படும் கரண்டி) அட்சமாலை, கத்தி, ஸ்வஸ்திகம் ஆகியவை கொண்டு வேள்வி செய்யும் கோலமாக ஸ்ரீதத்வநிதி காட்டுகிறது. இத்தகைய அற்புதமான வடிவமைப்பைச் சென்னிமலை முருகன் கோயிலில் காண இயலும்.

**சௌரபேய சுப்ரமண்யர்**

ஸ்ரீதத்வநிதியில் குறிக்கப்பெறும் இவ்வடிவம், நான்கு முகங்களும், எட்டுத் திருக்கரங்களும் கொண்டு கரங்களில் முறையே சக்தி, தாமரை, மலர், மலரம்பு, வஜ்ரம், கரும்பு, வில், சூலம் ஆகியவை ஏந்தியும் இரு கரங்கள் அபயவரதமாகவும், வலக்கால் பூமியிலும், இடக்கால் சிறிது வளைந்தும் காணப்படுகிறது. இவ்வரிய அமைப்பைச் சென்னிமலை முருகன் கோயிலில் கண்டு இன்புறலாம்.

**காங்கேய சுப்ரமண்யர்**

மகர (மீன்) வாகனத்தின் மீது காட்சியளிக்கும் இவ்வரிய அமைப்பில் ஒரு முகமும், நான்கு கரங்களில் முறையே கோழிக்கொடி, அரணிக்கட்டை, பரசு

(கோடலி), பூர்ணகும்பம் ஆகியவை ஏந்தியும் கரண்ட மகுடமும், நீலோற்பவ மாலையும் அணிந்து திகழ்வதாக ஸ்ரீதத்வ நிதி குறிப்பிடுகிறது. எங்குமே காண இயலாத அபூர்வ வடிவம், சிவானந்தப் பேறு பெறலாம்.

**குக சுப்ரமண்யர்**

அடியார்களின் இதயக் குகையில் விளங்கும் முருகன் இவ்வடிவில் ஒரு முகமும் வஜ்ரம், சூலம் இரு கரங்களிலும் அபயவரதமாக இரு கரங்களும் இரத்ன கிரீடம் அணிந்து இடது புறம் தேவியுடன் கல்யாணக் கோலத்தில், வெள்ளையாடை உடுத்திக் காட்சியளிப்பதாக ஸ்ரீதத்வநிதி குறிப்பிடுகிறது. தகராகாச வித்தைபெற இம்மூர்த்தியை வழிபாடு செய்தல் வேண்டும்.

**பிரமசாரி**

இவ்வடிவில் முருகவேள் ஒரு முகமும், வலக்கையில் தண்டாயுதமும், இடக்கையில் வஜ்ரசக்தியும், தலையில் குடுமியும் இடையில் முஞ்சிப்புல்லாலான அரைஞாணும் கொண்டு தாமரை மலர் மீது எழுந்தருளுவதாக ஸ்ரீதத்வநிதி குறிப்பிடுகின்றது.

**தேசிக சுப்ரமண்யர்**

சிவகுருவாகத் திகழும் இவ்வடிவம் ஒருமுகமும் ஆறுகரங்களும் கொண்டு இரு கரங்களில் சக்தி ஆயுதமும், அட்சமாலை சின்முத்திரை மற்றும் அபய வரதமாகவும் காட்சியளிக்க, எதிரில் சிவபிரான் மாணவராக நிற்க, அவருக்குப் பிரணவ உபதேசம் செய்வார். மானசாரம் என்னும் நூலில் இவ்வடிவம் முருகவேளுக்கு எதிரே சிவபெருமான் இடக்கையை மார்போடு அணைத்து வலக்கையால் வாயைப் புதைத்து, ஏனைய இரு கரங்களில் உடுக்கையும் மானும் விளங்க, தலையில் பிறைச்சந்திரன் பொலிய, நிறைமதி போன்ற நிறத்துடன் நின்று, இடப்பாகத்தில் பார்வதிதேவி நிற்க உபதேசம் பெற்றுக் கொள்வதாகக் காட்டப்படுகிறது. திருப்போரூர் கந்தசாமிக் கோயிலில் தேசிகர் வடிவம் பஞ்சலோகத் திருமேனியாக அற்புதமாக அமைந்துள்ளது. சிவபிரான் இடது மடியில் முருகன் அமர்ந்து, அவருக்கு உபதேசம் செய்யும் அமைப்பில் உள்ளது. இம்மூர்த்தியை வழிபடச் சிவஞானம் பெருகும்.

**வில்லேந்திய வேலன்**

இராமபிரானுக்கு ‘கோதண்டம்’ போல முருகப்பெருமானும் வில்லேந்திய வடிவை ‘சம்ஹாரமூர்த்தி’ என்று சிற்ப நூல்கள் குறிப்பிடுகின்றன. சூரபத்மன் மகன் இரண்யாசுரனை அழிப்பதற்கு முருகன் கொண்ட கோலம் ‘இரண்யாசுர சம்ஹாரமூர்த்தி’ என்ற இவ்வடிவைத் திருவிடைக்கழி முருகன் கோயிலில் கண்டு தரிசிக்கலாம். சம்ஹாரமூர்த்தி சில தலங்களில் தனித்தும், சில தலங்களில் தேவியருடனும் காணப்படுகின்றது.

பஞ்சலோகப் படிமங்களில் அமைந்துள்ள வில்லேந்திய கோலம், பெரும்பாலும் வலது காலை மயில் மீது வைத்தும் வலது முன்கையில் அம்பும், இடது முன்கையில் வில்லும் கொண்டு பின் இரு கரங்களில் சக்தியும், வஜ்ரம் உடையவராகக் காட்டப்படுகிறது. இவ்வடிவங்களைத திருப்போரூர், திருவேற்காடு, சேயூர், சிவபுரம், ஸ்ரீமுஷ்ணம் ஆகிய தலங்களில் தரிசிக்கலாம். புகழ்பெற்ற வில்லேந்திய வடிவம் சாயாவனம் கோயிலில் உள்ளது. திருச்செந்தூர்க் கோயிலிலிருந்து போர்த்துக்கீசியர்கள் கொள்ளையடித்து வந்த போது கப்பல் புயலில்

சிக்கித் தடுமாறவே அவர்கள் சாயாவனம் கடற்கரையில் தாம் கொள்ளையடித்த பொருட்களை வைத்ததாக வரலாறு உள்ளது. மூலஸ்தானத்தில் வில்லேந்திய வடிவத்துடன் வள்ளி தேவசேனை சமேதராக ஒரே கல்லில் அமைந்த அற்புத வடிவத்தை நெய்வேலியில் உள்ள வில்லுடையாள் பட்டிக் கோயிலில் காணமுடியும். திருவண்ணாமலை, பட்டீச்சரம் ஆகிய கோயில்களிலும் அற்புதமான வில்லேந்திய வடிவம் கண்டு இன்புறத்தக்கது.

**முருகவேடன்**

சுவாமிமலைத் திருக்கோயிலில் பங்குனி மாதத்தில் நடைபெறும் 'வேடரூபக்காட்சி' விழாவில் வேடனாகத் தோன்றி வள்ளியை மணக்கும் வேடன் வடிவம் அற்புதமான வடிவமாகும். சேலம் மாவட்டம் பேளுக்குறிச்சி பழநியாண்டவர் கோயில் மூலவடிவம் வேட வடிவமே. தலையில் கொண்டையுடன் வலக்கையில் வேலும் இடக்கையில் கோழியும் கொண்ட அழகான வடிவம் இது.

**ஆட்டுவாகனர்**

அஜாரூடர் என்றழைக்கப்படும் இவ் வடிவில், முருகன் ஆட்டு வாகனத்தில் காட்சியளிப்பார். கந்தபுராணத்தில் கூறப்படும் செய்தியின்படி, இவ்வடிவைத் திருப்போரூர் கந்தசாமிக் கோயிலில் அபூர்வமாகக் காணலாம். திருச்செந்தூர்த் திருக்கோயில் கந்தசஷ்டிப் பெருவிழாவில் ஆட்டு வாகனத்தில் முருகவேள் பவனி வருவதைக் கண்டு இன்புறலாம்.

**அமிர்தகர சுப்ரமண்யர்**

தன்னை நாடி வரும் அடியார்களுக்கு அருளமுதை வழங்கக் கையில் அமுத கலசத்தை ஏந்தியிருக்கும் அற்புதக் கோலம் கோடிக்கரை குழகர் கோயிலில் காணக்கிடைக்கிறது. ஒரு முகமும் ஆறுகரங்களும் கொண்ட இவ்வரிய அமைப்பானது மயில்மீது அமர்ந்து இருபுறமும் தேவியர் புடைசூழக் காட்சிதருகிறார். வலக்கரம் ஒன்று அபயமாகவும் ஒரு இடக்கரம் அமுதகலசம் ஏந்தியிருக்கவும் ஏனைய கரங்களில் சக்திவேல், நீலோற்பவம், வஜ்ரம், தாமரை மலர் ஆகியவை ஏந்தியிருக்கும் எழில் வடிவம், நீலோற்பவமலர், தாமரை மலர், அமுத கலசம் இம்மூன்றையும் கரங்களில் கொண்ட வடிவம் வேறெங்கும் காண இயலாது.

**முருகனின் வடிவங்களும் அவையமைந்த இடங்களும்**

கோவை மாவட்டம் அவிநாசியிலிருந்து மேட்டுப்பாளையம் செல்லும் வழியில் இரும்பறை என்ற ஊரின் அருகில் நெடிதுயர்ந்த மலையின் மேல் முருகன் ஐந்து முகம் எட்டுக் கரங்கள் கொண்டு அற்புதமாகக் காட்சியளிக்கிறார். இம்மலைக் கோயில் ஒதிமலை என்ற பெயரில் 1800 படிகளுக்கு மேல் உள்ளது. இவ்வடிவை கிரௌஞ்சபேதனர் என்ற வடிவமாகக் கொள்ளலாம்.

சிதம்பரம் சபாநாயகர் கோயில் மேலக் கோபுரவாயிலில் உள்ள வெற்றிவேற் பெருமாள் ஆறுமுகங்களும் பத்துக் கரங்களும் கொண்டு ஓர் கரத்தால் வேலினை ஏவிய நிலையில் காண்போரைப் பிரமிக்கச் செய்யும் கோலம். சூர்மாதடிந்த சுடர் வேலனாகிய இவ்வடிவம் அற்புதமான வடிவமைப்பாகும்.

திருப்பரங்குன்றத்தில் தூண் சிற்ப மாக அமைந்துள்ள தேவசேனைத் திரு மேனிக்கோலம் கண்டு இன்புறத்தக்கது.

முருகன் தேவயானையின் வலக் கரம் பற்றியிருக்க அருகில் தேவேந்திரன் பெருமையுடன் தாரைவார்க்க, இன் பத்தை அளிக்கும் இனிய காட்சியில் தெய்வானையம்மை தலையைச் சற்றுச் சாய்த்து ஓரக்கண்ணால் கந்தனைக் கண்டு களிப்பதைக் கண்டு இன்புற முடியும். ஆலம்பூர்க் காட்சிச்சாலையில் தேவ சேனையை அணைத்த நிலையில் காணப் படும் அரிய கலைப்படைப்பை அவசியம் கண்டு இன்புற வேண்டும்.

வழுவூரில் கௌரி, கந்தனைக் கையில் ஏந்தி மகிழும் அழகு! குஹாம் பிகை என்றழைக்கப்படும் அபூர்வமான கலைப்படைப்பு இது.

திருக்கடவூரில் பரிவுடன் கௌரி கொஞ்சும் கடம்பனைக் கண்டு அதி சயிக்கலாம். பல்லவனீச்சரம் கோயிலில் தாயினருகில் அமர்ந்து தண்கழல் சிலம்பு டன் கொஞ்சவே வரும் முருகன் அழ கைப் பார்த்துக்கொண்டேயிருக்கலாம்.

திருவாரூரில் நீலோற்பவாம்பிகை திருக்கோயிலில் அம்பிகைக்கு அருகில் சேடி, முருகனை அழைத்துவர அவன் நடந்து வரும் அழகைச் சிற்பி கண்முன் கொண்டு நிறுத்தி விட்டிருக்கின்றார்.

கழுகுமலையில் ஒரு முகமும் ஆறுகரங்களும் கொண்டு மயிலில் காட்சி யளிக்கும் மாட்சியை எழுத்துக்களில் எழுத இயலாது.

குன்றக்குடி, திண்ணியம் கோயில் களில் முருகன், வள்ளி, தேவயானை தனித்தனியே மயில் வாகனத்தில் காட்சி யளிப்பதும் அரிய கலைப்படைப்பாகும்.

சென்னையில் திருமயிலையில் மிகமிக அதிசயமான வடிவத்தைக் கண்டு இன்புறலாம். முருகன் மயில்வாகனத் திலும் வள்ளி, தேவயானை இருவரும் தனித்தனியே யானைவாகனத்திலும் அமர்ந்துள்ள அதிசயமான கோலத்தை ஒப்பற்றதாகச் சொன்னால் மிகையாகாது.

முழுதும் அழகிய குமரனைப் பலவித கவின்மிகு கோலங்களிலும் வடி வங்களிலும் கண்டு வழிபட்டு இன்புறு வோமாக.

## வாழ வழி ஒன்று தா

**நல்லைக் குமரா நம்மவர் காவலா**
**முல்லைத் தாரா முத்தமிழ் வித்தகா**
**எல்லை இல்லாத இன்பம் பொங்குதே ~ உனைக் காண**
**தொல்லை பொல்லாத துன்பம் போகுதே**
**கோல மயிலேறி வா முருகா**
**வாழ வழி ஒன்றுதா மருகா**

**திருமதி த.தயாபரன்**
**கந்தர்மடம்.**

# முத்தமிழையும் சுவைத்த ஞானபண்டிதன்

மூ.சிவலிங்கம்
இளைப்பாறிய கிராம அலுவலர்

இறைவனின் அவதாரங்கள் பல. சூராதி அசுரர்களை அழித்து மூவுலகையும் காப்பாற்றவென உதித்தவர் முருகப் பெருமான்.

இவர் சிவசக்தி குடும்பத்தின் கடைசிப் பிள்ளை. அழகுமிக்க செல்லப்பிள்ளை. நற்கல்வியை ஓதாமல் உணர்ந்தவர். எல்லாம்வல்ல முழுமுதற் கடவுளாம் சிவபிரானுக்கு உபதேசித்த ஞானபண்டிதன். கடவுளுக்கேற்ற கருணையும், தீயோரை அழிக்கும் வீரமும், கடைசிப்பிள்ளையானதால் குறும்பும், கேட்டது கிடைக்காததால் கோபிக்கும் வைரநெஞ்சமும், ஞானபண்டிதனாக இருந்தபோதும் பிறர் வாயால் முத்தமிழையும் கேட்டுச் சுவைக்கும் பெரு விருப்பும் மிக்கவர்.

**அரிய தமிழ் தந்த ஔவை**

ஓதாமல் உணர்ந்த தெய்வீக இயற்றமிழ் வித்தகியான ஔவைப்பிராட்டி தமது தமிழ்ப்பணிக்கான சுற்றுலாவில் நெடுந்தூரம் கால் கடுக்க நடந்து உள்ளமும் உடலும் சோர்வடைந்த நிலையில் மரநிழலில் வந்தமர்ந்தார். இவர் தாகம் நாவை வறட்டவும், பசி வாட்டவும் வெய்யிலின் வெம்மையால் அசதியுடன் காணப்பட்டார்.

ஔவையின் வரவை ஏற்கனவே அறிந்த முருகன் ஔவையின் தமிழ் கேட்டு மகிழும் நோக்கில் ஒரு திருவிளையாடலை நடாத்த எண்ணினார். காரெருமை மேய்க்கும் சிறுவனின் மாறுவேடத்தில் தோன்றி ஒரு நாவல் மரத்தில் அமர்ந்தார். சிறுவனைக் கண்ட ஔவை அச்சிறுவனை நோக்கி "தம்பி எனக்கு ஆயாசமாக இருக்கிறது. கொஞ்ச நாவற்கனி போடு" என்றார். சிறுவனும் குறும்புத்தனமாக 'பாட்டி, சுட்டபழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா' என்றார்.

சுட்டபழம், சுடாதபழம் பற்றிய விபரம் தெரியாது திகைத்த ஔவை "சுட்ட பழம் போடு" என்றார். சிறுவனும் ஒரு நாவற்கொப்பை உலுப்பினார். சில பழங்கள் மண்மீது விழுந்தன. ஔவை ஆவலுடன் ஒரு கனிந்த பழத்தை எடுத்து உண்ண முற்பட்டார். அதில் ஒட்டியிருந்த மண்ணை வாயால் ஊதினார். அப்போது சிறுவன் "பாட்டி பழம் சுடுகிறதா?" எனக் கேட்டார். அதைக் கேட்டதும் ஔவை தமது பேதமையை உணர்ந்தார்.

**"கருங்காலிக் கட்டைக்கு நாணாக் கோடாலி**
**இருங்கதலித் தண்டுக்கு நாணும் – பெருங்கானில்**
**காரெருமை மேய்க்கின்ற காளைக்கு நான்தோற்ற**
**தீரிரவு துஞ்சாது என்கண்"**

எனப் பாடினார். பாட்டின் இனிமையை உணர்ந்ததும் சிறுவன் மரத்திலிருந்து மறையவும் முருகப்பெருமான் மயில்மீது இருந்த கோலத்தில் ஔவை முன் காட்சி தந்தார். ஔவை பக்திமேலீட்டினால்

முருகப் பெருமானைப் பலவாறு துதித்துப் பாடி இன்புற்றார்.

முருகப்பெருமான் ஆவலுடன் ஔவை யாரிடமிருந்து அரியது, பெரியது, இனியது, கொடியது எனப் பலவற்றையும் அவரின் தீந்தமிழில் கேட்டுச் சுவைத்தார். மேலும் செந்தமிழின் இனிமையைத் தந்த ஔவையாரை வாயாரப் புகழ்ந்து வாழ்த்தி மறைந்தருளினார்.

**அருணகிரிநாதரின் திருப்புகழ் அமிர்தம்**

முற்காலத்தில் திருத்தலங்களில் ஆலயப் பணிக்காகப் பொது மகளிரை நியமிப்பது மரபு. ஒரு சமயம் திரு வண்ணாமலை தியாகேசர் திருத்தலத்தில் உருத்திரகணிகையர் குலத்தவரான முருகம்மை என்பவர் பணியாற்றினார். இவர் சிறந்த இறைபக்தியும், சகல கலை ஞானமும், கற்புநெறியும் ஒருங்கமையவே தம்பணியைச் சிறப்பித்தார்.

ஒருநாள் இரவு முருகப்பெருமான் முருகம்மையின் கனவில் தோன்றி "கற்பிற் சிறந்தவளே! வானவர் போற்றும் அற்புதம் நிறைந்த மகவொன்றை உனது அகப் பையில் அவதரிக்கச் செய்வோம்" எனக் கூறி மறைந்தருளினார். முதலில் தமது கற்பு நெறி பற்றியஞ்சிய முருகம்மை எதுவந்தாலும் முருகப்பெருமானே காப்பார் என எண்ணி உறுதிபூண்டாள்.

உரிய காலத்தில் பெண்மகவொன் றைப் பெற்றெடுத்து அப்பிள்ளைக்கு ஆதி எனப்பெயரிட்டு அன்புடன் வளர்த்து வந் தாள். இவ்வாறு ஐந்து வருடங்கள் கடந் தன. ஒருநாள் சண்முகப்பெருமான் முரு கம்மையின் கனவில் தோன்றிப் "பெண்ணே! உன் மணி வயிற்றில் ஒரு சற்புத்திரன் தோன்றுவான். அவனால் மண்ணும் விண் ணும் துயர்நீங்க- வேதநெறி தழைத்தோங் கும். நீயும் முத்தி இன்பம் பெறுவாய்" எனக் கூறி மறைந்தருளினார்.

சண்முகப்பெருமானின் பெருங் கருணையால் ஒரு அழகிய சற்புத்திரனை முருகம்மை பெற்றெடுத்தாள். தன் மகன் அருணைமலை (என்னும் பொருளில்)யிற் பிறந்ததால் "அருணகிரி" எனப் பெயரிட் டாள். இரு பிள்ளைகளும் தாயின் அர வணைப்பில் சிறப்பாக வளர்ந்து வந்தனர். தனது மகனின் ஐந்து வயதில் பள்ளிப் படிப்பை ஏற்படுத்தினாள். அருணகிரி பள்ளிப் படிப்பில் நாட்டமின்றித் தீய நண் பர்களுடன் தீயவழியில் பிரவேசித்தான்.

அருணகிரியின் பன்னிரண்டாம் வயதில் முருகம்மை தன் இருபிள்ளைகளையும் அழைத்துத் தன் குடும்ப நிலையையும் அவர்கள் பிறந்த விபரங்களையும் முருகப் பெருமானின் கருணை பற்றியும் விபரமாக எடுத்துரைத்தாள். மேலும் ஆதியை நோக்கி "நீ உன் தம்பிக்குச் சகோதரி மட்டுமல்ல, தாயாகவும் அரவணைத்துக் காப்பாற்ற வேண்டும்" என்றாள். சிறிது காலத்தில் முருகம்மை இயற்கையெய்தினாள். பிள் ளைகள் இருவரும் தகுந்த பாதுகாப் பின்றி வளர்ந்தனர். சிறுவயதினிலே கட்டுக் காவலில்லாமல் தீய நண்பர்களுடன் சேர்ந்து அலைந்துதிரிந்த அருணகிரியை மேலும் மனம்போன போக்கில் போகவிட முருகன் திருவுளம் கொண்டார். ஆண்டிக் கோலத்தில் அவ்வப்போது வந்து கை நிறையப் பொற்காசுகளைத் தந்துதவினார்.

இவ்வாறு தீயநட்பில் தன்னை இணைத்த அருணகிரி பதினாறு வயதுப் பருவம் வந்ததும் தனது இயற்கை அழகு

டன் ஆடை அணிகளின் மிகப் பெறுமதி யான அலங்காரங்களுடன் உடலெங்கும் வாசனைத் திரவியங்களையும் பூசிக் கொள்வார். பெண் மோகம் கொண்டு விலைமாதர் வசிக்கும் தெருவில் பவனி வருவார்.

இவரின் சுகபோக வாழ்வில் முருகம் மையால் தேடி வைக்கப்பட்டு ஆதியால் பராமரிக்கப்பட்ட சகல செல்வங்களும் விரயமாகின.

முன்செய்த தீவினைப் பயனை இப் பிறவியில் அனுபவித்து அல்லலுறத் திரு வருளும் துணைநின்றது. தமது தீவினைப் பயனை நன்கு அனுபவித்து புனிதராக மாற, இறையருள் கிடைக்க ஞான அறி வின் கண்திறந்தது. தமது பாவவினையை இறைவனிடமே ஒப்படைக்க இறையருள் வழிகாட்டியது. அருணகிரி திருவண்ணா மலை தியாகேசர் திருத்தலத்தை நாடி ஓடினார். கோபுர உச்சியின் மீதேறிக் குதித்துத் தற்கொலை செய்ய முற்பட்டார்.

முன்வினைப்பயனை அனுபவித்த பின் புனிதராகித் தமது திறமையால் பிரகா சிக்க இருந்த ஜீவாத்மாவைத் தடுத்தாட் கொள்ளும் நியதி பரமாத்மாவுக்கே உண்டு. தமது கருணையால் அருணகிரிக் குத் தீவினை அகற்றி ஞான உபதேசஞ் செய்து அவர் மூலம் தன்புகழைப் பாட வைத்து தமிழ் இன்பம் அடைய முருகப் பெருமான் சித்தங் கொண்டார்.

அருணகிரி கோபுரத்திலிருந்து குதித்த போது முருகப்பெருமான் தடுத்தாட் கொண்டார். அருணகிரிக்கு திருவடி தீட்சை தந்து அவரின் கர்மவினைகளை யும் நோய்களையும் அகலச் செய்தார். தன் புகழ் பாடி விண்ணுளோரும் மண்ணு ளோரும் வியக்கவைக்கும் திருப்புகழ் பாட "முத்து" என முதல் அடி எடுத்துக் கொடுத்துப்பாடுமாறு அருளினார். மேலும் திருத்தல வடகோபுர வாசலிலிருந்து இறைவன் அழைக்கிறார் எனக் கூறி உபதேசித்தார். அருணகிரியும் முருகப் பெருமானின் குரு உபதேசப்படி வடபுற வாசலால் கோயிலினுட் சென்று ஒரு புறத்தே மோனத்தவ நிலையிலிருந்து துறவியானார்.

குருவுபதேசம் பெற்ற அருணகிரிக்கு தாம் காட்சி தரும் சிறப்பான புனித தலங் களுக்குச் சென்று காட்சி கண்டு திருப் புகழ் பாடுமாறு முருகப் பெருமான் பணித் தார். முதலில் முருகனின் அருள்மிகு காட்சியை ஞானமலை திருத்தலத்தில் தரிசித்துப் பாடினார். முருகனின் விருப்பின் பேரில் வயலூர், விராலிமலை, சந்தனக் கோடு, திருச்செங்கோடு போன்ற பல முருகன் ஆலயங்களுக்கும் சென்று திருப் புகழை இசையுடன் பாடி முருகப்பெரு மானின் அற்புதக் காட்சியையும் கண்டு தரிசித்தார்.

அருணகிரிநாதரின் திருப்புகழை நன்கு சுவைத்து இன்புற்ற முருகப்பெருமான் அவருக்கு அட்டமா சித்திகளையும் தந்து ஆசீர்வாதத்தையும் வழங்கினார். திருப்பு கழின் சிறப்பு அற்புதமானது.

**கந்தபுராணம்**

பதின்நான்காம் நூற்றாண்டில் காஞ்சி யில் வாழ்ந்த ஆதிசைவ குலத்தவரான கச்சியப்ப சிவாச்சாரியார் கந்தகோட்டத்து முருகன் ஆலய அர்ச்சகராவார். இவர் சிறந்த கல்வி ஒழுக்கமும், பன்மொழியில் பாண்டித்தியமும் பெற்ற முருகபக்தராவார்.

தன் புகழையும் பெருமையையும் உல கறியச் செய்ய விரும்பிய முருகப்பெருமான் ஒருநாள் இரவு கச்சியப்ப சிவாச்சாரியாரின் கனவில் தோன்றினார். தமது கதையடங்கிய கந்தபுராணம் என்னும் நூலை எழுதுமாறு கூறினார். மேலும் "திகடசக்கரம்" என்னும் பதத்துடன் ஆரம்பிக்குமாறு கூறி மறைந்தருளினார்.

பொழுது விடிந்ததும் கச்சியப்பசிவாச்சாரியார் ஆசாரம் பேணி முருகப்பெருமானின் ஆலயம் சென்று அவரை வழிபட்டு நாளாந்தம் நூறு பாடல்கள் வீதம் எழுதுவதாகத் தீர்மானித்தார். மாலையில் தாம் பாடிய பாடல்களடங்கிய ஏட்டுச் சுவடிகளை ஒருசேரக்கட்டி முருகப்பெருமானின் திருமுன் வைத்துச் செல்வார். மறுநாட்காலை வந்து பார்த்த போது அப் பாடல்கள் திருத்தம் செய்யப்பட்டிருக்கும். இதனால் தமது பாடல்கள் யாவும் முருகனால் அங்கீகரிக்கப்பட்டன எனப் பெருமிதமடைந்தார். இவ்வாறு 10345 செய்யுள்களைப் பாடி கந்தபுராணம் என்னும் நூலை நிறைவு செய்தார்.

தாம் பாடி நிறைவு செய்த கந்தபுராண நூலை முருகனின் ஆலயத்தில் கல்விமான்கள், புலவர்கள், பண்டிதர்கள் அடங்கிய மகாசபையில் அரங்கேற்ற விரும்பிய கச்சியப்ப சிவாச்சாரியார் மறுநாட்காலை யாவரையும் சபையாகக் கூடுமாறு ஓலை அனுப்பினார். யாவரும் ஒன்றுகூடிய சபையில் கச்சியப்பசிவாச்சாரியார் அவையடக்கம் கூறி தமது நெஞ்சில் குடியிருக்கும் முருகப் பெருமானை வழிபட்டு மிகப் பெருவிருப்புடன் நூல் அரங்கேற்றத்தை ஆரம்பித்தார்.

தாம் பாடிய முதற்பாடலான "திகட சக்கரம்" என்னும் தொடரில் பாடி முடித்த செய்யுளில் முதல் வரிக்கான விளக்கத்தைக் கூறினார். அப்போது சபையிலிருந்த பெரும்புலவர் எழுந்து திகழ்சக்கரம் என்னும் சொற்பதம் திகடசக்கரம் எனப் புணர்வதைத் தொல்காப்பியம் போன்ற நூல்களிலும் வரவில்லையே என வாதிட்டார்.

இச்சமயம் கச்சியப்பர் முருகப்பெருமானே "திகடசக்கரம்" என எழுதுமாறு பணித்தார் என்றதும் வாதாடியவர் முருகப் பெருமான் சபையில் வந்து தெரிவிக்கட்டும் எனக் கூறினார். சபையும் கலைந்தது. மிக வேதனையடைந்த கச்சியப்பர் முருகனின் திருமுன் விழுந்து அழுது புலம்பினார். சபையில் வந்து விளக்கம் தரவேண்டும் இல்லையேல் நான் இவ்விடத்திலேயே என் உயிரை மாய்ப்பேன் என்று கூறினார். துக்கமும் உடல் அசதியும் காரணமாக அவர் அவ்விடத்தில் உறங்கிவிட்டார்.

அவரின் கனவில் தோன்றிய முருகப் பெருமான் அன்பரே நாளை சபையைக் கூட்டும். சோழ நாட்டிலுள்ள புலவர் வந்து விளக்கம் தருவார் என்று கூறிமறைந்தார். முருகன் தெரிவித்தபடி மறுநாள் சபை கூடியது. இச்சபையில் கையில் ஒரு நூலுடன் இருந்த இளம்புலவர் யாவராலும் அறியாதவராகவே தோன்றினார்.

முதல்நாள் இடைமறித்த பெரும்புலவர் கச்சியப்பரை நோக்கி நேற்றைய தினம் கூறவேண்டிய விளக்கத்தைக் கோரினார். அப்போது புலவரின் வடிவில் வந்த முருகப் பெருமான் எழுந்து "நாம் சோழ நாட்டினோம். எம்மிடமுள்ள இச்சுவடி

வீரசோழியம் என்னும் இலக்கணநூலா கும். இந்நூலின் சந்திப் படலத்தின் பதினெட்டாம் பாடலில் ழகரமும் கூடி, டகரமாவாற்கு விதி கூறப்பட்டுள்ளது. இவ்விதியை நீவிர் அறியீரோ" என்றார். இதைக்கேட்டதும் புலவர்கள் அதனை அறிவோம். உரிய நேரத்தில் நாம் தவறி யது பெருவியப்பாகும் என்றதும் இளம் புலவர் மறைந்து விட்டார்.

தமக்கு விளக்கமளித்தவர் முருகப் பெருமானே என்று கூறிய பலரும் வியந்து கச்சியப்பரைப் புகழ்ந்து பாராட்டினர். இடைமறித்த புலவர் கச்சியப்பரின் பெரு மையை உணர்ந்து வீழ்ந்து வணங்கினார். கந்தபுராண நூல் அரங்கேற்றப்பட்டது. தமது கதையை கந்தபுராணம் என்னும் நூலாக வெளியிட வைத்து அதனை நன்கு சுவைத்த முருகப் பெருமான் ஜீவாத்மாக் கள் படித்து அனுபவித்து அதன்படி ஒழுகி இன்புறும் வண்ணம் தந்தருளினார். முருகப் பெருமானின் அற்புதங்கள் யாவும் நாம் நன்குணர்ந்து வாழ்வதற்கானதாகும்.

**நக்கீரரின் திருமுருகாற்றுப்படை**

மதுரைத் தமிழ்ச்சங்க முதன்மைப் புல வரான நக்கீரன் இறைவனுடன் வாதிட்டார். சிவநிந்தனை செய்ததன் காரணமாக கொடுநோய்க்கு ஆளானார். தன் தவறை உணர்ந்து தம்மைக் காக்குமாறு வேண்டி னார். இறைவன் ஆணைப்படி திருக்கயி லாய தரிசனம் கண்டு நோயிலிருந்து விடுபட்டார்.

கயிலாய தரிசனம் காணச் செல்லும் வழியில் தென்பட்ட குளத்தில் நீராடிச் சிவபூசை செய்ய ஆரம்பித்தார். அச்சம யம் ஒரு பூதத்தின் மாயலீலையால் நக்கீ ரனின் சிவபூசை குழம்பியது. பூதம் அவ ரைப் பிடித்துச் சென்று கற்கோட்டையில் சிறைவைத்தது. ஏற்கனவே அச்சிறையில் அடைக்கப்பட்டிருந்த 999 முனிவர்களும் அக்குளக்கரையில் தவமிருந்தபோது பூதத்தின் மாயலீலையால் சிறைப்பிடிக்கப் பட்டிருந்தனர்.

பூதத்தின் நியதிப்படி ஒரே தடவையில் ஆயிரம் பேரை உண்ண இருந்தது. கடைசியாளான நக்கீரருடன் ஆயிரம் பேரின் மரணம் உறுதிப்படுத்தப்பட்டது. பூதம் நீராடச் சென்றது. முனிவர்கள் தமது இறப்புக்காக ஏங்கினர். இதனை உணர்ந்த நக்கீரர் முருகப் பெருமானை வேண்டிப் பூதத்தை அழிப்பதாக உறுதியளித்தார்.

நக்கீரர் உள்ளன்போடு முருகப் பெரு மானை வேண்டித் தம்மை ஆபத்திலிருந்து விடுவிக்குமாறு பாடிப் பணிசெய்தார். முருகப் பெருமானின் ஆறுபடை வீடுகளின் சிறப்பைப் பாடலாகப் பாடிப்பணிந்தார். முருகப்பெருமான் அபயம் தர பெருமானின் கூர்வேல் பூதத்தைப் பிளந்து அழித்தது. சிறைமீண்ட அனைவரும் முருகப்பெரு மானை நன்றியுடன் போற்றிப் பணிந்தனர். நக்கீரர் மனம் உருகப் பாடிய முருகப் பெருமானின் ஆறுபடை வீடுகள் பற்றிய பாடல்கள் "திருமுருகாற்றுப்படை" என்னும் அரிய நூலாக அமைந்தது. இன்றும் முரு கப்பெருமானுக்காகப் பாடப்பட்ட ஔவை யார் பாடல், திருப்புகழ், கந்தபுராணம், திருமுருகாற்றுப்படை போன்ற பாடல்கள் முத்தமிழாக அமைந்தன.

தமிழ்க் கடவுளான கந்தப் பெருமான் தெய்வீகத் தமிழ்ப் பாடல்களை நன்கு சுவைத்தார். என்றும் இளமையுடனும், ஆரோக்கியத்துடனும், மகிழ்வுடனும், பெருமையுடனும் இருப்பதற்கு இவைகள் சான்றாகும்.

# சேவலும் மயிலும் போற்றி; திருக்கைவேல் போற்றி! போற்றி!!

**சைவப்புலவர் வை.சி.சிவசுப்பிரமணியம்** B.A.
**ஓய்வுபெற்ற அஞ்சலதிபா**

கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாக விளங்குபவர் முருகப்பெருமான். தமிழ் கூறும் நல்லுலகெங்கும் முருக வழிபாடு சிறந்து காணப்படுகிறது. முருகன் பெருமை அவனைச் சுற்றிச் சூழ இருக்கின்ற பொருள்களிடத்திலும் பிரதிபலிக்கும். முருகப்பெருமானுக்கு வாகனமாக இருக்கின்ற மயில், கொடியாக இருக்கின்ற கோழி, ஆயுதமாக இருக்கின்ற வேல் ஆகிய எல்லாம் அவனது சார்பினால் தெய்வத்தன்மையும் ஆற்றலும் பெற்று விளங்குகின்றன. அருணகிரிநாதப் பெருமான் கந்தர் அனுபூதி முதற்பாட்டில்

"**ஆடும் பரிவேல் அணிசேவல் எனப்**
**பாடும் பணியே பணியா அருள்வாய்**" என்று வேண்டுகிறார்.

அதாவது முருகா, உன் வாகனமாக ஆடிக் கொண்டிருக்கிற மயிலையும் உன் ஆயுதமாகிய வேலையும், உன்னுடைய கொடியாகிய சேவலையும் பாடுதலையே என்னுடைய பணியாக நீ அருள் செய்ய வேண்டும் என்று கேட்கிறார். முருகனைப் போற்றுவது போலவே அவனிடத்தில் உள்ள வேலையும், மயிலையும், கோழிக் கொடியையும் அடியார்கள் போற்றி வந்துள்ளனர்.

கடவுளரின் திருக்கோயிலின் வாசல்களிலும், கோபுரங்களிலும், ஏனைய முக்கிய கோயிலின் அமைப்புக்களிலும் கொடி பறக்கிறது. ஆடுகின்ற அக்கொடி அக்கோயிலின் பெருமையையும், அதில் உறையும் தெய்வத்தின் வெற்றிச் சிறப்பினையும் விளக்குகின்றது. முருகனுடைய திருக்கோயிலிற் பறப்பது சேவற் கொடியாகும். அவனது திருக்கரத்திலும் இது காணப்படுகிறது. கோழி எவ்வளவு பெருமை உடையது! தேவர்கள் பாராட்டும் கோழி அது; தேவ மகளிர் வாழ்த்தும் கோழி.

"**கோழி ஓங்கிய வென்று அடு விறற்கொடி**
**வாழிய பெரிது**"

என சூரர மகளிர் வாழ்த்துவார்களாம். திருமுருகாற்றுப்படையில் நக்கீரர் அவ்வாறு சொல்கிறார். முருகப்பெருமானுக்கு வாகனம்-மயில். கொடி - கோழி. சூரபன்மனது பாதி அம்சம் வாகனமாகிய மயிலாகவும் மற்றொரு பாதி சேவல் கொடியாகவும் இருக்கின்றன. சிவத்திலிருந்து சக்தி தோன்றியது சக்திக்குப் பின் ஒன்றன் பின் ஒன்றாக தத்துவங்கள் தோன்றின. அப்படித் தோன்றியவைகளுள் முதற் தத்துவம் நாதம். இந்த நாததத்துவத்தை குறிப்பிடுகிறது கோழி. பிரளயகாலத்தில் உயிரினங்கள் எல்லாம் அடங்கிக் கிடக்கின்றன. ஒரு நாள் ராத்திரி என்பது பிரளயத்திற்குச் சமானம். எப்படி எல்லா உயிர்களும் இரவில் அடங்கியிருக்கின்றனவோ, அப்படியே, எல்லாத் தத்துவங்களும் ஒன்றில் ஒன்று அடங்கிப் பிரளய காலத்தில்

இருக்கும். தினந்தோறும் தூங்கும் தூக்கத்தை நித்த சங்காரம் என்றும், பிரளயத்தை மகாசங்காரம் என்றும் திருமூலர் குறிப்பிடுவார். மறுபடியும் உயிர்கள் விழிப்படைவது ஜனனம். இரவு விடியப் போகிறது என்பதற்கு அடையாளமாக முதலில் கூவுவது கோழி. பிரளயத்திற்குப் பிறகு உலகம் விரியப் போகிறது என்பதற்கு முதல் அடையாளமாகத் தோன்றுவது நாததத்துவம். இந்தத் தத்துவத்திற்கு அறிகுறியாக இருப்பது கோழி. சூரசங்கார காலத்தில் வேல் சூரனின் உடலில் பாய்ந்த போது அவனது அகங்காரம், மமகாரம் இரண்டும் பிளக்கப்பட்டு இரு பகுதியாயின. ஒரு பகுதி மயிலாகவும், மற்றொரு பகுதி சேவலாகவும் மாறின. அந்தச் சேவலைத் தன் கொடியாகக் கொண்டான் முருகன். அது மேலிருந்து கூவுகிறது முருகனடியார்களின் வாழ்வு விடிந்து விடும்.

முருகனுக்குரிய வாகனமாகிய மயில் பலவகையில் சிறப்புடையது. ஆடும் மயில் வட்ட வடிவமாகத் தன் தோகையை விரித்துக் கொண்டு, ஒரு காலைச் சற்றுத் தூக்கிய வண்ணம் இருக்கும். அப்பொழுது அதன் முழு உருவத்தையும் கூர்ந்து பார்த்தால் ஓங்காரம் போல் தோன்றும். ஒலி, ஒளி இரண்டும் கலந்தது பிரணவம். "ஓங்காரத்து உள் ஒளிக்கு உள்ளே முருகன் உருவம் கண்டு தூங்கார்" என்பார் அருணகிரியார். ஓங்கார சொரூபியான முருகன் ஓங்கார உருவமான மயிலின் மீது எழுந்தருளி இருக்கிறான். இந்தத் தத்துவத்தை ஆடும் பரியாகிய மயில் உணர்த்துகின்றது. முருகன் ஞானசொரூபி. அவனது வாகனமாகிய மயில் பிரணவ சொரூபம்.

**"ஆன தனி மந்திர ரூப நிலை கொண்ட**
**தாடுமயில் என்பதறியேனே"** என்பது திருப்புகழ்.

எல்லா மந்திரங்களுக்கும் மேலான மந்திரமாக, ஒப்பற்ற மந்திரமாக, தனி மந்திரமாக இருப்பது பிரணவம். அதன் உருவத்தைப் பெற்றது தோகை விரித்து ஆடும் மயில்.

உலகங்களின் இடர் தீர்ப்பது வேலும் மயிலுமே. மயிலின் பார்வை விழும் இடங்கள் நன்மையடையும். 'துங்க அநுகூலப் பார்வைத் தீர செம்பொன் மயில்' என்பார் திருப்புகழில்.

பொன்மேருகிரிக்கு அப்பாலும், பெரும் புறக் கடலுக்கு அப்பாலும், கதிரவனுக்கு அப்பாலும், சக்கரவாள கிரிக்கு அப்பாலும், எண் திசைக்கு அப்பாலும் பறந்து விளையாடும் பண்புடையது ஐயனுடைய மயில். முருகவேளுடைய திருவடியை எப்போதும் தாங்கும் மயிலானது எங்கும் பறந்து எல்லா உலகங்களுக்கும் நேரும் இடரைத தீர்க்கும்.

**"தடக் கொற்றவேள் மயிலே இடர்தீரத் தனிவிடில் நீ**
**வடக்கிற் கிரிக்கப் புறத்துநின் றோகையின் வட்டமிட்டுக்**
**கடற்கப் புறத்துங் கதிர்க்கப் புறத்துங் கனகசக்கரத்**
**திடர்க்கப் புறத்துந் திசைக்கப் புறத்துந் திரிகுவையே"**
என்பது கந்தரலங்காரம்.

முருகனது தோற்றப் பொலிவில் காணும் படைக் கலங்களில் வேல் தலைமையிடம் பெறும். "எப்படைக்கும் நாயகமாவதொரு தனிச் சுடர் வேல்" என்பது கச்சியப்பர் வாக்கு. சுத்தோதக் கடலில் மயங்கிக் கிடந்த வீரவாகு முதலியோர் வேற்படையாலே மீட்கப்பட்ட வரலாற்றை பின்வரும் கந்தபுராண பாடலாற் காணலாம்.

**"அந்தமில் ஒளியின் சீரால் அறுமுகம் படைத்த பண்பால்**
**எந்தை கண் நின்றும் வந்த இயற்கையாற் சக்தியாம் பேர்**
**தந்திடும் பனுவல் பெற்ற தன்மையால் தனிவேற் பெம்மான்**
**கந்தனே என்ன நின்னைக் கண்டுளக் கவலை நீத்தோம்"**.

வேலை நினைத்தாலே வினைகள் ஓடிப்போம். அடியார்கள் பொருட்டே முருகன் இப்படைக்கலத்தைத் தாங்கி அவர்களது புறப்பகையையும் அகப்பகையையும் நீக்கியருளுகின்றார். கருணைசெய் கந்தன் வேறு, ஞானவேல் வேறு அன்று, என்பதனையும் முன் சொன்ன கந்தபுராண பாடலாற் கண்டோம்.

'முருகன்! தனிவேல் முனி நம்குரு' என்று கந்தரனுபூதியிற் கூறுகிறார் அருணகிரி. முருகப்பெருமான் வேல் தாங்கி குருவாய் வருகிறார். உலகிற்கு அஞ்ஞானத்தை நீக்கி மெய்ஞானத்தைப் புகட்டுகிறார். இச்செயலை ஆற்றுவது அவனது திருக்கைவேலாகும். வேல் என்பது மெய்ஞானம். முருகன் கையில் உள்ள வேலை ஞானசக்தி என்பர்.

நாம் அஞ்ஞானம் அல்லது அவித்தையினால் பிறவி எடுக்கிறோம். அவித்தை அழிந்தால், அறியாமை ஒழிந்தால் பிறப்பு ஒழியும் அந்த ஞான வேலினால் அஞ்ஞானம் தொலையும், அதனால் பிறவி போகும்.

முருகனுடைய அவதாரத்திற்குக் காரணம் சூரனைச் சங்கரிப்பது. அந்தச் சூர சங்காரம் செய்ததே அவன் திருக்கரத்தில் உள்ள வேல் தான். சூரனுடைய உருவத்தை மாற்றி வேலும் மயிலுமாகக் கொண்டருளினான். முடிவில் அருள் பாலிக்கும் கருணையே புலப்படுகிறது.

**செங்கையில் வேற்**

**சுடர் அணியிட்டு அணுவாகிக் கிரௌஞ்சம் குலைந்தரக்கர்**

**நேரணியிட்டு வளைந்த கடகம் நௌிந்தது சூர்ப்**

**பேரணி கெட்டது தேவேந்திர லோகம் பிழைத்ததுவே.**

அந்த வேல் மூன்று காரியங்களைச் செய்தது என்று சொல்வதோடு அதனால் தேவேந்திர லோகம் பிழைத்தது என்று மங்களமாக முடிக்கிறார் அருணகிரியார். கந்தர் அலங்காரத்தில் அருணகிரியார் இன்னும் கூறுவார் :

**"தனித்து நடக்குமென திடத்துமொரு வலத்துமிரு**

**புறத்து மரு கடுத்திரவு பகற்றுணையாகும்**

**........... குகன் வேலே"**

ஐவரும் கைவிட்டு மெய்விட்டு ஆன்மா புறப்பட்டுச் செல்லும் போது ஒருவரும் உடன் தொடர்ந்து வரமாட்டார். அவ்வழிக்கே தனி வழி என்று பெயர். அந்தத் தனிவழியில் வந்து, இடத்தும் வலத்தும், முன்னும், பின்னும், இரவும் பகலும் துணை செய்ய வல்லது எம்பிரானுடைய வேலாயுதமாகும்.

"மூவிரு முகங்கள் போற்றி" எனத் தொடங்கும் பாயிரப் பகுதியில், "ஆறு முகங்களுக்கு ஒரு போற்றியும், ஆறு கருணைகளுக்கு ஒரு போற்றியும், பன்னிரு தோள்களுக்கு ஒரு போற்றியும், இரு திருவடிகளுக்கு ஒரு போற்றியும் கூறிவந்த ஆசிரியர் வேலுக்கு இரண்டு போற்றியைக் கூறியது கவனிக்கத்தக்கது" என்று கந்தபுராண வாயிலாகச் சுட்டுவர் ஞானியாரடிகள். எனவே நாமும் முருகனது திருக்கரத்துள்ள வேலைப் போற்றிப் பணிந்து உய்தி பெறுவோமாக.

**மூவிரு முகங்கள் போற்றி**
**முகம் பொழி கருணை போற்றி**
**ஏவரும் துதிக்க நின்ற**
**ஈராறு தோள்கள் போற்றி**
**காஞ்சி மாவடி வைகும் செவ்வேள்**
**மலரடி போற்றி அன்னான்**
**சேவலும் மயிலும் போற்றி**
**திருக்கைவேல் போற்றி போற்றி.**

# திருப்புகழ் காட்டும் பெண்மை

முனைவர் மனோன்மணி சண்முகதாஸ்

### 1. திருப்புகழ் அமைப்பு

சிவனுக்கு உரிய பன்னிரு திருமுறை களுக்கு ஒப்பாக முருகக் கடவுளுக்கும் பன்னிரு திருமுறைகள் வகுக்கப்பட்டுள் ளன. தமிழில் எழுந்த பக்தி இலக் கியங்கள் இருவகையாக அமைந்திருப் பதை இவ்வமைப்புத் தெளிவாக உணர்த் துகின்றது. பின்வரும் அட்டவணை ஒரு பார்வையில் இக்கருத்தை தெளிவு படுத்தும்.

| சிவன் திருமுறை | முருகன் திருமுறை |
|---|---|
| 1. சம்பந்தர் தேவாரம் | திருப்புகழ் - திருப்பரங்குன்றம் |
| 2. சம்பந்தர் தேவாரம் | திருப்புகழ் - திருச்செந்தூர் |
| 3. சம்பந்தர் தேவாரம் | திருப்புகழ் - திருஆவினன்குடி (பழநி) |
| 4. அப்பர் தேவாரம் | திருப்புகழ் - திருவேரகம் |
| 5. அப்பர் தேவாரம் | திருப்புகழ் - குன்றுதோறாடல் (திருத்தணி) |
| 6. அப்பர் தேவாரம் | திருப்புகழ் - பழமுதிர்சோலை |
| 7. சுந்தரர் தேவாரம் | திருப்புகழ் - பிறதிருப்பதிகள் |
| 8. மணிவாசகர் திருவாசகம், திருக்கோவை | கந்தரலங்காரம், கந்தரனுபூதி |
| 9. திருவிசைப்பா | திருவகுப்பு (இசைப்பாடல்) |
| 10. திருமந்திரம் | கந்தரநுபூதி |
| 11. அடியார் பலரது பாடல் தொகுதி | முருகன் அடியார் பலரது பாடல்கள் |
| 12. திருத்தொண்டர் புராணம் | கந்தபுராணம் |

திருமுறை வடிவில் வெளிவரவேண்டுமென இளஅழகனார் முதலில் விரும்பினார். அதனை வ.சு.செங்கல்வராயபிள்ளையும் வ. ச. மயிலேறும்பெருமாள்பிள்ளையும் இப்பணியை முன்னெடுத்தனர். முதல் மூன்று முருகன் திருமுறைத் தொகுப்பை உரையுடனும் ஆராய்ச்சிக்குறிப்புடனும் 1951ஆம் ஆண்டு வெளியிட்டனர். தொகுதி இரண்டு 4, 5, 6 திருமுறைகளை அடக்கி 1973ல் வெளியிடப்பட்டது.

திருப்புகழ் பாடல் தொகுப்பில் ஆறு படை வீடு பற்றிய பாடல்கள் இக்கட்டு ரையில் நுண்பார்வைக்குட்படுத்தப்பட்டு, பெண்மை பற்றிய கருத்துகள் தொகுக்கப் பட்டுள்ளன. அருணகிரிநாதர் பாடிய திருப் புகழின் சிறப்பைப் பலரும் பிற்காலத்தில் பாராட்டியுள்ளனர். முருகவேள் நூல்கள் தொடர்ந்து ஏனைய தொகுதி 3, தொகுதி 4 வெளியிடப்பட்டன. முருகவேள் திரு முறைத் தொகுப்பைப் பாராட்டி கி.வா. ஜகந்நாதன் 10 பாடல்களைப் பாடியுள்ளார். அவற்றுள் ஒன்று தொகுப்பின் பெயர் பன்னிரு திருமுறை என அமைவதன் பொருத் தப்பாட்டை நன்கு உணர்த்தி நிற்கிறது.

**"பன்னிரு விழிமா மலரினன் ஈயப்**
**பன்னிரு திருக்கரங் கொண்டான்**
**தன்னிரு வனச மலரடி பதித்த**
**சால்புறு நெஞ்சினை நினக்கு**
**பன்னிருமுறைகள் வகுப்பதற் கவன்றன்**
**பண்ணமை அருள்துணை இருக்கும்**
**மன்னிய புகழும் புண்ணியப் பேறும்**
**வந்துறும் நினக்கிது திண்ணம்"**

**(பாடல் 4)**

திருப்புகழுக்குப் பாடப்பட்ட சிறப்புப் பாயிரம் ஒன்றுளது. இப்பாயிரம் பின்வரும் சிறப்புகளைக் கூறுகிறது.

1. நூற்சிறப்பு 5 பாடல்
2. கேட்பதன்பயன் 1 பாடல்
3. நூற்பயன் 3 பாடல்
4. அன்பர் வினாவும் ஆண்டவன் விடையும் 1 பாடல்
5. படிப்போர் தீரம் 1 பாடல்
6. நூலாசிரியர் பெயர், நூற்பண்பும் பெயரும், துதிப்போர் பேறும் 2 பாடல்
7. திருப்புகழ் இன்ன இன்னதற்கு இன்ன இன்னதாம் எனல் 1 பாடல்
8. திருப்புகழ் வழிபாட்டால் கூற்றையும் வெல்லலாமெனல் 1 பாடல்
9. திருப்புகழின் பிரபாவம் 1 பாடல்
10. திருப்புகமுடியார் பெருமை 1 பாடல்.

முருகக் கடவுள் துதியாக அமைந்த பாடல் முருகனின் திருமுகங்களைப் பற்றிக் கூறுகிறது அருணகிரிநாதரின் முருக பக்தியின் முதிர்ச்சியை இப்பாடல் நன்கு ணர்த்துகிறது.

**"ஏறுமயில் ஏறிவிளை யாடுமுகம் ஒன்றே**
**ஈசருடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே**
**கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுகம் ஒன்றே**
**குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகம் ஒன்றே**
**மாறுபடு சூரரை வதைத்த முகம் ஒன்றே**
**வள்ளியை மணம்புணர வந்தமுகம் ஒன்றே**
**ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்**
**ஆதியம ராவதி யமர்ந்தபெரு மாளே".**

இப்பாடலின் நிறைவு அடியில் "ஆதி யருணாசலம் அமர்ந்தபெருமாளே" என்ற பாடவேறுபாடு உண்டு.

விநாயகர் துதியாக மலர்கொடு பணிய, அருள்பெற, அருள் மறவாமை, திருவடி பெற, வழிபாடு மறவாமை என 5 பாடல் உள்ளன. இவற்றில் விநாயகர் பெருமை, நிவேதனப் பொருட்கள், சிறப்பு வழிபாட்டு முறைகள் கூறப்பட்டுள்ளன.

அமைப்பில் திருப்புகழின் 6 திருமுறை களும் திருமுருகாற்றுப்படையில் உள்ள தலச்சிறப்புகளையே பதிவு செய்துள்ளன. எனினும் பாடல்களில் பிறிதொரு முக்கிய விடயமும் இணைக்கப்பட்டுள்ளது. அதனைத் திருப்புகழ் காட்டும் பெண்மை என்ற சிறப்புப் பொருள் நிலையில் இக் கட்டுரை ஆவணப்படுத்த முயல்கிறது.

## 2. திருப்புகழ் காட்டும் பெண்மை

திருப்புகழில் அருணகிரிநாதர் பாடல் களில் பெண்மை நிலை சிறப்பாக நான்கு வகையாகப் புலப்படுத்தப்பட்டுள்ளது. அவை வருமாறு:- 1. உமையம்மை 2. தெய்வயானை 3. வள்ளி 4. பொது மகளிர். எனினும் அருணகிரிநாதர் தன் பாடல்களில் பயன்படுத்தியுள்ள தொடர் கள் அவருடைய உணர்வுநிலை வெளிப் பாட்டைச் சிறப்பாகக் காட்டுகின்றன. அதனைச் சான்றுடன் எடுத்துக் காட்டுவது பயனுடைத்து.

### 2.1 உமையம்மை இறைவன் பங்கி

முருகப் பெருமானின் தாயாகப் பாடல் களில் உமையம்மை குறிப்பிடப்பட்டுள்

ளாள். சிவனோடு சேர்ந்திருக்கும் நிலை குறிப்பிடப்பட்டுள்ளது.

**"அழலுறு மிரும்பின்மேனி மகிழ்மரா கதப்பெணாகம் அயலணி சிவன்பு ராரி யருள்சேயே"** (திருமுறை: 4:205)

இங்கு நெருப்பிலிட்ட இரும்பு போல ஒளிவிடும் திருமேனியையும் மகிழ்ச்சியையும் கொண்ட பச்சை நிறப் பெண்ணாம் பார்வதியைச் சிவன் தனது உடலிலே ஒரு பாகமாகக் கொண்டிருப்பதும் அக் கோலம் இல்லற நிலையின் உயர்வைக் காட்டுவதும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**"தரளமுரா லுமைமடந்தை முலையிலாா அமுதமுண்டு தரணியேழும் வலம்வ ருந்திண் மயில்வீரா"**

(திருமுறை: 4:227)

இங்கு முத்துப்போன்ற பற்களையுடைய உமைமாதின் முலைப்பாலை நிறைய உண்டு உலகை வலம் வரும் வலிய மயில்வீரனே என அமைந்த குறிப்பு உமையின் பற்களைச் சிறப்பித்துக் கூறுவதாக உள்ளது. முருகனுக்கு முலைப் பாலூட்டிய தாயான உமையம்மையின் அழகு அருணகிரிநாதரின் பக்திப் பரவசத்தில் வர்ணிக்கப்பட்டுள்ளது. பிறிதொரு பாடலில் உமையம்மையின் மேனியழகு 'எழுதரிய பச்சை மேனி' (திருமுறை:5:392) என வர்ணிக்கப்பட்டுள்ளது.

பார்வதியின் புதல்வன் பழமுதிர்ச் சோலையில் உறையும் பெருமாள் என்பதைச் சொல்ல வந்த அருணகிரிநாதர் வருமாறு பாடியிருப்பது அவரது பிறிதொரு நோக்கத்தைப் புலப்படுத்துவதாக உள்ளது.

**"கொலைபுரி காளிசூலி வயிரவி நீலிமோடி**
**குலிச குடாரி யாயி மகமாயி**
**குமரிவ ராகிமோகி பகவதி யாதிசோதி**
**குணவதி யால வூணி யபிராமி**
**பலிகொள்க பாலியோகி பரமகல்யாணிலோக**
**பதிவிரதை வேதஞானி புதல் வோனே"**

(திருமுறை:6:434)

தெய்வ நிலையில் பார்வதியின் சிறப்பியல்புகள் இங்கு கூறப்பட்டுள்ளன. கொலை செய்யும் காளி, சூலத்தை ஏந்தியவள், வயிரவி, நீலநிறத்தினள், துர்க்கை (காடுகாள்), குலிசம், அங்குசம் ஏந்தியுள்ள ஆயி, மகமாயி, குமரி, வராகி, மோகி, பகவதி, ஆதி, சோதி, குணவதி, நஞ்சுண்டவள், அழகி (அபிராமி), பலி ஏற்கும் பிரம கபாலத்தினள், யோகத்தினள், பரமகல்யாணி (அல்லது கபாலி யோகியாம் பரமரைக் கல்யாணம் செய்து கொண்டவள்), லோக பதிவிரதை, வேதஞானி ஆகிய பார்வதி. பெண் தெய்வத்தைப் பாடுவதற்கு ஒரு வாய்ப்பாகவும் இப்பாடலைப் பயன் படுத்தியுள்ளார். முழுமுதற் கடவுளான சிவனின் மனைவி பார்வதியின் பல்வேறு சிறப்புகளையும் கூறும் நிலையை இங்கே காணமுடிகிறது.

### 2.2 தெய்வயானை, ஆரமுதமான தந்தி

முருகன் மனைவி என்ற நிலையில் தெய்வயானை திருப்புகழில் பல இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளாள். நிறைந்த அமுதம் போல் இனிய யானை (மகள்) தேவசேனையின் மணவாளன் என அருணகிரி குறிப்பிடும்போது கந்தபுராணத்தில் கூறப்பட்டுள்ள தெய்வயானை பற்றிய வரலாறு குறிப்பாகப் பதிவுசெய்யப்பட்டு உள்ளதை உணர முடிகிறது. அவ்வரலாறு வருமாறு கூறப்பட்டுள்ளது.

**தேவசேனை வரலாறு:**

திருமாலின் கன்னியராம் அமுதவல்லி, சுந்தரவல்லி என்போர் முருகவேளை மணக்க விரும்பி சரவணத்தில் தவம் புரிந்தனர். முருகன் அவர்கள் எதிரில் தோன்றி "அமுதவல்லி, நீ இந்திரன் மகளாக வளருவாயாக; இளையவளாம் சுந்தர வல்லி வேடன்பால் வளருவாளாக. பின்னர் நாம் உங்களை மணம் செய்து கொள்வோம்" என்றனர். அங்ஙனமே அமுத வல்லி இந்திரனை அடைய இந்திரன் சொற்படி ஐராவதம் (வெள்ளை யானை) அமுதவல்லியை வளர்த்தது. அதனால் அமுதவல்லிக்குத் 'தெய்வயானை' என்ற பெயர் எய்தியது. 'யானை போற்றிய காரணத்தால் 'தெய்வயானை' என்றொரு பெயர் (கந்தபுராணம்:1:18:10).

அருணகிரிநாதர் திருப்புகழில் தெய்வ யானை 'அரம்பை' எனக் குறிப்பிடப்படுவது கந்தபுராணம் கூறும் வரலாற்றோடு ஒத்தியைவதாக உள்ளது.

**"கன்றா விலங்க லொன்றாறு கண்ட**
**கண்டா வரம்பை மணவாளா"** (திருமுறை:5:368)

கோபித்து மலை ஒன்றை அதாவது கிரவுஞ்சத்தை வழிதிறக்கச் செய்த வீரனான முருகன் தேவமகளான தேவசேனையை மணந்தமை இங்கு குறிப்பிடப் பட்டுள்ளது.

**2.3 வள்ளி**

திருப்புகழில் வள்ளி பற்றிப் பல குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. வள்ளியும் பார்வதியும் ஒரே பாடலில் குறிப்பிடப் படுவது உறவுநிலையில் அருணகிரிநாதர் பெண்மையைப் பதிவு செய்திருக்கும் முறைமையைக் காட்டுகிறது.

**"செகத்தை யீனவள் பச்சை நிறத்தியை**
**மணந்த தாதைப ரப்பிரம ருக்கருள் குருநாதா**
**வனத்தில் வாழும யிற்குல மொத்திடு**
**குறத்தியாரைம யக்கிய ணைத்துள**
**மகிழ்ச்சி யோடுதி ருத்தணி பற்றிய பெருமாளே."**

(திருமுறை:5:268)

ஒப்பற்ற உலகங்களை ஈன்ற பச்சை நிறத்துப் பார்வதியை மணந்த தந்தை பரப்பிரமப் பொருளாம் சிவபிரானுக்கு அருளிய குருநாதன் முருகன். அவன் வள்ளிமலைக் காட்டில் வாழும் மயிலினம் போன்ற குறத்தியை (வள்ளியை) மயக்கி அணைத்து உள்ளத்திலே மகிழ்ச்சியோடு திருத்தணிகையில் வீற்றிருக்கின்றான். இச் செய்தி கந்தபுராணத்திலும் இடம்பெற்றுள்ளது.

**"சுந்தரக்கிரி தொல் புவிதனிற் பல எனினும்**
**இந்த வெற்பினில் ஆற்றவும் மகிழ்ச்சி உண்டெமக்கே"**

(கந்தபுராணம் : வள்ளியம்மை திருமணம்:220)

இங்கு உலகில் உள்ள பல்வேறு மலைகளில் திருத்தணிகை மலையில்தான் தமக்கு அதிக மகிழ்ச்சி என்று முருகவேள் வள்ளிக்குக் கூறுவதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

வள்ளியைப் பற்றி அருணகிரிநாதர் பாடலில் பல குறிப்புகளைக் கூறியுள்ளார். அவற்றுட் சிலவற்றை இங்கு எடுத்துக் காட்டாகத் தருவது பயனுடைத்து.

**"குகனே குறத்தி மணவாளா"** (திருமுறை:4:200)

**"வடிவார் குறத்தி தன்பொனடிமீது நித்த முந்தன்**
**முடியான துற்று கந்து பணிவோனே"**

(திருமுறை:4:203)

**"தீராகு காகு றத்தி மணவாளா"** (திருமுறை:4:220)

**"குறமகள் தனைமண மருள்வோனே"** (திருமுறை:4:222)

**"குறத்தி மென்புன மருவிய கிளி"** (திருமுறை:4:232)

**"பாகு கனிமொழி மாது குறமகள்**
**பாதம் வருடிய மணவாளா"**
**"மருள்கொடு சென்று பரிவுட னன்று**
**மலையில் விளைந்த தினைகாவல்**
**மயிலை மணந்த அயிலவ"** **(திருமுறை:4:342)**
**"தேசிக் கானக முற்றதி னைப்புன**
**மேவிக் காவல் வட்கல் சுழற்றுபவள்**
**சீதப்பாதகு றப்பெண்ம கிழ்ச்சிகொள் மணவாளா"**
**(திருமுறை:6:443)**
**"தினைப்பு னத்தினைப் பண்டு காத்தம டந்தை கேள்வா"**
**(திருமுறை:5:281)**

முருகன் வள்ளியைத் தினைப்புனத் திலே கண்டு மையலுற்று அவளை மணந் தான். அவள் பாதங்களை வருடும் முரு கனின் அன்புநிலையை அருணகிரி தனித் துவப்படுத்திக் காட்டுகிறார். வள்ளியின் சாயல் மயில்போன்றது. குரல் கிளி போன்றது. மொழி கனிப்பாகை ஒத்தது. கவண் கல்லைச் சுழற்றும் அவள் தோற் றம் முருகனைக் கவர்ந்தது. வள்ளியின் வடிவம், தோன்றிய இடம் என்பன பிறி தொரு சமூகத்துப் பெண்மையைக் காட்சிப்படுத்தியுள்ளன.

சில பாடல்களில் விண்ணவர் குலப் பெண்மையான தேவயானையையும் மலைக்குலப் பெண்மையான வள்ளியை யும் முருகனுடன் இணைந்த - இணைந் திருக்கும் நிலையில் அருணகிரிநாதர் காட்டுவது குறிப்பிடத்தக்கது.

**"குறமகளா ணைமின் மருவிய பூரண**
**குரு கிரி மேவிய பெருமாளே"** **(திருமுறை:4:223)**
**"தருமங்கை வனக்குற மங்கையர் மெய்த்**
**தனமொன் றுமணித் திருமார்பா"** **(திருமுறை:5:284)**

எனினும் குறமகள் வள்ளியைப் பற்றிய குறிப்புப் பிறிதொரு உணர்வையும் சுட்டு கிறது. கற்பக விருட்ச நீழலில் வாழ்ந்த வள் தேவசேனை. வள்ளிமலைக் காட்டில் ஒளித்தவள் குறமங்கை வள்ளி. இருவர் தேகத்துக் கொங்கைகள் பொருந்துகின்ற பேரழகுள்ள மார்பையுடைய முருகனுக்கு வள்ளிமீது மையல் என்பதைத் தெளி வாகக் காட்டுவதற்கு அருணகிரிநாதர் முயன்றுள்ளார்.

**"பவள நிகரு மிதழ்ப்பைங் குறமானின்**
**பரிய வரையை நிகர்க்குந் தனமேவும்**
**திவளு மணிகள் கிடக்குந் திருமார்பா**
**திகழு மயிலின் மலைக்கண் பெருமாளே"**
**(திருமுறை:5:410)**

பவளத்துக்கு ஒப்பான இதழ்களையு டைய பச்சைக்குறமானாகிய வள்ளியினு டைய பருத்த மலைக்கு ஒப்பான கொங்கை மேலுள்ள ஒளி வீசும் மணி மாலைகள் பொருந்தும் அழகிய மார்பனே என முருகனைப் பற்றிக் கூறும் போது வள்ளியின் உடலழகை வர்ணிக்கும் பாங்கு கவனித்தற்குரியது. மயில்மலை என்கின்ற குன்றக்குடியிலே வீற்றிருக்கும் பெருமானின் மகிழ்வான தோற்றத்திற்கு வள்ளியுடன் இணைந்திருப்பதே காரண மென்கிறார்.

முருகனின் மனைவியர் இருவரிலும் தெய்வயானையில் அவனுக்கு இரக்கம் உண்டென அருணகிரிநாதர் குறிப்பிடு கிறார்.

**"வாசவன் தருதிருவை யொரு தெய்வா னைக்கிரங்கு மணவாளா"** **(திருமுறை:4:219)**

தெய்வயானை இந்திரனால் போற்றி வளர்க்கப்பட்டவள்; லட்சுமி போன்றவள்; ஒப்பற்ற தெய்வீகத் தோற்றமுடையவள். அவள் மனைவியாக இருக்கும் போது முருகன் வள்ளியையும் விரும்பி மணந்து கொண்டான். இதனால் தெய்வயானையாம் பெண்மைமீது இரக்கமுடையவனாக

இருக்கிறான். தெய்வயானையும் அழகில் மிகச்சிறந்தவளே என்பதையும் அருணகிரி நாதர் சுட்டிக் காட்டியுள்ளார்.

**"முத்துவண்ணவல்லி சித்ரவண்ணவல்லி**
**முத்தி விண்ண வல்லி"** (திருமுறை:5:388)

முத்து நிறவல்லி, அழகிய சித்ர நிற வல்லி, முத்திதரவல்லி, விண்ணுலக வல்லி எனக் குறிப்பிடும் அருணகிரிநாதர் வள்ளிக்கும் தெய்வயானைக்குமுள்ள கூரிய வேறுபட்ட குணஇயல்பையும் காட்டியுள்ளார். தெய்வயானை நிறைவான முத்தியைத் தரவல்லவள் என்ற கருத்தில் இதனை விளக்கியுள்ளார். முத்தி தருகின்ற பெண்மையாகத் தெய்வீக நிலையில் தேவயானை போற்றப்பட்டுள்ளாள்.

சிறப்புக் குறிப்பு நிலையில் கலைமகள் பற்றிய செய்தியொன்று திருப்புகழில் உள்ளது.

**"முழுது மருமறை முகத்துப்பாட்டி**
**கொழுநர் குடுமியை யறுத்துப் போட்ட**
**முதல்வ குகைபடு திருப் பொற்கோட்டு முனிநாடா".**
**(திருமுறை:6:446)**

அரியவேதங்களிலே வல்லவளாம் பெரியவள். பெரியோர்கள் ஆழ்ந்து ஓதும் அரிய மறையின் வடிவினளாம் கிழவி. வேதக்கிழவி எனக் கலைமகளைக் குறிப் பிடுகிறார். 'நான்முகன் நாவின்மேவி நான் மறை வடிவாய்... வீற்றிருக்கும் அம்மை' எனச் சிவரகசியம் கலைமகளைப் பற்றிக் கூறுகிறது. இங்கு 'பாட்டி' என்ற சொல் லின் மூலம் பெண்மையின் அறிவு முதிர்ந்த மனப்பக்குவநிலையைத் தெளிவாகக் காட்டியுள்ளார். கல்வியழகு பெண்மையை என்றும் உயர்வாய் மதிக்க வைக்கும் என்பதை அருணகிரிநாதர் இங்கு எடுத்து ரைத்துள்ளார்.

### 2.4 பொதுமகளிர்

பெண்மை நிலையில் பொதுமாதர் பற்றித் திருப்புகழ் மிக விரிவாகப் பேசு கிறது. அவர்களுக்கென ஒரு வரைவிலக் கணத்தையே செய்துள்ளது.

**"குலைத்துமயிர்க் கலைத்துவளைக்**
**கழுத்துமணித் தனப்புரளக்**
**குவித்த விழிக் கயற்சுழலப் பிறைபோலக்**
**குனித்த நுதற் புரட்டி நகைத்**
**துருக்கி மயற் கொளுத்தியிணைக்**
**குழைச் செவியிற் றுழைப்ப பொறித் தனபாரப்**
**பொலித்து மதத் தரித்த கரிக்**
**குவட்டுமுலைப் பளப்பளனப்**
**புனைத்துகிற் பிடித்த இடைப் பொதுமாதர்"**
**(திருமுறை:5:286)**

இப்பாடல் குறிப்பு பொதுமகளிர் கோலத் தைக் காட்டுகிறது. அவிழ்ந்து மயிர் கலை பட சங்கு போன்ற கழுத்தில் உள்ள மணிமாலை கொங்கைமேற் புரள குவிந்த கண்கள் கயல்மீன் போலச் சுழலப் பிறை நிலவு போல வளைவுள்ள நெற்றியை நெறித்து உருட்டி சிரித்து (கண்டவர்தம் மனத்தை) உருக்கி மோகத்தை ஊட்டி (பற்றவைத்து) இணையான குழைகள் செவிகளில் விளங்க தேமல் கொண்ட கொங்கைப்பாரம் பொலிவுற்று மதம் கொண்ட யானைபோன்றும் மலைபோன் றும் அக்கொங்கைகள் பளபளவென்று பிரகாசிக்க உடுத்த ஆடையைக் கொண்ட இடையை உடைய பொதுமகளிர் என அருணகிரிநாதர் வர்ணித்துள்ளார்.

இதனைவிடப் பொதுமகளிரைப் பல் வேறு பண்பு நிலைப்பட்டவராய்ப் பாடல் களிலே பதிவு செய்துள்ளார். உருவத் தோற்றம், இளமைநிலை, உடை, சிரிப்பு, மொழி, நடை என்பன பற்றிய குறிப்புகள்

பலபாடல்களிலே உள்ளன. எடுத்துக்காட்டாகச் சிலவற்றைக் கீழே காணலாம்.

**"மால்விளைத்து மனத்தை யழித்திடு மடமாதர்"**

**(திருமுறை:5:278)**

**"கைப்பொருள் கவர்தரு மைய்யயில் விழியினர்**
**கட்செவி நிகரல்குல் மடமாதர்"** **(திருமுறை:5:279)**

**"பதறி யெச்சிலை யிட்டும ருத்திடு**
**விரவு குத்திர வித்தைவி ளைப்பவர்**
**பலவி தத்திலு மற்பரை னச்சொலு மடமாதர்"**

**(திருமுறை:5:296)**

**"எதிரெதிர்கண் டோடி யாட்கள் களவதறிந் தாசை பூட்டி**
**இடறி விழும் பாழி காட்டு மடமாதர்"(திருமுறை:5:356)**

**"கரையற வுருகுதல் தருகயல் விழியினர்**
**கண்டான செஞ்சொல் மடமாதர்"** **(திருமுறை:5:370)**

**"கலவியி லோடிநீடு வெகுவித தாக போக**
**கரணப்ர தாபலீலை மடமாதர்"** **(திருமுறை:6:434)**

**"பூரண குடங்க டிந்து சீதகள பம்புனைந்து**
**பூசலை விரும்பு கொங்கை மடவார்"** **(திருமுறை:6:438)**

**"சேகரத்தின் வாலை சிலோர் சிலோர் களு**
**நூறுலக்ஷ கோடி மயால் மயால் கொடு**
**தேடியொக்க வாடி யையோ யையோ வெனமடமாதர்"**

**(திருமுறை:6:441)**

இவ்வெடுத்துக் காட்டுகளில் பொது மகளிரின் இளமைப் பருவச் செயற்பாடுகள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. சமூகத்தில் பொதுமகளிரின் வாழ்வியலைப் பதிவு செய்யும் திருப்புகழ் பெண்மை நிலையில் அவர்களுடைய குண இயல்புகளை வேறுபடுத்திக் காட்டுவது கவனத்திற்குரியது.

பொதுமகளிரின் குணவியல்புகளுக்கேற்ப அவர்களை வேறு பெயர்களால் குறிப்பிடும் மரபையும் திருப்புகழிலே காணலாம். விலைமாதர், தனமாதர், குழலார், கொடியர், நகைமாதர், உடல்மாதர், முலைமாதர், விழிமாதர், கொளுமாதர் என அவர்களைப் பாடல்கள் குறிப்பிடுகின்றன. அதனைச் சான்று காட்டி விளக்குவதன் மூலம் திருப்புகழ் காட்டும் பெண்மையைக் காணலாம்.

### 2.4.1 விலைமாதர்

**"விடமே கொடுத்து வெகு பொருளேப றித்தருளும்**
**விலைமாதர் பொய்க்கலவி யினிதாமோ"**

**(திருமுறை:4:224)**

விடத்தையே பருகக்கொடுத்து மிக்க பொருளையே பறித்துதவுகின்ற விலைமாதர்களின் பொய்யான கலவி இன்பம் இனிதாகுமோ?

### 2.4.2 தனமாதர்

**"புடைத்துப் பணைத்துப் பெருக்கக் கதித்துப்**
**புறப்பட்ட கச்சுத்தனமாதர்"** **(திருமுறை:5:345)**

பருத்துச் செழிப்புற்று மிகவும் எழுச்சியுற்று வெளித்தோன்றுவதும் ரவிக்கை அணிந்ததுமான கொங்கையையுடைய மாதர்கள்.

### 2.4.3 குழலார்

**"கொத்தே மிகுந்து வண்டாடி நின்று**
**கொண்டாடுகின்ற குழலார்"** **(திருமுறை:5:367)**

பூங்கொத்துகள் நிரம்பி வண்டுகள் விளையாடுகின்ற - மகிழ்கின்ற கூந்தலைக் கொண்டவர்.

### 2.4.4 கொடியார்

**"பொங்கி முக்கி சங்கை பற்றிச்**
**சிங்கியொத்த சங்கடத்துப்**
**புண்படைத்துக் கஞ்சமைக்கட் கொடியார"**

**(திருமுறை:5:375)**

காய்ந்து கொதித்தும் முயற்சிகள் செய்தும் சந்தேகம் கொண்டும் (அல்லது

எண்ணங்கள் கொண்டும்) விடம் போன்ற சங்கடங்களால் (மனம்) புண்ணாகித் தாமரையன்ன மைபூசின கண்ணைக் கொண்ட கொடியனைய மாதர்கள்.

**2.4.5 நகைமாதர்**

**"கற்ற விஞ்ஞை சொல்லி யுற்ற வெண்மை யுள்ளு கக்க எண்ணி முல்லை நகைமாதா"** (திருமுறை:5:388)

**2.4.6 உடல்மாதர்**

**"மாந்தளிர் போல வேய்ந்த வுடல் மாதர்"**

(திருமுறை:5:402)

மாந்தளிர் போன்ற (நிறமுள்ள தோலால்) மூடப்பட்ட உடலை உடைய மாதர்கள்.

**2.4.7 முலைமாதர்**

**"கடிவபடு கொலையிடுவ கொடியமுக படமணிவ**
**இன்பச் சுடர்க்கனக கும்பத் தரச் செருவ**
**பிருதில் புளகித சுகமு மிருதுளமும் வளரிளைஞர்**
**புந்திக் கிடர்தருவ பந்தித் தகச்சடர்வ**
**கயல் மகர நிகரமிக வியன்மருவு நதியில்முதிர்**
**சங்கிப்பி முத்தணிவ பொங்கிக் களத்தொளிர்வ**
**முலைமாதர்"**

(திருமுறை:5:406)

அடக்கவல்லன, பொல்லாத கொலைத் தொழிலுக்கு இடம் கொடுப்பன. கொடி தான முகபடாம் (மேலாடை) அணிவன. இன்பந்தரும் ஒளி பொருந்திய தங்கக் குடத்துடன் தக்கமுறையில் நன்றாக போர் புரியவல்லன. விருதில் (வெற்றிச் சின்ன மாக) புளகாங்கித சுகத்தாலும் மென்மை யாலும் வளர்கின்ற இளைஞர்களின் புத்திக்கு இடர் (வருத்தத்தை) தருவ (விளைவிப்பன). கட்டப்பட்ட ரவிக்கையால் நெருக்கு உண்பன கயல்மீன், மகர மீன் இவைகளின் நிகரம் (கூட்டம்) மிக்கு வியன் (சிறப்பு) பொருந்திய நதியில் முதிர் (நிறைந்த) சங்கு, இப்பி (சிப்பி) முத்து இவைகளை அணிவன. மேலெ ழுநது பாரங்கொண்டு விளங்குவன ஆகிய கொங்கைகளை உடைய மாதர்கள்.

**2.4.8 விழிமாதர்**

**"மாதவம ழித்து லீலைகள் மிகுந்து**
**மாவடுவை யொத்த விழிமாதர்"** (திருமுறை:6:445)

நல்ல தவநிலையை அழித்து காம லீலைகள் மிகுத்து மாவடுவுக்கு நிகரான கண்களையுடையவர்.

**2.4.9 கொளுமாதர்**

**"தொடுத்த வாளென விழித்து மார்முலை**
**யசைத்து மேகலை மறைத்து மூடிகள்**
**துடித்துநேர்கலை நெகிழ்த்து மாவியல் கொளுமாதர்"**

(திருமுறை:5:431)

செலுத்தப்பட்ட வாளாயுதமென்று சொல்லும் படியாக விழித்து மார்பிலுள்ள கொங்கையை அசைத்து மேகலை கொண்டு மறைத்து மூடும் மாதர்கள். துடித்து எதிரே புடவையைத் தளர்த்தி நல்லொழுக்கத்தைப் பறிகொள்கின்ற மாதர்கள்.

மனித மகளிர் நிலையில் மேலும் இரு வகையான பெண்கள் பற்றிய குறிப்பும் திருப்புகழில் காணப்படுகிறது. மனையாள், நரைமாதர் என இருவகையினர் இல்லற வாழ்வு நிலையில் எடுத்துக் காட்டப்பட் டுள்ளனர்.

**"புற்புதமெ னாம அற்பநிலை யாத**
**பொய்க்குடி லல்குலாவு மனையாள்"** (திருமுறை:5:385)

நீர்க்குமிழி என்னும் பேர்படைத்து சிறி தளவும் நிலைத்திராத பொய்க்குடிசையான (இவ்வுடலுடன்) குலவுகின்ற மனையாள்.

நரைமாதர் என மருத்துவிச்சியைக் குறிப்பிட்டுள்ளமை இங்கு நோக்கத்தக்கது.

**"கருவாகியெ தாயுதரத்தினி**
**னுருவாகவெ கால்கையு றுப்பொடு**
**கனிவாய்விழி நாசியுடற் செவி நரைமாதர்**
**கையிலே விழவே ..."** **(திருமுறை:6:440)**

தாயின் வயிற்றிலே கருவாய் அமைந்து உருவம் பெற்று கால், கை (என்னும் உறுப்புகளுடன்) இனிய வாய், கண், மூக்கு. உடல், காது என்னும் உறுப்புக ளோடும் மருத்துவிச்சியின் கையில் விழும்படிவந்து பிறக்கும் நிலையில் பெண்மையின் கவனிப்பின் தன்மை கூறப் பட்டுள்ளது.

### 3. திருப்புகழில் பெண்மை காட்சிப்படுத்தப்படும் முறைமை

அருணகிரிநாதர் திருப்புகழில் பெண் மையைக் காட்சிப்படுத்தும் போது சில புனைதிறன்களைக் கையாண்டுள்ளார். அவற்றை ஐந்தாக வகுத்துக் காட்டலாம்

1. அழகு நிலை
2. அலங்கார நிலை
3. பேச்சு நிலை
4. செயற்பாட்டு நிலை
5. பக்திநிலை

பெண்மையின் தெய்வீக நிலையையும் மனித நிலையையும் காட்ட வந்த அருண கிரிநாதர் திருப்புகழைப் பாடும் இவ்விரு நிலைகளையும் ஒழுங்குமுறையிலே அமைத்துள்ளார். அவருடைய வாழ்வியல் அனுபவம் இதற்குப் பெரிதும் துணை நின்றுள்ளது. அழகுநிலையில் தெய்வீகப் பெண்மை, மானிடப் பெண்மை எனப் பாகு படுத்திக் காணும் வகையில் காட்சிப்படுத் தியுள்ளார். இறைவனோடு பார்வதி வீற்றி ருக்கும் காட்சி, முருகன் வள்ளி தெய்வ யானையுடன் வீற்றிருக்கும் காட்சி என்ப வற்றை எடுத்துக் காட்டாகக் கூறலாம். தெய்வயானையுடன் திருப்பரங்குன்றத் திலும் வள்ளியுடன் திருத்தணி மலை யிலும் வீற்றிருக்கும் காட்சி, இருமனைவி யர் புடைசூழ இருக்கும் கோலம் என்பன பெண்மையின் அழகை ஆணுடன் இணைத்துக் காட்டும் நிலையில் அழகு பெற்றுள்ளது.

ஆனால் உலகியல் நிலையில் பெண் மையின் அழகு திருப்புகழில் துயர்தரும் என்ற கருத்தையே அடியொற்றியுள்ளது.

**"அழகெறிந்த சந்திர முகவட ங்கவந்த**
**அமுதபுஞ்ச இன்சொல் மொழியாலே**
**அடிதுவண்ட தண்டை கலிவெ னுஞ்சி லம்பொ**
**டணிச தங்கை கொஞ்சு நடையாலே**
**சுழியெறிந்து நெஞ்சுசுழல நஞ்சணைந்து**
**தொடுமி ரண்டு கண்க ளதனாலே**
**துணை நெருங்கு கொங்கை மருவுகின்ற பெண்கள்**
**துயரை யென்றொழிந்து விடுவேனோ"**

**(திருமுறை:5:405)**

அழகு வீசும் நிலாப் போன்ற முக வட்டத்தினின்றும் அமுதம் போன்ற திரண்ட இனிய உரைப்பேச்சினாலே பாதத்தில் நெளிந்து கிடக்கும் தண்டை கலீல் என்று ஒலிக்கும் சிலம்பு அழகிய சதங்கை போன்றவை கொஞ்சி ஒலிக்கின்ற நடையாலே நெஞ்சு சுழி எறிந்து சுழல, விடத்தைக் கலந்திருக்கின்ற இரண்டு கண் களால் நான் கலக்கமுற்று ஒன்றோ டொன்று இணைந்து நெருங்கும் கொங்கை களை உடைய பெண்மயக்கத்துயரை என்று ஒழிந்து விடுவேனோ (அறிகிலேன்).

பெண்மையின் அழகுத் தோற்றத்தைத் துயர்விளைவிக்கும் தோற்றமாகக் காட்டும் திருப்புகழ் பெண்மையின் செயற்பாட்டை

வெறுமனே காமத்தோடு மட்டுமே இணைத்து நோக்கியுள்ளது. பெண் மொழியைப் பொய்ம்மொழி எனக் கூறுகிறது. 'கிறி மொழிக்கிருதர்' எனப் பெண்மைக்கு அதன் பேச்சுநிலைக்குச் சிறப்பான பெயரி டப்பட்டுள்ளது. பெண்கள் மழலைச் சொல்பேசிப் பொருளைப் பறிப்பவரென வும் அழகிய கொங்கைகளை விலைக்கு விற்பவர் என்றும் அதனால் 'பொது மகளிர்' என்ற பெயரும் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் பல பெண்களிடம் செல்லும் ஆண் மகன் பொதுமகன் என்றோ ஒழுக்கம் கெட்டவன் என்றோ கூறும் மரபு இல்லை. பெண்களில் பல ஆண்களுக்கு இன்பம் தரும் தொழிலை ஏற்றவர் திருப்புகழில் 'வேசைகள்' என்றும் பெயர் பெற்றுள்ளனர்.

**"முலையை மறைத்துத் திறம்ப ராடையை**
**நெகிழவுடுத்துப் படுப்பர் வாயிதழ்**
**முறைமுறை முத்திக் கொடுப்பர் பூமலர ணைமீதே**
**அலைகுலையக் கொண்டணைப்ப ராடவர்**
**மனவலியைத் தட்டழிப்பர் மால்பெரி**
**தவர்பொரு ளைக்கைப் பறிப்பர் வேசைகளுறவாமே"**

**(திருமுறை:5:415)**

இங்கு பெண்மையின் செயற்பாடுகள் யாவும் ஆண்மையின் மனவலிமையைக் கெடுப்பதாகவே உள்ளது. பொருள் தேட்ட நிலையில் வேசையரைப் பற்றிய வர்ண னைகள் வெளிப்படையாகக் கூறப்பட்டுள் ளன. இது பெண்மையை இழிவுபடுத்து வதாகவும் உள்ளது.

### 4. அருணகிரிநாதர் திருப்புகழில் பக்தியின் பங்கு

திருப்புகழில் அருணகிரிநாதர் தனது மனச்சீர்மைக்குரிய வழிவகைகளையும் ஆராய்ந்துள்ளமை புலனாகிறது. பக்தி நிலையில் மனித மனச்சீர்மையைப் பெற வழிகாட்டுகிறார். இதனால் சமூக மக்களின் பிரதிநிதியாகத் தன்னைக் காட்டிக் கொள்கிறார். கருநிறங் கொண்டவளும் மாசு அற்றவளும் குணங்களைக் கடந்த வளும் கடல் முத்துப் போன்றவளும் ஒளி வீசும் கொடி போன்றவளும் அழகிய நீல ரத்தின அணியைக் கொண்டவளும் ஆன பார்வதியின் குமாரன் முருகனிடம் பக்தி யுடன் வழிபாடு செய்வதே வழியெனக் காட்டுகிறார். நல்லதாயின் புதல்வன் கும ரனிடம் அன்பு கொண்டு பக்திநெறி நிற்கத் தூண்டுகிறார். தேவயானையுடனும் வள்ளியுடனும் முருகன் தோற்றம் கண்டு மனித மனத்திலே ஓர் அமைதி உண் டாகும். அருணகிரிநாதர் பாடல்களில் இத்தகைய அமைதி நிலையைத் தேடும் உள்ளத்தின் உணர்வு புலப்படுகிறது. எனவே மக்களின் பிரதிநிதியாக நின்று முருகனிடம் பல வேண்டுதல்களைத் திருப்புகழில் விடுத்துள்ளார்.

**"உன்னைப்பல நாளுந் திருப்புகழாலும்**
**உரைத்திடு வார்தங் குவிமேவி**
**உணர்த்திய போதந் தனைப்பிரி யாதொண்**
**பொலச் சரணானுந் தொழுவேனோ"**

**(திருமுறை:5:256)**

உன்னைப் பல நாளும் திருப்புகழ் கூறிப் புகழ்வோர்கள் இருக்கும் இடத்திற் குச் சென்று அவ்வடியார்கள் விளக்கும் அறிவுரைகளை ஒட்டி நன்னெறியில் ஒழுகி ஒளிவீசும் அழகிய திருவடியை நானும் தொழுவேனோ என்று முருகனிடம் கேட்கிறார்.

அருணகிரியின் வாழ்வில் அவரது செயற்பாடுகள் குறைவுற்ற ஒருநிலை இருந்தமையை தானே எடுத்துக் கூறும் ஒரு நேர்மை இருந்துள்ளது. பெண்கள் தொடர்பான தனது பலவீனமான உணர்வு

களைத் திருப்புகழில் எடுத்துரைத்துள்ளார். பெண்கள் தொடர்பாகத் தனது மனத்தைச் சீர்மைப்படுத்த உள்ளதை உள்ளவாறே கூறி இறைவனிடம் அடைக்கலமாகி நிற்பதே ஏற்ற வழியெனக் கண்டு கொண்டார். இவ்வாறு தனது கீழ்த்தரமான உணர்வுகளை எடுத்துப் பாடும் போது மீண்டும் அந்த உணர்வுகளோடு அமிழ்ந்து விடாமல் புதிய சந்தங்களைப் பயன்படுத்தி இசையில் தன்னை வசப்படுத்திக் கொண்டார். அது புதியதொரு பக்தி நிலையை மக்களுக்கு நல்கியது.

**நிறைவுரை**

அருணகிரியார் திருப்புகழில் விரவிக் கிடக்கும் பெண்மை பற்றிய செய்திகளைத் தொகுத்து நோக்கும் போது ஆறுபடை வீடுகளைப் பாடிய பாடல்களையே இங்கு சான்றாகக் கொண்டமைக்குக் காரணம் உண்டு. முருகனுடைய ஆறுபடை வீடுகளைப் பாடிய முதற்புலவர் நக்கீரர், அருணகிரிநாதரைப் போலப் பெண்மையின் பலவீனத்தை எடுத்துப் பேசவில்லை. நக்கீரர் காலம் ஒருவனுக்கு ஒருத்தி என்ற வாழ்வியல் வரையறை ஒன்று பேணப்பட்டது. ஆனால் அருணகிரியார் வாழ்ந்த காலச் சூழலில் பரத்தமை ஒழுக்கம் பரவலாக்கம் பெற்றிருந்தது. எனவே அவ்வொழுக்க நிலையிலிருந்து ஆண்மையைப் பேணிப் பாதுகாக்க வேண்டிய நிலை தோன்றிய போது அருணகிரிநாதர் பக்திநெறியிலே வழிப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டது. எனினும் பெண்மையைப் பற்றிய இழிவான கருத்துநிலை ஒன்று உருவாகியது என்பதில் ஐயமில்லை.

எனவே அது பற்றிய ஆய்வு ஒன்றை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இக்கட்டுரையில் அதற்கான தூண்டுதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பெண்மையின் பரத்தமைத் தொழிலுக்கு ஆண்மையும் காரணமாக இருந்த உண்மை நிலையொன்று உண்டு. அதையே அருணகிரிநாதர் திருப்புகழில் தன்னிலைக் கூற்றாக முன் வைத்துள்ளார்.

## சேயெனைக் காப்பாய் முருகா

முருகா உனது காலடியில் - நான்
அமைதி காண வந்தேன் - என் ஆருயிர்
முருகா நல்லை முருகா - உனதடியில்
அமைதி காணவந்தேன்.

யாழ்நகர் தன்னிலே வான்புகழ் கொண்ட
காசினி போற்றும் முருகா - உன்
காலடி கண்டே காசினியில் நான்
கவலை போக்க வந்தேன்.

ஏறுமயில் ஏறி எல்லோரையும் காக்க
வீறுடன் வந்திடுவாய் முருகா
நாதமணி ஒலிக்க நல்லை முருகா
சேயெனைக் காப்பாய் முருகா

காசினி போற்றும் வித்தகனே
சரவணபவ எனும் சண்முகனே
ஆடும் சேவற் கொடியழகா
ஆறுமுக வள்ளலே வாருமையா

**திருமதி. சந்திரவதனி தவராசா**
**குடும்பநல உத்தியோகத்தர்,**
**யாழ் மாநகரசபை**

# மூவர் தமிழ்

**சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம்**
இளைப்பாறிய உதவிப் பணிப்பாளர்
இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

**1. தமிழ் பக்திமொழி**

உலகில் தோன்றிய மூத்த மொழி களில் ஒன்றாகிய தமிழ்மொழி கால வெள்ளத்தால் அழியாது இன்றும் பல கோடிக்கணக்கான மக்களால் பேசப்படும் மொழியாக - வாழும் மொழியாகத் திகழ் கிறது. ஆங்கில மொழியை வியாபார மொழியென்றும், இலத்தின் மொழியைச் சட்ட மொழியென்றும், பிரெஞ்சு மொழியை காதல் மொழியென்றும் கூறும் மொழியி யல் ஆராய்ச்சியாளர்கள் தமிழ்மொழி யைப் பக்திமொழி என்று கூறுகிறார்கள். தமிழ்மொழியில் காலத்திற்குக் காலம் பல்வேறு பக்தி இலக்கியங்கள் தோற்றம் பெற்றன. தமிழ்மொழி இன்றும் இளமை யாகத் திகழ்வதற்குப் பல காரணங்கள் உண்டு. இந்துப் பண்பாட்டில் வளத்தை யும் சிறப்பையும் தரும் சகலவற்றையும் பெண்பாற் பெயரால் அழைக்கும் வழமை நிலவி வருகிறது.

தமிழ்மொழியை அன்போடும் ஆராமை யோடும் நாம் அனைவரும் தமிழ்த்தாய் என்றும் தாய்மொழி என்றும் அழைக்கின் றோம். தலை நரைக்காமல், தோல் சுருங் காமல் முதுமை நெருங்காமல் தமிழ்த் தாய் பருவக் குமரி போல இன்றும் இருப் பதற்கான காரணங்களைச் சுப்பிரமணிய யோகியர் தனது பாடலில் குறிப்பிடுகின் றார். முத்தமிழ்க் காப்பியமாகிய சிலப் பதிகாரம், வள்ளுவப் பெருந்தகை அருளிய உலகப் பொது மறையாகிய திருக்குறள், களங்கமில்லாத பக்தியினால் நாயன்மார்களும் ஆழ்வார்களும் அருளிய தோத்திர இலக்கியங்கள், கவிச்சக்கர வர்த்தி கம்பன் அருளிய கம்பஇராமா யணம் என்பனவே தமிழ்த் தாயின் இள மைக்குக் காரணம் எனக் கூறுகின்றார். இளங்கோவின் சிலம்பு முரல் இன்னிசை யில் தவழ்ந்து இணைக்குறள் முப் பாலுண்டு குறுகு நடை பயின்று களங் கமிலாப் பக்தியினால் பன்னிருவர் நால்வர் கற்கண்டு சொற்கோவை கவிமாலை புனைந்து பளிங்கனைய கவிக்கரசன் கம் பன் எனும் தேவன் பண்ணிவைத்த காவி யத்தின் பசும்பொன் முடிதரித்த இளங் குமரி தமிழ்த்தாய்.

**2. திருமுறைகளின் சிறப்பு**

சங்க காலம் முதல் சோழர் காலம் வரை தோன்றிய தமிழ் இலக்கியங்களில் பரமனையே பாடும் பக்தி இலக்கியங் களாகப் பன்னிருதிருமுறைகளும் காணப் படுகின்றன. பன்னிருதிருமுறைகளையும் அருளாசிரியர்கள் இருபத்தேழு பேர் அருளியுள்ளார்கள். சிவபெருமான் திரு முறை ஆசிரியர்களின் ஊடாக சற்குரு மூர்த்தங் கொண்டு அருளிச் செய்தவையே பன்னிருதிருமுறைகள் ஆகும். திருமுறை கள் அருளனுபவ வாக்குகள் மட்டுமல்

லாது அவை வாழ்வியல் நூலாகவும், அறந்தழைக்கும் அறநூலாகவும் மெய்ப் பொருள் நூலாகவும் காணப்படுகின்றன. திருமுறைகள் என்னும் பெயர் இறையருள் பெற்ற அருளாளர்களால் தாம் எய்திய இறையனுபவங்களாக வெளிப்படுத்தப் பெற்றுப் பயில்வோரைத் திருவருள் நாட்ட முடையோராய்ச் செய்து பயன் எய்து விக்கும் நூல்கள் என வாழ்வியற் களஞ் சியம் கூறுகிறது.

உலகம், உயிர், இறைவன் என்ற முப் பொருள்களையும் முறையாகத் தருவன திருமுறைப் பாடல்கள். திரு என்ற சொல் செல்வம், இறை, அழகு, ஒளி, பொலிவு, தெய்வத்தன்மை, நல்வினை போன்ற பல பொருள்களைக் கொண்டுள்ளது. உட லுக்கு, இவ் உலக வாழ்விற்குச் செல்வ மாக அமைபவை சிலவாகும். ஆனால் உயிருக்குச் செல்வத்தையும் அழகையும், ஒளியையும், பொலிவையும், தெய்வத் தன்மையையும், நல்வினையையும் தர உதவியாயிருப்பன திருமுறைகள். உயிருக்கு ஒழுங்கையும் அதனால் வரு கின்ற ஒழுக்கத்தையும், உயிருக்கு இறை வனோடுள்ள உறவையும், உயிர் இறைவ னோடு கலக்கின்ற கூட்டையும் அதனால் உயிருக்கு ஏற்படுகின்ற நன்மைகளையும் நூலிலே கூறுவது திருமுறைகளாகும்.

திருநெறிய தமிழ் என்னும் திருமுறைப் பெருநெறியானது மானுடச் சமுதாயத்தின் வாழ்வியல் நெறிகளை வளப்படுத்தும் நோக்கில் அருளியல் அனுபவம் பெற்று இந்நிலவுலகில் வாழ்ந்து சிறந்த அருளா ளர்களால் வழங்கப்பெற்ற அருளியற் கொடைகளால் விளைந்ததாகும்.

திருமுறை ஆசிரியர்களில் இறைவனும் ஒருவராகத் திகழ்கின்றார். பதினோராம் திருமுறையில் முதலாவது பாடலைத் திருவாலவாயுடையார் (மதுரை சோம சுந்தரப் பெருமான்) அருளினார். சங்கத் தமிழில் முருகனைப் பாடிய நக்கீரர் பெருமானின் பாடல்களும், சைவத் தமிழ்ப் பக்தி இயக்கத்தின் முன்னோடியாகத் திகழ்ந்த காரைக்காலம்மையாரின் பாடல் களும், பதினோராம் திருமுறையிலே இடம்பெறுகின்றன. இறைவன் உட்பட இருபத்தேழு அருளாளர்கள் அருளிய 18,414 பாடல்கள் பன்னிருதிருமுறை களாகத் தொகுக்கப் பெற்றுள்ளன.

இந்து சமயத்தின் மூல நூல்களாகிய வேதங்கள், ஆகமங்கள், உபநிடதங்களின் சாரமாகவே பன்னிருதிருமுறைகளும் காணப்படுகின்றன என்று அறிஞர்கள் கூறுகின்றார்கள். வேதத்தின் சாரமாகத் தேவாரமும், உபநிடதங்களின் சாரமாகத் திருவாசகமும், ஆகமங்களின் சாரமாகத் திருமந்திரமும் காணப்படுகின்றன. வேதங் களில் கூறப்பட்டுள்ள கருத்துக்களையும் தேவாரங்களில் கூறப்பட்டவற்றையும் ஒப்பிட்டுத் தேவாரம், வேதசாரம் என்ற ஆய்வு நூல் ஒன்றை மகான் காசிவாசி செந்திநாதையர் எழுதியுள்ளார். இந்துக் களின் ஞானக் களஞ்சியம் எனப் போற் றப்படும் உபநிடதங்களின் சாரமாகவே மணிவாசகப் பெருமான் அருளிய தெய்வ வாசகமாகிய திருவாசகம் காணப்படுகிறது என்பதைத் திருவாசகத்திற்கு உரை எழுதிய சுவாமி சித்பவானந்தர் பல உதா ரணங்களுடன் விளக்கியுள்ளார். சிவாக மங்கள் இருபத்தெட்டில் ஒன்பது ஆகமங் களின் சாரமாகவே தவயோகி திருமூல நாயனாரின் திருமந்திரம் அமைந்துள்ளது. இறைவன் வெளிப்படும் இடங்களில்

ஒன்றாகிய சங்கம வழிபாட்டின் சிறப் பினைக் கூறும் நூல் சேக்கிழார் பெரு மான் அருளிய பெரியபுராணம் ஆகும்.

**3. சிவனே முழுமுதற் கடவுள்**

பன்னிரு திருமுறைகளும் சிவனையே முழுமுதற் கடவுளாகப் போற்றுகின்றன. சிவனிலிருந்து வேறாகாத சக்திகளாக வணங்கப்படும் விநாயகரையும் முருகனை யும் போற்றும் பாடல்கள் பதினோராம் திருமுறையில் காணப்படுகின்றன. சிவனை மறவாச் சிந்தையாளர்களாக வாழ்ந்த சிவனடியார்களின் வரலாற்றினைக் கூறும் நூலாக சேக்கிழார் பெருமான் அருளிய திருத்தொண்டர் புராணம் திகழ்கிறது. புனிதர் பேரவை என்று போற்றப்படும் சிவனடியார்களை அறிமுகப்படுத்தி வைத்த பெருமை சுந்தரரின் திருத்தொண்டர் தொகைக்கே உரியது. நம்பியாண்டார் நம்பி இதனை மூலமாகக் கொண்டு திருத் தொண்டர் திருவந்தாதியை அருளினார்.

சைவர்கள் வழிபடும் எல்லா வழிபாடு களும் இறுதியில் பார்வதி சமேத பரமேஸ் வரப் பெருமானை வழிபடும் வழிபாடா கவே அமைகிறது என்பதை

**"யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வமாகி யாங்கே மாதொரு பாகனார் தாம் வருவார்"**

எனச் சிவஞானசித்தியாரும் குறிப்பிடுகிறது.

சிறுதெய்வ வழிபாட்டினைச் சைவம் நிராகரிக்கிறது.

**"சென்று நாம் சிறுதெய்வம் சேர்வோம் அல்லோம் சிவபெருமான் திருவடியே சேரப் பெற்றோம்"**

என அப்பர் பெருமானும், "சிவனோடொக் கும் தெய்வம் தேடினும் வேறில்லை" எனத் தவயோகி திருமூலநாயனாரும் சிவபரத்து வத்தை, தங்கள் பாடல்களில் போற்றியுள் ளார்கள்.

**4. மூவர் தமிழ்**

பன்னிரு திருமுறைகளில் முதல் ஏழு திருமுறைகளும் தேவாரம் என்ற பெய ரால் அழைக்கப்படுகின்றன. தெய்வத்திற்கு சூட்டப்படும் பாமாலை என்பதே தேவாரம் என்பதன் பொருள். ஆரம்பகாலத்தில் சம்பந்தரின் பாடல்கள் திருக்கடைக்காப்பு என்றும், அப்பரின் பாடல்கள் தேவாரம் என்றும், சுந்தரரின் பாடல்கள் திருப்பாட்டு என்றும் அழைக்கப்பட்டன. பிற்காலத்தில் மூவர் தமிழும் தேவாரம் என்ற பொதுப் பெயரால் அழைக்கப்படலாயிற்று.

ஞானக் குழந்தையாகிய சம்பந்தரின் பாடல்களைக் கொஞ்சு தமிழ் என்றும், தாண்டக வேந்தராகிய அப்பரின் பாடல் களைச் கெஞ்சு தமிழ் என்றும், தம்பிரான் தோழராகிய சுந்தரரின் பாடல்களை மிஞ்சு தமிழ் என்றும் அறிஞர் பெருமக்கள் போற் றினார்கள். குழந்தையானது பெற்றோரு டன் கொஞ்சிக் குலாவும் நடையில் அமைந்திருப்பது சம்பந்தரின் பாடல்கள் எனவும், அடிமை ஒருவன் எஜமானுடன் பேசுகின்ற பணிவுடமையுடன் கூடியிருப் பது அப்பர் பாடல்கள் எனவும், தோழமை உணர்வுடனும், உரிமையுடனும் இறைவ னோடு தொடர்பு கொள்ளும் பாடல்களாக அமைந்திருப்பவை சுந்தரரின் பாடல்கள் என்றும் கூறப்படுகிறது.

மூவர் தமிழின் முழுநிலையாயும் அடி நிலையாயும் அமைந்த பொருட் கூறுக ளாகக் குருவருள், வெண்ணீறு, திருவைந் தெழுத்து, கோயில், அரனுரு, திருவடி, அர்ச்சனை, தொண்டு என்பன அமைந் துள்ளன என்று அகத்தியர் தேவாரத் திரட்டுக் குறிப்பிடுகிறது.

**குருவருளும் வெண்ணீறு எழுத்தஞ்சும் கோயில்**
**அரனுருவம் என் தலைமேலாக்கும் - திருவடியும்**
**இட்டான் அர்ச்சனையும் தொண்டும் சிவாலயர்க்கென்று**
**இட்டார் அகத்தியனார் எட்டு.**

**5. சம்பந்தர் தமிழ்**

ஞானப்பாலுடன் சிவஞான அமிர்தத்தைக் கலந்து உமையம்மையால் ஊட்டப்பெற்ற கருவிலே திருஉள்ள ஞானக் குழந்தையாகிய சம்பந்தர் அருளிய பாடல்கள் திருக்கடைக்காப்பு என்று அழைக்கப்படுகிறது. ஞானப்பால் உண்ட குழந்தை தனது தந்தையார்க்கு இறைவியோடு காட்சியளித்த இறைவனைச் சுட்டிக் காட்டித் 'தோடுடைய செவியன்' என்று ஆரம்பித்து தனது பாடல்களைப் பாடியருளினார். இறைவன் சக்தியோடு கூடித் திருநடனம் புரிவதன் மூலம் ஐந்தொழிலும் நடைபெறுகின்றன என்பதை இவர் தனது பாடலின் ஊடாக உணர்த்தியருளினார்.

அச்சம் கொண்டு அவலப்பட்டுத் துன்பங்களைத் துயரங்களைத் தொடர் கதையாகச் சந்தித்து வாழும் நிலக்குத் தள்ளப்பட்டு வாழும் தமிழர் சமுதாயத்துக்கு வழிகாட்டி, நெறிகாட்டி, அபயம் அளிக்கும் பாடங்களாக ஞானசம்பந்தர் அருளிய கோளறு பதிகப் பாடல்கள் காணப்படுகின்றன. "நாளும் கோளும் நம்பனடியார்க்கு நலிவு செய்யாது" என்ற உறுதிப்பாட்டினை அவருடைய பாடல்களிலே காணலாம். பக்தியோடு பரமனைப் பணிந்து கோளறு பதிகத்தைப் பாராயணம் செய்பவர்கள் இராஜ கம்பீர வாழ்க்கையைப் பெறுவார்கள் என்பதை

**தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து**
**நலியாத வண்ணம் உரைசெய்**
**ஆனசொல் மாலையோதும் அடியார்கள் வானில்**
**அரசாள்வர் ஆணை நமதே**

எனக் கோளறு பதிகத்தின் இறுதிப் பாடலில் குறிப்பிடுகின்றார்.

சைவசமயம் உலகியல் வாழ்க்கையைச சாபக்கேடென்றோ, தண்டனையென்றோ குறிப்பிடவில்லை; வரப்பிரசாதம் என்றே கூறுகிறது. இல்லறத்தை நல்லறமாகவே கூறுகிறது. மண்ணில் நல்ல வண்ணம் அறநெறி நின்று வாழவேண்டும். அன்பைக் கடைப்பிடித்தொழுகி வையத்துள் வாழ்வாங்கு வாழுதல் வேண்டும். இவ்வாறு வாழ்பவர்களுக்கு நற்கதியாகிய வீட்டின்பம் தானே கிடைக்கும்.

**மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்**
**எண்ணில் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவிலை**
**கண்ணில் நல்ல ஃதுறும் கழுமல வளநகர்ப்**
**பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே.**

சம்பந்தரும் அப்பரும் ஒரே காலத்தில் வாழ்ந்தார்கள். பல்லவ நாட்டில் சைவ சமய மறுமலர்ச்சிக்கு அப்பரடிகள் வித்திட்ட பின் பாண்டிநாட்டில் சைவசமய மறுமலர்ச்சி சம்பந்தரால் செய்யப்பட்டது. சம்பந்தரை அருட்கடல் என்றும் அப்பர் பெருமானை அன்புக்கடல் என்றும் இவர்கள் இருவரையும் சைவநெறி பெற்ற புண்ணியக் கண் எனவும் சேக்கிழார் பெரிய புராணத்தில் குறிப்பிடுகின்றார்.

**அருட்பெருகு தனிக்கடலும் உலகுக்கெல்லாம்**
**அன்புசெறி கடலுமாம் எனவும் ஓங்கும்**
**பொருட்சமய முதற்சைவநெறி தான் பெற்ற**
**புண்ணியக் கண்ணிரண் டெனவும் புவனம் உய்ய.**

சம்பந்தருடைய காலத்தில் தமிழகத்தில் சாக்கிய, சமணக் கொள்கைகள் வளர்ந்திருந்த காரணத்தினால் ஊழ் நம்பிக்கை மிகுதியாயிற்று. வினைகளைப்

போக்க முடியாது அனுபவித்தே ஆதல் வேண்டும் என்ற எண்ணங்கள் வேரூன்றத் தலைப்பட்டன. இறைவனை வழிபட்டால் வினைகளை நீக்க முடியும் அல்லது குறைக்க முடியும் என்ற கருத்துக்களைச் சைவசமயம் எடுத்துக் கூறியது. இதனை முதன் முதலாக ஞானசம்பந்தர் வலியுறுத்தினார். இறைவன் மீதுள்ள நம்பிக்கையே இதற்கு அடிப்படையாக உள்ளது எனக் கூறினார். சிவமூல மந்திரமாகிய நமச்சிவாய மந்திரத்தை நாவினால் உச்சரித்தால் வினைகள் அனைத்தும் பொசுங்கும் என்கிறார்.

**நம்புவா ரவர் நாவின வற்றினால்**
**வம்பு நான்மலர் வார்மது வொப்பது**
**செம்பொனார் திலகம் முலகுக்கெலாம்**
**நம்பனாமம் நமச்சிவாயவே.**

**6. அப்பர் தமிழ்**

திருத்தொண்டு நெறிக்கே இலக்கணமாக வாழ்ந்த அப்பர் பெருமானின் குறிக்கோள் வாசகம் "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்பதாகும். வாக்காலும் வாழ்வாலும் ஒருமித்து வாழ்ந்த அப்பரடிகள், தான் சிவாலயங்களில் செய்த திருத்தொண்டுகளை

**நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்குப்**
**புலர்வதன் முன் அலகிட்டு மெழுக்குமிட்டு**
**பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடி**

எனத் தனது பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

அறத்தின் வழி நின்று தர்மம் பிசகாது வாழ்க்கையை நடாத்தினால் சிவகதி தானே நம்மை நோக்கி வரும். தனி மனிதன் தன்னை அறிவின் அடிப்படையில் நோக்குதலும் காணுதலும் வேண்டும். இறையுண்மையை அறிவதில் விருப்பும் அதனை அடையும் முயற்சியும் செய்தல் வேண்டும். இன்பத்தில் இசைவு கொள்ளாமல் துன்பத்தில் அயர்வு கொள்ளாமல் இரண்டையும் விட்டுக் கடந்து நிற்பதாகிய மனச் செம்மையைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

**மெய்ம்மையாம் உழவைச் செய்து**
**விருப்பு எனும் வித்தை வித்தி**
**பொய்மையாம் களையை வாங்கிப்**
**பொறை எனும் நீரைப் பாய்ச்சித்**
**தம்மையும் நோக்கிக் கண்டு**
**தகவு எனும் வேலியிட்டுச்**
**செம்மையுள் நிற்பராகில்**
**சிவகதி விளையும் அன்றே.**

அப்பர் பெருமான் தானே நடமாடும் கோயிலாகத் திரிந்தார் எனச் சிவப்பிரகாச சுவாமிகள் குறிப்பிடுகின்றார். இவருடைய கனிந்த உள்ளத்தில் இருந்து வந்த பாடல்கள் கல்மனத்தையும் கனிந்துருகச் செய்பவை. இவரைப் "பதிகச் செஞ்சொல் மேய செவ்வாய்" என்று சேக்கிழார் பெருமானும், "ஞானப்பாடல் தொடையறாச் செவ்வாய்" என்று மாதவச் சிவஞான சுவாமிகளும் போற்றுகிறார்கள். மக்கள் வாழும் இடமெல்லாம் இறைவன் அருள் பாலிக்கும் கோயில்கள் அவசியம் என்பதைத் "திருக்கோயிலில்லாத திருவிலூர் அடவிகாடே" எனக் குறிப்பிடுகின்றார்.

இறைவனுடைய நாமத்தை உச்சரிக்காதவர்கள் அவனுடைய பெருமையைப் பேசாதவர்கள், திருக்கோயிலை நாள் தோறும் வலம் வந்து வணங்காதவர்கள், திருநீற்றை நெற்றியிலே அணியாதவர்கள், உண்பதற்கு முன் பூவும் நீரும் கொண்டு இறைவனைத் தொழாதவர்கள் ஆகிய அனைவரும் பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றவர்கள் என்பதைத் திருநாவுக்கரசரின் பின்வரும் பாடல் தெளிவாக விளக்குகிறது.

**திருநாமம் அஞ்செழுத்தும் செப்பாராகில்**
**தீவண்ணர் திறமொருகால் பேசாராகில்**
**ஒருகாலும் திருக்கோயில் சூழாராகில்**
**உண்பதன் முன் மலர் பறித்திட்டு உண்ணாராகில்**
**அரு நோய்கள் கெட வெண்ணீறணியாராகில்**
**அளியற்றார் பிறந்தவாறேதோ வென்னில்**
**பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்துஞ் செத்துப்**
**பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றாரே.**

பக்குவமுள்ள அடியார்கள் தம்மை மிகவும் கீழ்மைப்படுத்தியே பேசுவார்கள். பக்குவமில்லாத நாம் நம்மைப் பெருமைப் படுத்திப் பேசுவோம். திரிகரண சுத்தியுடன் இறைவனைத் தஞ்சமென வழிபட்ட அப்பர் பெருமான் உலகமாந்தர்கள் உய்வதற் காக அவர்களின் குறைகளையெல்லாம் தன்னில் ஏற்றிப் பாடுகின்றார். நான் வஞ் சனைகட்கு இடமானவன்; கள்ளத் தொண்டுகள் புரிந்து காலத்தைப் போக்கி விட்டேன்; பின்னர் தெள்ளியன் ஆனேன்; நின்னைத் தேடினேன். நாடிக் கண்டும் விட்டேன். இப்படி நான் எண்ணுகின்ற போது வேறோர் நினைப்பும் வந்தது. நினைப்பவர் நினைப்பதையெல்லாம் உள்ளிருந்து அறிபவனாகிய உன்னிட மல்லவா சொல்லுகின்றேன். இதனை உணர்ந்ததும் எனக்கு நாணம் ஏற்பட்டது. என் அறியாமையை நினைத்தவுடன் எனக்கே சிரிப்பு வந்து விட்டது. எனது விலா எலும்புகள் இற்றுவிழச் சிரிக்க லானேன் என்பதை

**"உள்குவார் உள்கிற்றெல்லாம் உடனிருந்த நிதி என்று**
**வெள்கினேன் வெள்கி நானும் விலாவிறச் சிரித்திட்டேனே"**

எனப் பாடியருளுகின்றார்.

தயாமூல தன்மம் என்ற சொற்றொட ரைத் தமிழ் உலகிற்கு அறிமுகப்படுத்திய பெருமை அப்பர் பெருமானையே சாரும். தான் அருளிய திருமழபாடித் திருத்தாண்ட கத்தின் ஆறாவது பாடலிலும் திருநள் ளாறு தலத் திருத்தாண்டகத்தின் ஆறா வது பாடலிலும் இதனைக் குறிப்பிடுகின்றார்.

தயாமூலதன்மம் என்னும் சொற்றொடர் தயா, மூலம், தன்மம் என்னும் மூன்று சொற்களால் இணைந்த ஒரு சொற்றொடர் ஆகும். இம்மூன்று சொற்களும் சமஸ் கிருத மொழி சார்ந்த சொற்கள். தயா என்னும் சொல் அருள், கருணை, அன்பு, பக்தி, பரிவு, இரக்கம் என்னும் பொருள் களை உணர்த்தும். மூலம் என்பது அடி, வேர், கிழங்கு, ஆதி, வழி, வாயில், பிர தானம், காரணம் எனப் பல பொருளினை உணர்த்தும் சொல் ஆகும். தன்மம் என்னும் சொல் தர்மம் எனப் பொருள் படும். அறத்தைக் குறிப்பதாகும். தயாமூல தன்மம் என்னும் சொற்றொடருக்கு அருள் வழி அமைந்த அருளை அடிப்படையாகக் கொண்ட அறநெறி எனப் பொருள் கூறலாம்.

**"தனந்திருத்து மவர் திறத்தை யொழியப்பாற்றித்**
**தயாமூல தன்மவழி எனக்கு நல்கி**

எனத் திருமழபாடித் திருத்தாண்டகத்திலும்

**சலங்கெடுத்துத் தயாமூல தன்மம் என்னும்**
**தத்துவத்தின் வழிநின்று தாழ்ந்தோர்க்கெல்லாம்"**

எனத் திருநள்ளாறு தலத் திருத்தாண்டகத் திலும் குறிப்பிடுகின்றார்.

உடலுறுப்புக்கள் அனைத்தும் இறை வனை நோக்கித் திரும்பினால் பிரம விஷ்ணுக்களாலும் காணமுடியாத பரசிவ சோதிப் பிழம்பாகிய சிவனை அகத்திலே காணலாம் என்பதை

**தேடிக் கண்டு கொண்டேன் திருமாலொடு நான்முகனும்**
**தேடித் தேடொணாத் தேவனை யென்னுளே**
**தேடிக் கண்டு கொண்டேன்**

எனத் திருவங்கமாலைப் பாடலின் இறுதி யில் குறிப்பிடுகின்றார். உடலுறுப்புக்களை விளித்து அவற்றை வழிபாட்டிற்கு நெறிப்

படுத்திய பெருமை அப்பர் பெருமானையே சாரும்.

அப்பர் பாடல்களில் இன்ப அன்பின் முழுநிறை அனுபவம் நிறைந்து ஒளி வீசுகிறது. திருநாவுக்கரசரின் திருவருட் கவிதைகளிலே தோய்வோர், உலகத் தளையினின்றும் ஓய்வோர், ஆன்மீக வாழ்வின் அடிப்படையாகிய குறிக் கோளை ஆய்வோர் அத்தகைய உயிர்ப்பு அருள்விழிப்பு அப்பரின் அருள் வாக்கில் மலர்கின்றது. தொண்டு புரிந்த கிழவர் ஆகிய அப்பர் பெருமானைத் "தொண்டுக் கிழவர்" என வையகம் போற்றுகிறது. வாக்கும் வாழ்வும் ஒருமித்து வாழ்ந்த அப்பரடிகளின் வாழ்க்கை அன்பு, பக்தி, தொண்டு, தியாகம் ஆகிய அனைத்தை யும் விளக்கிக் காட்டும் உதாரண புரு ஷர்க்குரிய வாழ்வாகவே காணப்படுகிறது.

**7. சுந்தரர் தமிழ்**

பக்தியின் முதல்நிலை படமாடும் கோயிலாகிய இறைவனை வழிபடுதல் என்றால், பக்தியின் நிறைநிலை நடமாடும் கோயிலாகிய சிவனடியாரை வழிபடுதல் ஆகும். தென்நாடு செய்த தவத்தின் பயனாகவும் திருத்தொண்டர் தொகை என்ற சிறந்த நூலைத் தருவதற்காகவும் சுந்தரர் திருஅவதாரம் செய்தார் என்பதை "**மாதவம் செய்த தென்திசை வாழ்ந்திடத் தீதிலாத் திருத்தொண்டத் தொகை தர**" எனப் பெரியபுராணம் குறிப்பிடுகிறது.

சிவனடியார்களின் பெருமையைத் திருத்தொண்டத் தொகையில் "தில்லை வாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடி யேன்" எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் அறிமுகம் செய்து வைக்கிறார். ஞானசம் பந்தரை "எம்பிரான் சம்பந்தன் அடியார்க் கும் அடியேன்" என்று கூறியவர் திருமூலரை "நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடி யேன்" எனப் பாடுகிறார். திருநாவுக்கரசரை "**திருநின்ற செம்மையே செம்மையாய் நின்ற திருநாவுக்கரையன்றன் அடியார்க்கும் அடியேன**" எனத் துதிக்கின்றார். சிவனடியார்களின் திருத்தொண்டுகளையும் பக்தித் திறங் களையும் உலகறியச் செய்த பெருமை சுந்தரருக்கே உரியதாகும். நம்பியாண்டார் நம்பி திருத்தொண்டர்தொகை பாடவும், சேக்கிழார் பெருமான் திருத்தொண்டர் புராணம் பாடவும், மூலமுதற் பொருளாய் அமைந்தது. சுந்தரரின் திருத்தொண்டர் தொகையே ஆகும்.

இறைவனையே இசைத்தமிழ் வடிவின னாகக் கொண்டு "பண்ணார் இன்தமிழாய் பரமாய பரஞ்சுடரே" என்றும், "பண்ணி டைத் தமிழ் ஒப்பாய் என்றும் சுந்தரர் போற்றுகின்றார். தம்முடைய பாடல் களைக் குறித்துப் பேசுமிடத்து அருந் தமிழ், இன்தமிழ், ஒண்தமிழ், செந்தமிழ், தண்டமிழ், நற்றமிழ், வண்டமிழ் என்று அவற்றின் அருமை, இனிமை, செழுமை, வளமைகளை எடுத்து ஓதியதோடு மட்டு மன்றி அவையெல்லாம் இன்னிசைப் பாமாலை என்பதனையும் தெளிவுபடுத்தி யுள்ளார். சுந்தரருடைய தேவாரம் "பித்தா பிறை சூடி என்னும் திருப்பதிகம் தொடங்கி, தானெனை முன் படைத்தான்" என்னும் திருப்பதிகம் ஈறாக நூறு திருப் பதிகங்களைக் கொண்டுள்ளது.

சுந்தரர் திருவொற்றியூரில் சங்கிலி யாருக்குத் தாம் இறைவன் முன் ஆணை யிட்டுக் கொடுத்த வாக்கை மீறித் திரு வாரூர்மேல் எழுந்த காதலால் திருவொற் றியூர் எல்லையைக் கடந்து சென்றதால் கண் இழந்தார். கண்ணிழந்த நிலையிலும்

காஞ்சியில் ஒரு கண் பெற்ற நிலையிலும் திருவாரூரில் மற்றைக்கண் பெறவேண்டிய காலத்தும் அவர் அருளிய பாடல்களில் அவர் பட்ட அவலத்தின் எதிரொலியையும் இறைவனோடு அன்புரிமையுடன் மோதிய சிறப்பையும் அவருடைய பாடல்களிலே காணலாம்.

மனிதனின் உடலில் உள்ள உறுப்புக்களில் மிக முக்கியமானது கண். கண்ணில் பார்வை ஒளி இல்லையென்றால் நான் நல்ல கருத்துக்களைக் கூறினாலும் பெண்கள் என்னைப் போ குருடா என எள்ளி நகையாடுவார்கள். முக்கண்களை உடையவனும், வேதங்களை ஓதுபவனுமாகிய உமக்கு இப்படியாக ஒரு பக்தனைப் பரிதவிக்க விடுதல் தகுமா? என்று அன்பின் மிகுதியினால் எழுந்த உரிமைப் பாட்டுடன் இறைவனிடம் வேண்டுவதை அவருடைய பின்வரும் பாடல் தெளிவாக விளக்குகிறது.

**மகத்திற் புக்கதோர் சனியெனக் கானாய்**
**மைந்தனே மணியே மணவாளா**
**அகத்திற் பெண்டுகள் நானொன்று சொன்னால்**
**அழையேற் போகுருடாவெனத் தரியேன்**
**முகத்திற் கண்ணிழந் தெங்ஙனம் வாழ்கேன்**
**முக்கணா முறையோ மறையோதீ**
**உகைக்குந் தண்கடல் ஓதம் வந்துலவும்**
**ஒற்றியூரெனும் ஊருறைவானே.**

இறைவன் அருளால் கண் பெற்றது மட்டுமன்றித் தமக்கு வேண்டும் போக போக்கியங்களையும் இறைவனிடமே வேண்டுகிறார். இறைவன் இவருக்காகப் பொன்னளிக்கிறார், பொதிசோறு அளிக்கிறார், இரந்து வந்து உணவு ஊட்டுகின்றார். பொன்னும் பொதிசோறும் பரிந்து கொடுத்ததோடு பரவையார் ஊடல் தீர்க்கத் தூதும் செல்கிறார்.

"அப்பனைப் பாடும் வாயால் ஆண்டி சுப்பனைப் பாடக் கூடாது" என்பது நம்மிடம் உள்ள முதுமொழி ஆகும். ஆனால் இன்று நம்மில் பலர் 'நரஸ்துதி' பாடியே தமது வாழ்வியல் நாடகத்தை நடாத்துகிறார்கள். "உண்டிருந்து வாழ்வதற்கே உரைக்கின்றீர் உரையீரே" என்று மகா பாரதத்தில் கூறியது போல வாழ்பவர்கள் பலரையே இன்று நாம் காண்கிறோம். இறைவனையும் இறைபணி செய்யும் தொண்டர்களையும் பாடுவதையே தனது வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்தவர் சுந்தரர். உலகாயதராக வாழ்பவரைப் பாடாதே, உலகம் முழுவதையும் இயக்கும் பரம்பொருளையே பாடு என்பதனை

**"பொய்ம்மையாளரைப் பாடாதே எந்தை**
**புகலூர் பாடுமின் புலவீர்காள்"**

எனத் தனது பாடலில் குறிப்பிடுகின்றார். இறவைனைப் பாடினால் இம்மையிலே சகல செல்வங்களும் கிடைப்பதோடு இடர்களும் நீங்கும் என்கிறார்.

சைவநாற்பாத நெறியில் சுந்தரர் யோகநெறி நின்று இறைவனுடைய திருப்பாதங்களோடு இணைந்தார். இறைவனை உள்ளத்துள்ளே ஓர்ந்து உணர்வது யோகம் என்பதை "ஓர்ந்தனன் ஓர்ந்தனன் உள்ளத்துள்ளே நின்ற ஒண்பொருள் சேர்ந்தனன் சேர்ந்தனன்" என்று பாடுவார். இறைவனை நாள்தோறும் சிந்திப்பவர்களின் சிந்தனையில் அவன் என்றுமே வாழ்வான் என்பதைச் "சிந்தித்தென்றும் நினைந்தெழுவார்கள் சிந்தையில் எழும் சிவன் தன்னை" என்று சிவனைப் போற்றுவார். அழகான பூக்களும் நீரும் கொண்டு இறைவனை நாடோறும் பூசிப்பவர்களுக்குத் தூய அறிவு உண்டாகும். அன்பர்களுடைய நெஞ்சத்தை இறைவன் கோயிலாகக் கொள்வான் என்பதை

**"நறுமலர்ப் பூவும் நீரும் நாடொறும் வணங்குவார்க்கு அறிவினைக் கொடுக்கும் ஆரூர் அப்பன்"**
எனத் தனது பாடலில் குறிப்பிடுகின்றார்.

இல்லற வாழ்வின் ஊடாகவும் இறைவன் பாதத்தை அடைய முடியும் என்பதற்குச் சுந்தரரின் வாழ்வு உதாரணமாகக் காணப்படுகிறது. மானுட அணுகு முறைகளில் ஒன்றாகிய தோழமை நெறியின் ஊடாக இறைவனோடு இணைந்த சுந்தரரின் வரலாறு இறையருளைப் பெற விரும்பும் மானிடர்களுக்குத் திசைகாட்டும் வாழ்வாக அமைந்துள்ளது.

ஆளுடைய நம்பியின் அருட்பாடல்களை நாளும் படித்து அனுபவித்த அருட்பிரகாச வள்ளலாராகிய இராமலிங்க சுவாமிகள் அதன்சிறப்பினைப் பலவாறு போற்றுகின்றார். சுந்தரரின் தெய்வத் தமிழைப் படிக்கின்ற பொழுது ஊனும் உள்ளமும், உயிரும், உயிர்க்குரியராகிய இறைவனும் அதன் சுவையை அனுபவித்துக் கொள்கிறார்கள் என்பதை வள்ளலாரின் பின்வரும் பாடல் விளக்குகிறது.

**தேன்படிக்கும் அமுதாம் உன் திருப்பாட்டைத்
தினந்தோறும்
நான் படிக்கும் போது எனை நானறியேன் நாவொன்றோ
ஊன்படிக்கும் உளம் படிக்கும் உயிர்படிக்கும்
உயிர்க்குயிராம்
தான் படிக்கும் அனுபவம் காண் தனிக்கருணைப்
பெருந்தகையே.**

## 8. திருமுறைகள் ஓதாய் மனமே உனக்கென்ன வாய்

"ஆடுவதும் பாடுவதும் ஆனந்தமாக நினைத்தேடுவதும் நின் அடியார் செய்கை பராபரமே" என்ற தாயுமானவர் வாக்கிற்கு அமைய ஆடியும் பாடியும் அழுதும் தொழுதும் இறைவனை வணங்கிய மெய்அடியார்களின் அருளனுபவ வாசகங்களே தெய்வத் தமிழாகிய திருமுறைப் பாடல்கள் ஆகும். "வாயே வாழ்த்து கண்டாய்" என்று அப்பர் பெருமான் அருளியதும், "பாடும் பணியே பணியாய் அருள்வாய்" என்று அருணகிரிநாதர் மொழிந்ததுவும், ஆண்டவன் ஊமை ஆக்காமல் வாயை நமக்குத் தந்ததன் மகிமையைத் தெளிவு படுத்துகிறது. "தன்னை அறிந்தவன் தத்துவஞானி" என்றும், தன்னை அறியத் தனக்கொரு கேடில்லை என்றும் தவ யோகி திருமூல நாயனாரும் கூறுகின்றார். தருமபுர ஆதீனத்தின் ஸ்தாபகராகிய குருஞானசம்பந்த சுவாமிகள் ஒவ்வொருவரும் அக விசாரணை செய்யக் கூடிய மனத்திற்கு உபதேசம் செய்கின்ற தனது பாடலிலே, திருமுறைகளை நாளாந்தம் ஓதாதவர்களுக்கு இறைவன் வாயைக் கொடுத்தமையால் யாது பயன் என்று வினாவுகின்றார்.

**ஆசையறாய் பாசம்விடாய் ஆனசிவபூசை பண்ணாய்
நேசமுடன் ஐந்தெழுத்தை நீ நினையாய்
சினமே தவிராய் திருமுறைகள் ஓதாய்
மனமே உனக்கென்ன வாய்**

## 9. நமது நாடு மீண்டும் சிவபூமியாவதற்கான வழி

சீவனுக்குள்ளே சிவமணம் பூத்த ஞானச் செல்வர்களாகிய அருளாளர்கள் தந்த தெய்வத்தமிழாகிய திருமுறைப் பாடல்கள் இறைவனைப் போற்றித் துதிப்பதற்குரிய அர்ச்சனை மலர்களாகவே காணப்படுகின்றன. சுந்தரமூர்த்தி சுவாமிகளைத் தடுத்தாட் கொண்டு திருவெண்ணெய் நல்லூருக்கு கூட்டிச் சென்ற இறைவன் அங்கே சுந்தரரின் வாயால் தமிழ்வேதமாகிய திருமுறைகளைக் கேட்க விரும்பினான். நீ எனக்குச் செய்கின்ற அர்ச்சனை தமிழிலே தோத்திரம்

பாடுதல் எனச் சுந்தரரை இறைவன் பணித்தார்.

**"அர்ச்சனை பாட்டேயாகும் ஆதலால் மண்மேல்**
**நம்மைச் சொற்றமிழ்பாடு என்றார் தூமறை பாடும் வாயார்"**

எனப் பெரியபுராணம் இதனைக் குறிப்பிடு கிறது.

திருமறைக் காட்டிலே வேதங்களால் பூட்டப்பட்ட கோயில் கதவினை அப்பர் பெருமான் தேவாரம் பாடியே திறந்து வைத்தார். சிதம்பரத்திலே ஓடாது நின்ற தேரை ஓடவைத்த பெருமை சேந்தனார் பெருமான் அருளிய திருப்பல்லாண்டுக்கே உரியது. சமணர்கள் திருநாவுக்கரசருக்கு அடுக்கடுக்காகத் துன்பங்கள் செய்த பொழுதும் அத்துன்பங்களிலிருந்து அவர் மீள்வதற்கு அவர் அருளிய தெய்வத் தமிழ்ப் பாடல்களே துணையாக இருந்தன.

"ஆழ்க தீயதெல்லாமரனாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே" என்ற பரந்த சிந்தனையுடன் ஞானக் குழந்தையாகிய சம்பந்தர் பாடியுள்ளார். "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்று தவயோகி திருமூலநாயனாரும் இதே கொள்கையை வெளிப்படுத்தி உள்ளார். சகல செல்வ யோகமிக்க பெருவாழ்வை யும் தகைமை சிவஞான முத்தியையும் தருவதற்கு தோன்றாத் துணையானவை யாகத் தெய்வத் தமிழாகிய திருமுறைப் பாடல்கள் திகழ்கின்றன.

இல்லங்களில் திருமுறை ஒலி ஓங்கி ஒலித்தால் அங்கே தென்றல் வீசும். நாதப் பிரமமாய் வீட்டிலே ஒலிக்கின்ற அந்த மந்திர ஒலி வீட்டில் உள்ளவர்கள் அனை வருடைய வினைகளையும் பொசுக்கும். வித்தியாலயங்களிலே கல்வி கற்கின்ற மாணவர்கள் தெய்வத் தமிழை உணர்ந்து ஓதினால் அவர்கள் கற்கின்ற கல்வி யாவும் அவர்களுடைய புத்தியிலே தெளி வாகப் பதியும். மாணவச் செல்வங்களின் அகத்திலும் புறத்திலும் தெய்வீக ஒளி வீசும். ஞான விளக்குகளாகிய ஆசிரி யர்கள் கர்ம யோகிகள் ஆகிவிடுவார்கள்.

"ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே" என்பது அப்பர் பெருமானின் வாக்கும் ஆகும். ஆலயங்களிலே திருமுறை ஒலி உரக்கக் கேட்குமானால் தெய்வ சாந்நித் தியம் அங்கே சிறப்புற்று விளங்கும். நமது நாட்டில் உள்ள சைவ ஆலயங்களிலே திருமுறை முற்றோதல் நிகழ்வு நடைபெறு மானால் நாட்டையே பீடித்திருக்கும் நவக்கிரக தோசம் அனைத்தும் ஆத வனைக் கண்ட பனி போல அகன்று விடும். ஈழமணித் திருநாடு மீண்டும் சிவபூமியாக மாறும்.

## உசாத்துணை நூல்கள்


1. சிங்கப்பூர் - பன்னிரு திருமுறை ஆய்வரங்கம் - நிகழ்வுக் கொத்து - "திருமுறையே வாழ்வின் நெறிமுறை" - திருமுறை மாநாட்டு வெளியீடு - வெள்ளி விழா ஆண்டு - 2005 - சிங்கப்பூர்
2. தெய்வத்தமிழ் - சென்னைப் பல்கலைக்கழகம் - 1975
3. செந்தமிழ்ச் செந்நெறி - மா.சண்முகசுப்பிரமணியம் திருநெல்வேலி - தென்இந்திய சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம் - 1996
4. தேவாரத் திருமொழிகள் - சாமி சிதம்பரனார் - 2003
5. திருமுறைச் செல்வர் - சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம்
6. சைவத் திருமறைத் திரட்டு - சிவதொண்டன் சபை - யாழ்ப்பாணம்
7. சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச் செய்த தேவாரப் பதிகங்கள் - சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாகுட்டி அவர்களின் முத்து விழா - வெளியீடு

# புறநானூறு கூறும் வைதிக சைவம்

**மட்டுவில் ஆ.நடராசா**

**'வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்க**
**பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத**
**சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்**
**பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம'**
என்பது திருஞானசம்பந்தர் புராணத்தின் முதலாவது செய்யுள்.

வைதிக நெறியில் வாழ்வோர் அது காரணமாகச் சத்திநிபாதராவர். சத்திநிபாதர் தமது தரத்துக்கேற்றவாறு சரியை, கிரியை, யோகம், ஞானம் எனப்படும் நாற்பாத நெறியில் நின்று வீடுபேறடைவர்.

சத்திநிபாதம் - திருவருட்சத்தி பதிதல்

வேதநூல், சைவநூல் என்னும் இரண்டு நூல்கள் உண்டு. வேதம் உலகர்க்குரியது. சிவாகமம் சத்திநிபாதர்க்குரியது. உலகர் உடற்பற்றும் பொருட்பற்றும் உடையவர். சத்திநிபாதர் வீடு பெறவேண்டுமென்னும் விருப்புடையவர்.

**"வேதநூல் சைவநூ லென்றிரண்டே நூல்கள்**
**...ஆரணநூல் பொதுசைவ மருஞ்சிறப்பு நூலாம்**
**நீதியினா லுலகர்க்குஞ் சத்திநிபா தர்க்கும்**
**நிகழ்த்தியது ...** என்கிறார் அருணந்தி சிவம்"

**(சித்தியார் 267)**

புறநானூற்றில் வேதநெறி பற்றியும் சைவநெறி பற்றியுங் கூறப்பட்டிருக்கிறது.

திருஞானசம்பந்தப் பிள்ளையார் சிவ ஞானம் பெற்றவரேயானாலும் வேதியர் அவருக்கும் வேத விதிப்படி உபநயனச் சடங்கு செய்து வேதமோத அதிகாரமளித்தனர். அப்போது சம்பந்தர்

**மந்திரங்க ளானவெலா மருளிச் செய்து**
**மற்றவற்றின் வைதிகநூற் சடங்கின் வந்த**
**சிந்தைமயக் குறுமையந் தெளிய வெல்லாஞ்**
**செழுமறையோர்க் கருளியவர் தெருளு மாற்றான்**
**முந்தைமுதன் மந்திரங்க ளெல்லாந் தோன்று**
**முதலாகு முதல்வனா ரெழுத்தஞ் சென்பார்**
**அந்தியினுள் மந்திரமஞ் செழுத்து மேயென்**
**றஞ்செழுத்தின் திருப்பதிக மருளிச் செய்தார்.**

**(சம்பந்தர் புராணம் 266)**

இந்தப் பெரிய புராணச் செய்யுள் வைதிக நெறியில் நிற்கும் அந்தணர் அந்தியிற் சூரிய வணக்கஞ் செய்யும் போது ஓதவேண்டிய மந்திரமெதுவென் பதைக் குறிப்பிடுகின்றது.

அப்பர் சுவாமிகள் ஆதிபுராணக் குறுந் தொகையில்

**"அருக்கன் பாதம் வணங்குவ ரந்தியில்**
**அருக்க னாவா னரனுரு வல்லனோ**
**இருக்கு நான்மறை யீசனையே தொழும்**
**கருத்தி னைநினை யார்கள் மனவரே"**
என்று பாடியிருக்கிறார்.

அருக்கன் - சூரியன், அரன் - சிவன்

இத்தேவாரங்கள், அந்தணர் அரனுருவாகிய அருக்கனை முதல்வனார் எழுத்தஞ்சாலுமருச்சிப்பர் என்று கூறியதன் மூலம் சூரிய வழிபாடு சிவ வழிபாடே யென்பதை வலியுறுத்துகின்றன. அந்

தணர் அந்தியில் அருக்கனை வணங்கு மிவ் வழக்கம் புறநானூற்றுக் காலத்திலும் இருந்திருக்கின்றது.

'பால் புளிச்சுவையைத் தந்தாலும் சூரியன் ஒளியிழந்து இருண்டாலும் நால் வேதங் கூறும் வாழ்க்கை நெறி திரிந் தாலும் மாறுபடாத மந்திரச் சுற்றத்தோடு நெடுங்காலம் விளங்கி அசையா திருப் பாயாக.

மாலைக் காலத்தில் ஆவுதி செய் தற்காக அந்தணர் வளர்க்கும் ஆகவனீ யம், காருகபத்தியம், தென்றிசையங்கி என்று சொல்லப்படுகின்ற முத்தீ விளக்கில், சிறிய தலையுடைய மான்மறிகளும் பெரிய கண்ணையுடைய மான் பிணைகளுந் துயில் கொள்ளுஞ் சாரல்களையும் பொற் சிகரங்களையுமுடைய இமயம் போலவும் பொதியம் போலவும் நீடு வாழ்வாயாக' என்று முரஞ்சியூர் முடிநாகராயர் என்னும் புலவர், சேரமான் பெருஞ்சோற்றுதியஞ் சேரலாதனை வாழ்த்தியதாகப் புறநானூற் றுப் பாடலொன்றால் அறிய முடிகின்றது. அப்பாடல் வருமாறு :

**"......பாஅல் புளிப்பினும் பகலி ருளினும்**
**நாஅல் வேத நெறிதி ரியினும்**
**திரியாச் சுற்றமொடு முழுதுசேண் விளங்கி**
**நடுக்கின்றி நிலியரோ வத்தை யடுக்கத்துச்**
**சிறுதலை நவ்விப் பெருங்கண் மாப்பிணை**
**அந்தி யந்தண ரருங்கட னிறுக்கும்**
**முத்தீ விளக்கிற் றுஞ்சும்**
**பொற்கோட் டிமயமும் பொதியமும் போன்றே"**

(புறம் 2.17-24)

ஒரு நாட்டுக்குப் படையெடுத்துச் செல் லும் அரசன் அங்குள்ள எல்லாரையும் எல்லாவற்றையும் அழிப்பது தருமமாகாது.

அதனால் அங்குள்ளவர்களைப் பாது காப்பான இடங்களுக்குச் செல்லுமாறு அறிவிப்பது பண்டைய தமிழ் அரசரது வழக்கம். அவ்வழக்கத்தைக் கடைப்பிடித்த பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழு தியை நெட்டிமையார் என்னும் புலவர் பாடிய பாடலொன்றில்

**"ஆவு மானியற் பார்ப்பன மாக்களும்**
**பெண்டிரும் பிணியுடை யீரும்பேணித்**
**தென்புல வாழ்நர்க் கருங்க டனிறுக்கும்**
**பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்**
**எம்மம்பு கடிதுவிடுது நும்மரண் சேர்மினென**
**அறத்தாறு நுவலும் பூட்கை..."** (புறம் 9.1-6)

என்று கூறப்படுகின்றது.

தென்புலவாழ்நர் - பிதுரர்

இப்பாடலின் மூலம் தாய் தந்தையருக் காகப் புதல்வர் பிண்டோதகக் கிரியை செய்யும் வழக்கம் சங்ககாலத்திலுமிருந்த தென்பதை அறிய முடிகின்றது.

இக்காலத்திலும் பார்க்க அக்காலத்தில் வேத வேள்விகள் மிகுதியாகச் செய்யப் பட்டன போலத் தோன்றுகின்றது.

பாண்டியன் பல்யாகசாலை முதுகுடு மிப் பெருவழுதியை நெட்டிமையார் பாடிய பாடலொன்றில்,

**"விளங்குபொன் னெறிந்த நலங்கினர் பலகையொடு**
**நிழல்படு நெடுவே லேந்தி யொன்னார்**
**ஒண்படைக் கடுந்தார் முன்புதலைக் கொண்மார்**
**நசைதர வந்தோர் நசைபிறக் கொழிய**
**வசைபட வாழ்ந்தோர் பலர்கொல் புரையில்**
**நற்பனுவ னால்வேதத்**
**தருஞ்சீர்த்தி பெருங்கண்ணுறை**
**நெய்ம்மலி யாவுதி பொங்கப் பன்மாண்**
**வீயாச் சிறப்பின் வேள்வி முற்றி**
**யூப நட்ட வியன்களம் பலகொல்"**

என்று கூறப்பட்டிருக்கிறது (புறம் 15. 12-21).

பொன் - கரும்பொன், இரும்பு. ஒன்னார் - பகைவர். நசை - ஆசை, யூபம் - வேள்வித் தூண்.

'விளங்கிய இரும்பாற் செய்யப்பட்ட பட்டம் அறைந்த அழகுமிக்க பலகையுடனே ஒளி வீசும் நெடிய வேலை எடுத்துக் கொண்டு, ஒளி பொருந்திய படைக் கலங்களையுடையதும் விரைந்து செல் வதுமான உனது தூசிப்படையை வெல்ல வேண்டுமென்னும் ஆசையோடு அதன் முன் வந்த பகைவர், அவ்வாசை பிற்பட் டொழிதலாலுண்டாகிய பழிச் சொல்லோடு வாழ்ந்தனர். அவர்களது எண்ணிக்கை பெரிதோ? குற்றமற்ற நல்ல அறநூல்களும் நான்கு வேதங்களும் கூறும் சொல்லற் கரிய சிறப்பினையுடைய சமித்து முதலிய ஓமாக்கினியின் மேலிடும் பொருள் களையும் நெய்யையுஞ் சொரிந்து, தீயும் புகையுங் கிளர்ந்தெழுமாறு செய்யும் பல வேறு மாண்புகளையும் கெடாத சிறப்பை யுமுடைய யாகங்களைச் செய்து முடித் துத் தூண் நாட்டிய அகன்ற வேள்விச் சாலைகளின் எண்ணிக்கை பெரிதோ?' என்பது மேலேயுள்ள பாடற்பகுதியின் பொருள்.

பல யாகங்களைச் செய்ததன் காரண மாக, முதுகுடுமிப் பெருவழுதி பல்யாக சாலைப் பெருவழுதியென அழைக்கப் பட்டான்.

மாங்குடிகிழார் பாடிய பாடலொன்றில்

**"அடுகளம் வேட்ட வடுபோர்ச் செழிய**
**ஆன்ற கேள்வி யடங்கிய கொள்கை**
**நான்மறை முதல்வர் சுற்ற மாக**
**மன்ன ரேவல் செய்ய மன்னிய**
**வேள்வி முற்றிய வாய் வாள் வேந்தே"** (புறம்26.11–15)

என்று அரசன் ஒருவன் விளிக்கப்பட்டிருக் கிறான்.

'பகைவருடைய படைகளையழித்து, எஞ்சி நின்ற யானை குதிரைகளையும், போர்க்களத்திற் கைப்பற்றிய பிற பொருள் களையும் பரிசிலர்க்களித்துக் களவேள்வி செய்த, கொல்லும் போரையுடைய செழி யனே! தெளிந்த அறிவையும் ஐம்புலன் களுமடங்கிய புலன் வழிச் செல்லாத விரதங்களையும் நான்கு வேதங்களையு மோதும் முதன்மையுமுடைய அந்தணரை வேள்விச் சுற்றமாகக் கொண்டு, மன்னர் அவ்வந்தணருக்கேவல் செய்ய, நிலை பெற்ற வேள்வியைச் செய்து முடித்த, தப்பாது கொல்லும் வாள் வலிமையுடைய வேந்தனே' என்று அரசனொருவனை விளிக்கும் இப்பாடலும் சங்க காலத்தில் வேத வேள்விகள் நிகழ்ந்தனவென்பதை உறுதிப்படுத்துகின்றன. அந்நாளில் வேத நெறி தழைத்தோங்கியிருந்த காரணத் தால், சைவத்துறையும் விளக்கம் பெற் றிருந்தது.

சோழநாட்டில் முடிகொண்டான் ஆற்றங் கரையிலுள்ள பூஞ்சாற்றூரில், கௌணிய கோத்திரத்திற்றோன்றிய விண்ணந் தாயனை, ஆவூர் மூலங்கிழார் என்னும் புலவர் பாடிய பாடலொன்றில்,

**"நன்றாய்ந்த நீணிமிர்சடை**
**முது முதல்வன் வாய்போகா**
**தொன்றுபுரிந்த வீரி ரண்டின்**
**ஆறுணர்ந்த வொருமுது நூல்**
**இகல் கண்டோர் மிகல் சாய்மார்**
**மெய்யன்ன பொய்யுணர்ந்து**
**பொய்யோராது மெய்கொளீஇ**
**மூவேழ் துறையு முட்டின்று போகிய**
**உரைசால் சிறப்பி னுரவோர் மருக..."** (புறம் 166.1–9)

என விண்ணந்தாயனை விளிக்கிறார் புலவர்.

'நீண்ட சடையினையுடைய முதியோ னாகிய இறைவனது வாக்கை விட்டு நீங் காததும் நன்கு ஆராயப்பட்ட அறமொன் றையே உணர்த்துவதும் நான்கு பிரிவு களையுடையதாய் ஆறங்கங்களால் அறி யப்படுவதும் ஒப்பற்றதுமாகிய பழமை யான வேதத்துக்கு மாறுபட்ட நூல்களைச்

செய்தவர்களாகிய புறச் சமயத்தவர்களது மிகுதியைச் சாய்க்க வேண்டி, அவர்கள் மெய்போலக் கூறும் பொய்யைப் பொய் யென்றுணர்ந்து, அப்பொய்யை மெய்யென் றெண்ணாதவாறு அவர்களுக்கு உண் மையை உணர்த்தி, இருபத்தொரு வகை யான வேள்விகளையுங் குறைவின்றி நிறைவாகச் செய்து முடித்த புகழத் தகுஞ் சிறப்பினையுடைய அறிஞர்களது மரபிலுள்ளவனே' என்பது மேலேயுள்ள பாடலின் பொருள்.

[வாய்போகாதொன்று : வாய் + போகாது + ஒன்று. இதில் ஒன்று என்பது அறத்தைக் குறிக்கின்றது. முதுநூல் - வேதம். இகல் - மாறுபாடு, மிகல் - மிகுதி, மேம்பாடு. மெய்கொளீஇ - மெய்யை உணர்த்தி. பொய்ஓராது - பொய்யைக் கொள்ளாமல், பொய்யை மெய்யென்று கருதாமல்].

இப்பாடலால் உள்ளீடற்ற தமது சமயக் கொள்கைகளை அறிந்தும் அறியாமலுங் கவர்ச்சியாகப் பேசி, பிறரை மதமாற்றஞ் செய்ய முயன்ற புறச்சமயிகள் அக் காலத்தில் இருந்ததையும், அவர்களோடு வாதிட்டு அவர்களுக்கு அவர்களது சம யங் கூறும் பொய்ம்மைகளையுணர்த்தி, அவர்களை மெய்ந்நெறியாகிய சிவ நெறிக்கு மாற்றும் ஆற்றலுடையோர் வாழ்ந்ததையும் அறிய முடிகின்றது.

பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழு தியைக் காரிகிழார் பாடிய பாடலில்,

**"நன்கலம் பரிசின் மாக்கட்கு வரிசையினல்கிப்**
**பணியிய ரத்தைநின் குடையே முனிவர்**
**முக்கட் செல்வர் நகர்வலஞ் செலற்கே**
**இறைஞ்சுக பெருமநின் சென்னி சிறந்த**
**நான்மறை முனிவ ரேந்துகை யெதிரே"** (புறம் 6. 15-20)

என்று கூறப்பட்டிருக்கிறது.

(பணிதல்-தாழ்தல், நகர்கோயில். இதில் வரும் 'அத்தை' என்பது அசை).

பெருமகனே, பகைப்புலத்திற் கவர்ந்து கொண்ட நல்ல அணிகலன்களைப் பரிசி லர்க்கு வரிசையறிந்து வழங்கி, உனது கொற்றக்குடை முனிவராற் பரவப்படும் மூன்று கண்களையுடைய சிவபெருமானது கோயிலை வலம் வருவதற்கே தாழ்வ தாக. உனது சிரம் சிறப்புடைய நான்கு வேதங்களையுமோதும் வேதியர் உன்னை வாழ்கவென்று வாழ்த்துதற் கெடுத்த கையின் முன்னே வணங்குக என்பது மேலேயுள்ள பாடலின் பொருள்.

இவ்வாறு பெருவழுதியை வாழ்த்திய காரிகிழார், 'முக்கட் செல்வர் நகர் வலஞ் செலற்கே பணியியர்' என்பதிலுள்ள பிரி நிலை ஏகாரத்தின் மூலம், பிற சிறுதெய் வங்கள் நகர்வலஞ் செலற்குப் பணியற்க என்பதையும் குறிப்பாலுணர்த்தியிருக் கிறார். இதனால் அந்நாளில் சிவ வழிபாடு முதன்மை பெற்றிருந்ததென்பதை அறிய லாம்.

இக்கருத்தைப் புறநானூற்றுக் கடவுள் வாழ்த்தும் வலியுறுத்துகின்றது.

**"கண்ணி கார்நறுங் கொன்றை காமர்**
**வண்ண மார்பிற் றாருங் கொன்றை**
**ஊர்தி வால்வெள் ளேறே சிறந்த**
**சீர்கெழு கொடியு மவ்வே றென்ப**
**கறைமிட றணியலு மணிந்தன் றக்கறை**
**மறைநவி லந்தணர் நுவலவும் படுமே**
**பெண்ணுரு வொருதிற னாகின் றவ்வுருத்**
**தன்னு ளடக்கிக் கரக்கினுங் கரக்கும்**
**பிறைநுதல் வண்ணமாகின் றப்பிறை**
**பதினெண் கணனு மேத்தவும் படுமே**
**எல்லா வுயிர்க்கு மேமமாகிய**
**நீரற வறியாக் கரகத்துத்**
**தாழ்சடைப் பொலிந்த வருந்தவத் தோற்கே"**

என்பது புறநானூற்றுக் கடவுள் வாழ்த்து.

(கண்ணி - தலைமாலை. ஏறு - எருது. நுவலுதல் - கூறுதல், புகழ்தல். ஏமம் - பாதுகாப்பு).

எல்லாவுயிர்க்குங் காவலனாகிய, நீரற்றுப் போகாத கமண்டலத்தோடும் தாழ் ந்த சடையோடும் பொலிந்து விளங்கும் அருந்தவனாகிய சிவபெருமானுக்குத் திருமுடியிற் சூடுங் கண்ணி கார்காலத்தில் மலரும் நறிய கொன்றை மலர். அழகிய நிறத்தையுடைய திருமார்பின் கண் விளங் கும் மாலையும் கொன்றை மாலை. ஊர்தி தூய வெள்ளேறு. பெருமை பொருந்திய கொடியும் அவ்வெள்ளேறென்பர்.

நஞ்சினது கறைமிடற்றை அழகு செய் தலுஞ் செய்தது. தேவர்களைக் காத்த காரணத்தாலுண்டாகிய அக்கறை வேத மோதும் வேதியர்களாற் புகழவும்படும். ஒருபாகம் பெண்ணுருவாகி நிற்குஞ் சிவன் அவ்வுருவைத் தன்னுள் அடக்கிக் கரப்பினுங் கரப்பன். பிறைநெற்றியின் வண்ணமாய் இருக்கிறது. அதனால் அது பதினெண் கணங்களாலும் புகழப்படுகின்ற தென்பது இக்கடவுள் வாழ்த்தின் பொருள்.

இக்கடவுள் வாழ்த்தில் இடம்பெறும்
**"ஊர்தி வால்வெள் ளேறே சிறந்த**
**சீர்கெழு கொடியுமவ் வேறென்ப"** என்னும் அடிகள் சிவபெருமானது கொடியில் வரையப்பட் டிருக்கும் வடிவம் வெள்ளேறு வாகனத் தின் வடிவமேயென்பதை உணர்த்துகின் றன. "ஏதிலால் துண்ணென்ன மேல் விளங்கி ஏர்காட்டும் கோதிலா ஏறாங் கொடி" என்னுந் திருவாசகமும் "சேவி யருந் திண்கொடியான்" என்னும் சம்பந்தர் கூற்றும் (சீர்காழிப் பதிகம்) இக்கருத்தை வலியுறுத்துகின்றன.

சிவனுக்குச் சொரூபநிலை, தடத்த நிலையென இரு நிலைகள் உண்டு. சொரூப நிலையில் சத்தி சிவனிடத்தில் ஒடுங்கியிருக்கும்.

சிவன் ஐந்தொழில் செய்யத் திரு வுளங் கொள்ளும் போது சத்தி விரிந்து பரந்து சிவனுக்குரிய வடிவங்களாயமைய சிவன் அவற்றைப் பொருந்தி நிற்கும் நிலை தடத்த நிலை.

ஊழிக் காலத்தில் பிரபஞ்சம் அனைத் தையும் ஒடுக்குஞ் சிவன் சத்தியையும் தன்னுள் ஒடுக்குவன்.

உயிர்களின் பொருட்டுச் சிவன் செய் யுந் தொழிலனைத்தும் சத்தியாலேயே நிகழும். அதனால் சிருட்டி செய்யத் திரு வுளங் கொண்ட போது சிவன் சத்தியைத் தோற்றுவிப்பன் என்பதே,
**"பெண்ணுரு வொருதிற னாகின் றவ்வுருத்**
**தன்னு ளடக்கிக் கரக்கினுங் கரக்கும"** என்பதன் பொருள்.

'கரக்கினுங் கரக்கும்' என்றதிலுள்ள உம்மைகள் தோற்றினுந் தோற்றும் என்னும் பொருளையுந் தருகின்றன.

'யாதுமூரே யாவருங் கேளிர்' என்பது பலருக்குப் பரிச்சயமானதொரு சொற் றொடர். அத்தொடரை முதலடியாகக் கொண்டு கணியன் பூங்குன்றனார் என்னும் புலவர் பாடிய பாடல், சில சைவசமயக் கருத்துக்களைச் சுருக்கமாகவும் விளக்க மாகவுங் கூறுகின்றது. அப்பாடல் வருமாறு:

**"யாதுமூரே யாவருங் கேளிர்**
**தீதும் நன்றும் பிறர்தர வாரா**
**நோதலுந் தணிதலு மவற்றோ ரன்ன**
**சாதலும் புதுவ தன்றே வாழ்தல்**
**இனிதென மகிழ்ந்தன்று மிலமே முனிவின்**
**இன்னா தென்றலு மிலமே மின்னொடு**
**வானந் தண்டுளி தலைஇ யானாது**
**கல்பொ ருதிரங்கு மல்லற் பேர்யாற்று**
**நீர்வழிப் படூஉம் புணைபோ லாருயிர்**
**முறைவழிப் படூஉ மென்பது திறவோர்**

**காட்சியிற் றெளிந்தன மாகலின் மாட்சியிற்**
**பெரியோரை வியத்தலு மிலமே**
**சிறியோரை யிகழ்த ததனினு மிலமே" (புறம் 192).**

'எல்லா ஊரும் எமக்கு ஊரேயாகும். எமக்கென்று வரையறுக்கப்பட்டதொரு சுற்றமில்லை, யாவரும் எமக்குச் சுற்றமே யாவர்.

எமக்கு வருந் தீதும் நன்றும் பிறர்தர வருவனவல்ல. நாம் செய்த வினையின் பயனாகத் தாமே வருவன. வருத்தமும் வருத்தந் தணிதலும் இவற்றைப் போன்றே வினைப் பயனால் வருவன. சாதலும் எமக்குப் புதிதன்று, எத்தனையோ முறை நாம் பிறந்திறந்திருக்கிறோம். எமக்கு வளமான வாழ்வு வந்தபோது அதை இனிதென்று மகிழ்ந்திலம். வாழ்க்கையில் வெறுக்கத்தக்கது வந்தவிடத்து அதை இன்னாதென்றலுமிலம்.

முகில்கள் மின்னிக் குளிர்ந்த மழைத் துளிகளைப் பொழிதலான் அமையாது. கல்லை மோதி ஒலிக்கும் வனவிய பேராற்று நீரோடும் வழியிற் செல்லுந் தெப்பம் போல, உயிரும் ஊழின் வழியிற் சென்று இன்ப துன்பங்களை அனுபவிக்குமென்பதைச் செந்நெறியிற் சென்றோர் செய்த அறிவு நூல்களால் அறிந்து கொண்டோம்.

நாம் செய்த தீவினையின் பயனை எமக்குத் தீங்கு செய்யும் சிறியோருக் கூடாகவும் நல்வினையின் பயனை நல்லன செய்யும் பெரியோருக் கூடாகவும் இறைவன் எமக்கூட்டுகின்றான்.

எமக்கு இன்ப துன்பங்கள் வருவதற்கு ஊழே காரணமாவதன்றி, பிறரெவரும் காரணமாகார். அதனால் நாம் நல்லன செய்யும் பெரியோரை வியந்து பாராட்டுவதும் தீயன செய்யும் சிறியோரை இகழ்வது மிலம். இது மேலேயுள்ள பாடலின் பொருள். இப்பாடல் ஊழ்பற்றியும் இருவினை ஒப்புப் பற்றியும் தெளிவாக விளக்கந் தருகின்றது.

அந்தியில் அந்தணர் அருங்கடனிறுத்தல், தென்புல வாழ்நர்க்கு நீர்க்கடன் செய்தல், யாகஞ் செய்து முடித்துத் தூண் நாட்டுதல் முதலிய சமயக் கிரியைகள் வழக்கில் இருந்ததையும், பொய்யை மெய்போலக் கூறும் புறச் சமயத்தவர்களோடு வாதிட்டு, அவர்களுக்கு அவர்கள் கூறும் பொய்ம்மையை உணர்த்தி அவர்களை மெய்நெறியில் நிறுத்தும் ஆற்றலுடையோர் அந்நாளில் வாழ்ந்ததையும், சிவவழிபாடு சிறப்புற்றிருந்ததையும் அறிஞர்கள் சிறுதெய்வ வழிபாட்டை நிராகரித்தனர் என்ற செய்தியையும்,

கடவுள் வாழ்த்தில் சிவபெருமானுடைய சொரூப தடத்த இலக்கணங்கள் பற்றியுங் கொடிபற்றியுங் கூறப்படுவதையும் நோக்கும் போது, புறநானூறு காலத்தில் தமிழகத்தில் சைவம் சிறப்புற்றிருந்ததென்று துணியலாம்.

***நல்லூர்க் கந்தனின் கோபுரத்திற்கு 2007ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 14ம் திகதி தங்கக் கலசம் பிரதிஷ்டை செய்து வைக்கப்பட்டது.***

# வைதிக தத்துவ நோக்கில் மனம்

**க. திலகவதி**
உதவி விரிவுரையாளர் (தற்காலிகம்),
இந்து நாகரிகத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

வைதிக தத்துவமானது வேதம், உப நிடதம், சாங்கியம், யோகம், நியாயம், வைசேடியம், மீமாம்சை, வேதாந்தம், சைவசித்தாந்தம் என்ற பிரிவுகளை உள்ளடக்கியது. இவைகளிலே மனம் பற்றிய கருத்துக்கள் எடுத்தாளப்பட்டுள் ளன. அந்தவகையிலே மனம் பற்றிய கருத்தினை நோக்குவோமானால்,

மனிதனை விலங்குகளில் நின்று பிரித்துக் காட்டுவது மனம் தான் என்றால் அது மிகையாகாது. மனம் இல்லை யென்றால் மனிதவடிவத்தில் உயிரும் உடலும் இருந்தும் பயனற்ற வாழ்க்கையா கின்றது. மனம் என்ற சொல் மன் என்ற சொல்லின் அடிப்படையில் தோன்றியுள் ளது. மன் என்றால் நிலைபெறுதல் என்று பொருள். "மனதால் தான் மனிதர்கள் நிலைபெறுகின்றார்கள்" மனம் என்ற சொல்லை அதன் செயல் தன்மைகளுக் கேற்ப பல பெயர்களில் அழைக்கப்படு கின்றது. மனம், உள்ளம், நெஞ்சம், அகம், சித்தம், இதயம், புத்தி, உன்னம், புந்தி, மதி, முன்னம் என அழைக்கப்படுவ தாக நாமதீப நிகண்டில் குறிப்பிடப்பட் டுள்ளது.

உயிரும் உடலும் செயற்படும் போது தான் மனம் என்ற மறைபொருளும் செயற் படுகின்றது. இந்தப் பரிபூரண நிலையில் தான் மனம் விளக்கமாக இயக்கமாகச் செயற்படுகின்றது. மூளையின் பாகங் களை இயக்கும் உந்து சக்தியாக மனம் செயற்படுகின்றது. மூளை நினைவாற்றல், செயற்திறமை எல்லாம் மனதிடமிருந்தே பெறுகின்றது. மனிதனிடமுள்ள உறுப்புக் களில் மிகவும் வலிமை வாய்ந்தது மனமே. மிகவும் சக்தி வாய்ந்தது மூளை தான் என்று தோன்றினாலும் கூட உண் மையில் மூளையை இயக்கும் அத்தனை காரியங்களுக்கும் மனமே மூலப்பொருள். மனதின் விருப்பத்தைப் பொறுத்தே மூளை செயற்படுகின்றது. மனம் பற்றி தபோ வனம் தவத்திரு. ஞானானந்தகிரிசுவாமி கள் குறிப்பிடுகையில், "கடிகாரத்தின் முள் காலம் காட்டிச் செல்வதற்கு அதற்குள் ஒரு சுருள் விசை இருப்பது போல் நமது உடலுக்குள்ளும் ஒரு இயந்திரம் உள் ளது. அதற்குப் பெயர் மனம்" என்கின்றார்.

இந்தவகையிலே வேதங்களில் மனம் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. வேதத்தில் சங்கிதை, பிராமணம், ஆரணியங்கள், உப நிடதம் என்பன அடங்குகின்றன. ஆரம்ப காலத்தில் இருந்தே இந்திய தத்துவவிய லாளர்கள் மனம் என்பதன் இயல்பினை அறிவு நிலையாக ஓரளவு ஆன்மாவுடன் இணைப்புச் செய்யும் வழிமுறைகளைக்

கொண்டிருப்பினும் மனதை ஆத்மாவிலிருந்து பிரத்தியேகப்படுத்தி அதன் மூலம் இவ்விவகாரத்தை ஒதுக்கி வந்தார்கள். "மனம் ஓர் ஆத்மா அல்லது உள சம்பந்தப்பட்ட கருத்தாகவே வாஜனேய சம்கிதையில் முழுமையாக விவாதிக்கப்படுகின்றது." மனதின் இயல்பு பற்றிய ஒரு தொடர் பேச்சுப் போலவே இச் சம்கிதையின் சூத்திரங்கள் அமைகின்றன.

இதே தொகுப்பின் 3-வது சுலோகத்தில் மனச் செயற்பாட்டின் மூன்று கூறுகளான அறிவு, உணர்வு, மற்றும் தீர்மானம் ஆகியனவும் மனதின் விளக்கமாகவும் அவையே செயற்பாட்டிற்கும் பொறுப்பானவையாகவும் உள்ளது. 5-வது மற்றும் 6-வது சுலோகங்களில் தேர் ஒன்றினை உவமானப்படுத்தி மனிதனின் மனதை தேரின் சக்கரங்களைக் கட்டுப்படுத்தும் நியமமாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது. இச் சுலோகங்கள் வாயிலாக பண்டைய கால நூல்களிலே மனம் என்பது ஆத்மரீதியினாலானதும், மனித அறிவு, செயற்பாட்டு அளவுகள் பற்றியும் அறியப்பட்டும் ஒப்புக் கொள்ளப்பட்டும் உள்ளன என அறியலாம்.

பெயர் மற்றும் வடிவம் என்றவாறாக அறிவின் நிலையை மனம் எடுத்துக் கொள்வதாக பல குறிப்புக்கள் சதபதப் பிராமணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. மனம் பற்றிய மிக முன்னேற்றமான ஆய்வினை ஐதரேய ஆரண்யத்தில் நாம் காணலாம். எதிர்காலத்தை முன்னதாகவே எண்ணவும், இறந்த காலத்தை நினைவில் வைத்திருக்கக் கூடிய ஆற்றலைக் கொண்டிருப்பதால் மனிதன் மிருகங்களுக்கு மேலானவனாக இருப்பதாக இதன் இரண்டாவது அத்தியாயத்தில் கருதப்படுகின்றது. இதே அத்தியாயத்தில் பின்னர் வரும் பகுதியில் மனதின் குணவியல்புகள் விபரிக்கப்படுகின்றன. இவை அறிவுநிலை, கிரகித்தறிதல், புரிந்து கொள்ளல், ஞானம், ஞாபகமுடமை, நுண்ணறிவு, தீர்மானம், அபிப்பிராயம், ஞாபகப்படுத்தல், பிரதிபலித்தல், உணர்ச்சி, உறுதி, நோக்கம், வாழ்வு, விருப்பு, கட்டுப்படுத்தல் என்பனவாகும்.

மனம் என்பது ஒரு நுண்மைப்பொருள் என்பது உபநிடதங்களின் பிரதான கொள்கை. ஆத்மா என்றதான ஞானமே மனதின் செயற்பாடுகளுக்குப் பொறுப்பானது எனவும் வலியுறுத்தப்படுகின்றது. சாந்தோக்கிய உபநிடதத்தில் பிரமத்தின் உண்மைகள் பற்றி சுவேத கேதுவுக்கு உபதேசிக்கும் போது, "உட்கொள்ளும் உணவின் மிக நுண்ணிய பகுதி மனமாக வருகின்றது" என்கிறார்.

இதுபற்றி சங்கராச்சாரியார் விபரிக்கையில் ஒருவர் உணவை உண்பதால் அவரின் மனம் அதிகரிக்கின்றது எனவும், உண்ணாத நிலையில் ஒருவனின் பேச்சுச் சக்தியும் மனமும் மிகவும் குறைவாக இருக்கின்றது என்றும் கூறுகிறார். ஆனால் உணவு உட்கொண்டதும் அங்கு படிப்படியான ஏற்றம் உண்டாகின்றது. நீர் மற்றும் உணவு ஆகியவற்றை உட்கொள்வதன் மூலம் பெறப்படும் சக்தியினாலே அனைத்துச் செயற்பாடுகளும் இயங்குகின்றன என்பது உண்மையே. இதிலிருந்து மனம் ஒரு உற்பத்தி என நினைவிற் கொண்டு உணவின் இயல்பினைக் கொண்டதாக இருக்க வேண்டும் எனக் குறிப்பிடுகின்றார்.

ஒரு பொருளாக விபரிக்கப்பட்டிருக்கும் மனம் உணர்வு அங்கங்களை ஆளுமை செய்கின்றது. கன்மேந்திரியங்களான

ஐந்து செயற்பாட்டு உணர்வுகள் மற்றும் ஞானேந்திரியங்களான ஐந்து அறிவு நிலை உணர்வுகள் ஆகிய பத்து இந்திரியங்களும் உள் உணர்வு அங்கமான மனதின் கட்டுப்பாட்டில் செயலாற்றுவன. இவை தமது செயற்பாட்டிற்கு மனதிலே தங்கியுள்ளன. சாந்தோக்கியத்தில் உணர்வு அங்கங்களை நெறிப்படுத்துவதாக மனம் எண்ணப்படுவது மட்டும் அல்ல அது அவற்றிற்கு மேம்பட்ட ஒன்றாகவும் இருப்பது என்பதாம்.

பிருகதாரண்ய உபநிடதம் ஆசை, தீர்மானம் முதலியன எல்லாம் மனமே தான் என்ற சுருதி வாக்கு காட்சியின் பருமைக் காரணம் மனமே எனக் கூறுகின்றது. மனம் புலனன்று என்பதை கதா உபநிடதம் "புலன்களிலும் சிறப்பானது உலகப் பொருட்களாகும். இந்த உலகப் பொருட்களிலும் சிறந்தது மனமாகும்" எனக் குறிப்பிட்டுள்ளது.

கடோபநிடதத்தில் கூறப்பட்ட தேர் சம்பந்தப்பட்ட நீதிக்கதையில் ஆத்மாவால் நெறிப்படுத்தப்படுவதாகவுள்ள மனமும் அதுவே உணர்வு அங்கங்களை நெறிப்படுத்துவதாகவும் உள்ள கருத்து அழகாகத் தரப்பட்டுள்ளது. இங்கு உடலானது குதிரைகளுக்கு ஒப்பிடக்கூடிய உணர்வுகளால் பல்வேறு வழித்தடங்கலாக இழுத்துச் செல்லப்படுகின்றது. ஆனால் புத்தி என்ற தேரோட்டி கடிவாளம் என்ற மனதினைக் கையாண்டு இவ்வழியாக குதிரைகளைக் கட்டுப்படுத்துகின்றார். இங்கு விருப்பு, மற்றும் ஐயப்பாடு ஆகியவற்றின் இயல்புகளாக ஒரு மட்டுப்படுத்தப்பட்ட அர்த்தத்திலேயே மனம் என்ற சொல் உபயோகிக்கப்பட்டுள்ளது.

ஐதரேய உபநிடதத்தில் "இருதயமே மனதின் இருப்பிடம்" எனக் கூறப்பட்டுள்ளது. உபநிடதத்தில் இதற்கான பல ஆதாரக் குறிப்புக்கள் உள்ளன. மேற்கு நாடுகளில் இது பற்றிய கோட்பாடுகளைப் பார்க்கும் போது அச்சிந்தனையாளர்களின் கருத்துப்படி மனித நடத்தைக்குக் காரணமாகவுள்ள நரம்பு பின்னற்றொகுதியான Cortesian Spinal Gland என்பதே மனதின் இருப்பிடம் என சொல்லப்படுவதற்கு முற்றுமுழுதாக உபநிடதத்தின் நிலை அபத்தமாக இருக்கவில்லை.

உபநிடதங்களை அடிப்படையாகக் கொண்டவை ஐவகைத் தரிசனங்கள். அந்த வகையிலே சாங்கிய சூத்திரத்தில் ஞானேந்திரியங்கள் ஐந்தும், கன்மேந்திரியங்கள் ஐந்தும் இவற்றிற்கும் மேலதிகமான ஒன்று பதினோராவது அங்கமாகும். இதுவே மனம் என சாங்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் மனம் என்பது தலைமைதாங்கும் உணர்வங்கமாகும். அத்துடன் ஏனைய பத்தும் இந்த மனதின் சக்திவகைகளாகும்.

மனம் இருநிலையானது. அதாவது சத்துவ மற்றும் தமஸ் ஆகியவை அவற்றின் முறைப்படி முன்நிலைக்கு வரும் பொழுது அகங்காரத்தின் வெளிப்பாடாக ஞானேந்திரியங்கள் ஐந்தும், கன்மேந்திரியங்கள் ஐந்தும் வருகின்றன. ரஜஸ் என்பது இரண்டிற்கும் பொதுவான அம்சம். ஏனையவற்றைப் போல மனமும் இந்திரியமே. ஆனால் அதன் விஷேடம் என்னவெனில் அறிகை செய்யும் அங்கங்களுக்கிடையில் இன்பதுன்பங்களை அறிதல் செய்தால், அது ஒரு அறிகை அங்கமாகவும், அத்துடன் செயற்பாட்டு அங்கங்களுக்கிடையில் அது அறிவுக்குக் காரண

மாக அமையும். கன்மேந்திரியங்களாக இருப்பதால் செயற்பாட்டு அங்கமாகவும் இருக்கிறது. இதுவே மனம் இருநிலையில் இருப்பது எனவும் சாங்கியத்தில் குறிப் பிடப்பட்டுள்ளது.

சாங்கியகாரிக்காவின் 27-வது சூத்தி ரத்தில் மனதைப் பற்றிய கருத்துக் கூறப் பட்டுள்ளது. அதில் உணர்வு மற்றும் செயல் ஆகியவற்றிற்கான அங்கமாக மட்டுமன்றி அறிவின் அங்கமாகவும் வேறு படுத்திக் கூறுகையில் அதனை மனஉறுதி என்ற ரீதியிலானதாகச் கூறப்படுகின்றது. இக்காரிக்காவைப் பற்றிய விவரணத்தில் கௌடபாதர் கூறுகையில் உணர்வு மற்றும் செயல் ஆகிய இரண்டிற்கும் உரிய அங்கங்களின் செயற்பாடுகளை மனமே உத்தேசிக்கின்றது என்கிறார்.

மனம் என்று எல்லோராலும் சாதாரண மாகப் பேசப்படுகின்ற சித்தம் என்பது பற்றிய கருத்தே யோகமுறைமையில் முக்கியமான கருத்தாகும்.

நியாயம் மற்றும் வைசேடிகக் கொள் கையினர் இருவரும் ஒரு அலகுக்குள் ளேயே அடங்குவனவாகக் கருதப்படுகின் றனர். மனம் பற்றிய அவர்களின் கோட் பாடு பெருமளவில் ஒருமைப்பாட்டுடன் இருக்கும் காரணத்தினாலேயே இவ்விரு கொள்கைகளும் உபநிடதத்தின் பிரதி பலிப்பாகவே மனம் என்பதன் கருத் தினைக் கொண்டுள்ளன. வைசேடிகத் தின் படி மனம் என்பது ஒன்பது திரவி யங்களில் ஒன்று எனச் சொல்லப்படு கின்றது. நியாயம் மற்றும் வைசேடிகம் கற்பனை நிலையாக வைக்கப்பட்டது மனம் என்கின்றனர்.

நியாய வைசேடியத்தில் மனம் என்று முள்ளதாக இருக்கின்றது. ஒவ்வொரு அகத்திற்கும் தனியான மனமுண்டு. ஆனால மனம் ஓர் அறிகருவி மட்டுமேயாதலின் பிறபுலன்களைப் போல அதுவும் தற்செய லற்றது. மேலும் மனம் என்பது பொரு ளானது, அணுவானது, ஒன்றானது, மற் றும் அறிவற்றது எனக் குறிப்பிடுகின்றனர். "மனம் அறிவின் ஒரு கருவி. உள்ளி ருக்கும் உணர்வங்கம் என்பதுடன் உடலி னுள் இருப்பது ஆகும்". வைசேடிக சூத்தி ரம் மனதை ஒரு நிச்சயமான உணர்வங்க மாகப் பெயரிட்டுள்ளது. இது நியாயகாரர் களால் ஏற்றுக் கொள்ளப்படுவனவாகும்.

பிரபாகமீமாம்சகர் மனதின் இருப்பினை நிரூபிக்கும் போது அறிவு, இன்பம், துன்பம் போன்ற ஆன்மாவின் குணங்கள் ஒரு போதும் வெளிப்பட்டுத் தோன்றாது எனச் சுட்டிக்காட்டி, இது மனதின் செயற் பாட்டிற்கே என்கிறார். அறிகை ஏற்படு வதற்கு முன்னர் மனம் ஆத்மாவுடன் தொடர்பு கொள்வது அவசியமாகும். இந்த மனம் ஏனைய ஐந்து உணர்வங்கங் களுடன் சேர்ந்து ஆறு உணர்வங்கங்களா கின்றன.

பூர்வமீமாம்சகர் மனம் எங்கும் நிலவுவது; என்றும் உள்ளது. மனமும் ஆத்மாவும் போன்ற எங்கும் நிலவுகின்ற இரண்டு பொருட்கள், உடலின் எல்லைக்குட்பட்டு அறிவைத் தோற்றுவிக்கின்றன என்கின் றார்.

நியாய வைசேடியத்தைப் போல மீமாம்சையும் ஐம்பொறிகளுடன் மனதை யும் ஒரு பொறியாக ஏற்கின்றது. மனதைப் பற்றியவரை அது பூதங்களில் நின்றும்

பெறப்படுவதாகவோ அல்லாமலோ இருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

வேதாந்தத்திலும் மனம் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளன. குறிப்பாக அத்வைதத்தில் குறிப்பிடப்படும் கருத்துக்களை நோக்கினால், அத்வைதிகளுள் ஒருவரான கௌடபாதர் உபநிடதக் கொள்கையான மனம் ஒரு சடப்பொருள் என்பதையும், அது அழியக்கூடிய உடம்பின் ஒரு அம்சம் மட்டுமே என்பதையும் ஏற்கின்றார். மேலும் இவர் "மாண்டுக்கிய காரிக்காவில்" பல்வேறு இடங்களில் மனம் என்பது ஆத்மா என்ற கருத்துப்பட உபயோகிக்கப்பட்டுள்ளது. "மனம் என்பது உலகத்தின் பரப்பு. அது மாயையினால் பதம் பண்ணப்படுகின்றது" என்பதுடன் ஜீவன் என அழைக்கப்படும். இது அனுபவ அறிவுக்குப் பொறுப்பானது. இந்த அனுபவ அறிவானது மனமும் வெளிப் புலன்களும் செயலாற்றும் போது பெறப்படுவதாகும்.

சங்கரரின் கருத்துப்படி மனம் நுண்மையானது. ஆனால் அது நையாயிகளின் அணுத்தத்துவ இயல்பைப் போன்றதல்ல. அது நுண்மையானதும், அளவில் மிக மட்டுப்படுத்தப்பட்டதுமாகும். ஏனெனில் இறப்பின் போது பௌதீகமான உடலை விட்டு அது வெளிச்செல்வது; அழிதல் செய்யப்படுவதில்லை. அது தெளிவாகவும், பகுதிகளைக் கொண்டிருப்பினும் அது அழியக்கூடியதாக இருக்கும். இல்லையெனில் அது உடம்பில் உட்புகவும் வெளிச்செல்லவும் முடியாத விடயமாகி விடும் என்கிறார்.

புத்தி, அகங்காரம், சித்தம் ஆகியவற்றுடன் சேர்ந்து மனமும் ஆத்மாவுக்கான அறிவின் கருவியாக இருக்கிறது என்பதுடன் இவை அனைத்தும் அறிவின் உட்புலன் அங்கத்தை கனவுநிலை ஆத்மாவுக்கு உருவாக்கிக் கொடுக்கின்றன என்பதாம்.

வேதாந்த சூத்திரத்தில் கூறும் சங்கரர், உலக மரபினையே தாம் ஒப்புக் கொள்வதாக வாசஸ்பதி கூறுவார். அகக் காட்சியின் போதெல்லாம் புறப்புலன்களின் இயக்கம் கிடையாது. அப்போது நம் மனம்தான் இயக்கமுறுகின்றது. புலன்களின் மூலமாகத் தான் காட்சியைப் பெறமுடியும். அகக்காட்சியின் போது புறப்புலன்கள் இயங்குவதில்லை. அப்போது மனம் தான் இயங்குகின்றது. இதனால் தான் மனதைப் புலனாகக் கொள்ள வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

அத்வைதிகளைப் பொறுத்தளவில் மனம் அல்லது அந்தக்கரணம் என்பது முழுமையான அறிவு நிலைகளுக்கான பெயர் மட்டுமே. அதில் இன்பம், துன்பம் என்பவை இரு அம்சங்கள் வேறுபட்ட நிலையில் இருப்பன என்பதுமாகும். பதில் பகுதிகளாக உடற்தொழில் பிரதியங்கங்களைக் கொண்ட உளத்துக்குரிய நிலைகளான தொடுகை, ருசி, ஓசை, காட்சி ஆகிய எல்லாம் விளக்கப்படக்கூடியவை. அத்துடன் இந்த உணர்ச்சிகள் எல்லாம் சாதாரண வழிமுறைகளிலேயே மனதுக்கு அளிக்கப்படுகின்றன. பல்வேறு வகைப்பட்டதான இன்ப, துன்ப நிலைகளுடனும் கூடிய அறிகைகள் செய்யப்படுவதற்குரிய காரணம் மனத்தின் பகுப்புச் செய்யும் தன்மையினாலாகும். எனவே உளத்துக்குரியதான காண்டலைச் செய்வதற்கு உள்நிலையான புலன் எதுவும் அவசியமில்லை. தற்கால சுயசோதனையாளர்களுடன் சேர்ந்து அத்வைதிகளும் மன

மானது தன்னைத்தானே பார்த்தறிய இயலும் எனவும் தனது விடையிற்குரிய நிலையை எவ்வித புல உணர்ச்சியின் உதவியின்றி அறிகின்றதெனவும் நம்புகின்றனர்.

சைவசித்தாந்தத்தில் மனம் பற்றிக் குறிப்பிடுகையில் அந்தக்கரணங்களில் ஒன்றாகக் கொள்ளப்படுகின்றது. அவை யாவன: மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்பன. மேலும் கன்மேந்திரியம், ஞானேந் திரியங்கள் என்பனவும் மனதோடு தொடர்பு படுத்திக் கூறப்பட்டுள்ளன.

மனமானது இச்சையே தனக்கு வடிவ மாய் ஒன்றைச் சங்கற்பம் பண்ணுவதும், எப்போதும் சலனப்படுவதுமாய் இருக்கும். புத்தி ஒருகாலும் நீங்காது. பூரணமாக பிரகாசமாக இருக்கும். இந்திரியங்கள் வாயிலாக வரும் விடயங்களைப் பகுத் துணர்ந்து நிச்சயிக்கும். சித்தமானது மனம் நினைத்த பொருளிலே துணிவு பிறவாமல் இஃது யாதோ எனச் சிந் தித்துக் கொண்டிருக்கும். இச்சித்தமானது மனதின் தொழிலாகிய ஐயநிலையே அன்றி ஒரு தனித்துவம் அன்று. அகங் காரமானது பிராணாதி பஞ்சவாயுக்களை யும் இயக்கி எனக்குச் சமமானவர் ஒரு வரும் இல்லை என அகந்தை கொள்வதற் குக் காரணமாய் இருக்கும். இதனை சைவ சித்தாந்த சாஸ்திர நூல்களில் ஒன்றான சிவப்பிரகாசம் 43ம் பாடல்,
"**ஆனதனு வதனிலுறு மநிலனையு மியக்கி யாங்கார நீங்காத வகந்தைக்கு வித்தா**" என்றடிகள் வாயி லாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மனமானது ஒரு பொருளை நினை வதும் சென்று பற்றுதலை அடைவதுமாம். புத்தி ஆராய்ந்து நிற்றலையும், சித்தம் நினைதலையும், அகங்காரம் அகந்தைக்கு இடமாய் யான் எனது என்பது உடைத் தாய் என்னை ஒப்பாரில்லை என்ற தெளி யாமலை உடையதாம். சிவப்பிரகாசம் என்னும் சைவசித்தாந்த சாஸ்திர நூல் இதனை
"**சித்தம் தெளியாதாம் அகங்காரம் புத்தியாய் ஆய்ந்து மனமாகும் பந்தித்து**" என்றடிகள் மூலம் கண்டு கொள்ளலாம்.

இதனை மேலும் சைவசித்தாந்த சாஸ் திர நூல்களுள் ஒன்றாகிய சிவஞான சித்தியாரும்
"**சித்தமாமவ்வியந்தம் சிந்தனையதுவும் செய்யும்**"
"**அகங்காரம் புத்தியின் கனுதித்த அகந்தைக்கு வித்தாய்**"
"**மனமது சைதத்தின் வந்ததொரு பொருளை முந்தி**"
"**நினைவதும் செய்தங்கைய நிலைமையினிற்கும**"
என்றடிகள் விளக்கி நிற்கின்றன.

சித்தாந்தத்திலே ஐம்புலன்கள் வாயி லாகக் கிடைக்கும் அனுபவங்களை மன மானது உள்வாங்கி, புத்தி நிச்சயித்து. அகங்காரம் இன்னது தான் என எழுச்சி கொண்டும் சித்தம் இன்ன பொருள் எனவும் சிந்திக்கும் என்ற கருத்தும் காணப்படும்.

இவ்வாறாக வைதிக தத்துவப்பரப்பிலே அதாவது வேதம், உபநிடதம், சாங்கிய யோகம், நியாய வைசேடிகம், பிரபாக உத்தர மீமாம்சைகள், வேதாந்தம், சைவ சித்தாந்தம் போன்றவைகளில் மனம் பற்றிய கருத்துக்கள் கூறப்பட்டுள்ளமை யைக் கண்டு கொள்ளலாம்.

## உசாத்துணை நூல்கள்

1. Chennakesavan.S, Concept of Mind in Indian Philosophy, Bannarsidass Publishers, Pvt, Ltd, Delhi 1960.
2. உதயமூர்த்தி.எம்.எஸ், மனம் பிரார்த்தனை மந்திரம், வானதிபதிப்பகம், 1979.
3. பொன். பரமகுரு, மனம் ஓர் ஆலயம், வானதி பதிப்பகம்
4. சுப்ரமணியன்.ச.வே., மனமும் உயிரும், சைவப்பிரகாசசபை, திருவனந்தபுரம், 1996.
5. முத்துப்பிள்ளை.பொ., (மொழிப்பு) சிவஞானசித்தியார் சுபக்கம், கானக்குடி ஊழியன் அச்சக்கூடம், 1926.
6. திருவிளங்கம்.மு. (பதிப்பு), சிவப்பிரகாசம், திருமகள் அச்சு இயந்திரசாலை, 1933.

### விரோதி வருஷம் ஆடி மாதம்

## நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி கோவில் மஹோற்சவ விசேட தினங்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 27.07.2009 | திங்கள் | கொடியேற்றம் | பகல் | 10.00 | மணி | (01ம் திருவிழா) |
| 05.08.2009 | புதன் | மஞ்சம் | மாலை | 05.00 | மணி | (10ம் திருவிழா) |
| 14.08.2009 | வெள்ளி | கார்த்திகை | மாலை | 05.00 | மணி | (19ம் திருவிழா) |
| 15.08.2009 | சனி | சந்தானகோபாலர் | காலை | 07.00 | மணி | (20ம் திருவிழா) |
| 15.08.2009 | சனி | கைலாசவாகனம் | மாலை | 05.00 | மணி | (20ம் திருவிழா) |
| 16.08.2009 | ஞாயிறு | கஜவல்லி மஹாவல்லி | காலை | 07.00 | மணி | (21ம் திருவிழா) |
| 16.08.2009 | ஞாயிறு | வேல் விமானம் | மாலை | 05.00 | மணி | (21ம் திருவிழா) |
| 17.08.2009 | திங்கள் | தெண்டாயுதபாணி | காலை | 07.00 | மணி | (22ம் திருவிழா) |
| 17.08.2009 | திங்கள் | ஒருமுகத்திருவிழா | மாலை | 05.00 | மணி | (22ம் திருவிழா) |
| 18.08.2009 | செவ்வாய் | சப்பறம் | மாலை | 05.00 | மணி | (23ம் திருவிழா) |
| 19.08.2009 | புதன் | தேர் | காலை | 07.00 | மணி | (24ம் திருவிழா) |
| 20.08.2009 | வியாழன் | தீர்த்தம் | காலை | 07.00 | மணி | (25ம் திருவிழா) |
| 21.08.2009 | வெள்ளி | பூங்காவனம் | மாலை | 05.00 | மணி | (26ம் திருவிழா) |
| 22.09.2009 | சனி | வைரவர்சாந்தி | மாலை | 05.00 | மணி | (27ம் திருவிழா) |

# இராமாயணம் காட்டும் சிவவழிபாடு

**ந.ஜெயபாரதி**
**விரிவுரையாளர் (தற்காலிகம்),**
**இந்து நாகரிகத்துறை,**
**யாழ்.பல்கலைக்கழகம்.**

வட இந்திய வரலாற்றினை சிந்து வெளிக்காலம், வேதகாலம், உபநிடத காலம், இதிஹாச புராணகாலம் என வகுத்துச் செல்வர். வேத உபநிடதங்களில் அறிவால் உயர்ந்த ஒரு குறிப்பிட்ட பிரிவினர்க்கு மட்டும் கூறப்பட்டு வந்த சமயம் சார்ந்த பல்வேறு விடயங்களையும் இலகுவான, எளிமையான கதை வடிவில் படிக்காத பாமரர் அறிவிற்கும் எட்ட வைத்து வெற்றி கண்ட பெருமை இதிஹாசங்களையே சாரும். இராமாயணம், மஹாபாரதம், சிவரகசியம் ஆகிய மூன்றுமே இதிஹாசங்கள் எனக் கூறப்பட்ட போதும் கதை வடிவில் அமைந்த இராமாயண, மஹாபாரதங்கள் மக்களிடையே பெற்றுக் கொண்ட செல்வாக்கினை சிவரகசியம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இதிஹாசம் என்பதற்கு "இப்படி முன்பு இருந்தது" என்பது பொருளாகும். இதனுள் அடங்கும் இராமாயணம் எனும் மகா காவியம் இந்துசமயம் சார்ந்த பல்வேறு சமய மரபுகளையும் எடுத்துரைப்பது. பல தெய்வக் கோட்பாடு, பக்தி, நதி வழிபாடு, யாக வழிபாடு, சிவலிங்க வழிபாடு, தவம், மர வழிபாடு என்பன அவற்றுள் சிலவாம். இராமாயணம் விஷ்ணுவின் 'அவதாரச் சிறப்பினை' வெளிப்படுத்தும் ஓர் காவியம். ஆயினும், இங்கு சிவன் தொடர்பான நிறைவான சிந்தனைகளைக் கண்டு கொள்ளலாம். இவ்வகையில் இராமாயணம் காட்டும் சிவன் பற்றிய செய்திகளை இங்கு விரிவாக ஆராய்வது பொருத்தமானதாகும்.

இராமாயணம் கூறும் சிவவழிபாட்டினை

- இராமனும் அவரது உறவினரும் மேற்கொண்ட சிவ வழிபாடு
- இராவணனும் அவரது உறவினரும் மேற்கொண்ட சிவ வழிபாடு
- பொதுமக்கள் வாழ்வில் சிவ வழிபாடு

என மூன்று வகையில் பார்க்கலாம்.

இராமாயணத்தின் பாட்டுடைத் தலைவனாகிய இராமனே சிவவழிபாட்டை மேற்கொண்டமை சிவனின் மகிமையைப் புலப்படுத்தும். மண்ணுயிர்கள் மட்டுமன்றி மன்னவரும், விண்ணவரும் கூட சிவனை வழிபட்டனர் என்ற நிலையில் திருமால் இராமனாக அவதாரங் கொண்டு சிவனை வழிபட்ட தலம் இராமேஸ்வரம். மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் ஒருங்கே அமைந்த தலங்களை சிறப்பாக "சேது" எனக் கூறுவர். பாரத மக்களை ஒருமைப் படுத்தும் தலமாக வடக்கில் காசி விளங்குதல் போலத் தெற்கில் இராமேஸ்வரம் மேன்மை பெறுகின்றது. இதனாலேயே

'ஆசேது இமாசலம்' என தென்முனைக்கு எல்லை வகுப்பர்.

இராமபிரான் இராவணனை வதம் செய்த பின்னர் சிவபூஜை செய்து வழி பட்ட திருத்தலம் இராமேஸ்வரம். ஒரு போரில் தீயவர்களுடன் நல்லவர்களும் கொல்லப்படுவது இயற்கை. அங்ஙனம் அறியாது கொல்லப்பட்ட நல்லவர்களைக் கொன்ற பாவம் தீர சிவபூஜை செய்வது மரபு. இம்மரபினை இராமன், சிவனை மூலமூர்த்தியாகக் கொண்டு சிறப்புப் பெறும் இராமேஸ்வரத்தில் செயல்படுத்தி னார். இத்தல தரிஷனம் பாவங்களைப் போக்கி ஞானத்தை நல்கும் என்பதனை திருஞானசம்பந்தர் பெருமான்,

**'ஏவியலும் சிலையண்ணல் செய்த இராமேஸ்வரம்**
**மேவிய சிந்தனையினார்கள் நாம் மெல்வினை வீடுமே**
**ஈனமில்லப் புகழ் அண்ணல் செய்த இராமேச்சுரம்**
**ஞானமும்த நல்பொருளாகிய நின்றதொரு நன்மையே'**

எனத் தன் திருமுறையில் குறிப்பிட்டுள் ளார். இராமேஸ்வரலிங்கம் மணலால் ஆனது. எனினும் அபிஷேகங்களால் கரையாத ஆற்றல் மிக்கது. இத்தலத்தின் சிறப்பினை இராமன் சீதையிடம் கூறும் போது, 'கங்கை, யமுனை, கோதாவரி, நர்மதை, காவேரி ஆகிய நதிகளில் படிந்து நீராடினால் மட்டுமே பாவங்கள் நீங்கும். ஆனால் சேதுவை தரிஷித்தாலே பாவம் விலகும்' என்கிறார். இவை யாவும் இராமர் சிவன் மீதும், சிவவழிபாட்டின் மீதும் கொண்ட நம்பிக்கையைச் சுட்டும்.

இராமாயணத்தில் மிக முக்கியம் பெறு வது சிவலிங்க வழிபாடு ஆகும். இராமன் இராவணனை வதம் செய்ததும் தனக்கு ஏற்பட்ட பிரம்மஹத்திதோஷம் நீங்க சிவ லிங்கத்தைப் பிரதிஷ்டை செய்து வழிபட முனைந்த போது லிங்கம் கொண்டு வரு வதற்காக காசிக்குச் சென்றார் அனுமன். பூஜைக்குரிய நேரம் வந்தும் அனுமனைக் காணாததால் சீதையே இராமேஸ்வர கடற்கரை மணலால் சிவலிங்கம் ஒன்றை உருவாக்கினார் எனவும், திரும்பி வந்த அனுமன் தன் முயற்சி வீணாகிவிட்டதே எனக் கோபம் கொண்டபோது இராமர் அதனையும் அருகில் நிறுவினார் எனவும் இராமாயணம் கூறும். இவை முறையே 'இராமலிங்கம்', 'அனுமத்லிங்கம்' எனப்பட் டது. இதனை விட இலட்சுமணரால் இங்கு பிரதிஷ்டை செய்யப்பட்ட லிங்கம் 'லட்சு மண ஈஸ்வரலிங்கம்' எனப்பட்டது. இவ் வாறு இராமனால் மட்டுமன்றி அவன் சார்ந்த பலராலும் தனித்தனியே இலிங் கங்கள் பிரதிஷ்டை செய்து வழிபடப்பட் டுள்ளன.

இதனைவிட, இராவணனை வதம் செய்யும் நோக்குடன் இராமன் இலங் கைக்குச் செல்ல முற்பட்ட போது அகத் திய முனிவர் அவன் முன் தோன்றி 'இராமா இராவணனை வெல்வது அவ்வளவு எளி தான விடயம் அல்ல. அவன் மிகச் சிறந்த சிவபக்தன். இறைவனை லிங்க வடிவில் வைத்து ஆகம முறைப்படி பூஜை இயற்றி வழிபட்டு அதன் பின் செல்வாய்' எனக் கூறுவதும், அவ்வாறே இராமன் உள்ளிட்ட பலரும் சிவலிங்க பூஜை செய்தமையும் கூட சிவலிங்க வழிபாட்டின் பெருமையை மேலும் இயம்புவன. இவை யாவும் இரா மனும் அவரது உறவுகளும் கொண் டிருந்த சிவ பக்தியையும், சிவ வழிபாட் டின் மேன்மையினையும் தெளிவுபடுத்து கின்ற அம்சங்களாகும்.

அடுத்து இராவணனது சிவபக்தி இன்று வரையில் ஈடு இணையற்ற ஒன்றாகவே போற்றப்பட்டு வருவது குறிப்பிடத்தக்க

அம்சமாகும். 'சிவபக்தியில் சிறந்தவன் இலங்கேஸ்வரன்' எனக் கூறும் அளவிற்கு இவனது பக்தி பெரிது. பூர்வ கைலாச கிரியில் இராவணன் சிவனை ஆராதித்த போது அவர் பிரத்தியக்ஷமாகாமையினைக் கண்ட இராவணன் இமோத்தகிரியின் தென்திசை வனத்தில் ஒரு குண்டந் தோண்டி அதில் அக்னியை வளர்த்து அதனருகே பார்த்திபலிங்க பிரதிஷ்டை செய்து ஓம குண்டத்தில் தன் தலைகளை ஒவ்வொன்றாக அறுத்து ஒன்பது தலைகளையும் காணிக்கையாக்கினான். அப்போதும் இறைவன் பிரசன்னமாகாதது கண்ட இராவணன் சற்றும் மனம் தளராது தன் உடைவாள் கொண்டு பத்தாவது தலையையும் வெட்ட முற்பட்ட போது சிவன் தோன்றி அருள் வளமும், அவன் விரும்பிய வரமும் வழங்கி அருளினான் என்பது இராமாயண செய்தி. இது ஒன்றே இராவணனது சிவபக்தியின் மேன்மைக்கு சான்றெனலாம்.

இராவணன் தான் செல்லும் இடங்களிற்கெல்லாம் சிவலிங்கம் ஒன்றையும் கொண்டு சென்று முறைப்படி பூஜிப்பவன் எனவும், நூற்றெட்டு (108) நாமங்களால் அர்ச்சனை செய்பவன் எனவும், உத்தர காண்டம் கூறுகிறது. மேலும் தனது தாயார் தினமும் அரிசி மாவினால் சிவலிங்கம் செய்து சிவபூஜை செய்வதைக் கண்ட இராவணன் சிவனிடம் ஒரு லிங்கம் பெற்று தன் தாய்க்கு தரமுனைந்தார். அது நடைபெறாதது கண்டு கோபத்தால் திருகோணமலையை அசைத்தான். மலை அசைவதை உணர்ந்த சிவன் அதனை தன் கால்பெருவிரலால் அழுத்தியபோது கனம் தாங்காத இராவணன் சமுத்திரத்தில் வீழ்ந்தான். பின்னர் வாகீச முனியின் கூற்றுப்படி தன் கைகள், தலை ஆகிய உறுப்புக்களால் யாழ் மீட்டி இறையை மகிழ்வித்தான். யாழ் இசையால் மகிழ்ந்த சிவன் இராவணனுக்கு சிவலிங்கம் தந்து அருளினார் என்பதும் இராவணனது சிவ பக்தியை வெளிப்படுத்தும் இராமாயண சந்தர்ப்பங்கள் எனலாம்.

அடுத்து, இராவணனின் சகோதரனாகிய விபீஷணனும் சிறந்த சிவபக்தராகவே விளங்கினார். அவரும் அவரது மனைவியும் தம் மாளிகையில் ஒரு பூஜை அறையில் சிவலிங்கத்தை வைத்து பூஜை செய்து அதனூடாக சிவரூபத்தைக் கண்டு தரிசித்து அருள்பெற்று உய்ந்த பெருமை மிக்கவர்கள். விபீஷணனால் இராமேஸ்வரத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்ட இலிங்கம் "ஜோதிலிங்கம்" எனப்படும். கற்பூர ஆராத்தியை இவ்விலிங்கத்தின் பின்புறம் காட்ட முன்புறம் சிவப்பு விளக்கு போல ஒளி தெரிவதால் "ஒளிலிங்கம்" எனவும் இது அழைக்கப்படுகின்றது.

இவரது மாமன் மயனே திருக்கேதீஸ்வர புராதன தலத்தை அமைத்தான் என்பதும் மரபாகும். இவ்வாறு இராவணன், அவனது தாயார், சகோதரன், மாமன், மனைவி மண்டோதரி, பிள்ளைகள் என யாவரும் சிவபக்தியில் சிறந்து விளங்கியமையினால் தானோ இலங்காபுரி "சிவபூமி" எனப்பட்டது என்பது ஊகிக்கத்தக்க விடயமாகும்.

தொடர்ந்து பொதுமக்கள் வாழ்வில் சிவவழிபாடு பெற்றிருந்த இடத்தினை நோக்கின், இக்கால மக்கள் இம்மை, மறுமை இரண்டிற்கும் தெய்வங்களே உதவுகின்றன என நம்பினர். அதற்கேற்ப வழிபாடாற்றினர். மக்களையும் அவர்களது சமய நம்பிக்கையையும் இரட்சிப்ப

வனே முறை தவறாத மன்னன். அதன்படி அக்கால மக்களும் சிவவழிபாட்டையே பெரிதும் கைக்கொண்டனர். இதனாலேயே அக்கால மன்னர்களான இராமனும், இராவணனும் சிறந்த சிவபக்தர்களாக, மக்களுக்கு எடுத்துக்காட்டாளர்களாக விளங்கினார்கள் என இராமாயணம் காட்டுகிறது.

இக்காலப் பகுதியில் வாழ்ந்த மக்களுள் வனவாசிகளாக வானப்பிரஸ்த ஆச்சிரம நிலையை அனுசரித்துக் கொண்டு துறவு வாழ்க்கை நடாத்திய இருடிகள் தவிர, மக்களின் கிருகஸ்த ஆச்சிரம நிலையினை அனுசரித்துக் கொண்டு புரோஹிதர்களாக வாழ்ந்து வேதமோதல், வேள்வி, யாகம் செய்தல் முதலான கிரியைகளில் பங்குபற்றிய இருடிகளும் இருந்தனர். இங்கு வசிட்டரை மிகச் சிறந்த உதாரண புருஷராய்க் காட்டலாம். எனவே இவர்கள் பிரத்தியேகமான ஒரு சமய நெறியைப் பின்பற்றாது இலௌகீகம் சார்ந்த கடமைகளைச் செய்து கொண்டும், அதேவேளை புரோகிதர்களாக பணியாற்றியும் வந்துள்ளார்கள். இவர்கள் அரச குடும்பங்களிலே மிகுந்த செல்வாக்கு உடையவர்கள். இவ்வாறு சமகாலத்தில் சமயம் என்பது ஆச்சிரம பிரிவு. அரசன், ஆண்டி எனும் நிலை கடந்து பரந்துபட்டிருந்தது.

இராமன் ஆட்சி செய்த அயோத்தி மக்கள், தசரதன், கோசலை, இராமன், அனுமன் போன்றோரும் சிவவழிபாட்டைக் கைக்கொண்டமையை இராமாயணம் விளக்கும். "அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி" என்பதற்கு இணங்க மகாராஜா அகல்பாய் - அகலீஸ்வர இலிங்கத்தையும், அகஸ்தியர் - அகத்தீஸ்வர மூர்த்தியையும் பிரதிஷ்டை செய்தனர். இவ்வாறு பிரதிஷ்டை செய்யப்பட்ட ஒவ்வொரு லிங்கங்களும், அது சார்ந்த சூழலும் அயோத்தி மக்களால் பெரிதும் புனிதமாக மதிக்கப்பட்டு, வழிபடப்பட்டு வந்தன என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும். இது இராமாயண காலத்தில் சிவன் சார்ந்த ஆலய வழிபாடு பெற்றிருந்த முதன்மையைக் காட்டும்.

இவை தவிர, இராமாயணத்தில் ஆங்காங்கு கூறப்படும்

**சிவன் காமனை எரித்தல்**

**பாற்கடலில் எழுந்த நஞ்சினை உண்ணுதல்**

**திரிபுர தகனம் செய்தல்**

முதலான கதைகளும் கூட சிவனின் பெருமையை இராமாயண காவியம் பரவலாக எடுத்து இயம்பி உள்ளது என்பதற்குத் தகுந்த சான்றுகள் எனலாம்.

எனவே தொகுத்து ஆராய்ந்தால், இராமாயண கதாபாத்திரங்களாகிய இராமன், இராவணன், அனுமன், விபீஷணன், இலட்சுமணன், தசரதன், வாலி, விசுவாமித்திரர், மயன், சீதை, மண்டோதரி எனப் பலருடன் பொதுமக்களும் சிவபக்தர்களாக இருந்து சிவவழிபாட்டை மேற்கொண்டு ஆன்ம ஈடேற்றம் அடைந்துள்ளனர் என்பதனை இவ்விலக்கியம் ஊடாக மாத்திரமன்றி இன்றும் சிறப்புப் பெற்று விளங்கும் இராமேஸ்வர ஆலயம், வைத்தியநாத சுவாமிகள் கோயில், குருங்காடுதுறைத் தலம், திருகோணமலையிலுள்ள இராவணன் கல்வெட்டு முதலிய உயிர்ப்பு மிக்க சான்றாதாரங்கள் ஊடாகவும் தெளிவாக விளங்கிக் கொள்ள முடிகின்றது.

## உசாத்துணை நூல்கள்


1. கம்பர் (பதிப்பாசிரியர்), பேராசிரியர்.அ.ச.ஞானசம்பந்தன், **கம்பராமாயணம்** (பால, அயோத்தியா காண்டங்கள்), **கம்பன்** அறநிலை, கோவை 1994.
2. ஆனந்த குருகே, (தமிழாக்கம் : நா.இராமலிங்கம்), இராமாயண சமூகம், **கலைவாணி** புத்தக நிலையம், 1996.
3. கந்தையாபிள்ளை,ந.சி, இந்துசமய வரலாறு, சந்தியா பதிப்பகம், 2003.
4. கீரன், இதிஹாச புராணங்களில் இராமேஸ்வரம், இராமநாத சுவாமிகள் திருக்கோயில் மகாகும்பாபிஷேக சிறப்பு மலர், 1975.
5. இந்துசமய பாடம், கல்வித்திணைக்கள வெளியீடு, 1960.


## வேலனிடம் வேண்டிடுவோம்

அறுபத்தாம் ஆண்டுகளில் அமைதியொடு சென்று
ஆறுமுகனே வழிபட்டோம் ஆனந்தமா யன்று
ஏறுமயில் ஏறிவரும் எழில்முருகனைக் கண்டு
நீறுபூசிப் பூசைசெய்தோம் நிம்மதியில் நின்று

இரண்டாயிரத் தாண்டுகளில் போரிருள் சூழ
மரணவலி மனிதர்களை மருட்டி விரட்டியடிக்க
முருகனன்றி யாரிடத்தில் முறையிடு வதென்று
பொறுமையொடு பூசித்தோம் கருகதுய ரென்று

ஆடிமாதம் மருவிடவே ஆனந்த மரும்பும்
நாடிடுவோம் பக்தியொடு நல்லையம் பதிக்கு
பாடிடுவோம் பணிந்திடுவோம் கொடியேற்றம் கண்டு
வேண்டிடுவோம் வேலனிடம் நல்வாழ்வு நமக்கு

முருகன் புகழ்பாடி முழுமனதால் வணங்க
இருபத்தைந்து நாட்களுமே இனிமையாக நகரும்
வருகின்ற வல்வினையை விரட்டிவிடும் முருகன்
வருமடியார் வாடாது வாழவைப்ப துறுதி

வானவர்கள் வேண்ட வந்துதித்த வடிவேலன்
ஏனென்று கேட்டெமது ஏக்கத்தை நீக்கிடுவார்
மானமுடன் மண்மீது மேன்மையொடு நாம்வாழ
தேனாக வந்திங்கு தித்திக்க வைத்திடுவார்.

**குளப்பிட்டி க.அருமைநாயகம்**

# இந்து திருமணச் சடங்குகள் வெளிப்படுத்தும் வாழ்வியற் பண்பாடு

**பேராசிரியர் கலைவாணி இராமநாதன்**
*M.A, Ph.D.*
**இந்து நாகரிகத்துறை,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

திருமணம் சுவர்க்கத்தில் நிச்சயிக் கப்படுவது என்பது இந்துக்களின் நம்பிக்கை. அதாவது ஆண், பெண் இரு வரும் உடல், உள்ளம் ஆகியவற்றின் ஒருப்பாட்டுக்கு அமைய இணைந்து கொள்வதாகும். இதில் கணவன், மனைவி இருவரும் ஒருவரையொருவர் சார்புணர்ந்து தீர்மானித்தவாறு சுற்றத்தார் எடுக்கும் சமயச் சடங்குகள் இடம்பெறும். சிவம், சக்தி இரண்டும் ஓர் உருவாய் அமைந்த அர்த்தநாரீஸ்வர வடிவம் இக்கருத்தையே உணர்த்துகின்றது. மணவாழ்க்கையில் புருஷார்த்தம் நான்கையும் அடையும் நோக்கில் திருமணத்தின் மூலம் கிருகஸ் தாசிரமத்தில் ஒருவர் நுழைகிறார் என்பது பொருளாகும். புருஷார்த்தங்களாவன - அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்குமாம். இவற்றில் அறம் - நேர்மை யான வழியில் ஒழுகும் செயற்பாடு, பொருள் - தேவையான பொருளை நீதி யான முறையில் ஈட்டுதல், இன்பம் - விருப்பம் நிறைவுற நுகர்தல், வீடு - ஆன்ம வீடுபேறு.

**மணமகனை அழைத்து வருதல்**

திருமண விழாவின் ஆரம்பத்தில் பெண் வீட்டாரோடு உறவினர் சூழப் பெண்ணின் அன்புச் சகோதரர் மணமகனை மணமகள் வீட்டுக்கு அழைத்துவருதல் இடம்பெறும். மணமகளின் பெற்றோர் மணமகனை மாலையிட்டு வரவேற்பர். அடுத்து மணமகனின் கால்களைத் தோழன் நீரினால் கழுவுவார். அந்த நன்றிக்கு அடையாளமாக மணமகன் தனது கணையாளியைக் கழற்றித் தோழனுக்குக் கொடுப்பார். பின்பு தட்டிலே குங்குமம் தூவி வாழைப்பழத்தின் மீது வைத்திருந்த எண்ணெய்த்திரியை அல்லது கற்பூரத்தை ஏற்றி சுமங்கலிகள் இருவர் வலமிருந்து இடமாக மூன்று முறை மணமகனுக்கு ஆராத்தி காட்டுவர். ஆராத்தி காட்டியதும் தட்டிலிருந்த குங்குமத்தை மோதிர விரலினால் தொட்டு மணமகனின் நெற்றியில் திலகம் இட்டதும் மணப்பந்தலில் அலங்கரித்து வைக்கப் பெற்றிருந்த மண வறைக்குத் தோழன் அழைத்துச் சென்று அதில் இருக்கச் செய்வார். அவ்வேளையில் செவிக்கினிய மேளமும் நாதஸ்வரமும் இசைத்துச் சபையோரை மகிழ வைப்பது வழமை.

**கிரியைக்கான இடத்தைப் புனிதப்படுத்தல்**

மணவிழா ஆரம்பமாகும் போது அதற்கென அழைக்கப்பெற்ற சிவாச்சாரி

யார் வேதமந்திரம் சொல்லி, இறைவனை வேண்டுதல் செய்வார். முதலில் அவ்விடத்தைப் புனிதப்படுத்தும் பொருட்டுப் புண்ணியாகவாசனம் எனும் கிரியை இடம்பெறும். புண்ணியாகவாசனத்தில் விநாயக வணக்கம் செய்து, அவரின் அருளாசி வேண்டுதல் மரபு. அதன் நிறைவில் பஞ்சகவ்வியத்தையும் கும்பநீரையும் கலந்து, சிவாச்சாரியார் தம்மைச்சுற்றியுள்ள இடத்துக்குத் தெளித்துத் தூய்மையாக்குவார். புண்ணியாகவாசனத்தில் இடம்பெற்ற விநாயக வணக்கத்தின் பேறாக மணவிழாவிலும் மணமக்களின் புதிய வாழ்விலும் தடைகள் ஏதும் நிகழாது நீங்கும் என்பது நம்பிக்கை.

**அங்குரார்ப்பணம்**

விநாயக வணக்கம் நிறைவுற்றதும் உலகில் படைப்புத் தொழிலை குறிப்பதாகிய முளைப்பாலிகை இடும் அங்குரார்ப்பணக் கிரியை இடம்பெறும். இந்நிகழ்வில் சந்திரன் பூசிக்கப்பெறுவது மரபு. சந்திரன் தாவரங்களுக்கு அதிபதி. எனவே சந்திர கும்பத்தைச் சுற்றி வைத்துள்ள 5 அல்லது 3 மண் நிரப்பிய சட்டிகளில் 5 அல்லது 3 சுமங்கலிப் பெண்களை அழைத்து, அவர்களின் கையால் முளைப்பாலிகை இடுதல் அங்குரார்ப்பணத்தைக் குறிக்கும்.

**காப்புக் கட்டுதல்**

அடுத்து சிவாச்சாரியார் மணமகனுக்குப் பவித்திரம் கொடுத்துச் சங்கற்பித்து, அவரின் வலதுகை மணிக்கட்டில் மஞ்சள் நூல் காப்புக் கட்டுவார். பின்பு மணமகனைப் பிறிதோர் இடத்தில் இருக்கவிடுவர். இந்நாளில் அவ்வாறின்றி மணவறையில் இடப்பக்கமாகச் சிறிது தள்ளி இருக்கச் செய்வதும் உண்டு. இறைவன் மணமக்கள் வாழ்விலே என்றும் காப்பாக - காவலாக வரவேண்டும். திருமணம் இனிதே நிறைவேறவும் காப்பாக இருப்பாயாக என்பது இதன் தாற்பரியமாகும்.

**பெண்ணை அழைத்து வருதல்**

பின்பு மணமகனின் சகோதரி (தோழி)யுடன் வேறு சிலரும் சேர்ந்து வர மணக்கோல உடையணிந்த மணமகளை மணவறைக்கு அழைத்து வருவர். மணமகள் வந்ததும் கிரியையைச் சிவாச்சாரியார் செய்து காப்பும் கட்டுவார். அடுத்து தெய்வீகக் காப்பணிந்த மணமக்களின் திருமணம் இனிது நிறைவேறுவதற்குச் சான்றாளராக உதவுமாறு கடவுளரை வேண்டி எரியோம்புதலாகிய அக்கினி காரியத்தைச் சிவாச்சாரியார் செய்வார். ஓமாக்கினி உடலையும் உள்ளத்தையும் தூய்மைப்படுத்தவல்லது. அதனால் அத்தெய்வீக ஒளி பேரானந்த இணைப்பை ஏற்படுத்த உதவும்.

**கன்னிகாதானம் - "தாரதத்தம்"**

வீட்டுக்கு விளக்கெனப் பெற்றெடுத்த பெண், கன்னிமை நீங்கித் திருமணப் பெண் ஆகும் பொழுது, அப்பெண்ணை மணமகனுக்குத் தானமாகக் கொடுத்தல் கன்னிகாதானம் எனப் பொருள் தரும். குடும்பத்தின் அரிய செல்வம் எனக்கருதிய பெண்ணைச் சான்றோர்நடுவே தெய்வசாட்சியாக மணமகனுக்குப் பெண்ணின் பெற்றோர் கொடுப்பது கன்னிகாதானம் ஆகும். இதனைத் "தாரதத்தம்" என்றும் சொல்வர். கன்னிகாதானம் நிகழும் வேளையில் சிவாச்சாரியார் மணமக்கள் இருவரினதும் வம்சாவழியினர் நால்வரைச் சபையோர் அறிய எடுத்துக் கூறுவார்.

பின்பு மணமகளின் தந்தை தரையிலே கிழக்கு முகமாக இருந்து, ஒரு தட்டிலே வெற்றிலை, பாக்கு, வாழைப் பழம், மஞ்சள் துண்டு, எலுமிச்சம்பழம், தேங்காய், சில்லறைக்காசு, மலர் போன்றவற்றை வைத்துத் தந்தை தட்டையும் மகளின் கையையும் சேர்த்துப் பிடிக்க, பெண்ணின் தாயார் தனது உடன்பாட்டைத் தெரிவிக்கும் வகையில் தண்ணீர்த்தாரைவிட மங்கல வாத்தியங்கள் முழங்கக் கன்னிகையை வெற்றிலையில் தண்ணீர் விட்டு மாப்பிள்ளையின் கையில் கொடுப்பார். அதனைத் தொடர்ந்து வேறொரு தட்டிலே சிவலிங்கம், விநாயகர் அல்லது இலட்சுமி ஆகிய திருவுருவங்களில் ஒன்று பொறித்த மாங்கல்யம் கோர்த்த தாலிக்கொடி, கூறை, கால் மெட்டி மற்றும் மங்களப் பொருட்களை வைத்து, மணமகனின் தந்தை, தாய் சபையோரிடம் காட்டி, ஆசிபெற்ற பின் சிவாச்சாரியாரிடம் கொடுப்பர். அவர் மணமகன் மூலம் கூறையை மணமகளிடம் கொடுத்து, அதனை மாற்றிவரச் சொல்லுவார். இது பெண்ணை முழுமையாகவே உடுபுடவை, உணவு, செல்வம், மங்கலம் அனைத்திற்கும் மணமகனும் வீட்டாருமே பொறுப்பேற்கும் கிரியையாகும்.

**தாலி கட்டுதல்**

மணமகள் கூறை மாற்றி வந்ததும் சிவாச்சாரியார் மாங்கல்ய பூசை செய்து, மணமகனின் கையில் அதனைக் கொடுப்பார். மணமகன் எழுந்து வலப்பக்கம் வந்து நின்று சபையோர் அனைவரும் வாழ்த்த, கெட்டி மேளம் முழங்கப் பெண்ணின் கழுத்தில் தாலி கட்டும் பொழுது குடும்பத்தில் நெருங்கிய உறவினரொருவர் தேங்காயை இரு பாதிகளாக உடைப்பார். இது அன்பு, தூய்மை, தன்னலமின்மை ஆகியவற்றைக் குறிப்பதாகும்.

தங்கத்தினால் செய்த கொடி அல்லது சங்கிலி அல்லது மஞ்சள் கயிற்றில் கோர்க்கப்பெற்ற தாலி ஒரு மனைவி தனது இதயம் போலப் பேணி அணிதல் மரபு. தாலி கட்டும் போது மணமக்கள் மீது சபையோர் மலர்களைச் சொரிதல் தமது மகிழ்ச்சியையும் ஆசியையும் வெளிப்படுத்தும் பாவனையாகும்.

**மணப்பெண் இருக்கும் பக்கம்**

மாங்கல்யம் பெண்ணின் கழுத்தில் கட்டும் வரை இலக்குமி நாராயணராக மணமக்களைப் பாவனை செய்து கிரியை நிகழ்த்தி பெண்ணை மாப்பிள்ளைக்கு வலது பக்கத்திலும் மாங்கல்யம் கட்டிய பின் இடது பக்கத்திலும் இருக்க வைத்து சிவாச்சாரியார் கிரியை நிகழ்த்துவார். பெண் இடது பக்கத்தில் இருக்கும் பொழுது உடம்பில் இடப்பாகத்தைச் சக்திக்கு ஈந்து, அர்த்தநாரீஸ்வர வடிவம் தாங்கியிருப்பதும் கவனிக்கத்தக்கது.

மணமகள் மணமகனுக்கு இடது பக்கத்தில் இருந்து "சகதர்மினி" என்ற பெயர் பெறுவதோடு அவர்கள் இருவரும் பங்காளிகளாய்ச் சமூகப்பணிகளை ஆற்றி, ஆன்மீக நோக்கங்களை எய்தற்கான மன ஒருமைப்பாட்டையும் புலப்படுத்துகின்றது.

**மாலை மாற்றுதல்**

வாழ்க்கையில் உடலாலும் உள்ளத்தாலும் இணைந்த இருவரும் தாம் ஒருவரே என்னும் தத்துவத்துக்கு அமையப் மணப் பெண்ணின் கழுத்திலுள்ள மாலையை மணமகனுக்கும், மணமகனின் கழுத்திலுள்ள மாலையை மணப்பெண்ணுக்கும் மூன்று முறை மாற்றுவார்கள்.

பின்பு இருவரையும் உமாமகேஸ்வரராகப் பாவனை செய்து சிவாச்சாரியார் கிரியை நிகழ்த்துவார்.

**பால் பழம் பருகுதல்**

பின் ஆணும் பெண்ணும் கருத் தொருமித்து, வாழ்க்கைத்துணை என இணைந்துள்ள வேளையில் வாழ்க்கை என்றும் இனிப்பாக அமைந்து முதல் பானமாகப் பால் பருகுதல் இடம்பெறும்.

**மங்கள தரிசனம்**

முதல் பானம் பருகியதும் மங்கள தரிசனமாக மணமக்கள் முன் கன்னிப் பசுவை காண்பிப்பார்கள். பசு அட்டலக் சுமியாகும். சகல ஐஸ்வரியங்களும் கிடைக்கவும் - தூய்மை நிலையினை இருவரும் பேணவும் கன்னிப் பசு உருவக மாகும்.

**ஏழடி நடத்தல்**

மணவறை முன்னுள்ள கும்பங் களையும் ஓமத்தையும் சுற்றி வருவதற் கான முதல் ஏழடி நடத்தல். அக்கினி எரியும் ஓம குண்டத்திலிருந்து ஏழு இடங் களில் நெல் போட்டு, அந்த இடங்களில் பரம்பொருளாகிய இறைவனின் ஆசியை வேண்டி மணமகன் தன் கையால் பெண் ணின் வலது காலைத் தூக்கி வைத்து நடத்தி வருதல், ஒவ்வொரு அடியிலும் கணவன் மனைவியின் எண்ணங்களுக்குத் தான் இசைந்து வாழ வேண்டும் என்ற நோக்கில் இருவரும் இணைந்து இந்த ஏழடி நடக்கும் நிகழ்வு இடம்பெறும். இந்த நிகழ்வின் போது கணவன் மனைவியை நோக்கி

**முதல் அடி** - வாழ்க்கைப் பயணம் முழு வதும் நீ என்னை ஆதரிக்க வேண்டும்

**இரண்டாம் அடி** - இல்லத்து ராணியாக நீ கண்ணியமாக இருக்க வேண்டும்: இக் குடும்ப நலனைக் கவனித்துக் கோள்ளு தற்கேற்ற வல்லமையை ஆண்டவன் தர வேண்டும்

**மூன்றாம் அடி** - இக்குடும்பச் செழிப்புக்கும் ஐக்கியத்துக்கும் நீ காரணமாய் இருக்க வேண்டும்

**நான்காம் அடி** - குடும்ப உண்மைப்பண்பாடு மரபுகளைப் பேணுவதில் எமக்கு நீ வழி காட்ட வேண்டும்.

**ஐந்தாம் அடி** - சரியான வழியில் இன்ப ஊற்றாயும் எம்மை வழிப்படுத்தியும் நீ இருக்க வேண்டும்.

**ஆறாம் அடி** - குடும்பச் செல்வத்தை வளர்ப் பதில் நீ உதவுதல் வேண்டும்

**ஏழாம் அடி** - உடல் வலு, ஆன்மீக வலு, பொருளாதார வலு ஆகியவற்றை ஒருவ ரோடொருவர் ஆலோசித்து உருவாக்க நாம் இருவரும் அருளாசி பெற வேண்டும்.

**அருந்ததி பார்த்தல்**

கற்பு நெறியில் சிறந்து விளங்கிய வள் அருந்ததி என்னும் பெண். அவள் தனது கற்பினில் வானிலே நட்சத்திரமாய் என்றும் ஒளிவீசுகிறாள். பெண்ணின் கற்பு நெறிப் பெருமையை உணர்த்தவே அருந் ததி இருக்கும் திசையைப் பார்த்து வணங் குவது மரபாக வளர்ந்துள்ளது. திரிகரண சுத்தியாக ஆன்மீகப் பண்புகளின் இருப் பிடமாக இல்லம் விளங்குவதற்கு மனம், வாக்கு, காயம் மூன்றினாலும் ஒழுக்கம் பேணுவதன் அவசியத்தை இது சுட்டும்.

**மோதிரம் போட்டு எடுத்தல்**

இந்த நிகழ்வு, கிரியைகளில் கூறப் படாத போதிலும், மணமக்களுக்கு வெட்கம் தெளியவும் சபைச் சிறப்புக்கா கவும் மஞ்சள் கலந்த பாத்திரத்துள் சிவாச் சாரியார் மோதிரத்தைப் போடுவார். மண

மக்கள் இருவரும் ஒரேவேளையில் பாத்தி ரத்துள் கையைவிட்டு மோதிரத்தை எடுக்க வேண்டும். இச்சம்பிரதாயம் மணமக்கள் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து வாழ வேண்டும் என்ற தத்துவத்தைக் குறிக்கும்.

**பூரணாகுதி**

திருமணக் கிரியைகளை இடையூ றின்றி நடத்துவதற்கு உதவுமாறு வேண் டிக் கொண்ட கடவுள்கள் ஓமக்கினி முன் மணவாழ்க்கையில் இணைந்த மண மக்களுக்கு நல்லாசி நல்கும் வண்ணம் வேண்டுதல் செய்து - நவதானியம், வெற்றிலை, பாக்கு, தேங்காய், வாழைப் பழம், நெற்பொரி முதலியவற்றை ஓமக் கினியில் இடும் போது, சிவாச்சாரியார் நெய் சொரிந்து மணமக்களுக்கு வேண்டு தல் செய்வதுடன் திருமணக் கிரியை நிறைவுறும். திருமண வாழ்வு பரிபூரண மான செல்வங்களுடன் நிறைவடைய வேண்டுமெனப் பிரார்த்தித்து பூரணாகுதி இடம்பெறும்.

**ஆசீர்வாதம்**

புதிதாக திருமணம் முடித்த தம்பதிகளுக்கு நீண்ட ஆயுளும் செல்வச் செழிப்பும், மகிழ்ச்சியும் இறையருளால் கிடைக்க வேண்டுமென மஞ்சள் பொடி யுடன் குங்குமமும் கலந்த பச்சை அரிசி யைச் சிவாச்சாரியார் மணமக்களின் மீது தூவி மணமக்களை ஆசீர்வதிப்பார். இனிமை மங்கலம், சுகம், சௌபாக்கியம் அனைத்துடனும் அறுகுடன் கலந்த அரிசி யினால் ஆசீர்வாதம் நடைபெறும்.

**அறுகு அரிசி போடுதல்**

திருமண விழாவிலே மணமக்கள் பல்லாண்டு வாழவேண்டுமென மணமக் களின் பெற்றோர், உறவினர், நண்பர்கள், பெரியோர்கள் அனைவரும் சிவாச்சாரி யார் ஆசீர்வதித்த தட்டிலே அறுகு கலந்த அரிசியைத் தூவி மணமக்களை மனமு வந்து வாழ்த்துதல் மரபு. அறுகு போல வாழ்விலே பச்சைப் பசுமையுடன் என்றும் சந்ததியுடன் வேரூன்றி வாழும் வகை யினை இது உணர்த்தும்.

அறுகு அரிசி போடும் முறையிலே இரண்டு முறைகள் உள்ளன. ஒன்று பாதாதிகேசமாகப் போடுதல், மற்றது கேசாதிபாதமாகப் போடுதல் என்பதாகும். முதலாவது முறை இறைவனுக்கு திருப் பாதத்திலிருந்து திருமுடிவரை வாழ்த்திப் போடுதல் பாதாதிகேச முறை எனப்படும். தலைமுதல் தோள், முழந்தாள், பாதம் வரை வாழ்த்திப் போடுவது கேசாதிபாத முறை என்பதாகும். மணமக்களை வாழ்த் தும் போது கேசாதிபாதமாக வாழ்த்தி ஆசீர்வதிப்பதே சரியானதெனப் பெரியோர் கூறுவர்.

**ஆரத்தி எடுத்தல்**

திருமணச் சடங்கு நிறைவில் மண மக்களுக்கு கண்ணூறு (கண்திருஷ்டி) கழியும் பொருட்டு ஒரு தட்டிலே குங்குமம் தூவி வாழைப்பழத்தின் மீது எண்ணெய்த் திரி அல்லது கற்பூரம், ஏற்றி அதனைச் சுமங்கலிகள் இருவர் வலம் இருந்து இட மாக மூன்று முறை சுற்றிய பின், சுடரை அணைத்து தட்டிலிருக்கும் குங்குமத்தை எடுத்து மணமக்களின் நெற்றியில் மோதிர விரல் அல்லது சுட்டு விரலினால் திலக மிடுவது சைவத் திருமணத்தின் முக்கிய வழமை. அத்துடன் மணமகளானவள் இல்லத்தில் ஒளியேற்றி மங்கலமாக வாழ வருக என ஆசீர்வதித்து அழைத்தல் எனவும் பொருள்படும்.

**விருந்துபசாரம்**

அடுத்து திருமண விழாவுக்கு வந்த விருந்தினர் அனைவரும் மணவீட்டார் அன்புடன் அளிக்கும் விருந்துபசாரத்தில் மகிழ்தல் தனி இன்பமாகும். விருந்தினர், உறவினர் வயிறும், மனமும் நிறைந்து வாழ்த்தும் வாழ்த்து பூரணமான வாழ்த்தாகும். விருந்தினரை உபசரிப்பதும், தெய்வத்தை உபசரித்து உணவளிப்பதற்குச் சமமாகும். 'அதிதி தேவோ பவ' என்பது வேதவாக்கு.

**"ஈதல் அறம் தீவினைவிட்டு ஈட்டல் பொருள்**
**காதலர் இருவர் கருத்தொருமித்து**
**ஆதரவுபட்டதே இன்பம"**

என்ற ஔவையின் அறிவுரைப்படி இல்வாழ்க்கையும் அறவாழ்வாகப் பரிணமிக்கச் செய்யும் இந்துக்களது வாழ்வியல் பண்பாடு அர்த்தமுள்ளதாகும்.

**'அறன் எனப்பட்டதே இல்வாழ்வு'**

என்னும் வள்ளுவர் குறள் வழி அனைவரதும் திருமணவாழ்வு அமைய வேண்டும் என்பதே இவற்றின் தாற்பரியமாகும்.

## இடர்கள் நீக்கும் கந்தன் வேல்

வேல் வேல் வேல் வேல்
வெற்றி வேல் வெற்றி வேல்
வேல் வேல் வேல் வேல்
வெற்றி வேல் வெற்றி வேல் (வேல் வேல்)

தேவியவள் கொடுத்த குமரன் வேல்
தேவர்கள் துயரினைத் தீர்த்த வேல்
குன்றுகள் தோறும் நின்ற வேல்
கும்பிடுவோர் குறைகள் தீர்க்கும் வேல் (வேல் வேல்)

அரன் மைந்தன் கையில் வேல்
ஆறுதல் தருமே அந்த வேல்
பக்தர்கள் போற்றிப் பாடும் வேல்
திக்கெங்கும் உலாவும் முருகன் வேல் (வேல் வேல்)

ஐயன் வேல் அழகன் வேல்
ஐங்கரன் தம்பி ஏந்தும் வேல்
நந்த முகுந்தன் மருகன் வேல்
நம்மைக் காக்கும் முருகன் வேல் (வேல் வேல்)

கந்தன் வேல் கந்தன் வேல்
கார்த்திகை ஈசன் கையில் வேல்
வரும் இடர்கள் நீக்கும் வேல்
வரங்கள் அருளும் கருணை வேல் (வேல் வேல்)

**மீசாலையூர் கமலா**

# திருவாதவூரர் புராணம் - ஒரு சிறு ஆய்வு

வ. கோவிந்தபிள்ளை

**ஆய்வுச் சுருக்கம்**

இறைவனைப் புராணன் என்றும் இவனது மேலான திருவருட் சிறப்பு, பெருங்கருணைத்திறம், புகழ் என்பன பொதிந்த சம்பவங்களையும் கதைகளையும் பக்திச்சுவை குன்றாது பாடப்பட்டுள்ள நூலினைப் புராணம் என்றும் கூறுவர்.

இவற்றிற்கமைய திருவாதவூரின்கண் எழுந்தருளியுள்ள சிவபெருமான் மீது கடவுண்மாமுனிவராற் பாடப்பட்டதே திருவாதவூரர் புராணம் என்பதையும் சம்பு பாதாசிரியரும் சிவஞானவதியாரும் தமக்குப் பிறந்த குழந்தைக்குத் தமது வழிபடு தெய்வத்தின் பெயராகிய திருவாதவூரர் என்ற திருநாமத்தையே சூட்டியுள்ளனர் என்பதையும் பின்வந்தோரே முன்னையவரை விடுத்து பின்னையவரை திருவாதவூரடிகளைப்பற்றி பாடப்பட்ட புராணமே இதுவென்று காலத்திற்குக் காலம் பல்வேறு விவாதங்களுக்கு உள்ளாகினர் என்பதையும் இப்புராணத்தில் வரும் குதிரையிட்ட சருக்கம், மண்சுமந்த சருக்கம் என்பன மாணிக்கவாசகர் (திருவாதவூரடிகள்) காலத்தில் நிகழாதவை என்பதையும் இவை இறைவனால் முன்பு நிகழ்த்தப் பட்ட உண்மைச் சம்பவங்கள் ஆதலால் மாணிக்கவாசகர் காலத்தில் வாழ்ந்தவர்கள் மீது ஏற்றி கடவுள்மாமுனிவர் பாடியுள்ளார் என்பதையும் இறைவனது திருவிளையாடல்கள், திருவருட் செயல்கள் பற்றிக் கால ஆராய்ச்சி செய்வதும் அபரஞான விமர்சனக் கருத்துகளைத் தெரிவிப்பதும் காலவிரயமே அன்றி சைவமக்கட்கு நன்மை பயவா என்பதையும் சான்றாதாரங்களுடன் இவ்வாய்வுக்கட்டுரை தெளிவுபடுத்துகின்றது.

## I

**"சீதமணி மூரறிரு வாய்சிறி தரும்ப**
**மாதவர்கள் காணவெளி வந்துவெளி நின்றான்**
**நாதமுடி வாயளவில் நான்மறையின் அந்த**
**போதவடி வாகிநிறை பூரண புராணன"**[1]

இத்தகு சிறப்புகளும் பூரணத்துவமும் வாய்ந்த புராணனை பற்றிப் பாடப்பட்ட வாய்மை விளங்கு திருக்கதைகளே புராணம் ஆகும்

எனவே, புராணங்கள், கந்தபுராணம், பெரியபுராணம், திருவிளையாடற் புராணம், திருவாதவூரர்புராணம் என வெவ்வேறு பெயர்களைக் கொண்டு அழைக்கப்படினும் இவையனைத்தும் ஏகவஸ்துவான சிவபெருமானது (புராணனது) பிரபாவங்கள், திருவருட்செயல்கள், திருவிளையாடல்கள் என்பனவற்றை விரித்தும் சுருக்கியும் கூறுவனவேயாகும். கந்தபுராணம் 10,346 விருத்தப்பாக்களைக் கொண்டது. பக்திச்சுவையுடன் காவிய மரபு சார்ந்த இலக்கியத்திற்கு உரிய அனைத்துச் சுவைகளையும் உடையது.

## II

சுருக்கிக் கூறப்பட்டுள்ள புராணங்களுள் ஒன்று திருவாதவூரர் புராணம் ஆகும். இது ஐந்நூற்றி நாற்பத்தியாறு விருத்தப்பாக்களாலானது. சொற்சுவை பொருட்சுவை மிக்கது. கற்போர் மனதைக் கசிந்துருகச் செய்யும் இயல்பினது; "தம் பருவம் பார்க்கும் எம்மையும் தம்மையும் பாரார்" என்று இறைவன் ஆன்மாக்கள் மீது கொண்ட பெருங்கருணைத் திறத்தினையும், அவனது புகழையும் அவனை அடைதற்குரிய சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு பாதங்களையும் பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களையும், ஆன்மாக்கள், மனம், வாக்கு, காயம் என்னும் திரிகரணங்களினாலும் செய்துகொண்ட புண்ணிய பாவங்களால் ஈட்டப்படும் ஆகாமியம், சஞ்சிதம், பிராரத்தம் என்னும் மூவினைகளையும் கற்பவரும் கேட்பவரும் நன்கு தெளிவுற விளங்கி அவனை அடைய வழிகாட்டுவது எனலாம்.

## III

12ம் நூற்றாண்டில் வாழ்ந்தவரெனக் கருதப்படும் சேக்கிழார் தமது பெரிய புராணத்தில் திருநாவுக்கரசர், திருஞான சம்பந்தர், சுந்தரர் ஆகியோரது சரிதைகளை அவர்கள் பாடிய திருப்பதிகங்களை அடியொற்றிப் பாடியமை போன்று 15ம் நூற்றாண்டில் வாழ்ந்தவரெனக் கருதப்படும் கடவுண்மாமுனிவரும் மாணிக்க வாசகர் பாடிய திருவாசகப் பாக்களை அடியொற்றியே இப்புராணத்தின் சில பகுதியைப் பாடியுள்ளார். சேக்கிழார் சம்பந்தரது தேவாரப் பதிகத்தை அடிப்படையாகக் கொண்டு அவர் சமணர்களுடன் அனல்வாதம், புனல்வாதம் செய்தமையைப் பெரியபுராணத்திற் பாடியமை போன்று கடவுண்மாமுனிவரும் மாணிக்க வாசகர் பாடிய திருச்சாழல் என்ற திருவாசகப் பதிகத்தினை அடிப்படையாகக் கொண்டு புத்தரை வாதில்வென்ற செய்தியையும் தமது நூலுட் பாடியுள்ளார்.

## IV

திருவாதவூரர்புராணம் என்பது திருவாதவூரின்கண் கோயில் கொண்டிருக்கும் சிவபெருமான் மீது பாடப்பட்டதே ஆகும். இதனை,

**"வாத வூரினில் வந்தினி தருளிப்**
**பாதச் சிலம்பொலி காட்டிய பண்பும்"**[2] என்றும்
**"தாவுமூர் விடையேறி தங்கியவூர்"**[3] என்றும்

இதனால் இது "தேவரூரினும் மேன்மை சிறந்த திருவாதவூர்"[4] என்று அத்திருவாத வூரினைச் சிறப்பித்தும் அப்பெருமானை திருவாதவூரர் எனவும் முனிவர் பாடுவாராயினார். இதனாலேயே அவர்மீது பாடிய புராணம் திருவாதவூரர்புராணம் எனலாயிற்று. மேலும் சைவநெறியில் தலைசிறந்தவராக விளங்கியவர் சம்புபாதாசிரியர்; இவரது மனைவியார் சிவஞானவதியார்; இவர்களுக்கு மென்கொடி பங்கினனருளால் பிறந்த குழந்தைக்கு சம்புபாதாசிரியரும் அவரது சுற்றத்தவர்களும் "திருவாதவூரர்" என நாமகரணம் சூட்டியதை;

**"ஒருவாத பிறவியிற்சென் றொருநாம முறாதவர்க்குத்**
**திருவாத வூரரெனும் திருநாமம் தரித்தார்கள்"** [5]

எனப் பாடுவாராயினார். இதில் வரும் திருநாமம் என்பது இறைவனது திருநாமமாகிய திருவாதவூரர் என்ற பெயரையே குழந்தைக்கும் சூட்டுவாராயினர்.

## V

மேலும் நூல்முழுவதும் இறைவனது திருவருட் பெருக்கே இழையோடு

கின்றது; பெரிதும் பாராட்டப்பட்டுள்ளது. 64 திருவிளையாடல்களை உடைய ஆலாசியமான்மியமென்னுஞ் சமுத்திரத் தினுள் சோமசுந்தரப் பெருமானது திரு விளையாடல்களாகக் கூறப்பட்டுள்ள திருவாதவூரரென்னும் அடியவரைத் தடுத் தாட்கொண்டு தம்முடன் இணைத்துக் கொண்டமை அரிமர்த்தன பாண்டிய மன்னனுக்கு கானகத்தின்கண்ணுள்ள நரிகளைப் பரிகளாக்கிக் கொடுத்தமை, அடியவள் ஒருத்திக்காக வைகைக் கரையை அடைக்கும் பொருட்டுக் கூலி யாளராகச் சென்று மண்சுமந்தமை என்ற மூன்று திருவிளையாடல்களை மட்டும் எடுத்து திருவாதவூரர்புராணம் எனப் பாடி யுள்ளார். பரஞ்சோதிமுனிவர் ஆலாசிய மான்மியத்திலுள்ள அறுபத்தினான்கு (64) திருவிளையாடல்களையும் முழுமையா கவும், பாராட்டத்தக்க விதத்திலும் பாடு வதற்குக் கடவுண்மாமுனிவரது திரு வாதவூரர் புராணம் ஒரு முன்னோடியா கவும் வழிகாட்டியாகவும் அமைந்திருக் கலாம் என்பதில் ஐயமில்லை. இதனை,

**"திருநகர் தீர்த்தம் மூர்த்திச் சிறப்புமுன் றந்தமூர்த்தி**
**அருள்விளை யாடலெட்டெட் டருச்சனை படலமாக**
**வரன்முறை அறுபத்தெட்டா மற்றவை படலமாக**
**விரிமுறை விருத்தச் செய்யுள் வகைமையால்**
**விளம்பலுற்றேன"**[6]

என்று பாடுவதிலிருந்து அறியக்கூடியதாக இருக்கின்றது.

திருப்பெருந்துறைச் சருக்கத்தில்,

**"பழமறை முழுதுணர் அந்தணர் பலர்தொழ நடமுயல்**
**கின்றவர்**
**மழுவுழை கரமிசை கொண்டிட மருவிய கவுரி மகிழ்ந்திட**
**விழைதகு மிரசித வொங்கொளி விடுமுயர் கயிலை**
**விலங்கலில்**
**அழகுறு தபனிய மண்டப மதனிடை யருள்கொ**
**டிருந்தனர்."**[7]

இவ்வாறு ஆன்மாக்களது பிறவித் துன்பம் நீங்கும் பொருட்டு உருவத்திரு மேனி கொண்டு வீற்றிருந்தருளிய சிவ பெருமான்,

**"வந்துதிகழ் தொண்டர்புடை சூழமகிழ் வெய்திக்**
**கொந்தலர் மலர்ப்பொலி குருந்தடி பொருந்தி**
**அந்தமுத லில்லவர் அருட்டமி முரைப்பார்**
**பந்தமறு மெல்லையது பார்த்தினி திருந்தார்"**[8]

அதாவது அருட்பாக்களாகிய திரு வாசகப் பாக்களைத் தமது அருளினாலும் பணிப்பின் பேரிலும் பாடவிருக்கின்ற திரு வாதவூரரின் பாசக் கட்டறும் காலவரை யறையை எதிர்நோக்கிக் குருவடிவாகி எழுந்தருளி அவரை ஆட்கொண்டமை யைக் கூறுவதே திருப்பெருந்துறைச் சருக்கமாகும்.

குதிரையிட்ட சருக்கம், மண்சுமந்த சருக்கமென்பன முறையே மதுரை இராச தானியில் அரசுவீற்றிருந்த அரிமர்த்தன பாண்டியனது பிறவித் துன்பம் பற்றறும் பொருட்டுச் சோமசுந்தரப் பெருமான் அவ் வரசனுக்குக் காட்டின் கண்ணேயுள்ள நரி களைப் பரிகளாக்கிக் கொடுத்த திரு விளையாடலே குதிரையிட்ட சருக்கம் ஆகுமென்பதை,

**"...எண்ணெண்**
**இன்பவிளை யாடல தெனுங்கடலுள் நாயேன்**
**மின்பயிலு மாமதுரை மேவுதமிழ் மாறன்**
**துன்பமற நல்குகதை சொல்லலுறு கின்றேன்"**[9]

என்றும், செம்மனச்செல்வி என்னும் அடிய வள் ஒருத்திக்காக கூலியாளராகச் சென்று வைகைக்கரையில் மண்சுமந்தமையை,

**"மெய்த்தவம் புரிவார் தம்மின் விழுப்பமிக் குடைய**
**வன்னை**
**யித்தடங் கரையை வல்லே யெம்பிநீ யடைப்பா யென்னப்**

பைத்தவெம் பகுவாய் நாகம் பனிமதிப் பாதி கொன்றை
கொத்துடன் முடிக்க வல்லார் கோலறை யடைக்க
லுற்றார்"[10]

என்றும் பாடுகின்றார்.

நாவுக்கரசர் தமது பதிகங்களில்,

"நரியைக் குதிரைசெய் வானும் நரகரைத் தேவுசெய் வானும்
விரதங்கொண் டாடவல் லானும் விச்சின்றி நாறுசெய் வானும்
முரசதிர்ந் தானைமுன் னோட முன்பணிந் தன்பர்க ளேத்த
அரவரைச் சாத்திநின் றாடும் ஆரூர் அமர்ந்த அம்மானே"[11]

"எரியி னார்இறை யாரிடு காட்டிடை
நரியி னார்பரி யாமகிழ் கின்றதோர்
பெரிய னார்தம் பிறப்பொடு சாதலை
விரியி னார்தொழும் வீழி மிழலையே"[12]

என்றும் திருப்பூவணம் என்னும் திவ்விய தலத்தைச் சார்ந்து திருக்கோயிலுள் சென்று இறைவரது எழிலைப் போற்றும் போது அவர் நேரேகண்டகாட்சியே பின் வரும் திருத்தாண்டகமாக எழலாயிற்று;

"அருப்போட்டு முலை மடவாள் பாகந்தோன்றும்
அணிகிளரும் உருமென்ன அடர்க்குங் கேழல்
மருப்போட்டு மணிவயிரக் கோவை தோன்றும்
மணமலிந்த நடந்தோன்றும் மணியார் வைகைத்
திருக்கோட்டில் நின்றதோர் திறமும் தோன்றும்
செக்கர்வா னொளிமிக்குத் திகழ்ந்த சோதிப்
பொருப்போட்டி நின்றதிண் புயமுந் தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனிதனார்க்கே"[13]

என்ற இச்சம்பவத்தினை, மணிவாசகரும் தமது கீர்த்தித்திரு அகவலில்,

"ஆங்கது தன்னில் அடியவட் காகப்
பாங்காய் மண்சுமந் தருளிய பரிசும்"[14]

என்று பாடுவாராயினார். இவ்வாறு பாடுவதிலிருந்து திருநாவுக்கரசர் காலத்திற்குச் சிறிது முன்பு வாழ்ந்த பாண்டிய மன்னன் ஒருவனுக்காக இறைவன் கானகத்து நரிகளைக் குதிரைகளாக்கிக் கொடுத்திருக்க வேண்டும். இதேபோன்று அடியவள் ஒருத்திக்காக கூலியாளராகச் சென்று மண்சுமந்திருக்க வேண்டும்.

"ஏதி லாக்கற்பம் எண்ணில சென்றன
ஆத லாலிக் கதையும் அனந்தமாம் பேத மாகும்"[15]

என்று கச்சியப்பர் பாடுவதிலிருந்து இறைவனது அளவிடப்படமுடியாத கதைகள் பல வேறுபாடுகள் அடைந்துள்ளன. அதாவது முன்னொரு காலத்தில் பாண்டிய மன்னனொருவனுக்கு இறைவனால் குதிரைகள் கொண்டுவந்து கொடுக்கப்பட்ட சம்பவத்தினை கடவுண்மாமுனிவர் அரிமர்த்தனபாண்டியன் மேலேற்றி அவருக்குக் கொடுத்ததாகவும் செம்மனச் செல்வி என்னும் மூதாட்டியின் பொருட்டுக் கூலியாளராகச் சென்று வைகைக்கரையை அடைத்தார் என்றும் சில மாற்றங்களோடு பாடியுள்ளார் என்று கொள்வதே பொருந்தும்.

## VI

எனவே இவற்றைக்கொண்டு திருவாதவூரர்புராணத்தில் வரும் குதிரையிட்ட சருக்கம், மண்சுமந்த சருக்கம் ஆகியவற்றில் வரும் செய்திகளுக்கும் மாணிக்கவாசகருக்கும் தொடர்பு உண்டா இல்லையா அல்லது மாணிக்கவாசகர் நாவுக்கரசர் காலத்திற்கு முற்பட்டவரா பிற்பட்டவரா என்ற ஆய்வு புராணங்களைப் பொறுத்தளவில் கால விரையத்தின்பாற் படுவதாகும். புராணங்கள் இறைவனது பெருங்கருணைத் திறத்தினையே பேசுவன.

"ஐயவிக் கொடியோன் செய்த பாவத்துக் களவில் காலம்
வெய்யநா லேழுகோடி நரகிடை வீழ்ந்தா னேனும்
உய்வகை யிலாத பாவி யிவனுக்கென் னுய்யும் தேற்றஞ்
செய்வகை யென்று கேட்பச் செங்கண்மால் விடையோன் செப்பும்".

**"அடுபழி யஞ்சா நீச ராயினு நினைக்கி னச்சம்**
**படுபழி யஞ்சான் செய்த பாதகத் தொடக்குண் டெங்கும்**
**விடுவதை யின்றி வேறு களைகனு மின்றி வீயக்**
**கடவனைக் காப்பதன்றோ காப்பென்றான் கருணை மூர்த்தி"**

என்று இறைவனது பெருங்கருணைத் திறத்தினைக் கூறும்.[16] மேலும் முனிவர், "வாதவூரிறை புராணம் படித்தவர் கேட்டோர் வாழ்க"[17]
என வாழ்த்துவது வாதவூரரின் கண்ணே எழுந்தருளிய இறைவன் ஆன்மாக்கள் மீது கொண்ட பெருங்கருணைத்திறத்தினால் அவன் செய்த திருவிளையாடல்கள் அற்புதங்கள் பற்றிய இப்புராணத்தைப் படிப்பவர்களும் கேட்பவர்களும் வாழ்வாராக என அமைகின்றது.

பலரும் இப்புராணம் மாணிக்கவாசகரைப் பற்றிப் பாடப்பட்ட புராணம் என்றே கருதிக் காலத்திற்குக் காலம் வாதிடுவதும் குறைகள் காண்பதும் பெருவழக்காக இருந்து வந்துள்ளது. இந்தவகையில் "A writer should not meddle with the character of a religious leader" என்ற கொழும்புப் பல்கலைக்கழகச் சிங்களத்துறை பேராசிரியை திருமதி குசுமா கருணசேகரா அவர்களின் கூற்று மனங் கொள்ளற்பாலதே.

**"செய்யுமவ னும்புலனும் செய்வித்து நிற்போனு**
**மெய்த வரும்பொருளும் யாவையுநீ யேயென்கை**
**யைய வடியோங்க ளறிந்தனம்"**[19]

என்பதில் இருந்து புராணங்களிற் கூறப்படும் சம்பவங்கள் அனைத்தும் இறைவன் செயல் பற்றியும் புகழ் பற்றியுமே பேசுவன ஆகும். அவற்றை வேறு வகையாகப் பிரித்தோ அவற்றிற் கூறப்படும் சம்பவங்களை வேறுவகையாகக் கொண்டோ காலஆராய்ச்சி மேற்கொள்வதும் விமர்சிப்பதும் காலவிரயமேயன்றி நன்மை பயவா.

## அடிக்குறிப்பு

1. திருவிளையாடற் புராணம், செய். 1175.
2. திருவாசகம் - கீர்த்தித்திருஅகவல் - வரி. 52 – 53.
3. திருவாதவூரடிகள்புராணம், மந்திரிச் சருக்கம், செய். 3.
4. மு. கு. நூ. செய். 3.
5. மு. கு. நூ. செய். 6.
6. திருவிளையாடற்புராணம், செய். 26.
7. திருவாதவூரடிகள்புராணம், திருப்பெருந்துறைச் சருக்கம், செய். 1.
8. மு. கு. நூ. செய். 17.
9. மு. கு. நூ. பாயிரம், செய். 4.
10. மு. கு. நூ. மண்சுமந்த சருக்கம், செய்யுள் 36.
11. திருமுறை, 4.4.2.
12. திருமுறை 5.12.8.
13. திருமுறை, 6.18.9.
14. திருவாசகம், கீர்த்தித் திருஅகவல், வரி. 46 - 47.

15. கந்தபுராணம், அவையடக்கம், செய். 15.
16. திருவிளையாடற்புராணம், செய். 1567, 1568.
17. திருவாதவூரடிகள்புராணம், திருவடிபெற்ற சருக்கம், செய். 35.
18. நால்வர் வாழ்வும் வாக்கும் (இயல் 6), கலாநிதி. நா. சுப்பிரமணியன்.
19. கந்தபுராணம் தேவர்கள் போற்று படலம், செய். 7.

## தேரேறி வருகின்றான் திருக்குமரன்!

தேரேறி வருகின்றான் திருக்குமரன்! - நல்லூர்
தெரு வீதி வருகின்றான் அருட் குமரன்!
ஊரெங்கும் அவன்வரவால் உவக்கின்றது! - அந்த
உமை மைந்தன் புகழ் எங்கும் ஒலிக்கின்றது

அலங்காரத் தேரேறி வருகின்றானே! - ஐயன்
அடியவர்க்கு அருளொளியைத் தருகின்றானே!
நலங்காக்கும் நம்தெய்வம் அவன்தானே!
நாளுமவன் திருவடியைத் தொழுவோம் நாமே!

காவடிகள் ஆடிவர வருகின்றான்! - அழகாய்க்
கரகங்கள் ஆடிவரக் களிக்கின்றான்!
பாவெடுத்து அவன் புகழைப் படிப்போம் நாமே! தெய்வ
பக்தியிலே மிதந்து புகழ் பெறுவோம் நாமே!

கற்பூர ஒளியினிலும் அவன் இருப்பான்! - தனைக்
கருதி நிதம் தொழுவோர்க்குத் துணையாய் நிற்பான்!
பொற்பதியாம் நல்லைநகர்தனிலே எந்தப்
பொழுதினிலும் அருள் மழையை பொழிந்தே நிற்பான்!

வீதியெங்கும் அடியவர்கள் கூட்டம் பாரீர்! எங்கள்
வேலவனின் புகழ் எங்கும் ஒலித்தல் கேளீர்!
ஓதி உணர்ந்தோருமங்கு ஒன்றாய்க் கூடி
ஓரணியில் அவன் புகழைப் பாடக் கேளீர்!

மங்களங்கள் எங்கணுமே தங்க - நல்ல
மாவிலைகள் தோரணங்கள் எங்கும் தொங்க
இங்கித நல்மேளங்கள் முழங்க - எங்கள்
இறைவனவன் வருகின்றான் இன்பங்கள் பொங்க!

வேலெடுத்து வருகின்றான் வினைகள் தீர்க்க - நல்ல
வெற்றிகளைத் தந்தெமது துன்பம் தீர்க்க! - அவன்
சேவடிகள் தஞ்சமெனத் தொழுவோம் வாரீர் - எங்கள்
செல்வமுத்துக் குமரன் புகழ் படிப்போம் கேளீர்!

**கீழ்கரவை கி.குலசேகரன்**

# திருவருட்பயன் : பண்டிதமணி உரைச் சுருக்கம்

ச. தங்கமாமயிலோன்

'திருவள்ளுவர், வேதம்; திருவருட் பயன் ஆகமம்; அருணூல். 'புணர்ந்தாற் புணருந்தொறும் புதிது' அது. அதற்கு உரைகாண நாம் யார்?' என்று 'திரு வருட்பயன்' தமதுரையின் அவையடக் கத்தை ஆரம்பித்துச் செல்லும் பண்டித மணி ஐயாவின் உரையை ஒருவாறு நோக்கும் சுருக்க ரூபமாவது :

திருவருளுக்குப் பயன் சிவப்பிரகாசம்; சிவப்பிரகாசத்துக்குப் பயன் சிவஞான சித்தி; சிவஞானசித்திக்குப் பயன் சிவஞான போதம்.

உயிர்கள் திருவருள் வழிநின்று சிவம் பிரகாசிக்கப்பெற்று, அதனால், சிவஞானம் சித்தித்துச் சிவபோதம் கீழாகச் சிவபோத மேற்கொள்ளற்பாலன. சிவபோத மேற் கொள்ளுதல். சிவமயமாதல்.

இவ்வாற்றால் பிரகாசம் சித்தி போதங் களைப் படிமுறையானணுகுதற்கு உப காரஞ் செய்வது 'திருவருட்பயன்' என்பது பெறப்படும்.

பராசத்தி ஆன்மாக்களுக்கு அருளும் பொருட்டு முகஞ்செய்யும் முதனிலை, ஓங்கார வடிவாகிய விநாயக மூர்த்த மாதலின், அம்மூர்த்தம், 'நற்குஞ்சரக் கன்று' என நூலின் முகத்தில் வாழ்த்தப் பட்டது. அதுதான் 'உய்ய என் உள்ளத் துள் ஓங்காரமாய் நின்ற மெய்' என்று திருவாசகத்திற் பேசப்பட்டது. ஓங்கார மூர்த்தியின் திருவருள் வழிப்படின் கலை ஞானம் எளிதிற் கைவரும்.

அனைத்தையுங் கடந்ததும் முத்திப் பெரும் பயனாயுள்ளதுமான பதி, உயி ராகி அறிவாகி எங்கும் நிறைந்து கிருபா சமுத்திரமாய் நிற்கின்றது. அதனை அறிக என்றிவ்வாறு பதிமுதுநிலை பேசுகின்றார். கடவுள் சர்வ வியாபகர், கடவுள் உயிர் களை உய்யக் கொள்ளும் சக்தியோடு கூடியவர், கிருபா மூர்த்தி. கடவுள் ஒப்பில் லாதவர். இறைவன் இருந்தபடி இருக்க அவன் சந்நிதியில் ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு ஐந்தொழில்கள் இடையீடின்றி நிகழ்கின்றமையின் 'போகாப் புகல்' என்றார். கடவுள் ஆன்மாக்களுக்குப் பற் றுக்கோடாயுள்ளவர். கடவுள் வாக்கு மனா தீதராயினும் தடத்த வடிவமுடையவர். கடவுள் தம்வழிநிற்பாரறிவைத் தம்வயஞ் செய்து நிற்பர். கடவுள் தடத்த வடிவின ராயினும் அறிவிக்காமலே எல்லாம் அறி பவர். சரீர முதலியன உயிர்கள் உணரும் பொருட்டு உணர்விப்போன் உபகரித் தவைகளே.

ஒன்றாதலால் உயிர்ப்பும், வேறாதலால் அறிவும், உடனாதலால் அநுபவமும் உயிர் களுக்கு விளங்கும். கடவுள் ஒன்றாயும் வேறாயும் உடனாயும் நின்று உபகரிப்

பவர். இறைவன் நிறுத்துவதோர் குணமிலான். அவனை நண்ணுதல் நண்ணாமை உயிர்களின் முயற்சியின் பாலன. கடவுள் வழிபடற்பாலர்.

துறந்தோர் முத்தர்; துறப்போர் பெத்தர். உயிர்கள் எண்ணில்லாதவை. துறப்போர் மூவகையாயிருப்பர். மும்மலம் இருமலம் ஒருமலமுடையாரை முறையே சகலர் பிரளயாகலர் விஞ்ஞானகலர் என்பர். உயிர்கள் தம்வயமின்றி அவத்தை உறுபவைகள். சித்து அறிவுப் பொருள்; சடம் அறிவில்லாதது. ஆன்மா அறியும் சித்து; பரமான்மா அறிவிக்கும் சித்து. உயிர்கள் மற்றொன்றைச் சார்ந்து அறிபவைகள். உயிர்களுக்கு அறியும் தன்மை உண்டு. உள்பொருள் மூன்று. அவற்றுள் இரண்டு சித்து, ஒன்று சடம். சித்துச் சத்து இரண்டனுள் ஒன்று அநாதிமுத்த சித்து; மற்றையது அநாதி பெத்த சித்து. பெத்த சித்து சதசத்தெனப்படும். சத்து, என்றும் உள்ளது. அது சிவசத்து, சீவசத்து, சடசத்து என மூன்றுவகை. முறையே சிவம், ஆன்மா, மலம் எனப்படும். சிவசத்து என்றும் ஒரே இயல்பிற்று. சீவசத்து சார்ந்த தன் வண்ணமாவது. சடசத்து காரியப்படுவது. அசத்துக் காரியப்பாடு. அ∴து என்றும் ஒரே இயல்பிற்று ஆகாதது; தோன்றி நின்று ஒடுங்குவது.

சிவசத்துக்கும் அசத்துக்கும் ஒன்றையொன்று சார்தலும் அறிதலும் இல்லையாம். 'ஒன்று மேலிடில் ஒன்று ஒளிக்கும்' என்றவாறு. சிவத்தைச் சார்ந்து சிவமாதல் ஆன்மாவுக்கு இயற்கைநிலை; என்றும் உள்ளநிலை; அதை அறிவது முத்தி நிலை. சடத்தைச் சார்ந்து அசத்தாதல் ஆன்மாவுக்குச் செயற்கைநிலை; மாறு நிலை. அதை அறியாதது பெத்தநிலை. உயிர்கள் சார்ந்ததன் வண்ணமானவைகள். சித்துக்களாகிய பதியும் ஆன்மாவும் ஒன்றையொன்று கவர்ந்து நிற்பன. ஆன்மா பதியைக் கவர்தற்குத் தடையாயுள்ளது, சடசத்தாகிய மூலமலம். காண்பானும் காட்சியும் காட்சிப் பொருளும் காட்டுவோனுமாய் நிற்கும் சிவமென்னும் பேரொளி, அருள்வழி யொழுகாதார்க்கு இருளாய் விடும். பந்தநிலையிற் கண், ஊனக்கண்; முத்திநிலையிற் கண், ஞானக்கண். உயிர்களுக்கு ஞானக்கண் இன்றியமையாதன. உயிர்கள் பந்தநீங்கி அருளைச் சார்தற் பாலன. மலவிருள் துன்பத்துக்குக் காரணமாயுள்ளது. இருள்மலம், தான் பற்றியிருப்பவைகளை மறைத்து நிற்பது. இருள்மலம், பொருள்களை மறைப்பதன்றித் தன்னையும் மறைப்பது. இருள்மலம், முத்திநிலைவரை நிலைத்து நிற்பது. கேவல சகல நிலைகளில் ஆன்மா தன்னையே அறியாது. சுத்த நிலையில் அதன் முன் இருள்மலம் நில்லாது. இருண்மல இயல்பு எந்த நிலையிலும் புலமாகாது. இருண்மலம் அறியாமையைத் தந்து நிற்பது. இருண்மலம் பொருள்; குணமன்று.

இருண்மலப் பிணிப்பு அநாதியே இயல்பாயமைந்தது. சிவமாகிய ஒளி மேற்படுமியல்புடையதாயினும் அதனை உயிர் கவர்ந்தாலன்றி, ஆணவ இருள் நீங்காது. இருண்மல இரவில் கன்மத்தின் விளைநிலமான மாயை ஒரு விளக்கு.

மண்ணினிற் பிறந்தார் ஈட்டத்தக்க பொருள், அருளே. உலகத்துப் பொருள்களெல்லாம் அருளை ஈட்டுவதாகிய உய்வினைக்குக் கருவிகளே என்பது கடைப்பிடிக்க. திருவருள் ஒப்புயர்வில்லாதது. திருவருள் பெருக்க நுகர்வினையைத்

தந்து பேரொளியாவது. திருவருள் பெத்தான்மாக்களுக்கு ஊனுக்கூடாக அறிவு விளக்கங் செய்வது. திருவருளைப் பந்திகளான உயிர்கள் அநுபவியா. திருவருள் தாரகமாகவும் பிரேரகமாகவும் உபகரிப்பது. திருவருளைப் பெறாதோர் தம்மை அறியார்; தம்மையன்றித் திருவருளையும் அதனையுடைய சிவத்தையும் இழப்பர்.

அருட்குரு வடிவம் பக்குவத்துக்கேற்பப் பல்வேறு வகைப்படும். அருட்குருவே நோய்தீர்க்க வல்லார். அருட்குரு அறிதற்கரியர். குருவினால் இருள் நீங்குதற்கையமில்லை. சிவமே அருட்குருவாய் முன்னிலைப்பட்டருளும். தொண்டர் துரியங்கடந்தவர் ஆவர். அருட்குருவின்றி வீட்டுநெறி கைகூடாது; ஞானம் அமையாது. இருவினை ஒத்தவழிச் சத்திநிபாதம் உண்டாம். விசாரிக்கற்பாலன, ஏகனாதி ஆறு பொருள்களுமாம். உடம்பினியக்கம் உயிரை இன்றியமையாதவாறு போல, உயிருணர்வு திருவருளுணர்வை இன்றியமையாதென்பதாம். உயிர் ஊனை இயக்குவது. திருவருளுணர்வு உயிரை உணர்விப்பது. ஆன்மா பளிங்கு போன்றது. உயிர் அருள்வழிப்பட்டு நின்று அது செய்விக்கச் செய்யற்பாலது. அருள்வழிப்பட்டு நட. அருளொளியில் முழுகி நில். சும்மா இரு. அதுவாதலநுபவம் சொல்லுந்தரமன்று. மலநோய் நீங்கிய வழியே திருவருள் தித்திப்பதாம். பொய்ப்பாவனை போக்கற் பாலதாம். அருள்வழிப்பட்டு மலங்கழிந்து சுகமெய்துகின்ற சீவன் முத்தனே தலைவன் எடுத்துச் சுமப்பவன். அருள்விளக்கம் உற்றவழி வினை ஏறாது. திருவருள் உபகாரம் வஞ்சிக்கப்படாது. படிகமனைய உயிர், சிவத்தைச்சார இருள் நில்லாது. உயிர் அருளை முன்னிட்டு நிற்கற்பாலது. அவனருளாலேதான் அவனைக் காண்பதாம். இருளின் எழுஞ்சுடரின் பின்புகுதல் சாதகம்; பயன் இன்புறுதல். அருளொளியை முன்னிட்டுச் சேறலே இன்பம். அருட்சத்தி திரோதான நிலையில் தோழியாயும், பின் தாயாயும் உபகரிக்கும். ஒருவன் ஒருத்தி உற்றவழி உண்டாமின்பம் சிற்றின்பமாய் இருவர்க்கும் உரியது. ஒருவனாகிய இறைவனை ஒருத்தியாகிய உயிர் உற்றவழி உண்டாம் இன்பம் பேரின்பமாய்ப் புணர்ந்தாற் புணருந்தொறும் புதிதாய் ஒருத்திக்கே உரியது. இவை தம்முள் வேற்றுமை. இன்புறு நிலைக்குபகாரம் அத்து விதம். அத்வைத முத்திநிலை எய்தியோர் பிறவி எய்தார். அவன் ஒன்றும் வேறும் உடனுமாகவே, இவனும் ஒன்றும் வேறும் உடனுமாவன். இருமை தோன்றாத ஒருமையின் பெருமை சொல்லிறந்தது.

வேதம் பொது; ஆகமம் சிறப்பு. பொது உலகர்க்குரியது; சிறப்பு சத்திநிபாதர்க்குரியது. மறையின் ஒழிபொருள் வேதாந்தம். அதைத் தெளிவித்து உரைப்பது சைவம். வேதாந்தம் வைதீகம் எனவும் படும். சைவம் அதன் தெளிவு ஆதலின் வைதிக சைவம் எனப்படும். சைவநூல்கள் சிவாகமங்கள்; அவைகளே முடிந்த முடிபாகிய சித்தாந்தம். உலகர் உயர்ந்தோர். சத்திநிபாதர் அருள் பதிந்தவர்கள். அருள் கைவந்தவர்களுக்கு உபதேசக் கிரமத்திற் கிடைப்பது ஆகமம்.

ஆன்ம எழுச்சி, மல எழுச்சி, ஞான எழுச்சிகளாகிய ஐந்தெழுத்தினியல்பு சிந்திக்கற்பாலது. ஊனநடனம், நீங்கிய வழி, ஞானநடனம் சித்திக்கும். சிகராதி பஞ்சாக்கரப் பேறு, அரிதிற் கிடைப்பதாம். சிகராதி முத்தி பஞ்சாக்கரமே மீளா நெறி. முத்திகாமி ஓதும் ஐந்தெழுத்துச் 'சிவ'.

'ய' வுக்கு வாழ்வு 'சிவாய'. மந்திரம் வல்லார் இருதலை மாணிக்கம் என்று 'சிவயவசி' என்னும் அஞ்செழுத்தை அருமையாகப் போற்றுவர். பந்தநிலை துவிதமார்க்கம். இந்த நிலையைச் செம்மை செய்வது வேதம். முத்திநெறி சித்தித்தவழி ஐந்தெழுத்து மூன்றெழுத்தாம்.

சீவபோதம் போன சீவன்முத்தர் பேரின்ப நித்திரை ஆகிய யோகங் கூடுவர். அவர்களிடம் ஒரு வாக்குப் பிறந்தால், அது சீவவாக்காகாது, சிவவாக்காகும். சீவன் முத்தர் சிவமும் அல்லர்; சிவத்தின் அதிட்டானங்களும் அல்லர்; பசுக்களும் அல்லர்; புணர்ந்தாற் புணருந்தொறும் புதிது புதிதான சிவானந்தாநுபவ சிவ போகங்களை நுகர்ந்து கொண்டிருப்பவர். சீவன் முத்தர் சிவமே அறிவர். சீவன் முத்தர் ஆமையாய்ச் சீவபோதத்துக்கு மீளார். சிவரகசியமறிந்த சீவன் முத்தனான சிவஞானி, உலகர் இரங்குவதற்குத் தானிரங்காது சும்மா இருப்பன். அவனுக்கு எல்லாம் சிவமயம்; நிகழ்ச்சி அனைத்துஞ் சைவநீதி. சீவன் முத்தனின் காட்சி துனியில் காட்சி. சீவன் முத்தர்பால் செயல் நிகழுமாயின் அது செய்யாச் செயல்; சிவச்செயல். அதற்குப் பயன் வாய்மை. வாய்மை சிவசத்து. சீவன்முத்தரின் செயல்; விளம்ப விளம்பல், பணியைப் பணிதல், கருதக் கருதல், உரைக்க உரைத்தல், நணுக நணுகல், இசைய இசைதல், நுகர நுகர்தல், நினைய நினைத்தல், புணரப் புணர்தல், தொடரத் தொடர்தல், விரும்ப விரும்பல் என்றிங்ஙன மாதல் 'விளம்புமா விளம்பே' என்றற்றொடக்கத்துத் திருவிசைப்பாக்களின் இறுதிகளால் உணரப்படும். சீவன் முத்தர் சும்மா இருந்து சிவத்தை அநுபவிப்பர். சீவன் முத்தருக்கு இனி வினை இல்லை.

சீவன் முத்தருக்கு உடம்பு உள்ளதாயினும் அவருணர்வு, உடம்புவிட்ட பரமுத்தி நிலையிலேயே நிலைபெறும். சீவன் முத்தி, பரமுத்தியே. சிவம் இருந்தபடி இருக்கும்; அது விகாரமடைவதில்லை. அவ்வாறே திருவருளும் இருந்தபடி இருக்கும்; அதற்கு இரங்காமலிருக்க மாட்டாமை விகாரமற்ற இயல்பு. சிவம் குணி; திருவருள் குணம். திருவருள் திருமேனியாகச் சிவமேயாய முத்தான்மா, கள்ளத் தலைவர் துயர் கருதலாவது, திருவருள் இரங்கமாட்டாமலிரங்கத் தான் அதன்வழிப்பட்டு நிற்றல். முத்தான்மாவானது 'அலைவு அலையா அலை' என்று வைத்து உரைக்கப்பட்டது. சிவமேயாய சீவன் முத்தர் திருவருள் வெள்ளத்தில் மூழ்கித் திளைத்துக் கருணையே வடிவமாய்க் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி இருப்பர்.

**அண்டிய வமரர் தம்மை யாலமுண் டவன்றன் காப்பாய்**
**மிண்டிய மாயா வாதப் பேயினை யகலக் காய்ந்த**
**கண்டினுங் கனிந்த சொல்லின் கணபதிப் பிள்ளை யாசான்**
**பண்டித மணியின் பாத பங்கயங் கருத்துள் வைப்பாம்.**

**நல்லூர் ஆலயத்தின் தென்திசையில் பல நூற்றாண்டுகளாக எழுந்தருளியிருந்த தெண்டாயுதபாணி சுவாமிகள் ஆலயத்தின் நிருதிமூலையில் புதிதாக அமைக்கப்பட்ட பழனிமலைப் பிரகாரத்தில் 27.08.2008 அன்று பிரதிஸ்டை செய்து வைக்கப்பட்டார். அன்றைய தினம் திவ்ய மகா அபிஷேகம் இடம்பெற்றது.**

# தேர் - ஒரு வரலாற்று நோக்கு

பேராசிரியர் வி. சிவசாமி

மனிதவரலாற்றிலே தேர் பல்வேறு நோக்கங்களிற்குப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. அரசர்களும், உயர்வர்க்கத் தினரும், செல்வந்தர்களும் செல்லும் ஊர்தியாகவும், போர்ப்படைகளில் ஒன்றா கவும், தெய்வங்களின் ஊர்தியாகவும், சமய தத்துவப் பொருளை உணர்த்தும் சின்னம் ஒன்றாகவும் கலைக்களஞ்சியமா கவும் தேர் விளங்கி வந்துள்ளது.

தேர் எனில் தேர்ந்தெடுக்கப்பட்டது, அதாவது தேர்ந்தெடுக்கப்பட்ட உடமை எனவும் பொருள்படும். 'தேற்றி அம்பலம்' என்னும் சொற்றொடர் உயர்த்தப்பட்டுள்ள மண்டபம் எனப் பொருள்படும். இது போலவே தேரும் உயர்த்தப்பட்டுள்ள ஒன் றாகக் கருதப்படுகின்றது. தேரைக் குறிக் கும் 'ரத' எனும் பதம் அசைவது எனவும் பொருள்படும். அதாவது குறிப்பிட்ட வகை யில் அசையும் வாகனம் எனவும் கொள் ளப்படும்.

வரலாற்று நோக்கிலே பார்க்கும் போது, புராதன மேற்காசிய நாகரிகங் களிலே குறிப்பாக சுமேரிய, அசீரிய, ஹிற்றைற் நாகரிகங்களிலே தேர் ஒரு போர்ப்படையாகவும், ஊர்தியாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது. தென்னாசி யாவின் மிக மூத்த நாகரிகமான சிந்து சமவெளி நாகரிகத்திலே பிற்காலத்தேரின் முன்னோடிகளெனக் கொள்ளத்தக்க சிறு வண்டிகளின் உருவங்கள் குறிப்பாக அங்கு கிடைத்துள்ள முத்திரைகளிலே காணப்படுவதாகத் தொல்லியல் ஆய் வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். இக்காலத் தேர்கள் உலகியல், அல்லது சமயத் தொடர்புள்ளவையாக இருந்திருக்கலாம்.

இந்நாகரிகத்தை அடுத்துத் தோன்றிய வேதகால (கி.மு 2000-கி.மு 500 வரை) நாகரிகத்திலே தேர்கள் பற்றிய முக்கிய குறிப்புகள் வேதஇலக்கியத்திலே வந் துள்ளன. காலத்தால் முற்பட்ட இருக்கு வேதத்திலே இலேசாகச் செல்லக் கூடிய சில்லுகளைக் கொண்டதும், குதிரை களால் (2 அல்லது 4) இழுக்கப்பட்ட தேர்களிலே இந்திரன், அக்கினி, வருணன், சூரியன், உஷா, மருத்ஸ் முதலிய தெய் வங்கள் செல்லுவது பற்றிய வருணனை கள், குறிப்புகள் உள்ளன.

இத்தேர்கள் போருக்கும் சிறப்பாகப் பயன்படுத்தப்பட்டன என்பது இந்திரனைப் பற்றிய பாடல்களிலே தெளிவாகக் கூறப் பட்டுள்ளன. தெய்வங்களுக்குரிய அவிப் பாகம் தேரிலே கொண்டு வரப்படுவதும் குறிப்பிடப்பட்டுள்ளது. தேரின் சில முக்கிய மான பகுதிகள் குறிப்பாக அச்சு (அக்ஷ) இருக்கு வேதத்திலும், அதற்குப் பிற்பட்ட வேதங்களிலே சில்லுடைய முற்பகுதி, ரதத்தின் தலை (ரதசிரஸ்) போன்றவையும் ஆபத்தம்ப சுல்வ சூத்திரத்திலே தேரின்

சில முக்கிய பகுதிகளும், அவற்றின் அளவுகளும், முக்கோணத் தேர் போன்ற தேர் வகைகளும், தைத்திரிய சங்கிதையிலே ரதம் செய்வோர் (ரதகார) பற்றிய குறிப்புகளும் வந்துள்ளன. எனவே தேர் பற்றிய அறிவியல் வேதகாலத்திலே வளர்ச்சியடைந்துள்ளமையை அறியக் கூடியதாக உள்ளது. இத்தேர்கள் வீட்டுத் தேவைகளுக்கு மட்டுமன்றி போர்த்தேவைகளுக்கும், சமய நோக்கத்திற்கும் பயன் படுத்தப்பட்டுள்ளன எனக் கொள்ளலாம். பொன்மயமான தேர்கள் பற்றியும் இந் நூல்கள் குறிப்பிடுகின்றன.

வேதங்களிலே குறிப்பாக வேள்விகளுக்கான பொருட்களையும் (அவிப் பாகம் போன்றவற்றையும்) தெய்வங்களை ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்திற்குக் கொண்டு செல்வதற்கும் தேர்கள் நன்கு பயன்படுத்தப்பட்டன எனக் கூறப்பட்டுள்ளது. தெய்வங்களுக்கு அவிப்பாகத்தைக் கொண்டு செல்லும் தேரினை உடையவன் (ரதிர் அத்வராணம்) என அக்கினி பகவான் போற்றப்படுகிறார். தேர்சவாரி ஒரு முக்கியமான பொழுது போக்காகவும் வேதகாலத்திலே நிலவிற்று. அதேவேளையிலே தேர்ப்படையும் முக்கியமான ஒரு படைப் பிரிவாக விளங்கத் தொடங்கி விட்டது. இந்தியாவிலே நெடுங்காலமாக நிலவி வந்துள்ள நால்வகைப் படைகளில் ஒன்றாக தேரும் மத்திய காலம் வரை நிலவி வந்துள்ளது.

வேதங்களைத் தொடர்ந்து எழுந்த இராமாயணம், மகாபாரதம் ஆகிய இதிஹாஸங்களிலும், பின்னர் எழுந்த புராணங்கள், மகாகாவியங்கள் முதலியனவற்றிலும் தேர் பற்றிய விபரங்கள் இடம் பெற்றுள்ளன. தசரதன், ராமன். பஞ்ச பாண்டவர்கள், கர்ணன், துரியோதனன் முதலிய மன்னர்கள் சிறந்த தேரோட்டிகளாகவும் விளங்கினர். தேரினை ஓட்டுபவன் சூதன் என அழைக்கப்பட்டான். இவன் அரசருடைய முக்கியமான ஓர் அதிகாரியாகவும் ஆலோசகன் ஆகவும் வேதகாலம் தொட்டு விளங்கி வந்துள்ளான். தேர்ச்சாரதியாகவே ஸ்ரீ கிருஸ்ண பகவான் அருச்சுணனுக்குக் கீதோபதேசம் செய்து திருவருள் புரிந்தார். இறைவன் ஆன்மாக்களுக்கு என்றும் இவ்வாறே உள்ளத்திலிருந்து அருள்பாலிக்கிறார் என ஞானிகள் கூறுவர்.

பிற்காலத்திலே தேர் தெய்வங்களுடனும், திருவிழாக்களுடனும் பெரிய அளவில் பயன்படுத்தப்பட்டன. கௌடில்யரின் அர்த்த சாஸ்திரம் (சுமார் கி.மு 4-ம் நூ.) போர்த்தேவை, வீட்டுத் தேவை, சமய நோக்கம் ஆகியனவற்றிற்காகப் பயன்படுத்தப்பட்ட தேர்கள் பற்றிக் குறிப்பிடுகின்றது. கடைசியாக குறிப்பிட்டவற்றிலே வரும் கோவில் (தேவகிருஹம்), தெய்வச் சிலை (தைவதபிரதிமா), தெய்வங்களுக்கான கொடி (தெய்வதுவஜ), தெய்வங்களுக்கான திருவிழாக்கள் (தெய்வதேஜ்யயம்) முதலிய குறிப்புகள் மூலம் அக்காலத்தில் கோவில்கள், தெய்வச்சிலைகள் இவற்றோடு மிக நெருங்கிய திருவிழாக்கள் நிலவியமையை அறியக் கூடியதாக உள்ளது. இவை மேலும் ஓரளவு சமகால அசோகப் பெருமன்னரின் (கி.மு 3-ம் நூ.) சில கல்வெட்டுக்களாலும் உறுதிப்படுத்தப்படுகின்றன. அசோகர் பல விழாக்களைத் தடைசெய்த போதும், இத்தகைய விழாக்களைத் தடைசெய்ய வில்லை என அறியப்படுகின்றது.

மேலும் இவற்றிற்குச் சில காலத்திற்குப் பிற்பட்டதும் கலிங்கநாட்டிலே பேரரசை நிறுவியவனுமான ககரவேலன் எனும் மாமன்னன் பற்றி ஹாதிகும் என்ற இடத்திலே பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டொன்றின் படி (சுமார் கு.மு 2/1 நூ) அவன் தன்னுடைய ஆட்சிக் காலத்தின் பதினொராவது ஆண்டிலே கேதுபத்ர எனும் சமணத் தெய்வச்சிலையினைத் தேரிலே வைத்து பவனியிலே கொண்டு வந்தான் என அறியப்படுகின்றது. எனவே இந்து சமயத்தவர் மட்டுமன்றி சமண சமயத்தவரும் தேரினைப் பயன்படுத்தியமை குறிப்பிடற்பாலது.

மௌரியப்பேரரசு, கலிங்கப் பேரரசு காலத்திற்கு ஏறக்குறைய சமகாலத்திய சங்ககாலத்தில் தேர்கள் வீட்டுத் தேவைகள், போர்த்தேவைகளுக்குப் பயன்படுத்தப்பட்டமையினை அக்காலத்தில் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு எனும் தொகை நூல்கள் மூலம் நன்கு அறியலாம். வளவன் அல்லது பாகன் செலுத்தியதும், குதிரைகள் பூட்டியனவுமான தேர்கள் இவற்றிலே குறிப்பிடப்படுகின்றன. நெடுந்தேர் (உயரமானதேர்), பொற்றேர், கொடிஞ்சி நெடுந்தேர், கொடித்தேர், ஒளிமணி நெடுந்தேர், அணிகொள்தேர் போன்றவை இந் நூல்களிலே கூறப்பட்டுள்ளன. தேர் வன் கிள்ளி, தேர்வன் மலயமான், நெடுந்தேர் செழியன் போன்ற தமிழ் மன்னர்கள் தங்களுடைய பெயர்களுடன் தேர் எனும் பதத்தினையும் சேர்த்துப் பயன்படுத்தியமை குறிப்பிடற்பாலது. வள்ளலான பாரி எனும் மன்னன் காற்றிலே கொழுகொம்பின்றித் தத்தளித்த முல்லைக் கொடி படரத் தன் தேரை நிறுத்திவிட்டுச் சென்றான் எனப் போற்றப்படுகிறான்.

போர்ப்பாசறைகளிலே தேர் நன்கு மதிக்கப்பட்டது. அக்கால நால்வகைப் படைகளிலிதுவும் ஒன்றாகும். போர்க்களத்திலே தேரோர்கள் வழிப்பாடல்கள் பிரமாதமாக இசைக்கப்பட்டன. பின்தேர் குறவை, முன்தேர் குறவை நடனங்களைப் போர்வீரர் தேரின்தட்டுக்களில் நின்று ஆடினர்.

சங்ககாலத்திற்குச் சற்றுப் பிற்பட்ட காலத்திலே எழுந்த சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய நூல்களிலே தேர் பற்றிய கருத்துக்கள் மேலும் வளர்ச்சியடைவதைக்காணலாம். சித்திரத்தேருக்கு முன்னோடியான ஒரு வகைத் தேர் பற்றிச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகின்றது. பௌத்த தெய்வமான அருகனுக்குரிய தேர்விழா பற்றி இந்நூல் குறிப்பிடுகின்றது. எனவே பௌத்த சமயத்தவரும் தேர்த்திருவிழாவினை நடாத்தியமையை அறியலாம். மேலும் சிலப்பதிகாரம் நெடுந்தேர், கடவுள் தேர் முதலியனவற்றையும் குறிப்பிடுகின்றது. பின்னையது சூரியனுடைய தேராகும்.

சிலப்பதிகாரம் கூறும் இந்திர விழாவிலே முருகன் தேர் மீது பவனியிற் செல்வது கூறப்படுகின்றது. இங்கு கூறப்படும் தேர் சகடை அல்லது சட்டத்தேர் எனக் கொள்ளப்படுகின்றது. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் தேர் ஓடும் வீதி குறிப்பிடப்படுகின்றது. எனவே பல்லவர் - பாண்டியரின் மேலாதிக்கம் ஏற்படுமுன்பே (கி.பி 6-ம் நூ.) தமிழகச் சமூக சமய மரபிலே தேர் ஒரு குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் பெற்றுவிட்டது எனலாம். இக்காலத்தைத் தொடர்ந்து தமிழகத்திலே நிலவிய சோழப் பேரரசு, பாண்டியப் பேரரசு, விஜயநகரப் பேரரசு

- நாயக்கர் காலப் பகுதிகளிலும் தமிழகத்திலே தேர் நன்கு பரவலாகக் கோவில்களிலே பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. பிற்குறிப்பிட்ட காலத்திலே தான் பெருந்தொகையான பெரிய தேர்கள் கோவில்களுக்கு அமைக்கப்பட்டன. இக்காலப் பகுதிகளிலே தேர்கள் நன்கு பயன்படுத்தப்பட்டமை பற்றிச் சமகாலக் கல்வெட்டுக்களும், இலக்கிய நூல்களும் பெரும்பாலும் ஒரே முகமாகக் குறிப்பிடுகின்றன.

தேர்கள் பரவலாக அமைக்கப்பட தேரின் லக்ஷணங்கள் பற்றி விரிவாகச் சிற்ப நூல்கள் எடுத்துக் கூறுகின்றன. இவற்றுள்ளே மானசாரம், விஷ்வகர்ம வாஸ்து சாஸ்திரம், மயமதம், விஜய தந்திரம் ஆகியவற்றில் ரதலக்ஷணங்கள் பற்றி ஒவ்வோர் அத்தியாயம் உள்ளது. சில்பரத்தினம், ஸ்ரீதத்துவநிதி ஆகிய நூல்கள் கூடுதலாக விக்கிரகவியல் பற்றிக் கூறுவன. தேரில் இடம்பெறும் விக்கிரகங்கள் பற்றி இவையும் வேறுசில நூல்களும் எடுத்துக் கூறுகின்றன.

காலப்போக்கிலே தேர் முக்கியமாக சமயத்துடன் மிக நெருங்கிய இன்றியமையாத தொடர்புள்ளதாக விளங்கிற்று. தேரின் உலகியல் சார்பான பயன்பாடுகள் பெரும்பாலும் அற்றுப்போயின. அரசரும், சமூகத்தின் மேல் தட்டுக்களில் உள்ளோரும் பயன்படுத்தி வந்த தேர் காலப் போக்கிலே உலகனைத்தினையும் ஆக்கி அருள்வழங்கும் இறைவன் இறைவியின் ஊர்தியாகவே விளங்கத் தொடங்கிற்று. அதன்வடிவத்திலும் மாற்றம் ஏற்பட்டது. தேரில் இடம்பெற்றுள்ள சிற்பங்கள் குறிப்பிட்ட இறைவன் இறைவி பற்றிய புராணக் கதைகள், கோவில் வரலாறு பற்றிய கதைகள், தெய்வங்களின் திருவுருவங்கள் முதலியனவற்றைக் காட்சிப்படுத்துவன. இதனால் தேர்களிலே மிகநேர்த்தியான கலைவடிவங்கள் இடம்பெற்றன. தேரும் அதிலிடம்பெறும் சிற்பங்களும் குறிப்பாகச் சைவ, வைணவ சமய தத்துவக் கருத்துக்களைப் பிரதிபலிப்பன. தேர் மிக நேர்த்தியான கலைக்களஞ்சியமாகவும் திகழத் தொடங்கிற்று.

ஆகம முறைப்படி அமைக்கப்பட்ட கோவில்கள் வளர்ச்சியடைந்து, நித்திய நைமித்தியக் கிரியைகள் ஒழுங்காக நடைபெற்றுவர தேர்த்திருவிழா மிக முக்கியமான ஓரிடத்தைப் பெறலாயிற்று. அரசமாளிகையைக் குறிக்கும் கோவில் எனும் தமிழ்ச் சொல்லும், பிரசாதம் எனும் வடமொழிச் சொல்லும் ஒரே கருத்தினை (கோயில், அரண்மனை) உடையவை. தேவ எனும் சொல் தெய்வத்தையும் அரசனையும் குறிக்கும். ராஜோபசாரம் தெய்வத்திற்கும் அரசனுக்கும் பொதுவானது. இத்தகைய ஒருமைப்பாடு தெய்வத்திற்கும் அரசனுக்கும் இடையிலுள்ள நெருங்கிய தொடர்பை வலியுறுத்தும். இறைவனே, அரசர்கள் அனைவருக்கும் மேலான மன்னன்.

ஆகமங்கள் குறிப்பாகத் தேருடன் தொடர்பான கிரியைகளையே பெரிதும் குறிப்பிடுகின்றன. புதிதாக அமைக்கப்பட்ட தேர்களைப் பிரதிஷ்டை செய்தல், தேர்த் திருவிழா ஆகியன பற்றி இந்நூல்கள் விபரிக்கின்றன. ஏற்கனவே குறிப்பிட்டவாறு, தேர் மிகச் சிறப்பான சமய விழாவாக மலர்ச்சியடைந்தது. எனவே விஷ்ணு தத்துவ சங்கிதை எனும் நூலின் முன்னுரையில் வரும் ஒரு செய்யுள்
"ஞானிகளே! தேர் தெய்வமயமானது : தெய்வங்கள் அனைவரின் மயமாக

உள்ளது. அவ்வாறே சகல வேள்விகளின் மயமாக உள்ளது. (ரதம் தேவமயம் விப்ரா சர்வதேவ மயம் ததா சர்வ யஜ்ஞ மயம்)'' தேரின் முக்கியத்துவத்தினை இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளது. தேரைத் தெய்வமயம், வேள்விமயம் என மேம்படுத்திக் கூறுவதால் தேர் பிரபஞ்சத்தின் குறியீடாகக் கருதப்படுதல் தெளிவாகும். கோவில் அதன் அமைப்பிலும், அதிலுள்ள சிற்பங்கள், அங்கு நடைபெறும் வழிபாட்டு முறைகள் (கிரியைகள்) முதலியனவற்றால் தெய்வமாகவே திகழ்கின்றது. சிவஞானபோதம் ''ஆலயம் அரன் (சிவன்)'' எனக் குறிப்பிட்டிருப்பது நினைவு கூரற்பாலது.

கோவிலும் தேரும் பெரும்பாலும் ஒரே வடிவமும் சமய தத்துவ முக்கியத்துவமும் வாய்ந்தவை. கோவிலின் மூலஸ்தானத்திலுள்ள கருவறையும் அதன் மேலுள்ள விமானமும் தேரிலுள்ள பீடமும் மேலேயுள்ள விமானமும் நன்கு ஒப்பிடற்பாலன. கருவறையிலே இறைவன் விளங்குவது போலத் தேர்த் தட்டிலும் அவர் விளங்குகின்றார். ஒரு அறிஞர் குறிப்பிட்டவாறு போல "சில்லுகள் மூலம் அசையும் கோவில்போலத் தேர் விளங்குகின்றது".

"மனித உடம்பாகிய தேரில் ஆத்மா தேரோட்டி; புத்தி சாரதி; மனம் கடிவாளம் என்பதை நீ அறிவாய்" என யமதர்மராஜன் நசிகேதனுக்குக் கடோபநிஷத்திலே தேர் மூலம் ஆத்ம ஞானக் கருத்தினைப் புகட்டியுள்ளான்.

தேர்கள் பலவகையாக உள்ளன. இவற்றுள்ளே வைரத் தேர் (வைரமுள்ள மரத்தால் செய்யப்படுவது) முக்கியமானதாகும். இதுவே பரவலாகக் காணப்படுவதாகும். இது சித்திரத்தேர் எனவும் அழைக்கப்படும். இங்கும் சித்திரம் தேர்த் தட்டிலுள்ள தெய்வச் சிலைகளைச் சுட்டும் தேர் பற்றிய சில முக்கியமான குறிப்புகள் கம்பராமாயணத்திலே காணப் படுகின்றன. சட்டத்தேர் பிறிதொருவகையாகும். இதிலே மரச்சட்டங்கள் மேல் பகுதியிலே காணப்படும். தேர்த் திருவிழாவின் போது பயன்படுத்தப்பட்ட பின் இது குலைக்கப்படும். சிலவற்றிலே விமானம் நிரந்தரமாக இருக்கும். சகடை மற்றொரு வகையாகும். இது வண்டி போன்றதாகும். கோரதம் இன்னொருவகையாகும். இது முன்னர் பசுக்களால் இழுக்கப்பட்டதாகும். இது மக்களுடைய போக்குவரத்திற்கும் போருக்கும் பயன்படுத்தப்பட்டதாகும். இவற்றைவிடத் தங்கத்தேர், பொற்றேர் என்பனவும் குறிப்பிடற்பாலன. இவை தங்கம் (பொன்) அல்லது வெள்ளி முலாம் பூசப்பட்ட மரத்தேர்களே. இவற்றுடன் தெப்பத் தேரையும் சேர்க்கலாம். உலகியல் சார்பான தேர்கள் மக்கள் குறிப்பாக உயர்வர்க்கத்தினரின் போக்குவரத்து, பெரியோர், கலைஞர் முதலியோரைக் கௌரவிக்கும் முகமாக மேற்கொள்ளப் படும் பவனி, அரச பவனி, திருமணப் பவனி, மரணமடைந்தவர்க்கான பவனி, முக்கியமாக போர் முதலியவற்றிலே பயன்படுத்தப்பட்டுள்ளன.

கோவிலில் நடைபெறும் மஹோற்சவ காலத்திலே தேர்த்திருவிழா மிக முக்கிய மான திருவிழாக்களில் ஒன்றாகும். இதுவே மிக முக்கியமான திருவிழா எனவும் கொள்ளப்படுவதாகும். கொடியேற்றத்துடன் தொடங்கும் திருவிழா தேர்த் திருவிழாவின் போது தான் உச்ச கட்டம் அடையும். இறைவன் / இறைவியின் ஐந்தொழில்களில் இது அழித்த

லைக் குறிக்கும். இங்கு அழித்தல் என்பது ஆன்மாக்களைப் பீடித்துள்ள மலபந்தங் களை அழித்து அவை திருவருள் பெறு தற்கான தகைமை பெற்று வீடு பேறடைய வழி கோலப்படும். தேர்த்திருவிழா உட்பட அனைத்துத் திருவிழாக்களிலும் இறைவன் / இறைவி வீதிவலம் வந்து அனை வருக்கும் நயனதீக்ஷயளித்து அருள் பாலிக்கிறார். சிதம்பரம், மதுரை, ஸ்ரீவில்லி புத்தூர் முதலிய திருத்தலங்களில் நடை பெறும் தேர்த்திருவிழாக்கள் மிகச் சிறப் பானவை.

தேர்கள் கல், மரம், உலோகம் முதலிய பல்வேறு மூலப் பொருட்களால் அமைக்கப்பட்டு வந்துள்ளன. தேர்வடிவி லான கோவில்களும் கட்டப்பட்டன. இவற்றுள்ளே தனிப்பட்ட கற்பாறைகளைக் கொண்டு மாமல்லபுரத்திலே கி.பி ஏழாம் நூற்றாண்டிலே நரசிம்மவர்மன் எனும் பல்லவ மன்னன் அமைப்பித்த ரதங்கள் நன்கு குறிப்பிடத்தக்கவை. கல்லினாலே சில்லுகளும் தேர்களும் அமைக்கப் பட்டன. ஒரிசாவிலுள்ள மிக நேர்த்தியான சூரியன் கோவில் தேர் வடிவிலமைக்கப் பட்டுள்ளது. சூரியபகவானின் தேருக்கு ஒரு சில்லு உள்ளதெனக் கூறப்படு கின்றது. ஆனால் கி.பி 13-ம் நூற்றாண் டைச் சேர்ந்த இக்கோவிலுக்கு 24 சக்கரங்கள் உள்ளன. இக்கல் ரதத்திற்கு ஏழுகுதிரைகள் பூட்டப்பட்டுள்ளன. இதிலே சூரியனின் தேர்ச்சாரதியான அருணனைக் குறிக்கும் அருணஸ்தம்பம் உள்ளது.

இக்கோவிலிலுள்ள ஒவ்வொரு சக்கரமும் ஒவ்வொரு பட்சத்தினைக் குறிக்கும். ஒவ் வொரு மாதத்திற்கும் இவ்விருபட்சங்கள் உள்ளன. எனவே பன்னிரண்டு மாதங் களுக்குமான 24 பட்சங்களையும் இவை குறிப்பன. இந்தியாவின் பல்வேறிடங்களிலு முள்ள சக்கரங்களில் இவை அழகு வாய்ந்தவை. அசையாதிருப்பினும் அசை வது போலக் காட்சியளிப்பன. தேர்கள் வட்டம், சதுரம், எண்கோணம், ஆறு கோணம் முதலிய பல வடிவங்களில் அமைக்கப்படும். இவற்றுள் எண்கோண வடிவிலான தேர் திராவிட தேசத்திற்குச் சிறப்பானதாகக் கூறப்படுகின்றது.

தமிழகத்தைப் பொறுத்தமட்டில் மிகப் பரந்த அளவிலே பல தேர்கள் விஜய நகரப் பேரரசு - நாயக்க ஆட்சிக் காலத் திலே நன்கு அமைக்கப்பட்டன. மிகப் பெரிய தேர்களும் இக்காலகட்டத்தில் உருவாக்கப்பட்டன. தேர் அமைக்கும் முறை இக்காலகட்டத்தில் உச்ச நிலையடைந் தது. மிகப்பெரிய தேர்கள் ஸ்ரீவில்லிபுத் தூர், திருவிடைமருதூர், குறிப்பாக திரு வாரூர் முதலிய திருத்தலங்களில் உள்ள கோவில்களுக்கு அமைக்கப்பட்டன. உயரத்தைப் பொறுத்தமட்டிலே திரு வாரூர்த்தேரே மிகப் பெரிதாகும். திரு விடைமருதூரிலுள்ள தேர் வீதி மிகப் பெரிதாகும். "திருவாரூர் தேர் அழகு; திருவிடைமருதூர் தெருவழகு" எனும் மூதுரையும் உள்ளது.

இலங்கையிலும் பல கோவில்களுக்கு தேர்கள் அமைக்கப்பட்டுள்ளன. அமைக் கப்படுகின்றன இன்று கிடைத்துள்ள காலத்தால் முந்திய தேர் பறாளை விநாயகராலயத்தில் உள்ளது. இது சுமார் இரு நூற்றாண்டு பழமை வாய்ந்த தாகும். இந்தியாவிலுள்ள குறிப்பிட்ட கோவில் தேர்களைப் போலவே இங்கும் காமகலா சிற்பங்கள் இருந்தன.

இறைவன் சிறப்பாக எழுந்தருளி யிருக்கும் ஆலயமும், தேரும் வாழ்க்கை யினை முழுமையாகச் சித்திரிக்க வேண் டும். சிற்றின்ப வெள்ளத்தில் அமிழ்ந்தாது பேரின்ப நிலையினை ஆன்மா நாட வேண்டும் என்பது ஆன்றோர் கருத்தாகும். கோவில்களில் போலவே தேர்களிலும் புராணக் கதைகள், கோவிலின் வரலாறு, ஐதிகங்கள், அடியார்கள் வரலாறு முதலி யன வெவ்வேறு அளவுகளில் இடம்பெறும்.

எடுத்துக்காட்டுகளாக, நல்லூர் கந்த சுவாமி கோவில், நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோவில், மாவிட்டபுரம் கந்த சுவாமி கோவில், பொன்னாலை வரத ராஜப் பெருமாள் கோவில், காரைநகரி லுள்ள ஈழத்துச் சிதம்பரம் முதலிய கோவில்களிலே நேர்த்தியான நுண்ணிய சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. கடைசி யாகக் குறிப்பிட்டதில் சிவபிரானின் 108 கரணங்கள் சிறப்பாக இடம்பெற்றுள்ளன.

தொகுத்து நோக்கும் போது தேர் மிக நீண்ட வரலாறு கொண்டதாகும். பல்வேறு பயன்பாடுகளும் பரிமாணங்களும் கொண்ட அருங்கலைக்களஞ்சியமாகவும், சமய தத்துவக் கருத்துக்களை உள்ளடக்கிய தாகவும் விளங்குகின்றது. அத்துடன் மக் களுடைய சமூக, பொருளாதார பண்பாட்டு வாழ்வின் ஆக்கத்திறனாகவும் திகழ்கின்றது.

தேர் வரலாற்றுக் காலத்திலே சமய ரீதியில் இந்து சமயம், சமணம், பௌத்தம் சார்பாக குறிப்பாக இந்து சமய சார்பாக விளங்கி வந்துள்ளது. எனினும் கடந்த சில நூற்றாண்டுகளிலே கிறிஸ்தவ, இஸ் லாமிய சமய மரபுகளுக்கேற்றவாறு அவ் வச் சமயத்தினரால் ஓரளவு பயன்படுத் தப்படுகின்றது.

## அஞ்சேல் என்றபயம் தாராய்!

பசுஞ்சோலைப் பரவிமகிழ் பசுங் கிளியே
பிஞ்ஞகனைப் பேத மிலாப் பெற்றியனை
அஞ்சாமல் சென்றவனைச் சேவித் தென்
கொஞ்சு தமிழ்ப் பாடலை உரைத்து வாராய்!

மாடவீதி தனில் வாழும் மாடப்புறாவே
ஆடவல்லான் அன்பனான ஆரணன் தன்
தேடவொண்ணாப் பொற்பாதம் தந்து எனை
பாடவைக்க வேண்டுமென்று பகர்ந்து வாராய்!

பூஞ்சோலைப் பொற்கிளியே பூமடமார் புடைசூழ
கொஞ்சி மகிழ்ந்தாடி நிற்கும் கோலமாமுகனிடம்
அஞ்சியஞ்சி வாழும் நிலை எடுத்துச்சொல்லி
அஞ்சேலென் றபயம் தரக் கூறாயோ!

**திருமதி இந்திரா திருநீலகண்டான்**
**பம்பலப்பிட்டி**

# இந்துப் பண்பாட்டுச் சிந்தனைகளை உலக அரங்கில் பரப்பிய ஈழத்து இந்து சமயப் பெரியார்கள்

ப. கணேசலிங்கம
முதுநிலை விரிவுரையாளர்,
இந்துநாகரிகத்துறை, யாழ் பல்கலைக்கழகம்

இந்துப் பண்பாட்டின் அடிப்படை அம்சங்களை விளங்கிக் கொள்வதற்குப் பயன்படும் மூலநூல்களை ஆராய்வதிலும், பதிப்பதிலும், சிந்தனைகளைப் பரப்புவதிலும் மேல்நாட்டவர்கள் கொண்ட ஈடுபாடு அண்மைக்காலப் போக்கில் நாம் காணும் சிறப்பம்சங்களில் ஒன்றாகும். இத்தகைய முயற்சிகளில் ஈடுபட்டோரில் அமெரிக்க, ஆங்கிலேய, ஜேர்மனிய, பிரஞ்சு ஆகிய நாட்டைச் சேர்ந்த அறிஞர்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது.

ஈழநாட்டைச் சார்ந்த அறிஞர்களும் குறிப்பாக யாழ்ப்பாணப் பிரதேசத்தைச் சார்ந்த அறிஞர்கள் சைவப்பண்பாட்டுச் சிந்தனைகளை உலக அரங்கில் பரப்பி, ஈழநாட்டுக்கே புகழ் சேர்த்துள்ளார்கள். இவ்வறிஞர் பெருமக்கள் பண்பாட்டு மரபுகளை தமிழ், சமஸ்கிருதம் ஆகிய இரு மொழிகளில் மட்டுமல்லாது மேல்நாட்டவர்கள் அறிந்து கொள்ளும் விதத்தில் ஆங்கிலமொழி மூலம் அச்சிந்தனையைப் பரப்பி, மொழிபெயர்த்தும், விளக்கக் கட்டுரைகள் எழுதியும் பண்பாட்டுச் சிந்தனைகளை நன்கு பரப்ப வழிசெய்துள்ளார்கள். இந்தியச் சிந்தனை மரபுகளை வெளி உலகுக்கு பரப்பிய பெருமை வெளிநாட்டவர்கள், இந்திய நாட்டவர்கள், ஈழநாட்டவர்கள் ஆகிய முத்தரப்பினருக்கும் உண்டு.

சைவப் பண்பாட்டுச் சிந்தனை மரபுகளை தமிழகத்தில் பரப்பி வளர்த்த யாழ்ப்பாணச் சைவசமய அறிஞர்கள் தத்தமது சிந்தனைகளை தமிழ், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் மட்டுமல்லாது, ஆங்கிலமொழி மூலமும் வெளியிட்டு தமிழகச் சைவப் பண்பாட்டினை நன்கு வளர்த்து வந்திருக்கிறார்கள். சைவசமயத்தைப் பற்றிப் பிற இனத்தவர்களும், சமயத்தவர்களும் அறிந்து கொள்ளும் பொருட்டு நம்நாட்டு ஆங்கிலப் புலமை படைத்த இந்துசமயப் பெரியார்கள் சிலர் ஆங்கிலமொழியில் சைவசமய நூல்களையும் கட்டுரைகளையும் எழுதியுள்ளார்கள்.

இந்தியாவிலும் ஈழத்திலும் புகழீட்டிய சான்றோர்களில் சிலர் கிழக்கிலும், மேற்கிலும் மேற்கொண்ட பண்பாட்டுப் பணிகள் பற்றி ஆராய்வது அவசியமாகிறது. இந்தியாவில் சுவாமி விவேகானந்தர், டாக்டர் இராதாகிருஸ்ணன், ஸ்ரீஅரவிந்தர், வங்கக்கவிஞர் இரவீந்திரநாத்

தாகூர், அன்னிபெசன்ற் அம்மையார், சகோதரி நிவேதிதா போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். இலங்கையைப் பொறுத்தமட்டில் சேர் கு.முத்துக்குமார சுவாமி (1834-1879), சேர் பொன்.இராம நாதன் (1851-1930), சேர்.பொன்னம்பலம் அருணாசலம் (1853-1924), மல்லாகம் வி.கனகசபைப்பிள்ளை (1855-1906), குகதாசர் ச.சபாரத்தின முதலியார் (1863-1922), கலாயோகி டாக்டர் ஆனந்தகுமார சுவாமி (1877-1947), புலோலி சைவப் பெரியார் சு.சிவபாதசுந்தரம் (1878-1953), மட்டக்களப்பு சா.சுவாமி விபுலானந்த அடிகள் (1892-1947), திருமதி இரத்தினா நவரத்தினம் (1911-1993), கலைப்புலவர் க.நவரத்தினம் (1898-1962) ஆகியோரின் பணிகள் குறிப்பிடற்பாலன. கிழக்குலகில் மாத்திரமன்றி மேற்குலக மக்களும் நன்கு பாராட்டும் வகையில் இப்பெரியார்கள் இந்துப் பண்பாட்டு விழுமியங்களை உலகளாவிய நிலையில் மேன்மையுறச் செய்தனர்.

கி.பி 1857இல் சேர் கு.முத்துக் குமாரசுவாமி அவர்கள் றோயல் ஏசியாற்றிக் கழக இலங்கைக் கிளைச் சஞ்சிகையில் "***Synopsis of Saiva Siddhanta***" **(சைவசித்தாந்தச் சுருக்கம்)** என்ற தலைப்பில் அமைந்த கட்டுரை ஒன்றை எழுதியுள்ளார்கள். ஆங்கிலத்தில் சைவசித்தாந்தம் பற்றி முதன் முதலாக வெளியாகிய ஆராய்ச்சி விளக்கக் கட்டுரை இதுவேயெனக் கூறப் படுகின்றது. 'The Culture of the Soul among the Western Nations' (மேலை நாட்டார் உள்ளத்தின் பண்புநிலை) என்ற சேர் பொன்.இராமநாதனது நூல் சைவ சித்தாந்த அடிப்படையில் எழுதப்பட்டதென ஜேர்மன் நாட்டைச் சார்ந்த சமயப் பிரசாரகராகிய எச்.டபிள்யூ.சோமறஸ் (H.W.Schomerus) என்னும் பெரியார், தான் இந்தியாவில் வாழ்ந்த காலத்தில், **சைவசித்தாந்தம் *(Saiva Siddhanta)*** என்னும் தலைப்பில் ஜேர்மன் மொழியில் 1912ஆம் ஆண்டில் எழுதிய நூலில் கூறியுள்ளார். மேலும் அழைப்பிற்கு இணங்க அங்கு சென்ற சேர் பொன்.இராமநாதன் ஆற்றிய சொற்பொழிவுகள் யாவும், சைவசித்தாந்த அடிப்படையில் அமைந்தவை என்பது முக்கியமாக இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இந்துசமய தத்துவக் கருத்துக்களை உலகளாவிய ரீதியிலே முன்னெடுத்த மூத்த சமய அறிஞர்களிலும் சேர் பொன் இராமநாதன் குறிப்பிடத்தக்கவர். சமகாலத்திலே சுவாமி விவேகானந்தர் உலகளாவிய ரீதியிலே இந்துசமயம் தலைநிமிர்ந்து நிற்கும் வகையில் சிக்காக் கோவில் நடைபெற்ற சர்வதேச சமய மகாநாட்டிலும், பின்னர் செய்த சொற்பொழிவுகளிலும், பிறவற்றாலும் சிறப்புப் பெற்றார். அவர் பெரும்பாலும் வேதாந்தத்தையே முன்வைத்தார். ஆனால் இராம நாதன் தமது அமெரிக்க, மேற்கு ஐரோப்பிய பிரயாணங்களின் போது, சைவசமய சிந்தனைகளையும் முன்வைத்தார். விவேகானந்தரைப் போலவே இவரையும் பல மேல்நாட்டுச் சிஷ்யர்கள் நாடி வந்து ஞானோபதேசம் பெற்றனர். அப்படியானவர்களில் அமெரிக்கரான மைரன்பெலப்ஸ், அவுஸ்திரேலியரான எல்.ஆர்.ஹரிசன் அம்மையார் போன்றோரைக் குறிப்பிடலாம்.

ஆங்கிலமொழி மூலம் சைவசமய, தமிழர்களின் தொன்மையான சிறப்புக்களை உலகறியச் செய்தவர்களுள் யாழ்ப்பாணத்து சைவத்தமிழறிஞர்களுள் மல்லாகம் வி.கனகசபைப்பிள்ளை (1855-

1906) குறிப்பிடத்தக்கவர். பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே வி.கனகசபைப் பிள்ளையின் சிந்தையில், தமிழ்மொழியின் பழமையான இலக்கியச் சிறப்பையும் தமிழர்களின் தொன்மையான உண்மை வரலாற்றையும் ஊரறிய, உலகறியச் செய்ய வேண்டுமென்ற மன எழுச்சியால், **மெட்ராஸ் ரெவ்யூ** ***(Madras Review)*** என்ற ஆங்கிலப் பத்திரிகையில் 1895 முதல் 1901ஆம் ஆண்டுவரை "**1800 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழர்**" ***(The Tamils Eighteen Hundred Years Ago)*** என்ற ஓர் அரிய தொடர் கட்டுரையை எழுதினார். வரலாற்றுணர்வுக்கும், கல்வெட்டாய்வுக்கும், இலக்கிய சமய சமுதாய வாழ்வின் ஞானச் செறிவுக்கும், பண்பாட்டறிவுக்கும் உற்ற துணையாய், தூண்டுகோலாய் அமைந்த கட்டுரையை, கற்றறிந்த சான்றோர் போற்றி, கனகசபைப்பிள்ளையின் நுண்மாண் நுழைபுலத்தை வியந்தனர். இது போன்றதோர் ஆய்வு இதுவரை வெளிவந்ததில்லை என்றும், இதுபோலொரு கருத்துரையால் தமிழின், தமிழரின் பெருமையை உலகறிந்தது என்றும் தமிழ் கூறும் நல்லுலகம் உவந்து பாராட்டியது.

இந்துசமயப் பெரியார்களுள் குகதாசர் ச.சபாரத்தினமுதலியார் குறிப்பிடத்தக்கவர். இவர் தமிழிலும், ஆங்கிலத்திலும் புலமை நிறைந்தவராக விளங்கினார். இந்துசமய வளர்ச்சிக்கு இவர் அரிய பல தொண்டுகள் செய்துள்ளார். சித்தாந்த சைவ அறிவைப் பரப்பி வளர்க்கும் பொருட்டு "சித்தாந்த தீபிகை" என்ற ஆங்கிலச் சஞ்சிகை ஒன்றைத் தென்னாட்டில் திறம்பட நடாத்தி வந்தவர் சைவத்திரு. ஜே.எம்.நல்லசாமிப்பிள்ளை அவர்களாவர். அச்சஞ்சிகையில் சைவப் பெரியாராகிய கொக்குவில் குகதாசர் ச.சபாரத்தின முதலியார் சைவம் பற்றிப் பல கட்டுரைகள் எழுதியுள்ளார்கள். இவர் ஆங்கிலத்திலே ***Essentials of Hinduism*** (இந்து சமயத்தின் பிரதான அம்சங்கள்), ***Philoso-phical Saivaism, Life of Thirugnana-sambanthar*** என்ற நூலும், பண்டைத் தமிழர் சமயம் வைதீக சைவமே என்ற கொள்கையைத் தக்க பல ஆதாரங்களுடன் விளக்கிக் காட்டி, ***Religion of the Ancient Tamils*** **(பண்டைத் தமிழர் சமயம்)** என்ற நூலும் சைவ உலகம் முன்வரிசையில் வைத்தெண்ணப்பட வேண்டிய நூல்களாகும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில், சார்லி பிரட்லாப் (Charley Bradlaugh) போன்ற ஆங்கில எழுத்தாளர் பலர், பொருள் முதல்வாதக் கொள்கையை (Materialism) முன்னிறுத்தி கடவுள் மறுப்புக் கொள்கையைப் (நாத்திகத்தை) பரப்பினார்கள். இதனை எதிர்த்துப் பல கட்டுரைகளை இளமையிலே சபாரத்தினமுதலியார் எழுதினார். இக்கட்டுரைகள் பின்னர் ஈசுரநிச்சயம் (1889) என்ற பெயரில் நூலாக வெளிவந்தது. சபாரத்தின முதலியாரின் நூல்கள் பலவுக்கும் முக்கிய காரணமாக அமைந்தது, அன்றுள்ள பிற மதத்தவரின் (கத்தோலிக்கரின்) சைவநிந்தனையேயாகும்.

அவர்களின் அவதூறுகளையும் பொய்புனைந்த கட்டுரைகளையும் எதிர்த்துத் தர்க்கரீதியாகப் பல கருத்துக்களை சபாரத்தின முதலியார் முன் வைத்து, இந்துமத உண்மையினை நிலைநாட்டினார். இவற்றில் விஞ்ஞான ரீதியாக எழுதப்பட்ட கட்டுரைகளும் உண்டு. முதல் குறிப்பிட்ட நூலில் உள்ள Conflict with

Science என்ற கட்டுரைகள் இவரின் விஞ்ஞான நோக்குக்கும் அறிவுக்கும் நல்லதொரு எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

அருள்மயமான இந்தியக் கலைகளின் தத்துவத்தை விளக்குவாரற்று ஒளியிழந்து இருந்தகாலை அதனை ஆராய்ந்து அகிலம் அறியச் செய்த பெருந்தகை, கலாயோகி டாக்டர் ஆனந்த குமாரசுவாமி அவர்களாவர். அன்னாரது ஆராய்ச்சித் திறத்தினால் தான் உலகம் இன்று இந்தியக்கலையை, சமயத்தை, பண்பாட்டைப் போற்றுகிறது. எனினும், இச்சீரிய பணியைச் செய்த அறிஞருக்கு உரிய மதிப்பைப் கொடுக்க இந்தியக் கலை விற்பன்னர்கள் தவறிவிட்டனர். தமிழுக்கு ஓர் ஆறுமுகநாவலரையும், தமிழிசைக்கு ஒரு விபுலானந்தரையும் கலைகளுக்கு ஓர் ஆனந்தக் குமாரசுவாமியையும் அளித்தது ஈழத்தமிழகமாகும்.

கலாயோகி ஆனந்தக்குமாரசுவாமி அவர்கள் இந்துக் கலைக்கோட்பாடுகளை இந்திய, இலங்கை மக்களுக்கு மட்டுமல்லாது சர்வதேச மக்களும் உவந்து நயக்கும்படி அச்சிந்தனைகளை ஆங்கில மொழி மூலம் எழுதி வெளியிட்டார். கலாயோகி அவர்கள் கலைகள் மூலம் சமயத்தையும் ஆன்மீகத்தையும் வளர்க்க முயன்றதே பிரதான பணியாக இருந்தது. இந்துப் பண்பாட்டுப் பரிமாணத்தை வெளி உலகுக்கு அறிமுகம் செய்த நூல்களுள் அவரது **சிவானந்த நடனம்** என்ற நூல் ***(The Dance of Siva)*** குறிப்பிடத்தக்கது.

புலோலிச் சைவப்பெரியார் சு.சிவபாதசுந்தரம் அவர்களால் எழுதப்பட்டு **இலண்டனில்** அச்சிடப்பட்டு வெளியாகிய, ***(Saiva School of Hinduism)*** **இந்துசமயத்தில் சைவக் கொள்கை)** என்ற நூலும், ***(Glories of Saivaism)*** **சைவத்தின் மாட்சி** ஆகிய இரு நூல்களையும் யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை வெளியிட்டது. 1948ஆம் ஆண்டில் சைவப்பெரியார் சு.சிவபாத சுந்தரம் அவர்களை தருமபுர ஆதீனத்தினர் தமிழ்நாட்டுக்கு அழைப்பித்து சைவத்திரு. ஜே.எம்.நல்லசாமிப்பிள்ளை அவர்களது சிவஞானசித்தியார் மொழி பெயர்ப்பைத் திருப்பிப் பார்வையிடுவித்துத் திருத்தியும், புதுப்பித்தும் வெளியீடு செய்தனர். ***An Outline of Sivagnanabotham with a Rejoinder to a Christian Critic -1951*** என்ற இவரது வெளியீடு, சமய தத்துவம் பயிலும் யாவரும் கட்டாயமாகக் கற்க வேண்டிய நூலாகும்.

தர்க்க ரீதியாகவும் தெளிவாகவும் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட ஒரு நூல் "***The Saiva School of Hinduism***". இதனை இங்கிலாந்திலுள்ள "***George Allen and Unwin Ltd***" என்னும் உலகப் புகழ்பெற்ற பிரசுர நிறுவனம் 1934இல் பதிப்பித்தது.

கொக்குவில் ச.சபாரத்தினமுதலியார் போன்று சிவபாதசுந்தரமும் அன்றிருந்த கத்தோலிக்க, கிறிஸ்தவ மதத்தினரின் சைவத்திற்கெதிரான கருத்துக்களையும் பிரசாரங்களையும் மறுப்பதற்காக எழுதியவை பல. வயலெற் பரஞ்சோதி என்ற பெண்மணி தனது முனைவர் பட்டத்திற்கான ஆய்வுப்பொருளாக "**சைவ சித்தாந்தம்**" ***(Saiva Siddhanta)*** என்ற தலைப்பில் எழுதினார். இது நூலாக வெளிவந்தது. பிறமதத்தினரால் முதன் முதல் சைவசித்தாந்தத்தில் செய்யப்பட்ட முனைவர் பட்டத்துக்கான ஆய்வு இதுவாகும். இதில் பல தவறான சித்தாந்தத்

துக்கு முரணான கருத்துக்கள் இருந்தன. இதற்கு ஒரு மறுப்பெழுதி உண்மையை விளக்கத் தகுந்த அறிஞர் சிவபாதசுந் தரமே என்று தமிழகத்திலுள்ள தருமபுர ஆதீனம் கருதியது. இந்த ஆதீனத்தின் வேண்டுகோளின்படி அவர் எழுதிய நூல். "***An Outline of Sivagnanabodham with a rejoinder to a Christian Critic***" இதுவும் அவரின் பிறநூல்களும் கட்டுரைகளும் பல நூல்களை ஆய்ந்து சிந்தனைத் தெளிவுடன் எழுதப்பட்டவை.

சுவாமி விபுலானந்தர் இந்திய நாட்டுத் தமிழகத்தில் வாழ்ந்த காலப் பகுதியிலே ஸ்ரீஇராமகிருஷ்ண விஜயம் எனும் தமிழ் இதழுக்கும், வேதாந்த கேசரி எனும் ஆங்கிலத் திங்கள் வெளியீட்டிற்கும் ஆசிரியர் ஆனார். சுவாமிகளின் பேரறிவுத் திறத்தையும் பெருங்கருணை இயல் பினையும் ஸ்ரீ இராமகிருஷ்ணமிஷன் முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டது.

தமிழ், ஆங்கிலம், வடமொழி ஆகியவற்றுடன் இலத்தீன், யவனம், வங்கம், சிங்களம், அரபு முதலாய பன் மொழிப் புலமை பெற்றிருந்த சுவாமி விபு லானந்தர், ஆங்கில வாணி, விவேகானந்த ஞான தீபம், கர்மயோகம், ஞானயோகம் முதலிய பல மொழிபெயர்ப்பு நூல்களை ஸ்ரீ இராமகிருஷ்ண மடாலயத்தின் வாயி லாக வெளியிட்டுள்ளார். பிரபுத்தபாரத எனும் இதழிற்கு ஆசிரியராக சுவாமிகள் இருந்தார்.

மெய்கண்ட சாத்திரங்கள் பதின் னான்கினையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பதுடன் சுவாமி விவேகானந்தர் வேதாந்தக் கொள்கைகளை மேலை நாட்டில் பரப்பியது போன்று, சைவசித் தாந்தக் கொள்கைகளையும் அங்கு பரப்பும் பணிகளில் ஈடுபட்டுழைக்கும்படி தருமை ஆதீனத்தில் அருளாட்சி புரிந்து வந்த இருபத்தைந்தாவது குரு முதல்வர் கைலைக்குருமணி அவர்கள், விபுலானந்த அடிகளை 1944 ஆம் ஆண்டில் கேட்டி ருந்தார்கள். விபுலானந்த அடிகளும் அப் பணியில் ஈடுபட இசைவுபட்டு அதற்கேற்ப அம் முயற்சிகளில் ஈடுபட இருந்தனர் எனவும் அதற்கிடையில் அவர் மரணித்து விட்டார் எனவும் அறியமுடிகின்றது. விபு லானந்த அடிகள் மேற்கொள்ளவிருந்த முயற்சி கைகூடியிருப்பின், சைவசித்தாந்த அடிப்படையிலமைந்த விபுலானந்த சபை கள் பல உலகநாடுகளில் தோன்றியிருக் கக் கண்டு சைவ உலகம் உவந்து நயந் திருக்கும் என்பதில் எவ்விதமான ஐயமு மில்லை.

திருமதி இரத்தினா நவரத்தினம் அவர்கள் ஈழத்து - யாழ்ப்பாணத்தில் பிறந்தார். இந்தியா - சென்னை, அண்ணா மலை, இலண்டன் பல்கலைக்கழகங்களில் கல்வி பயின்றார். ஈழத்தில் கல்வித் துறை யில், கல்விப் பணிப்பாளராகப் (Director of Education) பணியாற்றினார். உலக ளாவிய கருத்தரங்குகள், பலவற்றில் பங்குபற்றி இந்துப் பண்பாட்டுச் சிந்தனை களை உலக அரங்கில் பரப்பிய ஈழத்து பெண்புலவர் என்ற சிறப்பினைப் பெற்றவர். அம்மையார், நாவன்மை மூலமும் மொழிப் புலமை மூலமும் இந்துப் பண்பாட்டுச் சிந்தனைகளைப் பரப்பி சிறந்த சிந்தனை யாளராக விளங்கினார்.

அம்மையார் எழுதிய நூல்களாக "***Thiruvachakam - the Hindu Testament of Love***", "***The Vision of Siva in Periya-puranam***", "***Siddhanta Sivam in Essence***

***and Manifestation***", ***Kartikeya - the Hindu Testament of Love***" என்பன விளங்குகின்றன. ஆங்கிலத்தில் திருவாசகத்தை முதன்முதல் 1900ஆம் ஆண்டில் மொழிபெயர்த்தவர் டாக்டர் ஜி.யு.போப். இந்நூலின் மறுபதிப்பு சென்னைப் பல்கலைக்கழகத்தாரால் வெளியிடப்பட்டது. 1934ஆம் ஆண்டில் வேதமுத்து என்பவரினால் திருவம்மானையும், திருச்சாழலும் மொழிபெயர்க்கப்பட்டன. இதனை வெளியிட்டவர்கள் சென்னை கிறிஸ்தவ சங்கத்தவர். 1958ஆம் ஆண்டில் கே.எம். பாலசுப்பிரமணியத்தின் மொழிபெயர்ப்பு வெளியாகியது. இவ்வரிசையில் 1963ஆம் ஆண்டு திருமதி இரத்தினா நவரத்தினம் என்பவரால் திருவாசக விளக்கம் என்னும் நூல் வெளியிடப்பட்டமை இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

திருமதி இரத்தினா நவரத்தினம் ஆங்கிலத்தில் எழுதிய 256 பக்கங்களைக் கொண்ட திருவாசக விளக்கம் என்னும் நூல் பம்பாய் பாரதிய வித்தியாபவனில் வெளியிடப்பட்டது. சில பாடல்களின் மொழிபெயர்ப்பும், பிற பாடல்களின் விளக்கமும் சேர்ந்து திருவாசகம் எவ்வாறு சிறந்த ஒரு பக்தி நூல் ஆகின்றது என்பதனை நயம்படச் சிறப்பாக எடுத்துக் காட்டும் நூல் இதுவாகும். இவ்வம்மையாரது "***A New Approach to Tiruvachagam***" ***1971*** இல் அண்ணாமலைப் பல்கலைக்கழக இரண்டாம் பதிப்பாக வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்துப் பண்பாட்டுச் சிந்தனைகளை உலக அரங்கில் பரப்பியவர்கள் வரிசையில் யாழ்ப்பாணம் - வண்ணார் பண்ணையிலே தோன்றிய கலைப்புலவர் க.நவரத்தினம் முக்கியமான இடத்தினை வகிக்கின்றார். யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் ஏறக்குறைய முப்பத்தெட்டு ஆண்டுகள் வரை ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்தவர். "**கலாநிலையம்**" என்னும் இலக்கிய வளர்ச்சித் தாபனத்தினை யாழ்ப்பாணத்தில் நிறுவி "**ஞாயிறு**" என்னும் உயரிய செந்தமிழ்த் திங்கள் வெளியீட்டினைச் சிறந்த முறையில் வெளியிட்டு வந்தவர்.

கலைப்புலவரின் நூல்களை முக்கியமாக சமயம், கலை, வாணிபத்துறை என முத்திறத்திற் காணலாம். சமய நூல்களாக ***Bhagavat Gita - a Study Advaitavedanta, Saiva Siddhanta, Hindu Temple Reform, Hinduism in Ceylon from the earliest times*** ஆகியன விளங்குகின்றன. ஆங்கிலமொழி மூலம் வெளியிடப்பெற்ற இந்துக்கலை நூல்களாக ***Arts and Crafts of Jaffna, Development of Art in Ceylon, Religion and Art, A First Book of Indian Music, Veena Tutor*** ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

தொகுத்து நோக்கின் ஈழநாட்டைச் சார்ந்தவர்களும் குறிப்பாக யாழ்ப்பாணத்தைச் சார்ந்த இந்துசமய அறிஞர்கள் இந்துப் பண்பாட்டுச் சிந்தனைகளை தென்னகத்தில் பரப்பிப் பணிசெய்ததோடு மட்டுமல்லாது இந்தியநாட்டு இந்துப் பெரியார்களுக்கு இணையாக உலக அரங்கில் இந்துப் பண்பாட்டுச் சிந்தனைகளைப் பரப்பி அதனது வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் காலந்தோறும் உறுதுணையாக இருந்து வந்ததை நூல்கள் வாயிலாக அறிய முடிகிறது.

## உசாத்துணை நூல்கள்


1. கோபாலகிருஸ்ணஐயர், ப — **கிழக்கிலும் மேற்கிலும் இந்துப் பண்பாடு - சில அண்மைக்காலப் போக்குகள்**, லீலாவதி இராமநாதன் பெருமாட்டி நினைவுப்பேருரை, யாழ்.பல்கலைக்கழகம், 1993.

2. சைவசமயம் — க.பொ.த. (சாதாரணம்) பரீட்சைப் புதிய பாடத்திட்டத் தொகுதி, விவேகானந்தசபை, கொழும்பு, 1978.

3. இராஜசேகரன், இரா. — சைவப்பெருவெளியில் காலம், (முதல்தொகுதி) நர்மதா பதிப்பகம், தி.நகர், சென்னை 2003.

4. Muttucumaraswamy, V. — ***Founders of Modern Ceylon (SriLanka), Eminent Tamils***, Vol. Parts I&II, Umasiva Pathippakam, Jaffna, 1973.

5. Muttucumaraswamy, V — ***Some Eminent Tamils, Writers, and other Leading Tigures (19th to 20th Centuries)***, Department of Hindu Religious & Cultural Affairs. Colombo, 1992.


## சிங்கார வேலா வருவாய்

முருகா முருகா முருகா
மயிலின் மீது வருவாய்
அழகா தமிழின் தலைவா
அன்பே வடிவாய் வருவாய்

இன்பத் தமிழின் சுவையே
இனிமை சேர்க்க வருவாய்
கந்தா கதிர் வேலவனே
கருணை பொழிய வருவாய்.

தேவர் போற்றும் பதியே
தேசம் காக்க வருவாய்
தெய்வானை வள்ளி மணவாளா
தெய்வீகக் கோலமுடன் வருவாய்.

வேலைக் கைதழுவும் குமரா
வேதனை தீர்க்க வருவாய்
சின்ன சிரிப்பு சிரிக்கும்
சிங்கார வேலா வருவாய்.

**திருமதி கிருஸ்ணசாமி கிரிசாம்பாள்**
**மானிப்பாய்.**

# தேரடியில் தேர்ந்த சித்தர்கள்

**மயில்வாகனம் சிவயோகசுந்தரம்** (நல்லூரான் சிவா)

பொஸ்ரன், அமெரிக்கா.

ஈழநாடு செய்த தவப்பயனாக இரு பதாம் நூற்றாண்டில் பல சித்தர்கள், யோகியர் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்தார்கள். பெரும்பாலும் பெரியகடை, கொழும்புத் துறை, நல்லூர், தீவகம், கைதடி போன்ற இடங்களில் அவர்களது நடமாட்டம் அதிகமாக இருந்தது. இருந்த போதிலும் நல்லூர்க் கந்தனையே கூடுதலாக தங்கள் முதல்வனாக கைக்கொண்டனர். நல்லூரான் வீதியையும் தேரடியையும் தங் களது ஞான ஈடேற்றத்திற்கு உறுதுணை யாகக் கொண்டனர்.

தேரடி என்றதும் யாழ்ப்பாண மக் களுக்கு - சிறு குழந்தைகளுக்குக் கூட நல்லூரான் தேரடியே நினைவில் நிற்கும் கடையிற் சுவாமிகள், செல்லப்ப தேசிகர், யோக குருநாதன், மார்க்கண்டு சுவாமி கள், சோல்பரிப் பிரபுவின் மகன் சந்த சுவாமிகள் ஆகிய யோகிகள் தேரடியை நாடி தங்கள் ஆன்மீக தாகத்தைத் தீர்த்த வர்கள்.

உயர் நீதிமன்ற நீதியரசரான முத்தி யானந்தா என்ற இயற்பெயருடைய கடை யிற் சுவாமிகள் ஒருமுறை ஒரு கைதிக்கு தூக்குத் தண்டனை விதிக்க நேரிட்ட போது "நானார், இவனார், இவனுக்கு, தூக்குத் தண்டனை விதிக்க நானார்" எனக் கூறி உத்தியோகத்தைத் துறந்து இந்தியாவிலிருந்து நேரடியாக யாழ்ப் பாணம் வந்து பெரிய கடையிலும் நல்லூர் வீதியிலும் நடமாடினார். பெரும் பாலும் மாலைவேளைகளில், நல்லூர் வீதியைச் சுற்றி ஓடுவார். அவர் அப்படி ஓடும்போது அடியார்கள், நோயாளர், பிணியாளர் எனப் பலரும் அவர் பின் னால் ஓடுவார்கள். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பிரச்சனை இருக்கும். சிலர் மேல் உமிழ் நீரால் துப்புவார். அந்தக் கணமே அவர்களின் பிணி அகலும். சிலருக்கு தன்கையில் அகப்பட்டதைக் கொடுப்பார். அப்படிப் பெற்றவர்கள் தாங் கள் வந்த காரியம் நிறைவேறும் என்ற துணிவுடன் திரும்புவர். ஒருமுறை பெரிய வர்த்தகர் கடையிற் சுவாமிகளுக்கு பட்டுப் பீதாம்பரத்தைப் போர்க்க, அதை வீதியில் இருந்த பிச்சைக்காரனுக்குப் போர்த்தி "நீ முந்தின முந்தின பிறப்பு நேபாள மகாராசா" எனக் கூறி ஓடிவிட்டார். இப்படி யாக நல்லூரை வட்டமிட்ட கடையிற் சுவாமிகள் கண்ணில், கைவிலங்கு மாட்டப்பட்ட நிலையில் செல்லப்பர் தென் பட்டார். செல்லப்பரை உற்று நோக்கிய கடையிற் சுவாமிகள் "இவனுக்கு பைத்தி யம் முத்திவிட்டது அவிழ்த்து விடுங்கள்" எனக் கூற அவரது உறவினர்கள் விசர் செல்லப்பரின் விலங்கை அகற்றினர். செல்லப்பருக்கு வெற்றிலையில் ஒரு ரூபா காசும் தலையில் குடையையும் பிடித்து 'ஓடடா' என ஆசீர்வதித்தார். செல்லப்பர் தேரடியை தனது நிரந்தர வதிவிடமாக்

கினார். ஆனால் அவர் யாரென ஒருவராலும் அறிய முடியவில்லை. விசர்ச் செல்லப்ப ராகவே நல்லூர் வீதிகளில் உலாவினார்.

ஒவ்வொரு நாளும் பாதிச் சாமத்தில் எழுந்து யாருமில்லா வேளையில் நல்லூர் மூலஸ்தானத்தைப் பார்த்து "பரமபிதாவே பரமபிதாவே, என அலறுவார். சிலவேளை களில் நல்லூர் வீதியில் சமைத்துச் சாப் பிடுவார். மறுவேளைகளில் வயிற்றைப் பார்த்து "நீ இன்று பட்டினி" எனக் கூறி குருவி காகம் போன்ற பறவைகளுக்குக் கொடுத்து ஆரவாரமாக இருப்பார்.

கொழும்புத்துறை வாசிகளுடன் ஒரு முறை யோகநாதன் நல்லூரை வணங்கி தேரடிப்பக்கம் போனார். யோகநாதனை உற்றுநோக்கிய செல்லப்பர் "யாரடா நீ பாரடா உள் தேரடா உள்" உன உறுமி னார். இந்த மந்திர உபதேசத்தைக் கேட்ட யோகநாதன் அன்றே அருளைப் பெற்றார். செல்லப்பா சுவாமிகளை அறியும் பேறு யோககுருநாதனுக்கே கிட்டியது. செல் லப்ப சுவாமிகளைப் பற்றி யோகசுவாமி கள் மிகத் தெளிவாக நற்சிந்தனையில் கூறியுள்ளார். செல்லப்பருக்கு குருவு மில்லை சீடனுமில்லை. தேவரும் மூவரும் அறியா ஒருவன் என்போல உருத்தாங்கி வந்திருக்கிறான். யோகசுவாமிகளுக்கு மகாவாக்கியங்களான "ஒரு பொல்லாப்பு மில்லை, எல்லாம் எப்பவோ முடிந்த காரியம், நாமறியோம், முழுதுமுண்மை, என்பவை தேரடியில் வைத்து வழங்கப் பட்டது. செல்லப்பர் ஒருவருக்கும் தமது கோலத்தை பிடி கொடுக்கவில்லை. அவர் நாற்பது வருஷங்களாக தான் கொண்ட கோலத்தை நடித்துக் காட்டி விட்டு மறைந் தார் என யோகர்சுவாமிகள் கூறுவர். செல்லப்பரிடம் பெற்ற ஞானத்தை தமிழ் வேதம் என போற்றக் கூடிய நற்சிந்தனை யில் பாமரர் முதல் பண்டிதர் வரை படித் துணரக் கூடியதாக எமக்கு தந்துள்ளார்.

யோகர் சுவாமிகள் கொழும்புத்துறை யில் ஆச்சிரமம் கொண்டிருந்தாலும் அவரது உடல் பொருள் ஆவி எல்லாம் நல்லூரையே நாடி இருந்தது. இப்போது நாம்படும் கஷ்டங்களை அப்போதே உண ர்ந்து 'பஞ்சம் படை வந்தாலும் பாரெல் லாம் வெந்தாலும் அஞ்சுவதே நாங்களடி ஆறுமுகன் தஞ்சமெடி' என்றும், 'நல்லூர் வீதியில் வந்து விழுந்து கும்பிட்டால் எல்லா வில்லங்கங்களும் விலகி விடும்' என்றும் கூறியுள்ளார். இப்போதைய உண வுத்தட்டுப்பாட்டை உணர்ந்து "தமிழாகமம் செய்யவா" என்றும், செங்கலடி சிவ தொண்டன் ஆச்சிரம பொறுப்பாளராக இருந்த சோல்பரிப்பிரபுவின் மகனை அங் கேயே கமம் செய்ய வழிகாட்டினார்.

யோகர் சுவாமிகள் தமது சீடரான கைதடி மார்க்கண்டு சுவாமிகளை நோக்கி அவரது உடம்பைக் காட்டி இதுதான் நல்லூர் இது தான் தேர் என ஆசீர்வதித் தார். ஆயினும் மார்க்கண்டு சுவாமிகளை கைதடியிலிருந்து நல்லூருக்கு நாள் தோறும் நடந்து செல்லுமாறும் நல்லூரான் தேரினை கட்டாயம் தரிசிக்க வேண்டு மென்றும் ஆசி கூறினார். மார்க்கண்டு சுவாமிகள் யோகர் சுவாமிகளிடத்தில் "வடதிசை காட்டும் கருவியைப் போலிரு" எனும் உபதேசம் பெற்று ஆருமறியாமல் அந்தரங்கமாக அருளைப் பெற்றார். தியத் தலாவை நில அளவைத் திணைக்களத் தில் வேலைசெய்த வேளையிலும் யோகர் சுவாமிகள் அடிக்கடி மார்க்கண்டு சுவாமி களுடன் தங்கி அருளுபதேசம் செய்தார்.

மார்க்கண்டு சுவாமிகளுடன் சோல்பரிப் பிரபுவின் மகன் சந்தசுவாமியை (Lord Ramsbotham) பல வருடங்களாக தங்க வைத்தார். சந்தசுவாமியும் கைதடியி லிருந்து அதிகாலை நல்லூர் தேரடி சென்று உலாத்தும் வழக்கத்தைக் கைக்கொண் டிருந்தார். அவருக்கு யோகர் சுவாமி களால் "தனித்திரு விழித்திரு உனக்கு நீயே எசமான்" என அருளுரைகள் வழங் கப்பட்டன. சந்தசுவாமிகளுடன் கௌரி பாலா என்ற ஜேர்மன் சுவாமி ஒருவரும் யோகர் சுவாமிகளால் ஆட்கொள்ளப்பட் டார். அவர் கையில் "சும்மா இரு" என பச்சை குத்தி நல்லூர், செல்வச் சன்னிதி போன்ற தலங்களில் தவமியற்றினார்.

ஒருமுறை யோகர் சுவாமிகள் முன்னி லையில் எனது தகப்பனார் மயில் வாகனம், லண்டன் வித்தியாபவன் நாக ராசா, வேறுசில அடியார்களுடன் பன்றித் தலைச்சி அம்மன் ஆலயத்தில் பொங்கல் பொங்கப்பட்டபோது கௌரிபாலா ஜேர்மன் சுவாமியும் உடனிருந்தார். கௌரிபாலா யோகர்சுவாமிகளிடம் இது என்ன, அது என்ன, என அங்கு நடைபெற்ற நிகழ்வு களைக் கேட்டுக் கொண்டிருந்தார். அப் போது யோகசுவாமிகள் கௌரிபாலா "சும்மா இரு" என அருளினார். அத்துடன் "சும்மா இருக்க ஒரு சூத்திரம்" என்ற ஒரு அரிய நூலையும் தமிழில் கௌரி பாலா வெளியிட்டார்.

அமெரிக்கரான சுப்பிரமுனிசுவாமிகள் முதன் முதல் யாழ்ப்பாணம் வந்து நல் லூரில் தரிசிக்கும் போது மூலஸ்தானத் தில் யோகர் சுவாமிகளைக் கண்டு யோகர்சுவாமிகளும் நல்லூரானும் ஒரு வரே எனக் கூறுவார். சுப்பிரமுனிசுவாமிகள் கொழும்புத்துறை சென்று யோகர்சுவாமி யின் படலையைத் திறக்க யோகர் சுவாமி கள் "What have you seen at Nallur" என வினவ சுப்பிரமுனிசுவாமி "Swamy I have seen you at Nallur temple" என விடை பகர்ந்தார். சுப்பிரமுனி சுவாமிகளை திரும்ப அமெரிக்க சென்று சிவதொண்டு செய்யுமாறு பணித்தார். அவர் அமெரிக்கா ஹவாய் தீவில் சைவசித்தாந்த ஆலயம் ஆரம்பித்து அது இன்றும் பலகிளைகளு டன் சிறப்பாக இயங்குகிறது.

மேலும் அக்பர் என்ற இஸ்லாமியர் யோகர் சுவாமிகளின் நெருங்கிய பக்தர். இவர் அன்றைய யாழ்ப்பாண உயர் நீதி மன்றத்தின் நீதியரசர். அவர் நல்லூரா னிலும் மிகுந்த பக்தி கொண்டவர். யோகர் சுவாமிகளை அடிக்கடி தனது காரில் ஏற்றித் திரியும் பாக்கியம் பெற்றவர். ஒரு நாள் யோகர் சுவாமிகளை ஏற்றிவரும் போது நல்லூர் வீதியில் மணியோசை கேட்க காரை நிறுத்தி நல்லூரானைக் கும்பிட்டு வருகிறேனென யோகர்சுவாமி க்குக் கூறி வழிபடச் சென்றார். கும்பிடச் சென்றவர் வரும்போது வேர்த்து விறுத்து கைகால் படபடக்க கண்ணீர் சிந்தி வந் தார். அப்போது யோகர் சுவாமிகள் ஒன்றும் தெரியாதது போல "ஏன் இப்படி படபடத்து நிற்கிறாய்?" என வினாவினார். அப்போது அக்பர், நல்லூரானின் மூலஸ் தானத்தில் நீங்கள் வீற்றிருக்கக் கண்டேன் என அழுதழுது கூறினார். நல்லூரானும் யோகர்சுவாமிகளும் இருக்கும் வரை யாழ்ப்பாணத்தவருக்கு ஒரு குறையு மில்லை எனக் கூறுவார் அக்பர்.

இப்படியாக நல்லூர்ப் பெருவிழாக் காலத்தில் நல்லூரான் தேரடியையும் அதில் தேர்ந்த யோகிகள், அவர் தம் அடியார்களையும் மனத்திருத்தி ஆன்ம ஈடேற்றம் காண்போமாக.

# வடிவும் வண்ணமும்

**செல்வி செல்வஅம்பிகை நடராஜா**
**விரிவுரையாளர், தமிழ்த்துறை,**
**யாழ்.பல்கலைக்கழகம்.**

முருக வழிபாடு மிகவும் பழமையானது. பழந்தமிழர் மலையும் மலை சார்ந்த நிலமான குறிஞ்சியிலே சேயோனாக முருகனை வழிபட்டனர். பழந்தமிழ் இலக்கியங்களில் முருக வழிபாடு பற்றிய குறிப்புக்கள் இடம்பெற்றுள்ளன. சிறப்பாக திருமுருகாற்றுப்படை முருகனின் உருவத்திருமேனி பற்றிய தெளிவான விளக்கத்தைத் தந்துள்ளது. முருக வழிபாட்டில் முருகனுடைய திருவுருவம் மிக முக்கியமானது. திருச்சீரலைவாய் என்னும் தலத்தில் உறையும் முருகன் ஆறுமுகம் கொண்டவன். அந்தத் திருமுகங்களின் மாண்பினைத் திருமுருகாற்றுப்படை விளக்குகின்றது.

பழமையும் வழமையும் மிக்க முருக வழிபாட்டின் பின்னணியில் பதினைந்தாம் நூற்றாண்டில் தோன்றியவர் அருணகிரிநாதர். இவர் வடமொழிப் புலமை, தென்மொழிப் புலமை, சமய தத்துவஞானம், கவித்துவ ஆற்றல், இசைப் புலமை கொண்டவர். முருகனின் திருவருள் ஞானம் கைவரப் பெற்றவர். முருகனை மட்டுமே பாடி ஆன்ம ஈடேற்றத்தை உலகுக்கு உணர்த்தியவர். 'வாக்கிற்கு அருணகிரி' எனச் சிறப்பிக்கப்படும் இவர், பக்திப் பனுவல்களை அருளிச் செய்துள்ளார். இவ்வகையிலே அருணகிரியார் முருக பக்தி அநுபவத்திலே திளைத்தவராய் திருப்புகழ், திருவகுப்பு, கந்தரலங்காரம், கந்தரந்தாதி, கந்தரனுபூதி, வேல் விருத்தம், மயில் விருத்தம், சேவல் விருத்தம் போன்ற நூல்களை ஆக்கியுள்ளார்.

முருகை உடையவன் முருகன். முருகு என்ற சொல்லுக்குப் பல பொருள்கள் உள்ளன. அவற்றுள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. மணம், இளமை, அழகு, தெய்வத்தன்மை என்ற நான்குமாம். இந்நான்கும் உறைந்து கிடக்கும் பொருளைப் பழந்தமிழர் முருகு - முருகன் என்ற சொல்லால் அழைத்தனர். மணம், இளமை, அழகு, தெய்வத் தன்மை என்ற நான்கும் உறைந்து நிலைபேறுடைய அழியா அழகனாக முருகன் விளங்கினான். இயற்கையோடு வாழ்ந்து அந்த இயற்கையில் உறைந்து கிடக்கும் அழகையே முருகு என்று பழந்தமிழர் வணங்கினர். நக்கீரரும் இயற்கையில் தாமுணர்ந்த அழகைத் திருமுருகாற்றுப் படையாகப் பாடி மகிழ்ந்தார். "கை புனைந்தியற்றாக் கவின் பெறு வனப்பு" என இயற்கையின் அழகைச் சிறப்பு முறையில் வெளிப்படுத்தியுள்ளார். அதாவது கையால் செய்யப்படாத இயற்கையே அழகுக்குரியதாகும். அதுவே அழியாத் தன்மையுடையது. "என்றும் அழியாத இளமைக்கார" என்று முருகனின் அழியா அழகினை அருணகிரியாரும் சிறப்பித்துள்ளார்.

இயற்கையை உணர்ந்தவர்கள் இறைவனது பேரழகில் ஈடுபட்டுத் தம்மை மறப்பர். ஏனையவர்கள் நிலையில்லாத உலகப் பொருள்களின் அழகில் புலன்களைச் செலுத்தித் தம்மை அழிப்பர்.

**“உன்னைச் சிங்காரித்து உனதழகு பாராமல்**
**என்னைச் சிங்காரித்து இடர்ப்பட்டேன் - பொன்னை**
**அரிவையரை யேநினையும் அன்பிலேற் குன்தாள்**
**தருவையோ சொக்கநா தா”**

எனச் சம்பந்தரும் இறைவனை அலங்கரித்து அழகு பார்க்காமல், தன்னை அலங்கரித்துத் துன்பப்பட்டதை மனம் வருந்தப் பாடியுள்ளார். திருப்புகழைப் பாடிய அருணகிரிநாதருக்கு முருகனை அலங்காரம் செய்து பார்க்கும் பெரு விருப்பு ஏற்பட்டது. அழியா அழகனாகிய முருகனைப் பட்டாடைகள், பொன்னாபரணங்கள், மலர்மாலைகள், வாசனைத் திரவியங்கள் சார்த்தி அடியார்கள் அலங்காரம் செய்து மகிழ்கின்றார்கள். அருணகிரிநாதர் பாமாலைகளால் செய்த அலங்காரம் ‘கந்தர் அலங்காரம்’ ஆகும். இது 101 பாடல்கள் கொண்ட தொகுதியாகும். கந்தப் பெருமானுடைய அலங்காரங்களை நயம்பட அருணகிரிநாதர் எடுத்துரைத்துள்ளார். கந்தவேளுடைய பாதாதிகேச வடிவ நலன்களையும் அவருடைய ஊர்தி, படை, கொடி, நாம மகிமை முதலியவைகளின் பெருமைகளையும் இந்நூல் விளக்குகின்றது. இதைத் தவிர அறஞ் செய்தலின் அவசியம் யம பயம், செல்வம் நிலையாமை, யாக்கை நிலையாமை போன்ற பிற கருத்துக்களையும் உள்ளம் உருக எடுத்துரைத்துள்ளார். முருகனுடைய வடிவழகு, இளமையழகு, குணவழகு, ஆண்மையழகு, சீலஅழகு, கருணை அழகு என்ற பல்வகைப்பட்ட அழகுகளையும் இக்கந்தரலங்காரத்தில் கண்டு கொள்ளலாம்.

முருகனுடைய திருவடியழகில் அவரது பார்வை பதிகின்றது. முருகனின் திருவடி ஊர்தியாகிய மயிலின் மீதும் தேவர் தலை மீதும் தன்னுடைய பாடல்கள் மீதும் பட்டதாக அருணகிரிநாதர் அவன் திருவடியழகில் ஈடுபட்டு அருளுகின்றார்.

**“தாவடி யோட்டும் மயிலிலும் தேவர் தலையிலும் என்**
**பாவடி யேட்டிலும் பட்டதன் றோபடி மாவலிபால்**
**மூவடி கேட்டன்று மூதண்ட கூட முகடுமுட்டச்**
**சேவடி நீட்டும் பெருமான் மருகன்றன் சிற்றடியே”.**

**(கந்தரலங்காரம்:15)**

மேலும் அவர் “இரு தாளும் சிலம்பும் சதங்கையும் தண்டையும்” முன்னே தோன்றினால் நாள் என்ன தீமை செய்யும், வினை என்ன தீமை செய்யும், யமன் என்ன தீமை செய்வான் எனத் திருவடிப் பேரழகில் ஈடுபட்ட அவர் முருகனுடைய திருவரையில் அணியப் பெற்ற சேலையையும் உடைவாளையும் கிண்கிணியையும் காண்கின்றார்.

**“காலையும் மாலையும் முன்னிற்கு மேகந்த வேள் மருங்கில்**
**சேலை கட்டிய சீரா”** **(கந்தரலங்காரம்:27)**

என முருகனது திருவரையில் அணியப் பெற்ற ஆடையையும் உடைவாளையும் குறிப்பிடுகின்றார். மற்றொரு பாடலில் திருவரையில் கட்டிய கிண்கிணியைக் காண்கின்றார்.

**“ஒருவரைப் பங்கி லுடையாள் குமார னுடைமணிசேர்**
**திருவரைக் கிண்கிணி யோசை படத்திடுக் கிட்டரக்கர்**
**வெருவரத் திக்குச் செவிடுபட் டெட்டுவெற் புங்கனகப்**
**பருவரைக் குன்று மதிர்ந்தன தேவர் பயங்கெட்டதே”.**

**(கந்தரலங்காரம்:13)**

முருகப் பெருமானின் திருவரையில் கட்டிய கிண்கிணியின் ஓசையைக் கேட்ட வுடன் அரக்கர்கள் அச்சப்பட்டனர். எண் திசையில் வாழ்ந்தவர்கள் செவிடுபட்டனர். மேருமலை அதிர்ந்தது. தேவர்கள் இது வரை கொண்டிருந்த அச்சத்தை விட் டொழித்தனர். முருகவேளின் திருவரை யின் கிண்கிணி ஓசை அன்பர்களுக்கு அருள் ஓசையாகவும் அல்லாதவர்களுக்கு மருள் ஓசையாகவும் அமைந்ததை அருண கிரியார் சுவைபடப் பாடியுள்ளார். மேலும் திருமால் வாய் வைத்து ஊதும் வலம் புரிச் சங்கின் ஓசை தேவலோகத்திலுள்ள பூஞ்சோலையிலும் வாவியிலும் மட்டும் கேட்டது. ஆனால் முருகன் வேலெடுத்து விளையாடுகையில் அவரது திருவரையில் கட்டிய கிண்கிணி ஓசை பதின்னான்கு உலகங்களிலும் கேட்டதாக வியக்கின் றார்.

**"மண்கமழ் உந்தித் திருமால் வலம்புரி ஓசை அந்த**
**விண்கமழ் சோலையும் வாவியும் கேட்டது வேல் எடுத்துத்**
**திண்கிரி சிந்த விளையாடும் பிள்ளை திரு அரையில்**
**கிண்கிணி யோசை பதினா லுகமும் கேட்டதுவே".**

**(கந்தரலங்காரம் : 93)**

திருவரையில் கட்டிய கிண்கிணியி னின்றும் அவர் பார்வை முருகனின் பன் னிரு திருக்கைகளிலும் பட்டு மகிழ்கின் றது. பன்னிரு திருக்கைகளும் ஒன்றோடு ஒன்று தட்டிச் சப்பாணி கொட்டுகையில் எட்டுத் திசைகளிலுமுள்ள மலைகள் நிலைகலங்கிப் பாதியாக விழுகின்றன. மேருமலை குலுங்குகின்றது. தேவர்களும் தாம் அசுரர்களின் கொடுமையினின்றும் நீங்கியதாக மகிழ்கின்றார்கள்.

**"கும்பாச வாழ்க்கையுட் கூத்தாடு மைவரிற் கொட்படைந்த**
**இப்பாச நெஞ்சனை ஈடேற்று வாயிரு நான்குவெற்பும்**
**அப்பாதி யாய்விழ மேரும் குலுங்கவின் னோருமுய்யச்**
**சப்பாணி கொட்டிய கையா றிரண்டுடைச் சண்முகனே".**

**(கந்தரலங்காரம்.14)**

பன்னிரு திருக்கையும் சப்பாணி கொட் டிய அழகைப் பாடிய அருணகிரிநாதர் முருகனுடைய தோள் அழகைக் கண்டு மயங்குகின்றார்.

**"கொல்லியைச் சேர்க்கின்ற கொல்லியைக் கல்வரைக்**
**கொவ்வைச் செவ்வாய்**
**வல்லியைப் புல்கின்ற மால்வரைத் தோளண்ணல்**
**வல்லபமே".**

**(கந்தரலங்காரம்.10)**

கொல்லிப் பண்ணை ஒத்த சொல்லை உடையவளும், கொவ்வைப் பழம் போன்ற சிவந்த வாயை உடையவளும் மலை யிலே வாழ்கின்ற கொடி போன்றவளு மாகிய வள்ளியை அணைக்கின்ற மலை போன்ற தோள்களை உடையவன் என்று பாடுகின்றார். மற்றொரு பாடலில் தேவ யானையைத் தழுவி மகிழும் மலை போன்ற தோள்களை உடையவன் என்று பாடி மகிழ்கின்றார் (கந்தரலங்காரம் 67).

தோள்களின் அழகினின்றும் அவரது நோக்கம் பெருமானது ஆறுமுகங்களை யும் கண்டு களிக்கின்றது. திருச்சீரலை வாயில் முருகன் ஆறுமுகங்களோடு விளங்கும் பான்மையை முதன்முதலில் நக்கீரர் தமது திருமுருகாற்றுப்படையில் தெளிவாகப் பதிவு செய்துள்ளார்.

**"மாயிருள் ஞாலம் மறுவின்றி விளங்கப்**
**பல்கதிர் விரிந்தன்று ஒருமுகம், ஒருமுகம்**
**ஆர்வலர் ஏத்த அமர்ந்தினி தொழுகிக்**
**காதலின் உவந்து வரங்கொடுத்தன்றே, ஒருமுகம்**
**மந்திர விதியின் மரபுளி வழாஅ**

**அந்தணர் வேள்வி ஓர்க்கும்மே, ஒருமுகம்**
**எஞ்சிய பொருள்களை ஏமுற நாடித்**
**திங்கள் போலத்திசை விளக்கும்மே, ஒருமுகம்**
**செறுநர்த் தேய்த்து செல்சமம் முருக்கிக்**
**கறுவுகொள் நெஞ்சமொடு களம் வேட்டன்றே, ஒருமுகம்**
**குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின்**
**மடவரல் வள்ளியொடு நகை யமர்ந்தன்றே**".

நக்கீரர் பாட்டைப் பின்பற்றியே திருப்புகழைப் பாடிய அருணகிரிநாதர்,

"**ஏறுமயிலேறி விளையாடு முகமொன்றே**
**ஈசருடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே**
**கூறுமடியார்கள் வினைதீர்க்கும் முகம் ஒன்றே**
**குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகம் ஒன்றே**
**மாறுபடு சூரரை வதைத்த முகம் ஒன்றே**
**வள்ளியை மணம் புணர வந்தமுகம் ஒன்றே**
**ஆறுமுகமான பொருள் நீ அருளல் வேண்டும்**
**ஆதி அருணாசலம் அமர்ந்த பெருமாளே**"
என்று பாடிப் பரவினார்.

கந்தரலங்காரப் பாடலில் பிறிதொரு வகையில் முருகனின் திருமுக அழகைச் சுவைத்து நுகருகின்றார்.
"**பத்தித் திருமுக மாறுடன் பன்னிரு தோள்களுமாய்த்**
**தித்தித் திருக்கும் அமுதுகண் டேன்செயன் மாண்டடங்கப்**
**புத்திக் கமலத் துருகிப் பெருகிப் புவனம் எற்றித்**
**தத்திக் கரைபுர ளும்பர மானந்த சாகரத்தே**"
**(கந்தரலங்காரம் 47)**

என் உணர்வு ஒழிந்து அருள் வியாபித்து ஆன்ம அறிவால் நான் உருகியும் ஆனந்தம் பெருகியும் அனுபவிக்கும் வண்ணம் புவனம் முழுவதிலும் அலைபாய்ந்து கரைபுரண்டோடிய பரமானந்தக் கடலில் வரிசையுற அமைந்த ஆறுமுகங்களுடன் பன்னிரு கைகொண்டு பொலிந்து தித்திக்கும் அமுது கண்டேன் என பேரின்பத்தைச் சுவைத்து உவக்கின்றார்.

கருணையொழுகும் திருமுகங்களின் பேரழகைச் சுவைத்த அருணகிரியார் அவன் ஊர்ந்து செல்லும் ஊர்தியாகிய மயிலின் சிறப்பைப் பாடுகின்றார். நீலமயில் தன் தோகையை விரித்ததனால் ஏற்பட்ட காற்றின் வேகத்தால் மேருமலை அசைந்தது. எட்டுத் திசையிலுமுள்ள மலைகள் தூள்பட்டன. தோகை விரித்ததனால் ஏற்பட்ட காற்று மலைத்தூள்களை கடலில் இட்டன. அந்தப் பொடிபடுவதால் கடல்நீர் வற்றி மேடாயிற்று என வியப்புச் சுவையில் ஈடுபடுகின்றார்.

"**கசையிடு வாசி விசைகொண்ட வாகனப் பீலியின்கொத்**
**தசைபடு கால்பட் டசைந்தது மேரு அடியிடவெண்**
**டிசைவரை தூள்பட்ட அத்தூளின் வாரி திடர்பட்டதே**".
**(கந்தரலங்காரம் 11)**

முருகனின் மயிலின் சிறப்பைப் பாடியவர் பெருமானின் வெற்றிக் கொடியில் விளங்கும் சேவலின் ஆற்றலைப் போற்றுகின்றார். முருகனின் வெற்றிக் கொடியில் உறைந்த சேவல் அவனது ஆணைக்கு அடங்கி நின்று தன் சிறகை அடிக்க, அதன் வேகத்தால் கடல் பிளந்தது. அண்டச்சுவர் உடைந்தது. விண்மீன்கள் உதிர்ந்தன. இடையில் நின்ற மேருமலையும் குன்றுகளும் இடிந்தன.

முருகன் எழுந்தருளியிருக்கும் மயிலின் பெருமையையும் வெற்றிக் கொடியில் விளங்கும் சேவலின் ஆற்றலையும் கண்டு களித்த அருணகிரியார் முருகன் கையில் விளங்கும் ஞானத்தின் திருவுருவாகிய வேலினைக் கண்டு களிக்கின்றார். ஆலமர் செல்வனாகிய சிவபெருமானுக்கு அணிகலமாக விளங்குவது வெண்தலைமாலையாகும். உலகம் உண்ட வாயனாகிய திருமாலுக்கு அணிகலம் குளிர்ச்சியான

துளசி மாலையாம். மயிலேறும் பெருமானின் காலுக்கு அணிகலம் வானவர்களின் முடிகளும் கடம்பு மாலையுமாம். அவன் திருக்கையில் விளங்கும் வேலுக்கு அணிகலம் அசுரர்களின் அண்டத்தைச் சூழ்ந்த கடலும் சூரன்மார்பும் மேருமலை போன்ற கிரௌஞ்ச கிரியுமாகும்.

**"ஆலுக் கணிகலம் வெண்டலை மாலை அகிலமுண்ட**
**மாலுக் கணிகலம் தண்ணந் துழாய் மயிலேறும் ஐயன்**
**காலுக் கணிகலம் வானோர் முடியும் கடம்பும் கையில்**
**வேலுக் கணிகலம் வேலையும் சூரனும் மேருவுமே".**
**(கந்தரலங்காரம் 62)**

முருகனுடைய திருவடிகள், பெயர், பன்னிருகைகள், வேல், மயில் ஆகியவற்றின் பெருமைகளை ஒருசேரப் பாடி மகிழும் அழகும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

**"விழிக்குத் துணைதிரு மென்மலர்ப் பாதங்கள்**
**மெய்ம்மைகுன்றா**
**மொழிக்குத் துணைமுருகா எனும் நாமங்கள் முன்புசெய்த**
**பழிக்குத் துணைஅவன் பன்னிரு தோளும் பயந்ததனி**
**வழிக்குத்துணை வடிவேலும் செங்கோடன் மயூரமுமே".**
**(கந்தரலங்காரம் 70)**

இத்தன்மைத்தாக முருகனுடைய வடிவழகைக் கூறிய அருணகிரிநாதர் அவனுடைய எழில் வண்ணத்தையும் பாடல்களில் பாடி மகிழ்ந்துள்ளார். பண்டைத் தமிழ்கள் முருகனை சேயோன், செவ்வேள் என்ற பெயர்களால் அழைத்தனர். இப்பெயர்ச் சொற்கள் சிவந்தவன் என்னும் பொருளை உடையதாகும். மலைவாழ் மக்களின் சிந்தையை செங்கதிரும், செவ்வானமும் கவர்ந்தன. அதுவே சேயோன் வழிபாடாக மலர்ந்தது. முருகனின் மேனி வண்ணத்துக்கு செங்கதிரவனின் ஒளியையும் தீயின் நிறத்தையும் உவமையாக்கினர். அருணகிரிநாதர் முருகனுடைய மேனி வண்ணத்தை சேந்தன், செங்கை, செக்கச் சிவந்த கழல் என்ற சொற்களால் வர்ணித்துள்ளார். முருகன் விரும்பி உறையும் இடம் இயற்கை எழில் நிறைந்த மலைப்பகுதி ஆகும். அவனுடைய மலையும் சிவந்தது என்ற பொருளில் செங்கோட்டில் வாழும் செழுஞ்சுடரே, செங்கோட்டு வெற்பன், செங்கோடன் எனப் பாடியுள்ளார். முருகன் அணியும் ஆடையும் மாலையும் செந்நிறமானதே. "உடையும் ஒலியலும் செய்யை" (பரிபாடல் 19) என்ற பாடலடியால் அறியலாம். மலைவாழ் தெய்வமாகிய முருகனை அடியவர்கள் காந்தள், கடம்பு, வெட்சி போன்ற செந்நிற மலர்களைத் தூவியும் சூட்டியும் வழிபடுகின்றனர். வெட்சி பூத்த தண்டை, சிவந்த வெச்சை மாலை, தகட்டில் சிவந்த கடம்பு, கொந்தார் கடம்பு என முருகனுக்கு விருப்பமான செந்நிற மலர்களைத் தன் பாமாலையில் சூட்டி மகிழ்கின்றார். முருகனுடைய கையில் இருக்கின்ற வேல் ஞான சக்தியின் வடிவம். அவன் திருவுருவே ஞானவடிவம். இருளைக் கெடுத்து ஞான ஒளியைக் கொடுத்து அருள் சுரப்பது வேல். முருகனுக்குத் திருமுகம் ஆறு இருப்பது போல வேலுக்கும் ஆறுபட்டை உண்டு. முருகன் திருக்கையில் தாங்கி நிற்கும் வேலின் வண்ணம் செம்மை. செவ்வேலனே, செவ்வேற் பெருமான், செஞ்சுடர் வேல் வேந்தன், செய்ய வேல் முருகா என வேலின் வண்ணத்தை விதந்து பாடுகின்றார். வேலின் செம்மையைப் போற்றிய அருணகிரியார் முருகனின் ஊர்தியாகிய மயிலின் நீலவண்ணத்தை கார் மயில் வாகனன், நீலச் சிகண்டியில் ஏறும் பிரான் என்று களிக்கப் பாடுகின்றார். மயிலின் நீலவண்ணத்தில் மயங்கிய பார்வை

முருகனின் வெற்றிக் கொடியில் கம்பீர மாக வீற்றிருக்கும் செஞ்சேவலில் பதிகின் றது. முருகனின் சக்திகளுள் ஒருவளாக அமைபவள் வள்ளி. குறிஞ்சி நிலப் பெண்ணாகப் பிறந்தவள். அவளுடைய மேனி வண்ணத்தை சிலர் பச்சை என்பார் கள். சிலர் நீலம் என்பார்கள். அருணகிரி நாதர் "நெற்றாப் பசுங்கதிர் செவ்வேனல் காக்கின்ற நீலவள்ளி" என வள்ளி நாச்சி யாரை நீலவண்ணமாகக் காண்கின்றார்.

முருகனுடைய நாமத்தை மனமுருகிச் சொல்லும் போதே அடியவர்களின் உள் ளத்தில் அவன் புகுந்து விடுகின்றான். அங்கே அழகிய அறுமுகத்தைக் காணலாம். பன்னிரு கருணை விழிமலரைக் காண லாம். ஆறிரு தடந்தோள்களைக் காண லாம். அருள்ஒலி செய்யும் கிண்கிணியைத திருவரையில் காணலாம். திருவடியிணைக் காணலாம். செங்கை வேலைக் காணலாம். கோலமயிலைக் காணலாம். வெற்றிச் சேவலைக் காணலாம். தேவியர் இருவ ரைக் காணலாம். அருணகிரிநாதர் இத்த கைய அழகுக் கோலத்தை வடிவமும் வண்ணமுமாக புறத்திலும் அகத்திலும் கண்டு வழிபட்டவர். திருச்செங்கோட்டுக் குச் சென்று முருகப் பெருமானின் அழகில் ஈடுபட்டு அவ்வழகினைத் துய்க்க இரண்டு கண் போதாதே, நான்முகன் நாலாயிரம் கண் படைக்கவில்லையே என்று ஆதங் கப்படுகின்றார். செங்கோட்டுப் பெரு மானது திவ்விய திருக்கோலக் காட்சியின் சிறப்பு இத்தன்மைத்து எனப் பாடுகின்றார்.

**மாலோன் மருகனை மன்றாடி மைந்தனை வானவர்க்கு**
**மேலாய தேவனை மெய்ஞ்ஞான தெய்வத்தை மேதினியில்**
**சேலார் வயற்பொழில் செங்கோடனைச் சென்று கண்டு தொழ**
**நாலாயிரங்கண் படைத்திலனே அந்த நான்முகனே**

**(கந்தரலங்காரம் 90)**

என்று கண்களை முருகனின் எழிற் கோலத்தில் சேர்த்து மகிழ்கின்றார் அருண கிரியார்.

இயற்கையும் அதன்கண் விளங்கும் எழிலும் எல்லோராலும் விரும்பப்படுவது. அனைவர் உள்ளங்களையும் கவரும் ஆற் றல் அதற்குண்டு. அருணகிரிநாதர் உல கையே முருகாகக் கொண்டு இயற்கை அழகுணர்ந்தவர். முருகனின் அழியா அழ கைத் தம் அநுபவ நிலைக்கூடாகக் கண்டு ணர்ந்தவர். தாமுணர்ந்தவற்றைப் பிறரும் அநுபவிக்கும் வண்ணம் கந்தனின் எழிற் கோலத்தை அலங்காரப் பாமாலையாகப் பாடிமகிழ்ந்தார். முருகனின் திருவடி முதல் திருமுகம் வரையுள்ள உறுப்புக்களின் அழகையும் அவரது ஊர்தியாகிய மயிலின் அழகையும் சேவற்கொடியின் அழகையும், திருக்கைவேலின் அழகையும் பக்திச் சுவை ததும்பப் பாடியுள்ளார். முருகனு டைய திவ்விய நாமங்களை மறவாமல் எப்பொழுதும் நினைத்த வண்ணம் இருப் போமாயின் நமக்கு உயர்வு தானே வரும். தாழ்வு வாராது. அருணகிரியாரும் மற வாத மனத்தின் திறத்தை,

**"சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு வெற்பனைச்**
**செஞ்சுடர்வேல்**
**வேந்தனை செந்தமிழ்நூல் விரித்தோனை விளங்குவள்ளி**
**காந்தனைக் கந்தக் கடம்பனைக் கார்மயில் வாகனனைச்**
**சாந்துணைப் போதும் மறவா தவர்க்கொரு தாழ்வில்லையே"**

**(கந்தரலங்காரம் 72)**

என்று குறிப்பிடுகின்றார். முருக வழிபாடு மூலம் முருகப் பெருமானுடைய அழகிய காட்சியை நுகர்ந்து துன்ப இருள் நீங்கி இன்ப அருள் பெற்று வாழலாம் என்பது அருணகிரிநாதருடைய அநுபவ வாக்காக அமைகின்றது. நாமும் அருணகிரியார் வழியில் அழியா அழகனை வணங்கி உய்தி பெறுவோமாக!

# தாயுமானவர்

**கலாநிதி செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம**

**தமிழ்த்துறை,**

**யாழ். பல்கலைக்கழகம்.**

விசயநகர நாயக்கர் கால அரசியல் பின்னணி தமிழிலக்கியத்திலும் மாற்றங் களை உண்டு பண்ணியது. இஸ்லாமி யரின் படையெடுப்பால் கோயில்கள் அழியும் நிலை தோன்றியது. இறைவன் புகழையும் அவரின் அற்புதங்களையும் மக்களுக்குச் சொல்ல வேண்டிய தேவை ஏற்பட்டது. சிவன், முருகன், கண்ணன் ஆகிய தெய்வங்களை முன்நிறுத்திப் பேரி லக்கியங்கள், தலபுராணங்கள், சமயப் பாடல்கள், இலக்கியங்கள் என்பன தோற் றம் பெற்றன. திருவிளையாடற் புராணம் சிவனின் அற்புதங்களைப் பேசுகின்றது. கந்தபுராணம் முருகனின் பெருமையைப் பேசுகின்றது. கண்ணனின் பெருமைகளை வில்லிபுத்தூராரின் பாரதம் பேசுகின்றது. இப்பின்னணியில் வந்தவர்களாக பட்டினத் தடிகள், அருணகிரிநாதர், தாயுமானவர், இராமலிங்க வள்ளல் என்போர் குறிப்பிடத் தக்கவர்கள். சமரசம் என்னும் கோட் பாட்டை உருவாக்கியவர் தாயுமானவர். தாயுமானவர் பற்றியதாகவே இக்கட்டுரை அமைகின்றது.

**தாயுமானவரின் இலக்கியம்**

தாயுமான சுவாமிகள் 56 தலைப்புக் களில் 1452 பாடல்களைப் பாடியுள்ளார். தாயுமானவரின் பாடல்கள் வெண்பா, கொச்சகக் கலிப்பா, நிலைமண்டில ஆசிரி யப்பா என்னும் பாவகைகளால் அமைந்தன. ஆசிரிய விருத்தம், கலி விருத்தம், கலித் துறை என்ற பாவினங்களாலும் அமைந் துள்ளன. சிந்து, வண்ணம், கண்ணி ஆகிய வடிவங்களிலும் பாடல்கள் அமைந்துள்ளன. பக்திப்பா மரபில் சிந்து, வண்ணம், கண்ணி என்ற வகைகளை முதல் முதல் பாடியவர் தாயுமானவரே. தமிழ் பக்தி இலக்கிய மரபில் புதுமை ஏற்படுத்தியவர்.

**அரசியல் வாழ்வு**

தாயுமானவர் வாழ்க்கையில் அவரது தந்தையார் காலத்திலிருந்தே அரசியல் தொடர்பு இருந்தது. விசயரங்க சொக்க நாத மன்னன் காலத்தில் அரசவையில் தலைமைக் கணக்கராக இருந்து வந்தார் விசயநகரமன்னன் இறந்ததும் அரசியல் வாழ்வைத் துறந்தார்.

**இறைபக்தி**

இளமை வயதிலிருந்தே இறைவன் அவரைப் பித்துக் கொள்ளும்படி செய் தான் என பாடல்கள் உணர்த்துகின்றன.

**"அன்பின் வழியறியாத என்னைத் தொடர்ந்து என்னை**
**யறியாத பக்குவத்தே கடைப் பெருக்கைப் பெருக்கிக்**
**கொடுத்து நான்**
**அற்றேன் அலந்தேன் என என்புலம் மயக்கவே**
**பித்தேற்றி விட்டாய்"**

எனப் பாடலில் குறிப்பிடுகின்றார். இளமை யிலேயே இறைவன் அவரைப் பித்துக் கொள்ளும்படி செய்ததாகக் கூறுகின்றார்.

**இல்லற வாழ்வும் துறவு வாழ்வும்**

திருமறைக்காட்டில் இல்லற வாழ்க்கை நடாத்தி வந்தார். ஒரு மைந்தனைப் பெற்று வாழ்ந்து வந்தனர். மனைவி இறந்தவுடன் முழுத்துறவியாக மாறினார். திருச்சியில் தங்கி பிச்சை ஏற்று வாழ்ந்தார். உலக வாழ்வில் பற்றற்று இறைவனிடத்தே நாட்ட முடையவராக அலைந்து திரிந்தார். குளிர் காலத்தில் போர்வையின்றி இருந்த வேளை அன்பர் ஒருவர் சால்வை ஒன்றைச் சாத்தினார்.

**இறை அற்புதம்**

இராமேஸ்வரத்திற்குச் செல்லும் பொழுது அங்கு மழையில்லாமல் மக்கள் பசியினால் வாடினர். இறைவன் மீது பக்திப்பாமாலை பாடினார். அவரின் வேண்டுகோளுக்கிணங்க மழை பொழிந் தது. நாயன்மார்களின் வரலாற்றிலும் பக்தி அடியார்களின் வரலாற்றிலும் காலம் காலமாக அற்புதங்கள் நிகழ்ந்துள்ளன.

**இறைவன் குருவாக வருதல்**

இறைவன் அடியவரிடத்து வலிய வந்து அருள் புரிந்திடும் தன்மையுள்ளவர். குரு உரு ஆகி மௌனியாய் மௌனக் கொள் கையை உணர்தினை

**அவனே பரமும் அவனே குருவும்**
**அவனே அகிலம் அனைத்தும் அவனேதாம்**
**ஆனவரே சொன்னால் அவரே குரு எனக்கு**
**ஞானநெறிக்கு ஏற்றகுரு தண்ணரிய சித்தி முத்தி**
**தானம் தருமம் தழைத்தகுரு மானமொடு**
**தாய் எனவும் வந்து என்னைத் தந்தகுரு என்சிந்தை**
**கோயில் என வாழும் குரு**

எனத் தாயுமானவர் இறைவன் குருவாக வந்து ஆட்கொண்டதையும் குருநாதரின் இயல்பையும் விளக்குகின்றார்.

**மனதற்றநிலை**

இறைவன் தாயுமானவரை அடிமை யாக்கி ஒரு சொல் உபதேசித்தார். "மௌனம் - மோனம்"; மோனமாவது பாசங்களை ஒழித்துச் சும்மா இருத்தல். சொல்லும் செயலுமாகிய அனைத்தும் மோனமாயிற்று. மனமே நீ என்பது அற்ற இடத்திலே சும்மா இருப்பாயாக எனத் தமது மனத்தை நோக்கிக் கூறுகின்றார். இந்த நிலையை மனதற்ற நிலை என் பார்கள். பந்தபாசங்கள் அற்றநிலை. மாணிக்கவாசகரும் தாயுமானவரும் ஒரு மொழி உபதேசம் பெற்றவர்களாவர். சும்மா இருப்பதால் - மௌனமாக இருப்ப தால் சுகம் உண்டாகும் என்பதே இறை தத்துவம்.

தாயுமானவர், அருணகிரிநாதர் போன் றோரது வாழ்வியல் தத்துவம் பொது மக்களிடையே பரப்பப்பட்டது. தாயுமான வர் எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும் என்ற குறிக்கோளையுடையவர். சமரசம் என்ற கொள்கையை உருவாக்கியவர்.

தாயுமானவர் முன்னைப் பழமைக்கும் பழமையாய்ப் பாடியவர். பின்னைப் புதுமைக்கும் புதுமையாய்ப் பாடியவர்.

**பாடுபொருள்**

தாயுமானவரின் பாடல்கள் உயர்ந்த நோக்கம் கொண்டவை. உபநிடதக் கருத் துக்களை உள்வாங்கிப் பல பாடல் களைப் பாடியவர். பக்திச் சுவை ததும்பப் பல பாடல்கள் பாடியுள்ளார். உயர்ந்த நோக்கங்களை வெளிப்படுத்தியுள்ளார்.

**அகமேவும் அண்ணனுக்கு ஏன் அல்லல் எல்லாம் சொல்லச்**
**சுகமான நீபோய்ச் சுகம் கொடுவா பைங்கிளியே**

என பைங்கிளிக் கண்ணி என்னும் அகத் துறையினூடாக பக்தியை வெளிப்படுத்து கின்றார்.

பரிபூரணானந்தம், சின்மயானந்த குரு, மௌனகுரு வணக்கம், கருணாகரக் கடவுள், சித்தர் கணம், கனந்தமான பரம், சுகவாரி, எங்கும் நிறைகின்ற பொருள், சச்சிதானந்த சிவம், தேஜோம்யானந்தம், ஆகார புவனம் - சிதம்பர ரகசியம், தேன் முகம், பன்மாலை, நினைவு ஒன்று, பொன்னை, மாதரை மலை வளர் காதலி, பாயப்புலி கல் கவின், பராபரக் கண்ணி, காடும் கரையும், திடம் உறவே என்பவற்றைப் பாடு பொருளாகக் கொண்டு இறை அற்புதத்தை செந்தமிழ் பாவால் தருகின்றார்.

**"பார்த்தவன் நான் என்னை முகம் பாராய் பராபரமே**
**கடல் அமுதே தேனே என் கண்ணே கவலைப்**
**பட முடியாதே என்னை முகம் பார் நீ பராபரமே".**

இறைவனும் ஆன்மாவும் ஒன்று என்ற அத்வைத சிந்தனையின் வெளிப்பாடாக இப்பாடல் அமைகின்றது. சைவசித்தாந்தம், அத்வைதக் கருத்துக்கள் நிறையவே இவரது பாடல்களில் காணலாம்.

தமிழ் இலக்கிய உலகிலே தாயுமானவர் விரிவாக ஆராயப்பட வேண்டியவர்.

## விழுதெனத் தாங்குவாய்

கனவின் கருவென உதித்த வேலா
கமலம் தவழ்ந்த சண்முக வேலா
மனதில் நிறைந்த மயூர வேலா
மன்னும் நல்லைப் பதி வேலா

பரமனின் குருவாய் உயர்ந்த வேலா
பிரணவப் பொருள்வழி உரைத்த வேலா
சரவணப் பொய்கையில் சனித்த வேலா
சண்முக ஒளியே சிங்கார வேலா

தருவாய் வரமே அருள் வேலா
துணையாய் இருப்பாய் தமிழ் வேலா
கருணைக் கடலே கந்த வேலா
காப்பாய் எமையே நல்லை வேலா

குஞ்சரி வள்ளியின் துணை வேலா
அடியவர் மனதுள் இணை வேலா
தஞ்சம் என்றும் தரும் வேலா
தமிழர் போற்றும் திரு வேலா

பன்னிரு விழிகளால் பார் வேலா
பாரோர் கவலை தீர் வேலா
என்னிரு விழிகளின் சுடர் வேலா
என்நிழலாய் என்றும் தொடர் வேலா

காத்திடு காத்திடு கனக வேலா
கற்பகன் தம்பியே கார்த்திகை வேலா
பூத்திடு விழிகளை புதுமை வேலா
பூதலம் ஓங்கிட வா வேலா

குறிஞ்சிக் கிழவா ஆற்றுப்படை வேலா
ஆறாகி ஒன்றான அற்புத வேலா
மறவக் கோலம் கொள் வேலா
முன்நிறை பகையினை வெல் வேலா

அழகுக்குள் அழகான மயில் வேலா
உமையாள் சக்தியுகும் வெற்றி வேலா
நிழல்நாடி வந்தோம் ஞான வேலா
விழுதெனத் தாங்குவாய் நல்லையூர் வேலா

**அல்வாயூர் சி.சிவநேசன்**

# ஆலயந் தொழுவது சாலவும் நன்று பூசனை புரிவது போற்றுதற்குரியது

சைவச்செம்மல் செ.மதுசூதனன்
மண்டைதீவு

சிவபூசையின் பெருமையை உணர்ந்து "வானவர்களும் மண்ணில் வந்து அரனை அர்ச்சிப்பர்" என்பது சிவ ஞானசித்தியார். எல்லாக் காரியங்களை யும் நிறைவு செய்வதாலும், ஆன்மாவிற்கு ஞானத்தை அளிப்பதாலும் சிவபூசை எனப்பட்டது. "எண்ணிலாகமம் இறைவர் தாம் விரும்பும் உண்மையாவது பூசனை" என்பதாகும். பூக்கைக் கொண்டு அரன் பொன்னடி போற்றுதல் வேண்டும். "யாவர்க் குமாம் இறைவற்கு ஒரு பச்சிலை" என்றார் திருமூலரும். சிவனன்றி வேறு தெய்வமில்லை.

சிவபூசையே மிகவும் உயர்ந்தது. சிவாலயங்களில் தனக்கும், பிறர்க்கும் அருள் பாலிக்கும் பொருட்டுச் சிவனைப் பூசிப்பது பரார்த்த பூசையெனவும், தனக்கு மட்டும் அருள் பெற ஆற்றுவது ஆன் மார்த்த பூசையெனவும் கொள்ளப்படும். சிவலிங்கத்தை மட்டும் பூசிப்பது, ஆன் மார்த்தத்தில் சுத்த பூசை யெனப்படு கின்றது. ஏனையவை கேவல பூசை, மிச்சிர பூசை எனப்படும். ஆன் மார்த்த பூசை, இட்ட லிங்க பூசை க்ஷணிகலிங்க பூசை என இருவகைப்படும். இட்டலிங்கத் திற்கு அபிஷேகம் உண்டு. க்ஷணிக லிங்கத்திற்கு அபிஷேகம் இல்லை. ஆனால் இரண்டிற்கும் பாவனாபிஷேகம் உண்டு. மரப்பலகையில் விரிக்கப் பெற்ற வெள்ளைத் துணி அல்லது வெள்ளைக் கம்பளம், தர்ப்பை ஆகிய ஏதேனுமொன் றில் சுகமாக அமர்ந்து, கிழக்கு முகமாக வேனும், வடக்கு முகமாகவேனும் நோக்கி இருந்து பூசை செய்யலாம். வடக்கு சிறப் பானது. மௌனமாக சிவசிந்தனையோடு இருந்த பிறருடன் வார்த்தையாடாமல் சிவபூசை செய்தல் வேண்டும். இலை, மலர், தூபம், தீபம் கொண்டு பூசனை செய்யலாம். விபூதி, உருத்திராட்சம் இன்றியமையாத சிவசின்னங்களாகும். மந்திரம், கிரியை, பாவனை என்ற மூன் றையும், மனம், வாக்குக் காயங்களினால், அனுட்டானம், சிவபூசை முதலியவற்றில் கைக்கொள்ள வேண்டும். கிரியை தூல மாகவும் பாவனை சூக்குமமாகவும், மந்தி ரம் அதிசூக்குமமாகவும் பயனை அளிப் பன. மந்திரம் தன்னை நினைப்பவரைப் பாதுகாப்பது. எந்த மந்திரங்களும் முதலில் 'ஓம்' என்ற பிரணவமும், இறுதியில் நம:, சுவாஹா, சுவதா, வௌஷட், வஷட், பட், ஹூம் என்ற ஏழினுள் ஒன்றும் பெற்று நிற்கும்.

பாவனையின்றிச் சொல்லப்படும் மந்திரங்களும் செய்யப்படும் கிரியை களும் பயனளிக்கமாட்டா. நம:- அழைத் தல், ஐஸ்வரியங்களை அளித்தல், சுவாஹா - தேவதைகளைத் திருப்தித் படுத்தல், சுவதா - தைரியத்தையும், வசீகரத்தையும் தருதல், வௌஷட் - தேவதைகளை இழுத்தல், வஷட் - தேவ

தைகளை வசமாக்கல், பட் - விக்கினங் களை நீக்குதல், ஹுூம் - சீவராசிகளை ஒடுக்குதல், (ஹுூம்பட் - விரைந்து செயலை முடித்தல்) என்பதாக அமைந் துள்ளன. மந்திரங்களுக்கு இடையிலுள்ள பீஜங்களில் குறுகலாகவுள்ள ஹம், ஹுூம் என்பவை பாவங்களைப் போக்கும். நெடி லாகவுள்ள ஹாம், ஹைம், ஹௌம் என்னும் பீஜ மந்திரங்கள் வீடுபேற்றை அளிக்கும்.

**முத்திரைகள்**

பூசையில் முத்திரை காட்டுதல் முக் கியமானது.

1. மிருகமுத்திரை (மான்) - வலக்கைப் பெருவிரல், மோதிர விரல், நடுவிரல் களைச் சேர்த்து, சிறுவிரல், சுட்டு விரல்களை நீட்டிப்பிடித்தல்.
2. பத்மமுத்திரை (தாமரை) - இரு கைக ளையும் தாமரை போல் (பத்மம்) சேர்த்து, நடுவில் இரு பெருவிரல் களையும் தாமரைக் கொட்டை (கர் ணிகை) போல் சேர்த்துப் பிடித்தல்.
3. கோவிடான முத்திரை - வலக்கைச் சிறுவிரல், மோதிர விரல்களை மடக் கிப் பெருவிரலினால் பிடித்து, நடு விரல், சுட்டுவிரல்களை நீட்டி விரித்துப் பிடித்தல்.
4. மகாமுத்திரை - இரு கைகளை விரித்துச் சேர்த்து சுவாமிக்கு நேராகக் காட்டுதல்.
5. ஆவாகன முத்திரை - இரண்டு மோதிர விரல்களிலும், இரண்டு பெருவிரல் களையும் சேர்த்துக் காட்டுதல் (இக் கிரியை இறைவனை எதிர்முகமாக்கல்)
6. ஸ்தாபன முத்திரை - ஆவாகன முத் திரையை அதோமுகமாகக் கவிழ்த் துக் காட்டுதல் (இறைவனை எழுந் தருளியிருக்குமாறு வேண்டுதல்)
7. சந்நிதான முத்திரை - இரண்டு கை களையும் முஷ்டியாகப் பிடித்து இரண்டு பெருவிரல்களையும் உயர்த் திக் காட்டுதல். (இறைவனை அண்மை யிலுள்ளவராக ஆக்கிக் கொள்ளுதல்)
8. சந்நிரோதன முத்திரை - இது சந் நிதான முத்திரையையே இரு பெரு விரல்களையும் முஷ்டிக்குள்ளே மடக் கிக் காட்டுதல் (பூசிக்கும் வரை இறை வனை நீங்காது இருக்க வேண்டுதல்)
9. பிம்பமுத்திரை - இரு கைப்பெருவிரல் களின் அடியினைச் சேர்த்து, இரு மோதிரவிரல், நடுவிரல்களின் நுனிகள் மட்டும் ஒன்றையொன்று பொருந்த, வளைத்து, மற்றைய விரல்கள் பிரிந்து நிற்கப் பிடித்தல்.
10. விஸ்புர முத்திரை - வலக்கைப் பெரவிரல் நுனியில் சிறுவிரல், மோதிர விரல், நடுவிரல், சுட்டுவிரல் என்ற நான்கு விரல்களின் நுனியும் பொருந் தச் சேர்த்துப் பிடித்தல்
11. நாராசமுத்திரை - இரண்டு கையின் இரண்டு பெருவிரல்களின் நுனியில் இருக்கும் பத்திர (இலை) புஷ்பங் (மலர்)களை இரண்டு சுட்டுவிரல்களி னாலும் தெறிப்பது.
12. தேனுமுத்திரை (பசு) - இருகைகளின் விரல்களைச் சேர்த்துக் கோர்த்து, வலச்சுட்டு விரலோடு இடநடுவிரலை யும், இடச் சுட்டு விரலோடு வல நடு விரலையும், வல மோதிர விரலோடு இடச் சிறுவிரலையும், இடமோதிரவிர லோடு வலச் சிறு விரலையும் சேர்த்து, பசுவின் முலைக்காம்புபோல் பிடித்தல்
13. திராசினி முத்திரை - வலக்கைச் சிறு விரல், மோதிர விரல், நடுவிரல்களை மடக்கிப் பெருவிரலால் பிடித்துச் சுட்டு விரலை மட்டும் நீட்டிப் பிடித்தல்.
14. நமஸ்கார முத்திரை - இரு கைக ளையும் சேர்த்து நிமிர்த்தி வலக்கைப் பெருவிரல், இடக்கைப் பெருவிரலின் மேல் சேர்த்துப் பிடித்தல்

15. உற்பவ முத்திரை - வலக்கையின் சிறுவிரலை மடக்கி, சுட்டு விரலை நீட்டி, மற்றைய விரல்களை சிறிது வளைத்துப் பிடித்தல்.
16. சங்கார முத்திரை - வலக்கையின் சிறுவிரல் முதலிய நான்கு விரல்களையும் பெருவிரல் அடியில் சேர்த்துப் பிடித்தல்
17. இலிங்க முத்திரை - வலக்கை விரல்களை மடக்கிப் பெருவிரலை நிமிர்த்தி இடக்கைப் பெருவிரல், சுட்டு விரல்களால் வலக்கைப் பெருவிரலின் கீழ் வளைத்துப் பிடித்து மற்றைய விரல்களை நீட்டிப்பிடித்தல்.
18. காளகர்ணிக முத்திரை - இரு கைகளின் விரல்களை உள்ளே பொருந்தும்படி குவித்து பெருவிரல்களை நிமிர்த்திப் பிடித்தல்
19. பஞ்சமுகி முத்திரை - இரு கைகளின் விரல்களை உட்புறமாக கோர்த்துச் சேர்த்து, விரித்து, இடக்கைச் சிறு விரலின் மேல் வலக்கைப் பெருவிரலையும், வலக்கைச் சிறுவிரலின் மேல் இடக்கைப் பெருவிரலையும், இடக்கை நடுவிரலின் மேல் வலக்கைச் சுட்டு விரலையும், வலக்கை நடுவிரலின் மேல் இடக்கைச் சுட்டுவிரலையும் வைத்துப் பிடித்து, நடுவில் இரண்டு மோதிர விரல்களையும் நிமிர்த்தி சேர்த்துப் பிடித்தல்.
20. மனோரத முத்திரை - இரண்டு கைகளின் விரல்களைக் கோர்த்துச் சேர்த்து, சுட்டு விரல்கள் இரண்டையும் நீட்டிச் சேர்த்து, இரண்டு பெரு விரல்களையும் அதனடியில் பொருந்தும்படி சேர்த்தல்.

முத்திரைகள் இன்னும் பல உள்ளன. பெருவிழாக் காலங்களில் ஆலயங்களில் சுவாமிக்கு முன், சிவாச்சாரியார்கள் மேற்குறிப்பிட்ட முத்திரைகளை முறைப்படி காட்டி, தூப, தீப, நைவேதத்தியங்கள் சமர்ப்பித்து வழிபாடியற்றுவதை நாம் கண்டுள்ளோம்.

**மந்திர செபம**

இரு கண்களையும் மூடிக் கொண்டு, மௌனநிலையிலிருந்து, ஓம் ஹாம் அனந்தாய நம, ஓம் ஹாம் தர்மாய நம, ஓம் ஹாம் க்ஞானாய நம, ஓம் ஹாம் வைராக்கியாய நம, ஓம் ஹாம் ஐஸ்வர்யாய நம, ஓம் ஹாம் பத்மாய நம என்றும் ஓம் ஹாம் சிவாசநாயநம, ஓம் ஹாம் ஹம்ஹாம் சிவ மூர்த்தயயே நம, ஓம் ஹாம் ஹௌம் சிவாய நம, ஓம் ஹாம் ஹௌம் வித்தியா தேவராய நம, ஓம் ஹௌம் நேத்ரேப்யோ நம என்றும் மானதமாகப் பூசித்து, ஓம் ஹாம் சக்தயே வௌஷட் என்று சக்தி அமிர்தத்தால் பாவனாபிஷேகம் செய்து, அன்பு என்ற திருவொற்றாடை ஒற்றி, வைராக்கியம் என்ற சந்தனம், புஷ்பம் முதலிய வற்றைச் சாத்தி, மனதால் தூப, தீபங் காட்டி ஆன்மாவை நைவேத்தியம் செய்து, அருள் என்ற அர்க்கியம் கொடுத்து, தனது கொல்லாமை, ஐம்பொறியடக்கல், பொறை, அருள், அறிவு, வாய்மை, தவம், அன்பு, ஞானம் என்னும் அஷ்டபுஷ்பங்களைத் திருவடிகளில் சமர்ப்பித்து அறிவு என்ற ஞானதீபத்தைக் காட்டிப் பிரதட்சிணம், நமஸ்காரம் ஆகியவற்றைப் பாவனையாகச் செய்தல் வேண்டும்.

பின்னர் நாபித்தாமரையாகிய ஓமகுண்டத்தில் இயல்பாய் ஜொலிக்கும் அக்னியில், சிவனை மனதால் பூசித்து அந்த அக்னி யைச் சிவாக்கினியாகக் கருதி, ஓம் ஹாம் சக்தயே வௌஷட் என்று புருவ நடுவிலிருந்து பெருகும் அமிர்தமாகிய நெய்யை, ஓம் ஹாம் ஹௌம் சிவாய ஸ்வாகா என்று மனதால் 108 ஆகுதி பண்ணி வணங்க வேண்டும்.

அதன் பிறகு சந்திர மண்டலமாகிய புருவ நடுவின் கண் மிக வெண்மையாய் ஒளி வீசும் நிட்கள சிவத்தைச் சுழுமுனை நாடி வழியாகத் தியானித்து, சிவோஹம் என்று மனத்தை மௌனநிலையில் நிஷ்டையில் நிறுத்தி, ஓம் ஹாம் ஹௌம் சிவாய நம: என்று 21 தரம் மானதமாகச் செபித்து, இறைவனை வணங்கிடல் வேண்டும். பிராணயாமம் முறைப்படி செய்து வழிபடல் முக்கியமாகும். ஐம்பிரமம், ஆறங்கம் ஆகிய சங்கிதா மந்திரம் முறைப்படி உச்சரித்து வழிபடல் வேண்டும். ஓம் ஹோம் ஈசான மூர்த்தாய நம, ஓம் ஹேம் தத்புருஷ வக்த்ராய நம, ஓம் ஹும் அகோர ஹ்ருதயாய நம, ஓம் ஹிம் வாமதேவ குஹ்யாய நம, ஓம் ஹம் சத்யோஜாதமூர்த்தயே நம என்ற பஞ்சப்பிரம மந்திரத்தாலும், ஓம் ஹாம் வித்தியா தேஹாய நம என்ற மந்திரத்தாலும் ஓம் ஹௌம் நேத்ரேப்யோ நம, ஓம் ஹாம் ஹ்ருதயாய நம, ஓம் ஹீம் சிரசே நம, ஓம் ஹும் சிகாயை நம, ஓம் ஹைம் கவசாய நம, ஓம் ஹ: அஸ்த்ராய நம: என்ற அங்க மந்திரத்தாலும், ஓம் ஹாம் ஹௌம் சிவாய நம என்ற சிவ மூல மந்திரத்தாலும் சிவாகம வழியில் பூசிக்கலாம்.

**வழிபாட்டின் தத்துவம்**

ஓம் தர்மஹேசாய வித்மஹே, வாக விசுத்தாய தீமஹி, தந்நோ சிவப்பிரஜோதயாத் என்ற சிவகாயத்திரி மந்திரத்தாலும், அர்ச்சிக்கலாம். "சிவபெருமானே! நீர் மிகவும் இரகசியமானவர், பாதுகாப்பவர், அடியேன் செய்த செபத்தை ஏற்றுக் கொள்ளும், உம்முடைய திருவருளால் அடியேனுக்கு யாவும் சித்தி அளிக்கட்டும். அடியேன் செய்த புண்ணிய பாவங்களை எல்லாம் எப்பொழுதும் உமது இடத்தில் அளித்தேன். அடியேன் பொருட்டுப் புண்ணியத்தை ஏற்றுப் பாவத்தைப் போக்கியருள்வீராக! கொடுப்பவரும் நீரே, கொள்பவரும் நீரே! உம்மையன்றி உலகம் இல்லை. நீரே உலகம். அடியேனும் உம் வடிவமே" என்று கூறிப் புஷ்பத்தை ஓம் ஹாம்ஹௌம் சிவாயநம: என்று சிவலிங்கத்திற்குச் சாத்தவும், ஓம் ஹ: அஸ்த்ராய நம: என்று இடக்கையினால் மணி அடித்துக் கொண்டு, ஓம் ஹம் ஹ்ருதயாய தூபம் ஸ்வாஹா என்று தூபமும், ஓம் ஹௌம் நேத்ரேப்யோ தீபம் ஸ்வாஹா என்று தீபமும் காட்டுதலினால், சிவனை உள்ளன்போடு வழிபடலாம்.

இவ்வாறு மூன்று தரம் மலர்தூவி வழிபட்டுக் கொண்டு, தேவார திருவாசகங்களைப் பக்திப் பரவசத்துடன் பாடி, எழுந்து சிரசின் மேல் கைகுவித்து, வேண்டும் வரங்களையெல்லாம் வேண்டிக் கொள்வோமாக! சிவாகம முறைப்படி வடமொழி மந்திரங்களைச் செபிக்கும் பொழுது அவற்றின் பொருள் விளங்கி வழிபடுவதனாலேயே நற்பலன் களைப் பெறமுடியும். அவ்வாறு பூசனை செய்வதற்கு இயலாதவர்கள், மணி வாசகப் பெருந்தகையால் பாடப்பெற்ற போற்றித் திருவகவலைப் பக்தி சிரத்தையுடன் பாடி, ஒவ்வொரு போற்றி என்ற முடிவிலும் மலர் சாத்தி, சிவலிங்கத் திருவுருக்கோ அல்லது நடராச வடிவிற்கோ பூசனை செய்து, பேரின்பமடையலாம்.

**"பூக்கைக் கொண்டரன் பொன்னடி போற்றிலார்**
**நாக்கைக் கொண்டரன் நாமம் நவில்கிலார்**
**ஆக்கைக்கே இரைதேடி அலமந்து**
**காக்கைக்கே இரையாகிக் கழிவரே"** என்ற அப்பர் தேவாரத்தாலும்

**"புண்ணியஞ் செய்வார்க்குப் பூவுண்டு, நீருண்டு**
**அண்ணல் அது கண்டு அருள்புரியா நிற்கும்**
**எண்ணிலி பாவிகள் எம்மிறை ஈசனை**
**நண்ணறியாமல் நழுவு கின்றாரே"** என்று திருமூலர் திருமந்திரத்தாலும், வழிபாட்டின் தத்துவம் விளக்கப்படுவதைக் கண்டு கொள்ளலாம்.

# மருத்துவத்தில் முருகன் - இலக்கிய ஆய்வு

வைத்திய கலாநிதி க.ஸ்ரீதரன்

மருத்துவமானது இறைவனால் படைக்கப்பட்டதாகும். இறைவனிடமிருந்து சித்தர்கள் வழியாக உலகிற்குப் பரவியது எனக் கருதலாம். இத்துமதத்தில் சிவபெருமானால் படைக்கப்பட்டது சித்தமருத்துவமாகும். சிவன் உமையாளுக்குக் கற்பித்தாரென்றும், உமை முருகனுக்கும், முருகன் அகத்தியருக்கும், அகத்தியர் புலத்தியருக்கும் என இவ்வாறாக சித்தர்களினால் மருத்துவம் பரவியதாக அறியக்கூடியதாக விருக்கிறது.

"**மயிலூர்தி சதுர்வேத மறைகின்ற பொருளோன்**" எனும் பாடலில் நால்வேதம் கூறும் பொருளாயுள்ளவன் மயில்வாகனன் என்று கூறப்படுகிறது. நான்கு வேதங்களின் ஒரு பிரிவாகவே ஆயுர்வேத வைத்தியம் உள்ளடக்கப்பட்டுள்ளது. எனவே மருத்துவத்தில் முருகன் சித்தரிக்கப்படுவது அறியக்கூடியதாகவுள்ளது. சித்தமருத்துவத்தில் ஐம்பூதக் கொள்கையுடன் ஐவகை நிலங்களைப்பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலங்களுக்கேற்ப மக்களின் வாழ்க்கைமுறை, மூலிகைகள் வரையறுக்கப்பட்டுள்ளன. மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சி நிலமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலத்தில் வாழ்ந்த மக்களின் வழிபாட்டுத் தெய்வமாக முருகன் விளங்குகின்றார். இதனை காலத்தால் முந்திய தமிழ் இலக்கணநூல்கள் எடுத்தியம்புகின்றன.

பழனியிலே அகத்தியரின் சீடர் போகர் என்ற சித்தர் மரபுபோல், யாழ்ப்பாணத்தில் உள்ள நல்லைக்குமரனுக்கும், கடையிற் சுவாமிகள் அவரிடமிருந்து செல்லப்ப சுவாமிகளும், இவரிடமிருந்து யோக சுவாமிகள் என சித்தர் பரம்பரைகளைக் கொண்டுள்ளன. மருத்துவத்தை வளர்ப்பதிலே சித்தர்கள் முக்கியமானவர்கள். பொதுவாக இலங்கையிலே கதிர்காமம், செல்வச்சந்நிதி போன்ற இடங்களிலும் சித்தர்கள் வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் காணப்படுகின்றன.

**"பெருவேலை யோரத்தி லேபாவ நீக்கும்**
**பிரசித்தி சேர்சித்தர் வாழ்கந்த வெற்பில்**
**ஒருசோதி வடிவோடு குகைமேவு செந்தூர்**
**ஒயிருக்கொரு ருயிர்செம்பொ னடியற்றுவோமே"**

பெருங்கடலோரத்திலே பாவத்தை நீக்கும் புகழ் பெற்ற சித்தர்கள் வாழும் கந்தர் மலையிலே ஒப்பற்ற சோதிவடிவோடு முருகன் வீற்றிருக்கிறான் எனக் கூறப்படுகிறது. மருத்துவத்தை வளர்ப்பதற்கு சித்தர்கள் காரணமாகவிருந்தார்கள். சித்தர்களுக்கு வழிகாட்டலாக முருகன் விளங்கியிருக்கிறான் என்பது புலனாகின்றது.

முருகன் குடி கொண்ட குறிஞ்சி நிலத்தில் முக்கியமானது சுருளிமலை, இலஞ்சி, குன்றக்குடி, விராளிமலை, வயலூர் வைத்தீஸ்வரன் கோயில், கதிர்காமம் என்பனவாகும். சுருளிமலை அதிகளவு மூலிகைகளைக் கொண்ட இடமாகும். வட நாட்டின் பைராசிக்கர்களும், வைத்தியர்களும் அடிக்கடி இம்மலைக்கு வந்து முருகனை வணங்கி மூலிகைகள் சேகரித்துச் செல்கின்றனர். இங்குள்ள மூலிகைகளைத் தழுவி ஊடறுத்து வருகின்ற தீர்த்தம் மருத்துவகுணமுடையது. இதனால் பல நோய்கள் நீங்குகின்றன. பொதுவாக மூலிகைகளை நாம் நோக்கும் போது "வேலம் பிஞ்சு, வேலன், வள்ளிக்கொடி, செவ்வள்ளி, சேவகன் பூண்டு, மயிவடிக் குருந்து, கருவேல், செவ்வேல், கார்த்திகைப்பூச்செடி, கடம்பு, கருணை" என முருகன் பெயரில் மூலிகைகளின் பெயர் விளங்குவதும் அறியக் கூடியதாகவுள்ளது.

பழனியில் தலவிருட்சமாக நெல்லிமரம் காணப்படுகிறது. நெல்லி மரமானது சித்த மருத்துவத்தில் காயகல்ப்பமாகக் கருதப் படுகிறது. சித்தர்கள் காயகல்பமாக சில மூலிகைகளைப் பயன்படுத்தியிருக்கின்றனர். கர்ப்பகிரகத்தில் உள்ள ஞான தண்டாயுதபாணியான பழனியாண்டவர் விக்கிரகம் போகர்சித்தரினால் நவபாஷாணங்களால் உருவாக்கப்பட்டது. இங்கு அதிகாலை முதல் அர்த்த சாமப் பூசை முடியும் வரை கோயில் திருக்கதவு மூடப் படுவதில்லை. பன்னீர், சந்தனம், பஞ்சாமிர்தம், திருநீறு முதலியவற்றால் அபிஷேகம் நடந்து கொண்டே இருக்கும். இப்பஞ்சாமிர்தம் பக்தகோடிகளுக்கு தினமும் வழங்கப்படுகிறது. ஆண்டிக் கோலத்தில் நின்று உடல் பிணியையும், பிறவிப் பிணியையும் பழனியாண்டவர் நீக்குகின்றார். இங்கு நோய்வராது பாதுகாக்கும் தடுப்பு முறைகள் மேற்கொள்ளப்படுகின்றன. திருவேரகத்து சுவாமிநாதப் பெருமானை சுவாமிநாத புலவர், செட்டியார் என விழித்து சிலேடையாக இரட்டைப் பொருள் பொதிந்த சொற்களைக் கோத்து எல்லோர் கருத்தையும் ஈர்க்கும் வகையில் பாடல் பாடியுள்ளார்.

**"வெங்காயம் சுக்கானால் வெந்தயத்தால் ஆவதென்ன**
**இங்காரிருப்பார் இச்சரக்க மங்காத சீரகத்தே தந்தீரே**
**தேடேன் பெருங்காயம் தேரகத்து செட்டியாரே".**

இங்கு எமது உடல் காய்ந்து போனால் வெந்தயம் கொடுத்து பலனில்லை. உடலைப் பேண பெருங்காயம், சீரகம் பயன்படுத்த வேண்டும் என மருத்துவக் கருத்தாகப் பாடியுள்ளார். காயகல்ப முறைகள் முருகன் தத்துவத்தில் காணப் படுகிறது. முருகக் கடவுள் பிணி, நரை, திரை, மூப்பு முதலியனவின்றி என்றென்றும் பாலப்பருவமுடையவனாக விளங்கும் கோலம் இளமைப்பருவத்தின் மேன்மையைக் காட்டுவதாகும். இது சித்த மருத்துவத்தில் காயகற்ப முறைகளினால் நரை, திரை, மூப்பு முதலியனவின்றி வாழ்வதற்கு வழி கூறப்பட்டுள்ளது. இம்முறைகள் முருகனால் சித்தர்களுக்கு அருளப் பட்டிருக்கலாம் என அறியக் கிடக்கிறது.

எமது உடலிலே குண்டலினி சக்தி காணப்படுகிறது. இது மனதை ஒரு நிலைப்படுத்துவதில் முக்கிய பங்காற்றுகிறது. உடலியக்கத்தில் நரம்புகளின் செயற்பாட்டை ஒழுங்காக்கிறது. நம் உடம்பில் அமைந்துள்ள ஆறு ஆதாரங்களாவன: மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை ஆகிய ஆறு ஆதாரங்களிலும் பெருமான் வீற்றிருக்கிறார் என்பது யோகவாக்காகும். யோகிகள் இந்த ஆறு ஆதாரங்களிலும்

குமரப் பெருமானை எண்ணி கண்டு வழி படுகிறார்கள். அதன் அடையாளமாகவே முருகப் பெருமானுக்கு ஆறுபடை வீடு களை அமைத்தனர். இதில்,

| | | |
|---|---|---|
| மூலாதாரம் | - | திருப்பரங்குன்றம் |
| சுவாதிட்டானம் | - | திருச்செந்தூர் |
| மணிபூரகம் | - | திருஆவினன்குடி |
| அநாகதம் | - | திருஏரகம் |
| விசுத்தி | - | குன்றுதோறாடல் |
| ஆஞ்ஞை | - | பழமுதிர்ச்சோலை |

திருத்தணிகை முருகனை எட்ட இருந்து நினைத்தாலே வினைகள் நீங்கும். இத்தலத்தில் வழங்கப்படும் விபூதி ஸ்ரீபாத ரேனு என அழைக்கப்படும். சந்தணம் ஆகிய பிரசாதங்கள் தீராநோய் தீர்க்கும் மருந்தாக உள்ளன. இதனால் அருணகிரி நாதர் பாடிய, எல்லோரின் நோய் மாற வேண்டிய பதிகம் வருமாறு:

**"இருமலு ரோக முயலகன் வாத**
**மெரிகுண நாசி விடமேதி**
**ரிழிவுவிடாததலைவலி சோகை**
**எழுகள மாலை யிவையோடே**
**பெருவயி றிளை எரிகுலை சூலை**
**பெருவலி வேறு**
**பிறவிகள் தோறு மெனை நலியாத**
**படியுன தாள்கள் அருள்வாயே வரும் ஒருகோடி**
**அசுரர் பதாதி மடிய அநேச இசைபாடி**
**வரும் ஒரு கால வைரவர் ஆட**
**வடிதவர் வேலை விடுவோனே**
**திருநிழல் மீதில் உறைமுகில் ஆகி**
**தருதிரு மாது மாவாளம்**
**சலமிட பூவின் நமுவினில் வீறு**
**தணியலமேவு – பெருமாளே"**

இங்கு முருகன் நோயாளியின் மருத்துவ சரித்திரம் கேட்பதாகவுள்ளது. மருத்துவத் தில் நோய்க்கான காரணம், உருவாகிய வரலாறு, குணங்குறிகள் போன்றன கேட் கப்படுவதுண்டு.

திருச்செந்தூரில் முருகபக்தரான ஸ்ரீ சண்முகசிகாமணி கவிராயருக்கும் சிவ காமசுந்தரிக்கும் ஆண்மகனாகப் பிறந்தவர் குமரகுருபரர். இவர் ஐந்து வயதுவரை பேசவில்லை. குறைதீர்க்க திருச்செந்தூர் முருகனிடம் வேண்டி 45 நாட்கள் உப்பி லாத சாதம் உண்டு விரதமிருந்து வேண்டிய தன் பயனாக முருகனின் வேல் நாக்கில் கீறிவிட வாய் பேசாத குழந்தை பேசத் தொடங்கியது. இங்கு வேல் மருத்துவ ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. நாவிலே அறுவைச் சிகிச்சை நடைபெற் றுள்ளது என்பது அறியக்கூடியதாக வுள்ளது.

300 ஆண்டுகளுக்கு முன் பாலசுப்பிர மணிய கவிராயர் சிறுகுழந்தையாக இருந்த போது கண்கள் பார்வையிழந்து காது செவிடாகியும் இருந்த நிலையிலே பெற் றோர்கள் பழனியாண்டவனே கதி என பிள்ளையுடன் விரதமிருந்ததன் பயனாக முருகன் நேரில் தோன்றி விபூதி பூசி பூரண சுகம் பெறச் செய்தார்.

மாம்பழக்கவி சிங்கநாவலரும் வைசூரி நோய்க்குள்ளாகி பழனியாண்டவரின் தரிசனத்தால் குணமாகியதும் பழனாபரி மாலை பாடியருளினார். வள்ளிமலை சுவாமிகள் தனக்கு என்றும் மாறாத குன்ம நோயை பழனியாண்டவனிடம் சென்று தீர்த்துக் கொண்டவர். கொங்கு நாட்டைச் சேர்ந்த பிறவிக்குருடன் ஒரு நாள் முழு வதும் உபவாசம் இருந்து மறுநாள் காவிரி நதியில் நீராடி விட்டு நேர்த்திர புஷ்கரணியில் வந்து முருக நாமத்தைக் கூறிக்கொண்டு நீரில் மூழ்கினார். மூழ்கி எழுந்ததும் பார்வை கிடைத்தது. இவ்வா றாக பலருடைய பிணிகளைத் தீர்த்தருளி

னார் முருகப் பெருமான் என்பது சான்று கள் மூலமாக அறியக்கிடக்கிறது.

**எலியும் கரடியும் இனித்தொடந்தோடத்**
**தேளும் பாம்பும் செய்யான் பூரான்**
**கடிவிட விஷங்கள் கடித்துயர் அங்கம்**

**ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க**
**ஒளிப்பும் சுளுக்கும் ஒருதலை நோயும்**
**வாதம் சயித்தியம் வலிப்புப் பித்தம்**

**சூலைசயம் குன்மம் சொக்குச் சிரங்கு**
**குடைச்சல் சிலந்தி குடல் விப்பிருதி**
**பக்கப் பிளவை படர்தொடை வாழை**

**கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி**
**பற்குத்து அரணை பருஅரை யாப்பும்**
**எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால் ...**

எனக் கந்தசஷ்டி கவசம் பேசுகிறது.

தேள், பாம்பு, கொடுக்கன், பூரான் போன்ற விஷஜந்துக்கள் கடித்தால் அங்கங்களில் ஏறிய விஷங்கள் இறங்கி அற்றுப் போக வேண்டும். கண்ணுக்குப் புலப்படாது எனது தேகத்தில் மறைந்திருக்கும் நோய் களும், சுளுக்கும், ஒற்றைத் தலைவலியும் வாதம், சைத்தியம், வலிப்பு, பித்த நோய கள், சூலை நோய்கள், காசநோய்கள், குக்கல், சிரங்கு, குடைச்சல், குடற்கட்டி. பிளவை, படர் தொடர் வாழை, கடுவன். படுவன் போன்றனவும் கைகாலில் படரும் சிலந்தி நோய், பற்கொதி, பல் அரணை. இடுப்பில் வரும் கடி போன்ற எல்லா நோய் களும் தாமாகவே விலகிச் செல்ல அருள் புரிய வேண்டும் எனக் கேட்கிறார்கள். முருகனை வைத்தியனாக எண்ணி முறை யிடுகிறார்கள். ஆதலால் முருகன் வைத் தியம் புரிந்திருப்பது ஆதாரமாகிறது.

முடிவாக மருத்துவத்தில் முருகன் மருத்துவத் தத்துவங்களை விளக்கியிருக் கிறார். மருத்துவத்தை வளர்ப்பதற்கு சித் தர்களை உருவாக்கி பரம்பலடையச் செய்திருக்கிறார். குழந்தை வடிவமாக குழந்தை மருத்துவத்தை விளக்கியிருக் கிறார். நோய்வராது பாதுகாக்க காயகல்ப முறைகளை கூறியிருக்கிறார். நோய்களை விளக்கியிருக்கிறார். நோய்க்கான சிகிச் சைகளில் அறுவைச் சிகிச்சை, கண், காது, மூக்கு நோய்களுக்கு சிகிச்சை யளித்தல், மானசீக ரோகம், அறுவைச் சிகிச்சை, குழந்தையின்மை சிகிச்சை என மருத்துவ முறைகள் முருகன் பாடலில் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. எனவே முருகன் மருத்துவத்தை வளர்த்திருப்பது உறுதியாகின்றது.

## உசாத்துணை :


- முருகன் அருள், கும்பாபிஷேக சிறப்பு மலர், புங்குடுதீவு, 2005
- குணசேகரம் கே.வி, கந்தசஷ்டி கவசம். 2007
- சுவாமிநாதன் வே., அருள் சுவாமிநாதன் முருகன் புகழ்மாலை, கொழும்பு.

# இசைக் கலையும் இந்துசமயக் கோயில்களும்

பா.பிரசாந்தனன
நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்,
யாழ் மாநகரசபை.

"இசையால் வசமாகா இதயமெது" என்பதற்கமைய உலகில் படைக்கப்பட்ட கலைகளில் இசைக்கலைக்கு ஆறறிவு படைத்த மனிதன் முதல் மிருகங்கள், பட்சிகள் கூட லயித்து நிற்பது இவ்வுல கின் கண்களுக்கு வெளிச்சம். நாம் வாழும் இப்புவியில் பல சமயங்களாலும், பல சமுதாயங்களாலும், பல தனிநபர் களாலும் பலதரப்பட்ட இசை வடிவங் களையும், இசைக்கருவிகளையும் பண்டு தொட்டு இன்று வரை அறிமுகப்படுத்தியும் ஆற்றுகைப்படுத்தியும் வந்துள்ளமை அறிந்ததே. அந்தவகையில் சங்கீத மும் மூர்த்திகள் தொடக்கம் சீர்காழி கோவிந்த ராஜன், இன்றைய பாலமுரளி கிருஷ்ணா வரையும், ஷேக் சின்னமௌலானா முதல் ஈழத்துக் கலாசூரி என்.கே.பத்மநாதன் ஈறாகவும் மற்றும் வயலின் - குன்னகுடி வைத்திய நாதன், சக்சபோன் கதிரி கோபால்நாத் எனப் பல மேதைகள் இவ் வுலகின் பார்வையில் பட்டுப் பிரபல்யமடை வதற்குப் பிரதான காரணியாய் அமைந் தது இசைக் கலையென்பது மறுப்பதற் கில்லை. இவ்வளவு சிறப்பான இசைக் கலைக்கும் இந்து சமயத்திற்கும் உள்ள தொடர்பு பற்றி நோக்கலாம்.

ஆன்ம ஈடேற்றம், உயிர்களிடத்தில் அன்பு எனப் பல உன்னதமான நோக்கங் களைக் கொண்டு உலகில் பின்பற்றப் படும் சமய மார்க்கங்களில் தோற்ற காலம் கண்டறியப்படாத அநாதியான சமய மார்க்கம் இந்து சமயமாகும். சிந்துவெளி நாகரிகத்தில் கிடைக்கப்பெற்ற சான்றா தாரங்கள் இந்து சமயத்தின் இருப்பை வெளிப்படுத்திய அதே சமயம், இந்து சமயத்திற்கும் கலைகளுக்கும் உள்ள உறவைப் பற்றியும் பறை சாற்றத் தவற வில்லை. அந்தவகையில் துவாரமுடைய குழல், வீணையை ஒத்த நரம்புக் கருவி, தாளம் என்பன கண்டுபிடிக்கப்பட்டமை யால் கலைகளில் செவிப்புல உணர்வைத் தூண்டும் கலையான இசைக்கலை சிந்து வெளிப் பாரம்பரியத்தில் வழக்கிலிருந் துள்ளது என்பது ஆதாரப்படுத்தப்படுகின் றது. இதைத் தொடர்ந்து வேதகாலத்தில் குறிப்பாக சாம வேதத்தில் இந்திய இசை யின் ஒரு முழுமைத்துவம் வெளிப்படுகின் றது. இறைவனை "சாமகானப்பிரியன்" என்ற சொற்பதத்தால் அழைத்தமை குறிப் பிடத்தக்கது.

இதேபோல இதிகாச காலத்திலும் இசைக்கலை பிரபல்யமாகியிருந்துள்ளது. அதன்படி பகவத்கீதையில் கிருஷ்ணர் "வேதங்களில் நாம் சாம வேதமாக உள் ளோம்" என்பதும் இலங்காதிபதி இரா வணன் இசையால் சிவபெருமானைக் கவர்ந்த குறிப்புகளும் உள்ளன. மேலும் ஆகமங்கள் பதின்நான்காவது பூசையாக

இசையை குறிப்பிடுகின்றன. அத்துடன் காமிகாகமம் சகல வாத்தியங்களும் முழங்க வேண்டும் என்கின்றது. இவற்றைப் போலவே சங்க, சங்க மருவிய காலங் களிலும் குறிஞ்சிப் பண், நெய்தல் பண் எனப் பண்கள் இசைக்கப்பட்டமை குறிப் பிடத்தக்கது. இவற்றோடு சிலப்பதிகாரம் ஏழு ஸ்வரங்கள் - தமிழிசை ஸ்வரங்கள் பற்றிய விளக்கங்களைத் தந்துள்ளன எனவே இசைக்கலையானது இந்து சமயத் துடன் பன்நெடுங்காலமாக பின்னிப் பிணைந்துள்ளமை எமக்கெல்லாம் வெளிப்படை உண்மையாகும்.

இனி இந்து சமயத்தின் வரலாற்றில் கோயில்கள் பலதரப்பட்ட விடயங்களின் மைய ஸ்தாபனமாக விளங்கியிருந்த மையை இலக்கியச் சான்றுகள் மூலம் அறியலாம். அதாவது "கோயில் இல்லா ஊரிற் குடியிருக்க வேண்டாம்" என்ற ஆன்றோர் வாக்கை உண்மைப்படுத்தும் விதமாக இறை வழிபாடு, நிர்வாகச் செயற் பாடு, தீர்ப்புச் சொல்லுமிடம், சமய காரி யங்களின் ஆரம்ப நிலையம் எனப் பல தளங்களிலே ஆலயங்கள் மக்கள் வாழ் வுடன் கலந்திருந்தமையை அறியலாம். இவற்றோடு கோயில்களில் நடனம், சிற்பம், ஓவியம், இசை எனக் கலைகள் தழைத் தோங்கவும் தடைகள் இருக்கவில்லை. அதாவது இந்துக் கலைகளின் விளைநில மாகக் கோயில்கள் அன்று தொட்டு இன்று வரை விளங்கி வருகின்றன. மேற் சொன்ன கலைகளில் இசைக்கலை எவ் வாறு கோயில்களில் உறவு கொண்டிருந் தது என்பதை நோக்கலாம்.

அந்தவகையில் திருஞானசம்பந்த சுவாமிகள் "பண்ணும் பதமேழும்" என்றும் "ஏழிசையாய் இசைப் பயனாய்" என்றும் பாடியவகையால் வேறெந்த மதங்களிலும் இல்லாதவகையில் இறைவனையே இசை வடிவமாக விளிக்கும் இந்து சமயத்திலே, இறை விக்கிரகங்களை இசைக்கருவி களுடன் சேர்த்து வழிபடுதல் குறிப்பிடத் தக்கது. நடராஜர் கைகளில் உடுக்கை, நந்திதேவர் - மத்தளம், சரஸ்வதி, வீணை, கண்ணன் - புல்லாங்குழல் எனப் பல உதாரணங்கள் உள்ளன. மனதார நம் பிக்கை கொள்ளும் இறைவனின் தோற்றத் திலேயே இசை இருப்பதை கோயில்கள் புலப்படுத்துகின்றன. அடுத்து இறைவன் துதி பாடவும், இறை வரம் வேண்டவும், இறை அற்புதங்களை நிகழ்விக்கவும் என இந்து சமயத்திலே பல பக்தி இலக்கியங் கள் விரவிக்கிடக்கின்றன. அந்தவகையில் இந்து சமயம் வளர்த்த ஆன்மீக ஞானி களால் படைக்கப்பட்ட பஞ்சபுராணம், திருப்புகழ் உள்ளிட்ட திருமுறைகள், பிரபந்தங்கள், கீர்த்தனைகள், பாசுரங்கள் போன்றன இன்று வரை திருக்கோயில் களில் நித்திய, நைமித்தியக் கிரியை களில் பண், இராகம் மற்றும் தாளத்துடன் பாடப்பட்டு வருவது வழக்கமாயுள்ளது.

பக்தி ரசம் சொட்டச் சொட்ட திரு முறைகள் கோயில்களில் இசைக்கப்படும் போது பக்தர்கள் மனமுருகி இறைவ னைத் தியானிக்கும் சூழல் உருவாகின் றது. இவ்வகையான பக்தி இசைகளை இசைப்பதற்கு கோயில்களில் ஓதுவார் கள், அரையர்கள் எனப்படும் விசேட கலைஞர்கள் இருக்கின்றார்கள்.

இவை தவிர கோயில்களில் கிரியை களின் போதும் சுவாமி எழுந்தருளும் போதும் பல இசைக்கருவிகள் பயன் படுத்தப்படுவதை அவதானிக்கலாம். இதன்படி பஞ்சபுராணம் ஓதும் போதும்

குரல் வழி நிற்கும் குழலும், கைகளில் தவழும் யாழும் மற்றும் தாள மேளமும் இணைந்து இசைக்கப்பட்டால் அதன் இனிமையையும் ஆனந்தத்தையும் வார்த்தை களால் கூறுதல் இயலாததாகும். இவ்வாறு கோயில்களில் பயன்படுத்தப்படும் வாத்தி யக்கருவிகளை பின்வருமாறு பாகுபடுத்த லாம்:

1. பிருதுவி வாத்தியம் - மரத்தால் செய்த வாத்தியம்
2. அப்பு வாத்தியம் - சங்கு முதலியவை
3. ஆக்கினேய வாத்தியம் - உலோகத்தாலான வாத்தியம்
4. வாயோக்கியங்கள் - புல்லாங்குழல் போன்ற துளைக் கருவி
5. ஆகாச வாத்தியங்கள் - இராக பேதம் காட்டும் கருவிகள்

மேற்படி வாத்திய வகுப்புகளில் நாதஸ்வரம் - தவில் பிரபல்யமானவை. சுவாமி வீதி வலம் வருகையில் மல்லாரி, நவசந்தி வர்ணம், ராகம், பல்லவி, கீர்த் தனை ஆகிய உருப்படிகள் நாதஸ்வரத் தில் வாசிக்கப்படும் போது செவிக்கு இனிமையாய் அமையும். சில கோயில் களில் கொடிக்கம்ப பூசையின் போது மிருதங்கம் மற்றும் புல்லாங்குழல், தாளம், உடுக்கை, மத்தளம் என்பன தேவைக்கேற்ப இசைக்கப்படுகின்றன. இவற்றை விடவும் கிராமியக் கோயில் களில் குறிப்பாக ஐயனார், அண்ணமார் கோயில்களில் உடுக்கை, பறை, பேரிகை போன்ற வாத்தியங்கள் வாசிப்பதைக் கேட் கலாம். மேலும் கோயில்களில் பூசை களின் போது கண்டாமணி, கொத்து மணி, கைமணி உட்பட மணி வகைகள், சங்கு, சேமக்கலம் போன்றனவும் இசைக் கலையின் பாற்பட்டவையேயாகும்.

மேற்கூறியவை தவிர சில பிரத்தியேக பூசைகளின் போதும் இசைக்கருவிகளின் தேவை உள்ளது. அதாவது சுவாமியை ஊஞ்சலில் வைத்து ஆட்டும் போது ஊஞ் சல் பாட்டிற்குப் பக்கபலமாக நாதஸ்வரம் வாசித்தல், தீர்த்த திருவிழாவில் சுண் ணத்துப் பாட்டிற்கு தவில் - நாதஸ்வரம் இணைந்து கொள்வதைக் கவனிக்கலாம்.

இவ்வாறாக இந்துக் கோயில்களை மையமாக வைத்து இசைக்கலை வளர்ச்சி அடைந்து தற்காலத்தில் கோயிலை அண்டியும், பொது இடங்கள், சமய நிகழ்வுகள் என்பவற்றிலும் பக்திக்கீதங்கள் என்ற பெயருடன் கோயில் சார்ந்த இசைக் கலை வளர்க்கப்பட்டு வருகின்றது. எனி னும் சில கோயில்களில் நேரடியான ஆற்றுகை இல்லாமல் பேரிரைச்சலுடன் ஒலிபெருக்கியிலும், மின்சாரத்தால் இயங் கும் இசைக்கருவிகளாலும் புனிதமான இசை வெளிப்படுத்தப்படுவது விரும்பத் தகாததாகும்.

எவ்வாறாயினும் இசை என்பது இந்துக் களுடனும் இந்து சமயத்துடனும் ஒன்றி ணைந்ததாகும். ஆண்டாண்டு காலமாய் சமயப்பற்று மிக்கவர்களால் இறை நம்பிக் கையை வளர்க்கும் ஓர் உத்தியாகவும், பாமர மக்களிடமும் எளிதாக சமயம் சார் விடயங்களைச் சேர்ப்பிக்கும் ஊடகமா கவும், பக்தர்கள் மனமுருகி இறைவனிடம் தம் வேண்டுதலை முன்வைக்கும் மொழி யாகவும் அமையப் பெற்ற இசைக்கலை இந்து ஆலயங்களில் ஆரம்பித்து இன்று உலகில் இந்துக்கள் வாழும் மூலை முடுக்கெல்லாம் வியாபித்து செவிக்கினிய தாய் விளங்குவதைக் காண முடிகின்றது.

# தமிழகத்தில் உள்ள இந்துக் கோயில்களும் சிற்பக்கலை வளர்ச்சியும்

**சைவப்புலவர் செ. பரமநாதன்**
**தாவடி**

இந்தியப் பெரும் நிலப்பரப்பு ஆன்மீக வளம் செறிந்த பெருநிலமாகும். அதனுள் தென்னாடு, சிறப்பாக தமிழ் மானிலத்தில் அமைந்துள்ள இந்துக் கோயில்கள், நாகரிகத்துடன் வளர்த்துக் கொண்ட சிறப்புடையது.

''திருக்கோயில் இல்லாத திருவலூரும்'' என்ற அப்பர் அடிகளின் வாக்கினாலும், 'ஊரானோர் தேவகுலம்' என்ற வாக்கினாலும், 'கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்ற தமிழர் பழமொழியாலும், திருக்கோயிலைத் தம் வாழ்க்கையுடன், அவர்கள் எவ்வாறு பிணைத்துக் கொண்டார்கள் என அறியலாம். வரலாற்று அடிப்படையிலே பார்க்கையில், நாடாண்ட மன்னர்களும், வள்ளல்களும், பெரும் பொருட்செல்வர்களும் அழகுக் கலையை வளர்க்கும் பண்ணைகளாகிய கோவில்களையும், புராண ஆகம அடிப்படையிலே தோற்றுவிப்பதில் நாட்டங் கொண்டனர் என்பது புலனாகும்.

மன்னர்கள் மாற்றுப்புலத்திலே வென்று கைக்கொண்ட பெரும் பொருளையும், தம் குடிமக்களிடம் கொண்ட வரிப்பங்கையும், செலவிட்டுப் பெருங்கோயில்கள் கட்டுவதால், கலைஞர்களுக்கு வேலை வாய்ப்பினை உண்டாக்கினார்கள். கலை வாயிலாக மக்களுக்கு ஆன்மிக மனநிறைவையும் உண்டாக்கினார்கள். நாட்டின் புகழையும் படிப்படியே உயர்த்தினார்கள்.

பொருளாதாரம், சமய தத்துவம் ஆகிய அடிப்படையில் உருவாக்கப்பட்ட கோயில்கள், ஓவியம், சிற்பம், கட்டிடம், இசை, நடனம், நாடகம் போன்ற கவின்கலைகளையும் வாழ்விக்கின்றன. தமிழகக் கோவில்கள் எவ்வாறான அடிப்படையில் தோன்றியுள்ளன எனச் சிறிது காண்போம்.

பிறவிப் பெருங்கடலில் இருந்து உயிர்களைக் கரையேற்றுவதற்குத் துணை நின்றமையால் கோவில்கள் துறையெனப்பட்டன. திருப்பெருந்துறை, திருத்தவத்துறை, திருச்சோற்றுத்துறை, திருப்பராயத்துறை, திருவாலந்துறை முதலிய கோவில்களைச் சான்றாகக் கொள்ளலாம். திருத்தலங்கள் தோன்றுவதற்குத் தல மரங்களும் துணைநின்றமையால் அவற்றின் சார்பாகவும், காரணப் பெயர்களாகவும் திருக்கோயில்கள் அழைக்கப்பட்டன. தில்லை, திருவாலங்காடு, திருவிடைமருதூர், திருக்கச்சி ஏகம்பம், திருபாதிரிப்புலியூர் சிலவற்றைச் சான்றாகக் காண்க.

ஐம்பெரும் பூதத் தலங்களாக தில்லை (விண்), திருக்காளத்தி (காற்று), திரு

வண்ணாமலை (தீ), திருவானைக்கா (நீர்), திருவாரூர்காஞ்சி (மண்) ஆகியவை போற்றப்படுகின்றன. சைவ மக்களிடையே கோயில் என்றாலும், பூலோக கயிலாசம் என்றாலும் சிதம்பரமே நினைவுக்கு வரும். சிவபெருமான் தாண்டவ மூர்த்தியாதலால் அவனது தாண்டவம் நிகழ்ந்த இடங்கள் சிறப்பிற்கு உரியன.

திருப்புத்தூர் புராணப்படி, காளித் தாண்டவம் அல்லது முனித்தாண்டவம் ஆடிய தாம்பரசபை திருநெல்வேலியா கவும், கௌரி தாண்டவமாடிய சிற்சபை திருப்புத்தூராகவும், சந்தியா தாண்டவம் ஆடிய வெள்ளியம்பலம் மதுரையாகவும், திரிபுர தாண்டவம் ஆடிய சித்திரசபை திருக்குற்றாலமாகவும், ஊர்த்துவ தாண் டவமாடிய இரத்தினசபை திருவலங்காடா கவும், ஆனந்தத் தாண்டவம் ஆடிய பொற் சபை சிதம்பரமாகவும் போற்றப் பெறு கின்றன.

சிவபிரானின் வீரச் செயல்களைக் குறித்திடும் வீரட்டானங்கள் புராணக் கூற்றின்படி எட்டு எனப் போற்றப்படும். பிரமன் தலை கொய்த இடமாகத் திருக் கண்டியூரும், அந்தகாசூரனைக் கொன்ற இடமாகத் திருக்கோவலூரும், திரிபுரம் எரிக்க ஊன்றிநின்ற இடமாகத் திருவதி கையும், தக்கன் தலைகொய்த இடமாகத் திருப்பற்றியலூரும், சலந்தராசூரனைக் கொன்ற இடமாக திருவிற்கொடியும், கஜா சூரனைக் கொன்று அதன் தோலை உரித்துப் போர்வையாகக் கொண்ட இடம் வழுவூரும், நிட்டயைக் கலைத்த மன் மதனை எரித்த இடமாகத் திருக்குறுக் கையும், மார்க்கண்டேயருக்காகக் காலனை உதைத்த இடமாகத் திருக்கடவூரும், சிவனுக்கென அமைந்த அட்டவீரட்டானங் களாயின.

உளியால் பொள்ளாமல் தான்தோன்றி யாய் அமைந்த மூர்த்தித் தலங்களாக சப்த விடங்கத் தலங்களாகத் திருவாரூர், திருநள்ளாறு, திருநாகைக்காரோணம், திருக்காறுயில், திருக்கோளிலி, திருவாய் மூர், திருமறைக்காடு ஆகியவை போற்றப் படுகின்றன.

திருக்கயிலைமலையே சிவன் சிறப் பாக வீற்றிருக்கும் இடமாகக் கருதப்படும். அந்த வடகயிலைமலையைக் கண்டு வழிபட இயலாத மக்களுக்கு வாய்ப்பாக திருவையாறு, திருக்காளத்தி, திருச்சிராப் பள்ளி, திருகோணமலை (ஈழம்), திருப் பெருந்துறை முதலியவை திருக்கயிலைத் தலங்களாக மதிக்கப்படுகின்றன.

பல்லவர்காலக் குகைக் கோயில் களும், குகைவரைக் கோயில்களும், கட்டு கற்றளிகளுமாகத் தோன்றிய கோவில்கள் ஒவ்வொரு மன்னர் காலத்திலும் சிற்ப அமைப்பால் மாறுதல் பெற்று வந்தன. சோழர் - பாண்டியர் காலத்தில் சிற்பம் செறிந்த கோபுரங்களாலும், விமானங் களாலும் கோயில் அமைப்புகள் விரிவு கொண்டன. சிறப்பாக முதல் இராசராச சோழன் காலத்திலிருந்து அம்மனுக்குத் தனிக்கோயில் கருவறை ஏற்படத் தொடங் கியதென்பர். விஜயநகர மன்னர்கள், நாயக்க மன்னர்கள் காலத்தில் சிற்ப மாட்சியுடன் மண்டபங்களும், மிக உயர் ந்த கோபுரங்களும் அமைக்கப்பட்டன.

ஹொய்சல மன்னர்கள், மராட்டிய மன்னர்கள், ஜமீன்தார்கள், நகரத்தார்கள் கோயில் சிற்பங்களில் படிப்படியே தம்மா

லான திருத்தொண்டுகளைப் புரிந்துள்ளார் கள். அவற்றையெல்லாம் வரலாற்று அடிப் படையில் காணப்புகின் விரிந்து செல்லும்.

பல்லவர் காலத்திலேயே மாடக் கோயில், கரக்கோயில், ஞாழற்கோயில், கொகுடிக்கோயில், இளங்கோயில், மணிக்கோயில், ஆலக்கோயில் எனப் பல வகையாக இருந்துள்ளன. யானை புகா வண்ணம் மாடக் கோயில் கட்டத் தொடங் கியவன் கோச்செங்கட்சோழன் என்பது வரலாற்று உண்மை. இவற்றை வழிவழி அறிந்திடுமாறு திருநாவுக்கரசர்,

**"பெருக்காறு சடைக்கணிந்த பெருமான் சேரும்**
**பெருங்கோவில் எழுபதினோ டெட்டு மற்றும்**
**கரக்கோவில் கடிபொழில்சூழ் ஞாழற் கோயில்**
**கருப்பறில் பொருப்பனைய கொகுடிக் கோயில்**
**இருக்கோதி மறையவர்கள் வழிபட் டேத்தும்**
**இளங்கோயில் மணிக்கோயில் ஆலக் கோயில்**
**திருக்கோயில் சிவனுறையும் கோயில் சூழ்ந்து**
**தாழ்த்திறஞ்சத் தீவினைகள் தீருமன்றே!**

என்று இயம்பிக் காட்டுகின்றார்.

காலத்திற்கும், இடத்திற்கும், உருவத் திற்கும் தம் வழிபாட்டின் காரணமாகக் கலைஞர்கள் கற்பனைக் கண்கொண்டு கலைப் படைப்புக்களுள் சிற்பக்கலை யானது மக்கள் நாட்டத்தினை நிரம்பப் பெற்றுள்ளது. சிற்பங்களை உருவாக்க கல், மண், மரம், சுதை, தந்தம், அரக்கு, மெழுகு முதலிய பொருட்களும், செம்பு, பொன் முதலிய உலோகங்களும், படிகம், பச்சை, நீலம், பவளம் முதலிய மணி களும், நவபாஷாணமும் பயன்படுகின்றன.

பல்லவர் காலத்தில் கட்டப்பெற்று அப்பரடிகள் வாழ்வுடன் இயைந்த திரு வதிகைக் கோயில் சிற்பவளர்ச்சியில் சிந் திக்கக் கூடிய சிறப்பினைக் கொண்டுள் ளது. அதன் அடிப்பகுதி கருங்கல்லாலும், கருவறையின் சுவர்கள் செங்கல்லாலும், கலைப் பாங்குடன் அமைக்கப்பட்டன. இவற்றின் வெளிப்புறங்களில் எல்லாம், புராணக் குறிப்புகளை நினைவுபடுத்தும் அழகிய வண்ணச் சுதை உருவங்கள் காணப்படுகின்றன. இவ்வாறான சுதை வேலைப்பாட்டினைச் சோழ, பாண்டியர் களும், விஜய நகர மன்னர்களும், தாம் கட்டிய கோபுர, விமான மேல் அமைப்பு களில் பெரிதும் பயன்படுத்தியுள்ளனர்.

திருவல்லிக்கேணி பார்த்தசாரதி பெரு மாள் கோயில், திருவிடந்தை வாரகப் பெருமாள், சமயபுரம் மாரியம்மன் உரு வங்கள் திண்ணிய சுதையினால் ஆனவை என்பது சிந்திக்கத்தக்கது. சிற்றூர்ப்புறக் கோயில் திருவிழாக்களில் மரத்தாலான தெய்வச்சிலைகள், மரத்தாலான ஊர்தி களில் வீதியுலா வருதலைக் காணலாம். உத்தரமேரூர் சுந்தர வரதப் பெருமாள் கோவிலிலுள்ள தெய்வச் சிலைகள் வைரம் பாய்ந்த மரத்தினால் உருவானவை என்பர். பண்டு தொட்டு மரத்தாலே சிற்ப மாட்சியுடன் தேர்கள் உருவாக்கப்பெற்று வீதியுலா வருகின்றன. திருவாரூர், சிதம் பரம், மதுரை, காஞ்சி முதலிய ஊர்களில் காணப்பெறும் தேர்களில் தமிழ்ச் சிற்பங் களின் கைவண்ணம் கண்டு களிக்கலாம்.

மகேந்திரவர்மனால் தோற்றுவிக்கப் பட்ட குடைவரைக் கோயில்களும், நர சிம்ம வர்மனால் தோற்றுவிக்கப்பட்ட கடற் கரைக் கோயில்களும், மாமல்லபுரத்தின் சிற்பப் பெரும்படைப்புகளாகப் பல்லோ ராலும் பாராட்டப்படுகின்றன. காஞ்சி புரத்தில் பல்லவ மன்னர்களினால் உரு வாக்கப்பெற்ற கயிலாசநாதர் கோவில், வைகுந்தப் பெருமாள் கோயில், உல

களந்த பெருமாள் கோயில் முதலிய கோயில்களில் அமைந்துள்ள சிற்பங்க ளெல்லாம் பல்லவர்காலச் சிற்ப நேர்த்தி யைக் காலம்காலமாக உலகத்திற்கு கட்டியங் கூறுகின்றன.

பல்லவர் காலச் சிற்பங்கள் தமிழ் நாட்டின் சிற்பக் கலையுகத்தை ஆர்வத் துடன் சமய அடிப்படையில் தொடங்கி வைத்தமையால் அதைப் பின்பற்றிப் பாண்டிய மன்னர்களும் திருமெய்யம் பிள்ளையார் பட்டி, குன்றக்குடி, திருப்பரங் குன்றம், கழுகுமலை முதலிய திருக் கோயில்களில் சிறந்த சிற்பங்களை வடித் தெடுக்க முயன்றனர்.

சோழர்கள் சிறப்பாகப் பிற்காலத்தில் கோயில் கட்டுவதில் பெரிதும் ஆர்வம் காட்டினார்கள். அவர்கள் காலத்தில் போட்டியிட்டுக் கொண்டு சிற்பக்கலை யைக் கல்லாலும் உலோகத்தாலும் வெளிப்படுத்தி தாமும் மற்றவர்களும் களிப்புற பெரும் விழாக்களை எடுத் தார்கள். பல்லவர் காலத்துக் கோயில் கட்டிடங்கள், சிற்பங்கள் போல் காட்சி அளிக்கும் நிலையில் இருந்தன. பிற்காலச் சோழர்களின் காலத்திலும் புறச்சுவர்க் கோட்டங்களில் தனித்தனியாக கலை நுட்பத்துடன் செதுக்கப்பெற்ற தெய்வச் சிலைகளை உள்ளே பொருத்தி வைத்து இன்பம் கண்டனர். அதனால் கோயில் கட்டிடங்களும், சிற்பங்களும் தனித்தனிச் சிறப்பினைக் கொண்டன.

இராசராசன் எடுப்பித்த தஞ்சைப் பெருங்கோயிலையோ, அவன் மகன் இராசேந்திரன் அமைத்த கங்கை கொண்ட சோழபுரத்தையோ காணுகின்றபொழுது கட்டிடஅமைப்பில், அவை முறையே ஆண்பொலிவும், பெண் பொலிவுமான சிற்பங்கள் சிறப்புக்கு உரியவை என்பர். மூன்றாம் குலோத்துங்கன் கட்டிய திரி புவன வீரேச்சுரம் (திரிபுவனம்) சிற்பக் களஞ்சியம் எனத் திகழ்கின்றது.

மாமல்லபுரத்திலும் காஞ்சியிலும் உள்ள சிற்பங்கள் உலகப் புகழ் பெற்றவை என்பது வெள்ளிடைமலை. பிற்பட்ட பல்லவர்காலத்தில் அபராசிதன் கட்டிய திருத்தணி வீரட்டானேசுவரர் கோயில் சிற்ப நேர்த்தி கொண்டது.

பிற்காலத்தில் சோழர்கள் அமைத்த சிற்பங்களுள் தஞ்சைப் பெரிய கோவிலி லுள்ள துவாரபாலகர்கள், பெரிய நந்தி, கோட்டங்களில் உள்ள சிவமூர்த்தங்கள், நடராசர் (செப்புச்சிலை) கங்கை கொண்ட சோழபுரத்தில் உள்ள நவக்கிரகங்கள் அமைந்தது ஒரே கல்லிலாகும். சண்டே சுரர் அநுக்கிரக மூர்த்தி, காரைக்காலம் மையாரைத் தம் தூக்கிய திருவடிக்கீழ் அமர்த்திய நடராசர், தாராசுரம் என்னும் இராசராசேச்சரத்தில் பெரியபுராண வர லாற்றுச் சிற்பங்கள் அமைந்துள்ளன.

கிரேக்கம் போன்ற மேலைநாடுகளில் உள்ள சிற்பிகள் புறக்கண்ணால் கண்ட வற்றையே உடற்கூற்று அறிவியற்படி எழிற் சிற்பங்களாக வடித்தனர். ஆனால் இந்நாட்டுச் சிற்பங்களோ சிற்பிகளின் அகக்கண்ணாலும் கண்டு அறிவாலும் இதயத்திலும் உலவ விட்டுக் கற்பனைப் பாங்கோடு கவின் காட்சிகளையும் எவ் வகையில் மக்களுக்கு பயன்படவேண்டும் என்ற உணர்வுடன் சிறப்பாக வடித்தனர். ஆன்மிகம் அவர்களை விழுங்கி வெளிப் படுத்திச் சிறந்ததெனலாம்.

பொருள்களின் இயற்கை உருவத்தை அப்படியே காட்டுவது அயல்நாட்டு சிற்பக் கலையின் நோக்கமாகும். உணர்ச்சிகளையும், கருத்துக்களையும் உருவங்கள் மூலமாக வெளிப்படுத்துவது தமிழ்நாட்டுச் சிற்பிகளின் நோக்கம் என்னும் உண்மையை மறவாமல் கொள்ள வேண்டுமென்பார் மயிலை சீனி. வெங்கடசாமி தொன்மையான சிவன் கோவில்களில் சிவலிங்கமே காட்சியளிக்கும். சிவலிங்கத்தை வழிபடுவதால் படைப்புக் கடவுள் பிரமாவையும், காத்தற் கடவுளாகிய திருமாலையும், அழித்தல் கடவுளாகிய சிவனையும் வழிபட்டபலனைக் குறிக்கும் என்று வேத ஆகமங்கள் கூறுவதாய்ச் சொல்வர். சிவலிங்க வழிபாடு பல நாடுகளில் இருந்தன என்பது சிந்திக்கத்தக்கதாகும்.

சிவலிங்கத்திற்கு அடுத்ததாக இருபத்தைந்து சிவத்திரு மேனிகளுள் ஆடல் வல்லனாகிய நடராசனின் பெருமை அளப்பரியது. சிவனது ஐந்தொழில் மாட்சியும், அதனுள் கண்டுகளிப்பர் சித்தாந்திகள். உலகம் பாராட்டுதற்குரிய இத்திருவுருவம் எல்லாச் சிவன் கோயில்களிலும் இருப்பினும், தில்லை நடராசருக்குத் தனிச் சிறப்பு உண்டு.

நடராசருக்கு அடுத்தபடியாக தென்முகக்கடவுளின் திருவுருவம் சைவசித்தாந்த அடிப்படையில் அமைந்துள்ளது மிகவும் சிறப்புடையது. சத்தாகிய சிவனும் சித்தாகிய பார்வதியும் இருபுறமிருக்க நடுவே திருமுருகன் அமைந்துள்ள சோமாஸ்கந்தர் திருமேனியும் சிவன் கோவில்களில் காணலாம்.

இவ்வாறான மூர்த்தங்களெல்லாம் சிற்றுயிர்களின் ஈடேற்றத்திற்காக மனநிறைவிற்கும், சமய இன்பத்துக்குமான அடிப்படையில் அமைந்துள்ளவை எனலாம். இந்தச் சிற்பங்களெல்லாம், வேத ஆகம அடிப்படையிலும், இசை, நாட்டியக் கலை நுட்ப அடிப்படையிலும், அமைந்த சிற்பங்கள் அக்காலத்திய இசைக்கருவிகள் பற்றியும், நாட்டியக்கலை பற்றியும், பண்பாடு பற்றியும் அறியத் துணை நிற்கின்றன.

சிற்பங்களை உருவாக்க சிற்பிகள் பயன்படுத்தும் தியான மந்திரங்களெல்லாம் இப்போது வடமொழியில் இருப்பினும், ஒரு காலத்தில் தமிழில் இருந்தது.

தமிழர்களின் கலைச் செல்வங்களுள் தலையாய சிற்ப எழிற்கலை தமிழர்களின் சமயத்தின் உயிர்நாடி எனலாம். கோயில் சிற்பங்கள் கலை நுணுக்கத்துடன் திகழ எமது முன்னோர் பணியாற்றியுள்ளனர். கோயில்களில் சிற்பக்கலை நிலைத்திருப்பது எமது பண்பாட்டினை உலகிற்கு எடுத்துக் கூறுவதாகும். வாழிய சிற்பக்கலை!

## பறந்தோடி வந்திடுவாய்!

பழனிமலைக் குமரனே!
பன்னிருகை வேலனே!
பட்டதுயர் போதுமையா
பாவவினை நீக்கி பாவிகளைக் காத்திட
பறந்தோடி வந்திடுவாய்

**திருமதி சுப்பிரமணியம் வள்ளியம்மை**

# ஆன்மீக வாழ்க்கை - சில கருத்துக்கள்

**க. சிவலிங்கம்**

**ஓய்வுபெற்ற திட்டமிடல் பணிப்பாளர்**

**வடக்குக் கிழக்கு மாகாணம்.**

வேதாந்த - சித்தாந்த சமரசம் கண்டவரும், யாழ்ப்பாணம் - இலங்கை வாழ் தமிழ் மக்களையும் மற்றும் ஏனைய இனத்தவரையும் அவரவர் நெறிகளில் வழி நடத்திய சிவயோக சுவாமிகளுடன் மிக நெருங்கிய தொடர்புடையவர் மூவர். இவர்கள் முறையே சிவதொண்டன் செல்லத்துரை சுவாமிகள், திவ்ய ஜீவன சங்கத்தினரான சுவாமி பிரகாஷ் மயானந்தாஜி மற்றும் ரிஷி கேசவாசியான சுவாமி யோகேஸ்வரா நந்தாஜி ஆவர். இவர்களில் முதலாமவர் யோகர் சுவாமிகள் நடமாடிய நல்லைக்கு அண்மையிலிருக்கும் சிவதொண்டன் நிலையத்திலே தம் தவ வாழ்க்கை வாழ்ந்து அடியார்களை வழிநடத்தியவர். மற்றையோர் இங்கும், இந்தியாவிலும், ஏனைய பிற நாடுகளிலும் யோகர் சுவாமிகளின் போதனைகளையும், அறநெறிகளையும் பரப்பிப் பணி செய்கிறார்கள். இன்றும் எமது மத்தியிலிருக்கும் இவர்களின் கருத்துக்கள் இக்கட்டுரையில் பிரதிபலிக்கின்றன. இக் கருத்துக்கள் எக்காலத்திற்கும் பொருந்தும் என்பதில் ஐயமில்லை.

“அமைதி நிலவட்டும், அது என்னிடமிருந்து ஆரம்பிக்கட்டும்” என்ற இக் கூற்றை கடந்த 2004ஆம் ஆண்டு நவம்பர் மாதம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்த பிரம்ம குமாரிகள் நிறுவனத்தைச் சார்ந்த சகோதரி மீரா அவர்கள் யாழ்ப்பாண இந்துக் கல்லூரியில் சொற்பொழிவாற்றும் போது கூறினார். இது எல்லோர் மனத்திலும் இருந்து எம்மை நாமே வழி நடத்திச் செல்ல உதவும் வாக்கியம். கடந்தகால நிகழ்வுகளை நாம் எண்ணிப் பார்க்கும் போது எமது உச்சத் தேவை “அமைதியே”. ஓம் சாந்தி என்ற மந்திரத்தை, எந்தவொரு மந்திரத்தையோ இறைநாமத்தையோ உச்சரித்த முடிவில் கட்டாயமாகச் சொல்லப்படுகிறது. ஆகவே இது “சாந்தி” அல்லது “அமைதி” தான். எமது சிந்தனையின் முடிவில் தேங்கி நிற்கும்.

ஆயினும் இன்று நாட்டில் காணப்படும் சமூக அரசியல் பிரச்சினைகள், முரண்பாடுகள் எல்லாம் மனிதனை - மனிதனிலிருந்து பிரிப்பதால் புற உலகில் உண்மையான அமைதியைக் காணமுடியவில்லை என்பதும் உண்மைதான். எனினும் புறத்தில் தேடப்படும் அமைதி தமது கைகளில் இல்லை என்பது எல்லோருக்கும் தெரியும். இதைத் தான் சமயம் அல்லது ஆன்மீக வாழ்வின் மூலம் நாம் உள்ளே தேடிக் கொள்ள விளைகிறோம்.

இச்சமய அல்லது ஆன்மீக மரபு என்பது சிறுபராயத்தில் குடும்ப அல்லது சமூக மட்டத்தில் ஏற்றுக் கொள்ளப் பட்டிருப்பினும் அதுபற்றிப் போதிய விளக்கம் எம்மில் பலருக்கு தனித்தனி யாகக் கிடைக்கவில்லை. இதற்குக் காரணம் எமது ஆன்மீக மரபு நிறுவன ரீதியாகச் செயற்பட்டதில்லை. இதனால் ஞானிகள், அறிஞர்கள் தந்த விளக்கங் களே எம்மை நெறிப்படுத்தின.

ஆயினும் முறையாக இவ்அறிவை, ஒரு ஆசான் மூலம் சரியான நேரத்தில் பெறுவதே சிறந்தது. ஆயினும் இது கிடைக்கப்படாமைக்குப் பல காரணங்கள் உள்ளன. இதில் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட கல்வியும், அறிவீனத்தினால் ஆன சுயநலப் போக்கு களும், அறநெறி பற்றிய அறிவீனமும், சுய சிந்தனையின்மையுமே காரணமா கின்றன. இதனால் சிறுபராயத்திலே எமது பிள்ளைகளின் மனத்தில் உண்மையான சமய அடிப்படைகள் தெளிவுபடுத்தப்பட வில்லை. அவர்களை அதில் நிற்கவும் அவற்றைப் பேணவும் வேண்டிய சூழலும் கிடைக்கவில்லை. வெறும் சமய அனுஷ் டானங்கள் மட்டுமே சமயத்தின் நோக்க மாக வைத்துள்ளோம். கடவுளை நோக்க மாகக் கொள்ளவில்லை. எவ்வாறாயினும் ஆன்மீக வாழ்விற்கு சுய முயற்சி வேண் டும். சுயமாக முயற்சி செய்வது மிகவும் கடினம். அதனால் இலகுவான வழியை எல்லோரும் தேடுகிறார்கள்.

ஆன்மீக வாழ்க்கை என்னவென்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். அதற்கு முன்னர் ஆண்டவன் யார், ஆண்டவன் நிலை என்ன? என்பதை அறிய வேண்டும். இந்த வித்தியாசத்தை நாம் நன்றாக அறிந்திருக்க வேண்டும். கடவுள் நிலையை அடைவதே வாழ்வின் இலட்சியம். கடவுள் நிலையை அடைந்தால் கடவுளைப் போல பூரணத் தன்மையில் ஆனந்த நிலையில் இருக்கலாம். அப்படி இருக்கும் நிலையில் எல்லாமே சரியாக இருக்கும். கடவுள் தத்துவமே சிவதத்துவம் என்று சொல்லப் படுகிறது. அச்சிவ தத்துவம் நம் உள் ளேயே இருக்கின்றது. சகல ஜீவராசி களின் உள்ளேயும், வெளியேயும் அது இருக்கின்றது. அது உலகம் பூராவும் பரவியுள்ளது. அது செல்லாத இடமே இல்லை. அதனால்தான் கடவுள் எங்கும் இருக்கிறார் என்றும் "சர்வவியாபிச பக வான் தஸ்மாத் சர்வகத: சிவ".

"ஈசாவாஸ்யம் இதம் ஸர்வம்
யதகிஞ்ச யகத்யாம் யகத்"

என்று உபநிஷத்துக்கள் கோஷமிடு கின்றன.

கடவுள் தத்துவத்தை நாங்கள் அனுப விக்காததற்கு முதலாவது காரணம் கடவுள் தத்துவம் எங்களுக்குள் இருப் பதை நாங்கள் அறியாததாகும். இதை உறுதியாகச் சொல்வது சாஸ்திரம். கடவுள் தத்துவத்தை உள்மனதில் தான் அனுப விக்க வேண்டும். இதற்கு மனத்தையும் இதயத்தையும் பக்குவப்படுத்த வேண்டி யது அவசியம். ஆனால் தற்போது மனம் வேறு எண்ணங்களில் ஆழ்ந்து இருக் கின்றது. இதைத்தான் மனத்தின் அழுக்கு என்கிறோம். எனவே மனத்தையும் இதயத் தையும் சுத்தம் செய்வதன் மூலம் தன்னைத் தான் சுத்தம் செய்தால் கடவுள் அனுபவம் கிடைக்கும். இதை வேறு யாரும் செய்ய முடியாது. ஒவ்வொரு வரும் தானாகவே செய்ய வேண்டும். ஆயினும் உலகம் பற்றிய எண்ணம் பந்த மாகவும் தடையாகவும் இருக்கின்றது.

உலகம் பற்றிய எண்ணத்தைத் தகர்ப் பதற்குக் கடவுள் பற்றிய எண்ணத்தை உருவாக்குகின்றோம். கடவுள் பற்றிய எண்ணம் வந்ததும் எதுவும் தடையாக இருப்பதில்லை.

கடவுள் பற்றிய எண்ணமோ, உலகம் பற்றிய எண்ணமோ, இரண்டுமே எண்ணங் கள் தான். கடவுள் பற்றிய எண்ணமும், உலகம் பற்றிய எண்ணமும் அலைகள் தான். ஆனால் மனம் அலையாதிருக்கும் போது அமைதி சாத்தியமாகின்றது. அச் சந்தர்ப்பத்தில் கடவுள் அனுபவம் கிடைக் கும்.

உலகத்தில் வாழும் எங்களுக்கு கர் மங்கள் உண்டு. கர்மங்கள் நிறைவேறும் போது கர்மங்களின் பலன் நம்மை வந்தடைகின்றது. இவ்வாறு பலன் நம்மை வந்தடையும் போது அது நம்மை உலக பந்தத்தில் ஆழ்த்தி விடுகின்றது. அதனால் நாம் செய்யும் கர்மங்களை கர்ம யோக மாகச் செய்ய வேண்டும். இந்த உலகில் வாழும் வரை நாம் புறக்கணிக்க முடி யாத கடமைகளும், கர்மங்களும் எங்க ளுக்கு உண்டு. செய்யும் கர்மங்களை அன்போடும் அர்ப்பண சிந்தையோடும் தெய்வீக நினைவோடும் செய்யும் போது அவை கர்மயோகமாக மாறுகின்றன. இறைவனுக்குரிய நிவேதனம் என்ற தகுதி யைப் பெறுகின்றன.

ஆகவே நாம் உலகில் வாழும் போது தார்மீக ஜீவிதத்தை நடாத்தி மனத் தூய்மை பெற வேண்டும். தூய்மை அதி கரிக்கத் தெளிவு ஏற்படும். தூய்மையும் தெளிவும் அமைய விவேகமும், வைராக் கியமும் வந்தமையும். இவற்றினால் உல கப்பந்தம் அகன்று கடவுள் அன்பு வளரும். அதன்பின் கடவுள் அருளால் அவனுக்கு ஞானம் பிறக்கும். ஞானம் பிறந்த மனிதன் ஞானி ஆவான். ஆகவே இக்காலத்திற்கு - ஏன் எக்காலத்திற்குமே ஏற்ற ஒரு மதம் கர்மயோகமாகும். இக்கருத்தையே தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி அவர் களும் மனவளக்கலை என்ற நூலில் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். சாந்த மான மனத்தில் நாம் கடவுள் சிந்த னையை ஏற்படுத்தலாம். கடவுள் தன் மையை திரும்பவும் நாம் ஞாபகப்படுத்தி மௌனமான நிலையில் இருக்கப் பழக வேண்டும். இப்படிப் பழகுதலையே "You are getting centered" மைய நிலையைத் தான் கடவுள் நிலை என்கிறோம். மைய நிலையை அடையும் போது கடவுள் நிலையை அடைகிறோம். "You are GOD Centered". நாளடைவில் இவ்வாறு பொறு மையுடன் தியானம் செய்தால் பூரணத் துவம் நம்மை வந்தடையும்.

மேல்சொல்லப்பட்ட கருத்துக்கள் சுவாமி யோகேஸ்வரானந்தா அவர்களால் 1997ஆம் ஆண்டு மார்கழி மாதம் 19, 20, 21ஆம் திகதிகளில் திருகோணமலை சிவயோக சமாஜ மண்டபத்தில் ஆற்றப் பெற்ற ஆத்மீகப் பேருரைகளிலிருந்து பெறப்பட்டவை என்பதை தாழ்மையுடன் அறியத் தருகின்றேன். சுவாமிஜி யாழ்ப் பாணத்திற்கும் பலமுறை வருகை தந்துள் ளார்கள். சுவாமிஜி அவர்கள் இலங்கை யிலும், மேலை நாடுகளிலும் ஆற்றிய ஆத்மீகப் பேருரைகள் இக் காலத்திற்கு மிகவும் பொருத்தமானவை என்பதில் ஐய மில்லை.

# தர்மத்தை நிலைநாட்டும் அவதார புருஷர்கள்

கணேசன் சைவசிகாமணி
முகாமைத்துவ உதவியாளர்
யாழ் மாநகர சபை.



முன்னவனே யானை முகத்தவனே முத்தி நலம்
சொன்னவனே தூய மெய்ச் சுகத்தவனே மன்னவனே
சிற்பரனே ஐங்கரனே செஞ்சடையஞ் சேகரனே
தற்பரனே நின்தாள் சரண்.

(திருவருட்பா)

**தர்மம் எப்படிப்பட்டது?**

எவையெல்லாம் இறைவனின் திருவுள்ளத்திற்குப் பிடிக்கின்றவையோ அவற்றை மட்டும் நாம் நமது அன்றாட வாழ்க்கையில் செய்வது தான் **தர்மம்** ஆகும். இதற்காகவே இறைவன் மனிதர்களுக்கு மனச்சாட்சி என்னும் உள்ளுணர்வு சக்தியை அளித்திருக்கின்றான்.



நாம் தவறான செய்கையில் ஈடுபட முற்படும் போது ஏதோ ஒன்று "**அதைச் செய்யாதே அதனால் தீங்கு ஏற்படும்**" என்று அவனைத் தடுக்கிறதே அதுதான் - அவனது மனதில் தானாகவே ஏற்படும் உணர்வுதான் மனச்சாட்சி ஆகும்.

**நீதி** - அநீதி, **நன்மை** - தீமை, **தர்மம்** - அதர்மம், **அறம்** - மறம், **அறிவு** - அறியாமை, **இன்பம்** - துன்பம், **ஒழுக்கம்** - ஒழுக்கமின்மை, **அருள்** - மருள், **உண்மை** - பொய்.

மேலே கூறிய ஒவ்வொன்றிலும் நல்லவற்றின் பக்கமாக நாம் இருக்க முயற்சிப்பது அறத்தின் வழி நடப்பதாகும். அதுவே இறைவனின் பக்கம் நாம் இருக்கின்றோம் என்பதற்குச் சாட்சியும் ஆகும்.

நமக்கு வாய்த்துள்ள கடமைகளையெல்லாம் கடவுளுக்குச் செய்யும் தொண்டு என்ற எண்ணத்தில் நாம் செய்து வரவேண்டும். இறைவனுக்குப் பிரியமான வகையில்

நாம் வாழ வேண்டும். அதுவே நம் ஆத்மா உய்வு பெறுவதற்குரிய வழியாகும். சுகமும் துக்கமும் நித்தியமானவையல்ல. ஆத்மாவோ நித்தியமானது. நித்தியமான ஆத்மாவைத் தற்காலிக அற்ப சுகங்களுக்காக நாம் இழக்கவும் பலியிடவும் கூடாது. வாழ்க்கையில் அனைத்து நிகழ்ச்சிகளும் தர்மத்தின் அடிப்படையிலேயே அமைய வேண்டும்.

ஒரு ஆத்மா உடம்பெடுத்து இப்பூவுலக வாழ்க்கை ஏற்பட்டவுடன் அந்த ஜீவன் தனது ஆயுள் உள்ளவரை நல்லபடியாக அவதானமாக வாழ்வதற்கு சில விதிமுறைகளையும், வழிமுறைகளையும் இறைவனால் வகுக்கப்பட்ட வேதங்கள், உபநிஷதங்கள், இதிகாச புராணங்கள், பைபிள், குறான், மகாவம்சம் என்பன எடுத்தியம்புகின்றன.

**இத்தகைய விதிமுறைகள் அவசியமானதா?**

நாம் இவ்வுலகில் பிறந்து விட்டோமே, இன்பமோ துன்பமோ வாழ்ந்துதானே ஆக வேண்டும் என்று சிலர் கேட்கலாம்.

நாம் எத்தகைய உலகில் பிறந்துள் ளோம் என்பதை அறிந்தால் இந்த நெறிமுறை கள் அதாவது **தர்மம்** ஏன் அவசியம் என்பது புரியும்.



மகான்களின் தர்ம போதனை

பூவுலகம் ஒரு கர்மபூமி ஆகும். நாம் முற்பிறவிகளில் செய்துள்ள நற்செயல்கள், தீய செயல்கள் ஆகியவற்றின் அடிப்படையில் தான் ஒவ்வொருவருக்கும் பிறவியை அமைத்துத் தரும் உலகம் என்று பொருள். ஏனெனில் பாவச் செயல்கள் மட்டும் செய்தவர்கள் இங்கு வந்து பிறப்பதில்லை.



பாவஉலகத்தில் தண்டணைகள்

அவர்களுக்கென்று பாவ உலகங்களும் உள்ளன. புண்ணி யச் செயல்கள் மட்டும புரிந்துள்ள உத்தமர்களும் இங்கு வந்து பிறப்பதில்லை. அவர்களுக்கென்று புண்ணிய உலகங்களும் உள்ளன.



மன உறுதி இல்லாமல் சபல புத்தி யினால் புண்ணியம், பாவம் ஆகிய இரண்டையுமே செய்தவர்கள் மட்டும் தான் பூமியில் பிறவி எடுககின்றனர். இப்படிப் பிறவி எடுத்த பிறகாவது சபலபுத்தியினால் தவறுகளைச் செய்ய வேண்டாம் என்பதற்காகவே தான் தர்மம் என்ற தூய நேர்மையான வாழ்க்கைப் பாதையை நமக்கு அமைத்துத் தந்துள்ளனர். (கெருட புராணம்)

மனிதனின் மனதை அதிதீவிரமாகப் பேதலிக்கச் செய்யும் கலியுகத்தில் தா்மத்தைக் கடைப்பிடிக்க முடியுமா? அவ்விதம் கடைப்பிடிப்பதால் நமக்கு நன்மை கிடைக்குமா? உடனுக்குடன் நன்மை ஏற்படும் போது அதா்மத்தைச் செய்வதில் என்ன தவறு? என்றெல்லாம் பலா் நினைப்பதுண்டு.

தா்மத்தைப் பின்பற்றுவது காரணமாக தற்காலிகமாகத் துன்பங்கள் நோ்வதுண்டு. ஆனால் முடிவில் நித்தியமான சுகம் தா்மத்தைப் பின்பற்றுபவனுக்கே உரியது. மனவுறுதி மட்டும் இருந்தால் கலியின் எந்த யுகமானாலும் தா்மத்தைக் கடைப்பிடிக்க முடியும் என இக்கலியுகத்திலே கடைப்பிடித்து வாழ்ந்து காட்டினா் பெரியோா் தா்மம் என்பது பலா் நினைப்பது போல் அப்படி ஒன்றும் கடினமானது அல்லவே!

ஆசையைக் குறைத்துக் கொள்வது, பொய் பேசாதிருத்தல், கொல்லாமை நல்லவா் மனதைப் புண்படுத்தாதிருத்தல், பிறா் பொருள் நாடாமை, கற்பு நெறி தவறாதிருத்தல், மதுவைத் தவிா்த்தல், பிறா் மனை நயவாமை, சூதாடுவதை விலக்கல் போன்றவற்றையே தா்மம் வலியுறுத்துகின்றதல்லவா. நாம் முற்பிறவியில் செய்த பாவபுண்ணியங்களுக்குத் தக்கபடியே வாழ்வில் இன்ப துன்பம் வரும். செய்த வினைப்பயனை பொறுமையுடன் ஏற்று அதை அனுபவிக்கப் பழகிக் கொண்டால் நமக்கு நன்மையே வரும்.



தீய செயல்கள், தீய சிந்தனைகள், தீய பேச்சுக்கள் ஆகியவற்றால் தங்களுக்குத் தாங்களே கேடு விளைவித்துக் கொள்பவா்களைத் 'தற்கேடா்' என்று சைவசித்தாந்தம் குறிப்பிடுகிறது.

நமது ஆத்மா அழியாதது. நமது உடல் அழியக் கூடியது. அழியும் உடலுக்குச் சுகம் தேடும் பொருட்டு அதா்மத்தைப் பின்பற்றி ஆத்மாவுக்கு கேடு விளைவிக்கக் கூடாது.

தா்மத்தை நாம் வாழவைத்தால் தா்மமும் நம்மை வாழ வைக்கும். தா்மத்தை நாம் அழித்தால் தா்மம் நம்மை அழித்துவிடும் என்பது வால்மீகி ராமாயணத்தில் கூறப்பட்டுள்ளது.

எனவே தா்மம் என்ற உயா்ந்த எண்ணத்தை நாம் வளா்க்க வேண்டும். ஆரோக்கியமான எண்ணங்கள் நம்மிடம் அமைய வேண்டும். இயன்றவரை எல்லோரும் தா்மத்தை அனுஷ்டிக்க வேண்டும். இது ஆத்மாவுக்கு ஆக்கம் தந்து முடிவில் நம்மை அமரத்துவம் பெறச் செய்யும்.

பிறருக்கு நாம் உதவ வேண்டும் . அதைச் செய்ய இயலாவிட்டால் பிறருக்கு உபத்திரவமாவது செய்யாமல் இருக்க வேண்டும். இக்கருத்தை புறநானூறு

'நல்லவை செய்தல் ஆற்றீராயினும்
அல்லவை செய்தல் ஒப்புமின்' என்று அழகுபடக் கூறுகிறது.




ஆன்மீகம் என்ற பாதைக்கு தர்மம் என்ற ஒரு வழிப்பாதை மட்டும் உண்டு. ஆன்மீக தளத்தை எய்தத் தகுதி உடையவர்கள் தவசிகள், சித்தர்கள், ரிஷிகள், அருளாளர்கள், பக்தர்கள் ஆகிய அனைவருமே பொதுவாக யோகிகள் என அழைக்கப்படுகின்றவர்கள். 'யோகா' என்றால் தொடர்பு கொள்ளுதல் என்று பொருள். யோகா முறையில் அனைத்தும் ஆன்மீக உலகுடன் நமக்குத் தொடர்பு ஏற்படுத்தித் தரவே உள்ளன. ஆனால் நாம் கர்மபூமியின் சேர்க்கையின் தூய்மைக் கேட்டால் பாதிக்கப்பட்டிருக்கின்றோம். இறைவனது தொடர்பை இழந்து வாழ்கின்றோம். எனவே இப்பாதிப்புக்களைத் தவிர்த்து ஆன்மீக உலகிற்கு திரும்பச் செல்வதற்கான வழிமுறைகளே யோகம் எனப்படுகின்றது. யோகா முறையில் இறைவனின் தொடர்பை நாம் வாழ்க்கையில் கூட்டிக் கொள்வோமாயின் நாம் புண்ணிய ஆன்மீக உலகிற்குச் செல்வதற்கான மானிட வாழ்க்கை முழுமை பெறுகின்றது. இறப்பிற்குப் பின் ஆத்மா மீண்டும் பூவுலக வாழ்க்கைக்குத் திரும்புவதில்லை.



ஆத்மீக உலகம் என்று நாம் கூறும்போதெல்லாம் பிறப்பு, மூப்பு, நோய், இறப்பு ஆகிய துன்பங்கள் இல்லாத உலகினையே குறிக்கின்றோம். யோக முறையின் துணையைக் கொண்டு நாம் மேல் உலகங்களுக்குச் செல்ல முயலுவோமாயின் அவ்வுலகங்களில் நுழைவதற்கு ஏற்றதான சரீரம் நமக்கு ஏற்படும். இச்சரீரமானது பூமியில் வாழ்வதை விட ஆத்மீக உலகத்தில் நீண்ட காலங்கள் வாழமுடியும். இந்த வாழ்நாள்கள் 20 ஆயிரம், 50 ஆயிரம், ஒரு லட்சம் வருடங்களோ, யுகங்களோ கூட வாழ முடியும்.

எனவே ஆத்மாவானது தர்மத்தின் வழியில் நின்று ஆன்மீகப் பொறியில் ஈடுபட்டு வேதாகமங்களைக் கற்றுணர்ந்தவர்களும், ஓம்காரத்தை இடைவிடாது ஜபிப்பவர்களும் மற்றும் துறவறம் மேற்கொண்டு பெரும் தவம் புரிபவர்களும் பிரம்ம ஜோதியில் நுழைகின்றவர்கள் ஆவர். இவ்வுயரிய நிலையை அடைய எண்ணியே சிலர் பிரம்மச்சரியத்தைக் கடைப்பிடிக்கின்றனர் (பகவத்கீதை).

நாம் ஆத்மீகத்துறையில் நுழைவதற்கும், தர்மத்தைப் பற்றிய அறிவைப் புகட்டுவதற்கும், நன்னெறியில் நம்மைக் கொண்டு வருவதற்கும், வழிகாட்ட உண்மையான அருளாளர்களும், துறவிகள், ரிஷிகள், சித்த புருஷர்கள் போன்ற மகான்கள் எமது பூமியில் அவதரித்து வரவேண்டும். அவர்கள் நடப்பது, சிந்திப்பது, தியானிப்பது, பேசுவது, உண்பது, நீராடுவது என்ற எந்தச் செயலையும் செய்தாலும் அவர்களிடம் நிகழும் தெய்வீக காரணமாக பூமாதேவி சுமந்திருக்கும் பாவங்கள் வெகுவாகக் குறைந்து போகும்.



மக்கள் செய்யும் பஞ்சமா பாதகங்களினால் பூமாதேவி மீது குவிக்கப்பட்டிருக்கும் பாவங்களையும், பாவிகள் வந்து கங்கையில் நீராடுவதால் குவிக்கப்பட்டிருக்கும் பாவங்களையும் போக்குவதற்கு உண்மையான மகான்களின் தொடர்பு எப்போது கிடைக்கும் என்று பூமாதேவியும், கங்கா தேவியும் ஆவலோடு ஏங்கிக் காத்துக் கொண்டிருப்பார்களாம். இவர்களின் வருகையால் குவிக்கப்பட்டிருக்கும் பாவங்கள் எரியும் நெருப்பில் போடப்படும் விறகு தன் உருவத்தையே இழந்து சாம்பலாவதைப் போல மறைந்து போகின்றன.





ரிஷிகளை வணங்குதல்

இவர்களின் வருகையால் இறைவனும் இவர்களுக்குத் துணையாக வந்து தங்கிவிடுவதுண்டு. இங்கு நித்திய பூசைகள், பிரார்த்தனைகள், தியானங்கள், நன்னெறிப்படுத்தும் போதனைகளும் நடைபெறுவதுண்டு. இங்கு இயற்கை அனர்த்தங்கள், யுத்தப் பேரழிவுகள், நோய்கள் என்பன அணுகுவதில்லை. மும்மாரி மழை பொழியும், பஞ்சம் தோன்றாது, தீயவர்கள் விலகிச் செல்வார்கள். களவு, கொலை என்பன ஸ்தம்பித்து விடும். மக்களுக்கு நன்மையான காரியங்கள் நினைத்த போது நிறைவேறும். மக்கட் செல்வம் கிடைக்கும். கற்பு பாதுகாக்கப்படும். உலக நாடுகளின் மதிப்பும் நன்மைகளும் ஏற்படும். இதுவே உண்மை.

உண்மையான மகான்களைத் தண்டிப்பது, நிந்திப்பது, கேலிசெய்வது, இவர்களை அழிப்பது போன்ற காரணங்களால் இறைவன் பேரழிவுகளை ஏற்படுத்துவது உண்டு.

மாணிக்கவாசக சுவாமிகளிடம் குதிரைகள் வாங்கிவரும்படி கொடுத்த பணம் திரும்ப வழங்காதமையால் பாண்டியராசன் உத்தரவில் மாணிக்கவாசகரை உச்சிப் பொழுதில் சூரியனைப் பார்க்கும்படி வருத்தினார்கள். சுவாமிகளும் சகிக்க முடியாதவராய் வீழ்ந்து சோம, சூரிய, அக்கினி என்னும் முச்சுடராகிய கண்களையுடைய சோமசுந்தரக் கடவுளை அழைத்து கண்ணீர் விட்டு வருந்தினார். இறைவன் விடுவாரா? அவரது அழுகையைக் கண்டு அருமர்த்த பாண்டியனுக்கு மாணிக்கவாசகரின் பக்தியின் பெருமையை உணர்த்த வைகைநதியை நோககி ஊழிக்காலத்தில் பொங்கி எழுந்து வரும் சமுத்திரம் போலப் பெருகக் கடவது என்று ஆஞ்ஞாபித்தருளினார். உடனே வைகையானது கடும் பெருக்கெடுத்து வீடுகள், மதில்களை வீழ்த்தி உள்ளே புகுந்து நகரத்தை அழித்தது.

சிவசின்னங்கள் தரித்து கருணைக் கடலாம் பரம்பொருளைப் புகழ்ந்து பாடி இறைவனிடம் சரண் புகுந்த அடியவர்களுக்கு, தீயவர்களால் துன்பங்கள் நேரிடும் போது இறைவன் கொடுக்கும் தண்டனையை மக்களும் அனுபவிக்க நேரிடும் என்பதை இது எடுத்துக் காட்டுகின்றது.

இதேபோன்றது தான் கற்புக்கனல் கண்ணகியின் வரலாற்றில் நீதியும், கற்பும் மேன்மைப்படுத்தப்படுகின்றது.

ஆண், பெண் கற்புநெறியைக் கடைப்பிடித்து தர்மத்தின் வழியல் தவத்தை மேற்கொள்பவர்களாக இருப்பார்களாயின் இவர்களது சாபமே தீயவர்களை அழித்து விடும் சக்தி வாய்ந்தது.

துன்பங்கள் எத்தனை தான் தேடி வந்தாலும், இறைவா! நீதான் சரணம் என்று கூறிவிட்டு துன்பங்களையும் தாங்கிக் கொண்டு தர்மத்தின் வழியில் வாழ்ந்துகொண்டு இருப்பவர்களும் இப்பொழுது உண்டு. நல்லவர்களுக்கு துன்பங்களைக் கொடுக்கும் தர்மத்தின் வீழ்ச்சி காரணமாகவே சமீப காலமாக நிலம், நீர், நெருப்பு, காற்று, வானம் என்ற பஞ்சபூதங்கள் அடுத்தடுத்து மனித குலத்தின் மீது சொல்ல முடியாத கோபம் கொண்டிருப்பதைக் காண்கின்றோம். இந்தியா, இலங்கை, அந்தமான், நிக்கோபர் தீவுகள், இந்தோனேஷியா, தாய்லாந்து ஆகிய இடங்களில் பூகம்பங்களும், கடல் கொந்தளிப்பும் உண்டாயின. பல நாடுகளில் வான் மழை பொழிந்து வெள்ளத்தால் உலுக்கி வருகின்றது. அமெரிக்காவை அதி வேகத்தில் சூறாவளியும், வெள்ளமும் ஆட்டிப்படைத்தன. ஜப்பான், ஜேர்மனி நாடுகளில் எரிமலை வெடித்துச் சிதறுகின்றன. இந்தியா, அவுஸ்ரேலியாவில் சூரிய வெப்பத்தால் காடுகள் எரிந்தது. மக்களும் சூரிய வெப்பம் தாங்கமுடியாமல் மடிந்துள்ளனர்.

பரமசிவனே நீர், நிலம், காற்று, தீ, வானம் என்ற ஐந்து பூதங்களாக விளங்குகின்றார். இவரே படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐந்தொழிலையும் புரிகின்றார். இந்த பரம்பொருள் தான் வேதங்கள் ஆகமங்கள், இதிகாசங்கள் மூலம் தர்மத்தை எவ்வாறு கையாள வேண்டும் என்று எமக்கெல்லாம் அறியத்தந்துள்ளார். இத்தனையையும் மீறி நாம் தர்மவான்களுக்கும், அப்பாவி களுக்கும், ஆத்மீகவாதிகளுக்கும் அதர்மத்தைச் செய்வதால் ஏற்படுவதே இந்த அழிவுக்குக் காரணமாகும். எனவே தர்மத்தின் வழியில் நின்று பரம்பொருளை நெஞ்சில் நினைத்து திருவடியை வழிபட்டு வந்தால் பஞ்சபூதங்களின் எந்தவிதமான பாதிப்பும் இல்லாமல் வாழலாம் என்பதனை பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்து 3000 வருடங்கள் தவம் புரிந்து வாழ்ந்த திருமூலர்

“வான் நின்று இடக்கில் என்? மா கடல் பொங்கில் என்?
கான் நின்ற செந்தீ கலந்து உடன் வேகில் என்?
தான் ஒன்றி மாருதம் சண்டம் அடிக்கில் என்?
நான் ஒன்றி நாதனை நாடுவன் நானே”

என இப்பாடலின் மூலம் வெளிக்காட்டியுள்ளார்.

**அவதார புருஷர்கள்**

மக்கள் தொகைப் பெருக்கம் எல்லாக் காலத்திலும் தொல்லையையே கொடுத்து வந்துள்ளது. மக்கள் தொகை அதிகரிக்க சூதும், வாதும் வஞ்சனையும். கொலைகளும், களவுகளும் அதிகரிக்கும். அதா்மம் தலைவிரித்தாடும்.

நல்லோா் பலராக இருந்து மக்கள் தொகை பெருகினால் அதனால் உலகிற்குக் கேடு எதுவும் விளைந்துவிடாது. மாறாக நன்மையே விளையும்.

ஆனால் தீயோரின் எண்ணிக்கை பெருகிவிட்டாலோ உலகுக்கு விளையும் கேட்டினுக்கு அளவேயிருக்காது. இப்படியான நிலையில் மக்கள் தொகைப் பெருக்கத்தினால் பாவங்களின் பாரம் கூடி பூமாதேவி தாங்குகின்ற சக்தி இல்லாமல் பெரிதும் வருத்தமுற்றிடுவாள். அப்போது தான் பூமி பாரம் குறைய ஸ்ரீமன் நாராயண மூா்த்தி நல்லவா்களைக் காத்து தீயவா்களை அழித்து தா்மத்தை நிலைநாட்ட அவதாரங்கள் எடுப்பதுண்டு.

அவதாரம் என்றால் கீழே இறங்கி வருதல் என்று பொருள். நமக்காக நம் பாவங்களைப் போக்கி நம்மைக் கரை சோ்ப்பதற்காக பகவான் நம்நிலைக்கு இறங்கி வந்து நம்மைக் கரை சோ்ப்பிக்கின்றான். உலகம் உய்யவே திருவவதாரம் நிகழ்கிறது என்பதனைக் கந்தபுராணமும் இயம்புகின்றது.

"அருவமும் உருவமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்ப தோா் மேனியாகக்
கருணைகூா் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே
ஒரு திருமுருகன் வந்தாங் குதித்தனன் உலகம் உய்ய!

அவதார புருஷா்கள் சித்த புருஷா்களைப் போல சித்தி அடைந்து செயல்கள் புரிவதில்லை. கடவுளே நேராக மனித வடிவில் பிரகாசமாக தோன்றுவா். இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானாசக்தி போன்ற அற்புத சக்திகளைப் பெற்றிருப்பாா்கள்.

தா்மங்களைக் காப்பதற்கு அவதாரம் செய்யும் போது எந்த அளவுக்கு தா்மங்கள் நலிந்திருக்கின்றனவோ அந்த அளவுக்கு அவதாரங்களின் தன்மைகளும் மாறுபடுகின்றது.

ஊழிக்காலத்தில் அழிவுகள் ஏற்பட்ட போது தா்மம் மட்டும் என்றும் அழியாது இருப்பதற்காக சிவபெருமான் தா்மதேவதையை வெள்ளை எருது வடிவமாக மாற்றி தனது வாகனமாக ஏற்றுக் கொண்டவா். இதனால் ரிஷபாரூடா் என்ற நாமமும் ஏற்பட்டது. யுகங்கள் தோன்றும் போது ஒவ்வொரு யுகத்திலும் தா்மம் மாறுபட்ட நிலையில் காணப்படும் என்பதை அறிந்த சிவபெருமான்,

- கிருதாயுகத்தில் தா்மம் முழுமையாகக் காணப்படுவதால் தா்மதேவதையாகிய வெள்ளை எருது நான்கு கால்களுடனும்

- திரேதாயுகம் ¾ பங்கு தர்மம் காணப்படுவதால் தர்மதேவதையை மூன்று கால்களுடனும்
- துவாபரயுகம் ½ பங்கு தர்மம் காணப்படுவதால் தர்மதேவதை இரண்டு கால்களுடனும்
- கலியுகம் ¼ பங்கு தர்மம் காணப்படுவதால் தர்ம தேவதை ஒரு காலுடனும் பூமியில் ஊன்றி நிற்கும் படி யுகங்கள் தோன்றுவதற்கு முன்பே தர்ம தேவதைக்குக் கட்டளை இட்டாராம் என்று புராணங்கள் கூறுகின்றது.

**ஸ்ரீ இராமபிரான் அவதாரம்**

இராமபிரான் அவதரித்தது திரேதாயுகம். அப்போது தர்மம் ¾ பங்கும் அதர்மம் ¼ பங்குமே காணப்பட்டது. ஆகவே ¼ பங்கு அதர்மத்தை அழித்து நல்லவர்களைக் காக்க இராமபிரான் பிறந்தார்.



இவரது அவதாரம் மனிதர்கள் எப்படி வாழவேண்டும். தர்மங்களை எப்படி அனுசரிக்க வேண்டும் என்பதை நமக்கு நம்மைப் போலவே வாழ்ந்து காட்டியவர். இராமன் சிரித்தால் தர்மம், கண் சிவந்தால் தர்மம், அவனின் செயல்கள் எல்லாம் தர்மமே. வஞ்சகம் கலவாத திரேதாயுகத்தின் வடிவழகன். ஆற்றல், அன்பு, அருள், அழகு, ஒழுக்கம், பண்பு முதலான எல்லாச் சிறப்புக்களும் மிக்கவனாக இருப்பவன். அறத்தின் வடிவம், காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாச்சர்யம் எனப்படும் உட்பகை ஆறினையும் ஒருங்கே வென்ற வீரன்.

**ஸ்ரீ கிருஷ்ண அவதாரம்**

ஸ்ரீ கிருஷ்ண பகவான் கீதாசாரத்தை உபதேசிக்கும் ஆச்சாரியனாக நின்று தர்மங்களை எப்படி அனுசரிக்க வேண்டும் என மக்களுக்கு வழிகாட்டியவர். அவனுடைய லீலைகள் நம்மைப் பரவசப்படுத்தி நம்மனத்தை அவனிடமே செலுத்திவிடும். சக்தி வாய்ந்தவைகள். தன்னையே மற்றவர்களுக்குச் சொந்தமாக்கியவன். அசுரர்களை அழித்து தர்மத்தை நிலைநாட்டுவதே கிருஷ்ண அவதாரத்தின் நோக்கமாகும்.

**கண்ணன் கூறிய யுத்த தர்மம் என்ன?**

மற்றவர்களின் வற்புறுத்தலினாலோ நீங்கள் தவறாகவோ அறிவீனத்தினாலோ, தீயவர்களின் பேச்சைக் கேட்டோ தவறு செய்தால் பாவத்தின் ஒரு பகுதி அவர்களையும் சாரும். மனிதர்கள் ஈடுபடும் யுத்தங்களில் பொதுமக்களை இம்சிப்பது, அவசியமில்லாமல் நெருப்பை உபயோகித்தல், பயிர்களை நாசம் செய்தல், அவசியமில்லாமல் எவரையும் கொல்லுதல், நோய் பிணிகளைப் பரப்புதல் போன்றவற்றை தர்மயுத்தத்தில் ஈடுபடுபவர்கள் செய்வதில்லை என்பதேயாகும். (பகவத்கீதை).

**கல்கி அவதாரம்**

கலியுகத்தில் தர்மதேவதை ஒரு காலை மட்டும் ஊன்றி நிற்பதால், பாவமானது கொலை, கோபம், பொய், சோகம் எனப்படும் தனது நான்கு கால்களையும் பூமியில் ஊன்றி நின்று உயிர்களுக்கு ஊறு விளைவிக்கும் போது, தருமதேவதை தனது நான்கடிகளாகிய கருணை, புனிதம், உண்மை, தவம் ஆகியவற்றைப் பூமிமேல் நிறுத்திவிடாமல் ஒளித்துக் கொள்ளுமாம்.



நாம் கலியுகத்தில் தான் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். யுகங்களில் கலியுகம் கடைசியுகமாகும். கிருதயுகத்தில் இருந்த தர்மம் கலியுகத்தில் இருக்காது. கலியுககாலம் கொடியது என்பதில் ஐயமேயில்லை. இக்கலியுககாலம் முற்றமுற்றக் கொடுமைகள் அதிகரித்துக் கொண்டே வருவதை நாம் நேரடியாகவே காண்கின்றோமல்லவா? இந்தக் கலியுக தர்மங்களைப் பற்றி முன்னோர்கள் என்ன கூறியுள்ளார்கள், இப்போது என்ன நடக்கிறது என்பது பற்றி நாம் ஆராய்வோம்.

மக்களுக்கு பணம் ஒன்றே குறிக்கோளாக இருக்கும். பணத்துக்காக மக்கள் எதையும் செய்யத் துணிவர். நாட்டையும் காட்டிக் கொடுப்பர். பணத்திற்காக பஞ்சமா பாதங்களையும் செய்யத் துணிவர். பின் விளைவுகளைச் சிந்திக்கமாட்டார்கள். பணம் இல்லாதவன் நல்ல அறிஞனாயினும் நல்ல குணமுள்ளவனாயினும் அவரை யாரும் அசட்டை செய்யார்கள்.

அரசு செய்வோர் அரும்பழியையும் கூசாது செய்வர். மக்கள் நலனைக் கவனிப்பதற்குப் பதிலாகத் தங்கள் நலனையே பெருக்கிக் கொள்வர். இது என்னுடைய நாடு என்று கூறி மண்ணாசையால் போரிட்டு மடிந்து போவர். பிள்ளைகள், தாய் தந்தையரை நிந்திப்பர். பணிந்து நடக்கமாட்டார்கள். இறந்த ஆத்மாக்களுக்கு பிதிர்க் கடன்கள் செய்வது காலப்போக்கில் இல்லாமல் போய்விடும். குருவை மாணவர்கள் மதிக்கின்ற தன்மை குறைந்து போகும்.

## உன் திருக்கைவேல் போது மெனக்கு

முருகனே! நல்லூர் குமரனே! வேலா
அருணகிரி போற்றும் இறைவா! - அருவுருவே!
உன்னடி யேதான்என் தஞ்சமையா நல்லூரா!
உன்திருக்கை வேலே துணை.

இந்துமா ஆழியில் இலங்கும் இலங்கையின்
தீந்தமிழ் பயிலும் செந்நெறி தேசத்தே
சுந்தரச் சோலைகள் சூழ்ந்த மங்களம்
திகழும் புண்ணிய பூமியாம் நல்லூரதில்
செந்தமிழ் புரக்கவும் சிட்டரை காக்கவும்
துட்டரை ஒடுக்கவும் வீற்றுள்ள செவ்வேளே!
உந்தன்கா வலையொழிய ஒன்றையும் நம்புகிலேன்
உன்திருக் கைவேல் போது மெனக்கு.

**பா.பாலச்சந்திரன்**
**மயிலணி, சுன்னாகம்.**

# காவிரி நாயகன்

சங்கீத கதாப்பிரசங்க வித்துவான் 'கானகதா வாரிதி'
**பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்தசர்மா**
கொக்குவில்.

அருணகிரியார் முருகனை பிரம்மசுவ ரூப தெய்வம் என்று அனுபவிக்கிறார். முருகன் அழகுக்கழகாயிருக்கிறான். பழத்திற்குப் பழமாயிருக்கிறான். காயா யிருப்பவர்க்கு எல்லாம் பரதேவதை பழம் கொடுக்கிறான். பூத்துக் காய்த்துக் கனியும் கனிகள் துன்பமாகிய விதையைக் கொடு த்து வருத்தும். அவ்விதையே மரத்தின் பிறப்புக்குக் காரணமாகிறது.

தோன்றும் காலத்திலேயே பழமாய்த் தோன்றி பழமாயே வளரும் கனி முருகன். அவன் நிழலில் தானே கனிந்தவன். தானே கனியாத கனியை உஷ்ணத்தினால் கனிய வைப்பார்கள். அதுபோல் கனியாத கல்மனதைத் துன்பம் தாங்காமல் அழும் பொழுது உள்ளம் கனிந்து விடுகிறது.

வார்த்தைக்கு ஆதாரமாயிருக்கப்பட்ட பொருளை மிகச் சுலபமாய் உபதேசித்து விட்டார் முருகன். உலகத்தில் குளிர்ச் சியை வளர்ப்பதெப்படி? பரமசிவனுடைய மனம் குளிர்ச்சியடைந்ததாம். பரமசிவனு டைய சூழ்நிலை அனைவருக்கும் தெரியும். அவரிருக்கும் இடம் பனிமலை. தலையிலேயோ குளிர்ந்த கங்கை பெருகிக் கொண்டிருக்கிறது. அவரைக் குளிரப் பண்ணுவதென்றால் என்ன? உலகத்தில் தாபமடைந்த மனங்களையெல்லாம் குளிரச் செய்வதேயாகும். அதெப்படி? "ஓம்" என்ற அட்சரம் - இதைச் சொன்னால் தணியாத தாபம் தீர்ந்து உள்ளம் குளிரும். "ஓம்" என்பது பரம்பொருள். பதினாலுலகத் தையும் தன்னிடத்திலடக்கி வைத்திருக் கும் பொருளே "ஓம்". "ஓம்" என்பது முருகன். "முருகா" என்னும் பொருளே. வேற்றுமையற்றவனே சிவயோகி. சிவனை உணர்ந்தவன் யார்? சிவஞானி யார்? சிவனைத் தெரிந்த ஞானி யார்? என்பதை சித்தர் ஒருவர் கூறியுள்ளார்.

**"பாரடங்கவுள்ளதும் பரந்தவான முள்ளதும்**
**ஓரிடமும் இன்றியே ஒன்றி நின்ற ஒண்பொருள்**
**யாரிடமும் இன்றியே அவர் அகத்துளும் புறத்துளும்**
**சீரிடங்கள் கண்டவர் சிவந் தெரிந்த ஞானியே"**
என்றார்.

யார் ஞானி? எங்கும் நிறைந்திருக்கும் பொருளை எல்லாவிடங்களிலும் காண்ப வனேயாகும். இடம் என்பதே ஷேத்திரம். உலக முழுவதும் பகவான் இருக்குமிடம். எல்லாவிடங்களிலும் பகவானைக் காண்ப வனுக்கு அவன் பார்க்குமிடங்களிலெல் லாம் பகவானே காட்சியளிப்பார்.

ஞானிகள் ஒரு குழந்தையைப் பார்க்கும் பொழுது இந்தக் குழந்தையிடம் பகவான் நன்றாய்ப் பிரகாசிக்கிறான் என்று நினைத் தால், அந்தக்குழந்தைக்குள் இருக்கும் பகவான் வெளியே வந்து விளையாடுவான். அதற்காகவே தான் மகான்களுடைய

கண் பார்வை குழந்தைகளின் மேல் படவேண்டுமென்பது. அவர்கள் இல்லா ததை வைத்து விடுகிறார்களென்ப தில்லை. அவர்கள் பார்க்குமிடங்களி லெல்லாம் பகவானையே பார்ப்பதால், அவர்கள் பார்வையினால் உள்ளே இருக் கும் பகவான் வெளியே வந்து விளை யாடுகிறான்.

தாயுமானவர் கடவுளை எங்கும் பார்த் தார். "பார்க்கின்ற மலரூடு நீயேயிருத்தி" என்றார். விண்ணே! விணாதியாம் பூதமே! நாதமே! வேதமே! வேதாந்தமே! மேதக்க கேள்வியே! கேள்வியாம் பூமிக்குள் வித்தே! அவ்வித்தின் முளையே! கண்ணே! கருத்தே! என் எண்ணே! எழுத்தே! கதிக் கான மோனவடிவே! கருதரிய சிற்சபை யில் ஆனந்த நிர்த்தமிடும் கருணாகரக் கடவுளே! என்றழைக்கின்றார். பண்முள்ள பெரிய மனிதன் கையிலுள்ள பொருளைக் கொண்டு தங்கக் குடமாகச் செய்து அதனுள் கழுநீரை நிரப்பி வைக்கிறான். வெளிப்பார்வைக்குத் தங்கக் குடம் உயர் ந்து படாடோபமானது. ஆனால் உள்ளே இருக்கும் நீர் பயனற்றது.

மற்றொருவன் படாடோபமின்றி அடக்க மாயிருக்கிறான். அவனுக்குத் தங்கம் கிடைத்து விடுகிறது. அத்தங்கத்தை மண் குடத்தில் நிரப்பி வைக்கிறான். குடம் மதிப்பற்றதாயினும், உள்ளேயுள்ள பொரு ளுக்கு மதிப்பதிகம். அதுபோல், இந்த உடம்பு தங்கக் குடம் போல் உயர்ந்த தாயிருந்து பயனில்லை. உள்ளே அன் பெனும் பொருளை நிரப்ப வேண்டும். அவ்வாறு நிரப்பினால், உடல் தாழ்ந்த தாயிருப்பினும் உள்ளேயுள்ள பொரு ளுக்கு மதிப்புண்டு.

யார் எதைப் பாடினாலும், **அதை அனு** பவிக்கும் ரசம் சிவரசம். **பொன்னே!** மணியே! பொருளே! அருளே! **என்று** முருகனையழைக்கிறார் அருணகிரியார். பொன்னே இறைவன் என்று நினைக்கின் றனர் சிலர். அது தவறு. எந்த இறைவனை நினைத்தால் பொன் ஓடி வருமோ அத்த கையவன் தான் இறைவன். ஆனால் பொன்னை முன்னால் வைத்தால் இறை வன் ஓடி விடுவான். இறைவனை முன்னே வைத்தால் எல்லா ஐஸ்வரியங்களும் அவ னைத் தேடி ஓடிவரும்.

பொன்னையும், ஆனந்தத்தையும், ஆண்டவனையும் வைத்து அனுபவிக்க வேண்டும் என்றால், சித்தர்கள் பாடிய பாட்டைக் கொண்டு அனுபவித்தால் தெரியும். "பொன்னார் மேனியனே" என்ற அடியில் பெரிய தத்துவத்தை வைத்து விட்டார் சுந்தரமூர்த்தி நாயனார்.

**என்னப்பன் அல்லவா! எந்தாயு மல்லவா!**
**பொன்னப்பன் அல்லவா! பொன்னம்பலத்தவா!**

என்ற அடிகள் சிறந்த தத்துவத்தை விளக்குகின்றன.

பொன்னம்பலம் எங்கேயிருக்கிறது? சிற்றம்பலத்தில் பொன்னம்பலம் இருக் கிறது. அது இந்த உலகத்திலுள்ள போலிப் பொன்னல்ல. பரம்பொருளாகிய பொன். சிவனுடைய திருமேனியே பொன் மேனி. பொன்னம்பலம் உள்ளேயிருக் கிறது. அதைப் பார்க்க முடியவில்லை; அழுக்கு மூடியிருக்கிறது; அழுக்கை நீக்கினால் பொன்னைப் பார்க்கலாம். கோலார் தங்கச் சுரங்கத்தில் எடுப்பது வெறும் பாறைக் கட்டி தான். அதைப் பொடி செய்து உருக்கி எடுத்தால் கிடைப் பது தங்கம். அதைப்போல், மனித மனம்

தன்னலத்தால் இறுகி, இறுகிக் கட்டி தட்டி பாறைபோல் இருக்கிறது. அந்தப் பாறை யைப் பொடி செய்து உருக்கி, உள்ளே யுள்ள இறைவனாகிய பொன்னைக் காண வேண்டும். அதற்கு வழி கூறுகின்றனர் சித்தர்கள்.

**''ஒன்றும் ஒன்றும் ஒன்றுமே உலகனைத்தும் ஒன்றுமே அன்றும் இன்றும் ஒன்றுமே அனாதியானது ஒன்றுமே கன்னல் நின்ற செம்பொனைக் களிம்பறுத்து நாட்டினால் அன்று தெய்வம் உம்முளே அறிந்ததே சிவாயவே''** என்றார்.

பொன்னை எடுத்து வாயில் போட்டால் ருசிக்காது. ஆனால், பொன்னே! மணியே! என்று இறைவனுடைய நாமங்களைப் பாடும் பொழுது நாவில் ருசி ஏற்படுகிறது. கருப்பஞ்சாற்றுக்குக் கன்னல் என்று பெயர். ஆண்டவனாகிய செம்பொன்னுக் குள் அவனுடைய கருணையாகிய கருப் பஞ்சாறு இருக்கிறது. இறைவனுடைய கருணை இலங்கையில் மட்டுமல்ல எல் லாத் தேசங்களிலும் இருக்கிறது. நமக்குத் தாயும், தந்தையும், முருகன் ஆகையால், அம்மாவென்றால் வள்ளியும் அப்பாவென் றால் முருகனும் வந்து விடுவர். முரு கனுடைய கருணை எங்கும் விளையாடு கிறது.

**உள்ளமுருகில் உடனாவரல்லது தெள்ள அறியர் என்றுந் தீபற**

**சிற்பரச் செல்வர் என்றுந் தீபற**

என்று பாடினார். இசை இல்லாவிட்டால் சங்கீதம் இல்லை. வள்ளி நல்வினை யாகிய தினைப்பயிரை வளர்த்து அதை ஆசைகளாகிய பட்சிகள் கொத்தாத படி ஓட்டினாள்.

"ஆசை பட்சி அகலாதோ, ஞானமுத்தி வாராதோ" என்று ஓங்காரமாகிய கவணில் முருகனுடைய நாமமாகிய மாணிக்கக் கல்லை வைத்து விரட்டுகிறாள். அவள் இசை பாடும் பொழுது பதினாலுலகத்திலு முள்ள "ஓம்" என்ற சத்தத்திலிருந்து இசை வந்ததாம். ஏழு ஸ்வரம் உடையது இசை. ஏழு ஸ்வரங்களைக் கடந்தால் அங்கும் 'ஸ' (மேல் ஸட்ஜம்) இருக்கிறது. அதன் கருத்தென்ன? ஏழுமலையைக் கடந்தால் ஏழுமலையானைக் காணலாம் என்பது அதன் கருத்து. ஏழுமலையில் ஏறுவதல்ல ஏழு இசையைக் கடந்து இறைவனுடன் இசைய வேண்டும்.

எங்குமுள்ள ஆண்டவனைப் பார்த்து அன்பினால் இசைந்து வணங்கினால், கடிக்க வந்த பாம்பும், ஒதுங்கிவிடும். அப்பாம்பிலிருப்பவனும் இறைவனாகை யால் வணங்கியவுடன் அதனிடம் உள்ள தெய்வத்தன்மை வெளிப்பட்டு கொடிய தன்மையை அடக்கிவிடும். உலகெங்கும் நிறைந்திருப்பவன் சிவன். அவன் மன தைக் குளிர வைத்தது ஓங்காரம். ஓங் காரத்தை இரகசியமாக உபதேசித்தார் முருகன் தந்தையாகிய சிவனுக்கு. அந்த ஓங்காரத்தை இரகசிமாய்த் திருப்புகழிலே அழகாக உபதேசித்து விட்டார் அருணகிரி யார். எப்படி?

**''சிவனார் மனங்குளிர உபதேச மந்திரம்''** என்று.

# செழுமை மிகுந்த பழமைகளுக்கு மீண்டும் புத்துயிரூட்டுவோம்!

**இ.இரத்தினசிங்கம்**

**செயலாளர், சைவசமய விவகாரக் குழு**

**யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்**

"பழைமை பாடி செழுமை தேடல்" என்பது ஆன்றோர் வாக்கு. இற்றைக்கு அரை நூற்றாண்டுகளுக்கு முன்னர் நாடும், வீடும், ஊரும், மக்களும் ஏன் அனைத்து உள்ளங்களுமே அமைதியாக இருந்தன. செழுமை மிக்க பழமைவாய்ந்த விழுமியங்கள், வாழ்க்கை முறைகள், பாரம்பரியங்கள், பண்பாடுகள், உயிரிலும் மேலான ஒழுக்கம் போன்றன அனைத்து மக்களாலும் போற்றப்பட்டு, பின்பற்றப்பட்டு வந்தமையே இதற்கான அடிப்படைக் காரணங்களாகும்.

அக்காலத்தில் வாழ்ந்த குடும்பங்களில் பெரும்பாலானவை வறுமையான நிலையிலேயே இருந்தன. அதன் காரணமாக அனைவரும் வறுமைக்கு எதிரான கடின உழைப்பு மற்றும் சுயமுயற்சிகளில் ஈடுபடலாயினர். இதனால் அவர்களுக்கு நேரம் போதாமலிருந்தது. வறுமையில் வாழ்ந்தோர் தமது எதிர்காலம் சிறக்க வேண்டுமென்பதற்காகவே கடின உழைப்பை மேற்கொண்டனர். தமது படிப்புக்காக கூலி வேலைசெய்து படித்துப் பட்டம் பெற்று வாழ்க்கையில் நல்லதொரு நிலைக்கு உயர்வடைந்து ஏனையவர்களுக்கு முன்னுதாரணமாகப் பலர் திகழ்ந்தனர்.

ஆரம்பகாலத்தில் மாதா, பிதா, குரு, தெய்வம் போன்றவர்கள் உயர்வான நிலையிலேயே வைத்துப் போற்றப்பட்டு வந்துள்ளனர். மாதாவும் பிதாவும் மகவுக்குக் குருவைக் காட்ட, குருவானவர் தெய்வத்தைக் குழந்தைக்குக் காட்டுவார். இப்பாரம்பரியம் வேரூன்றியதனாலேயே 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' எனவும், 'குரு இல்லாக் கல்வி பாழ்' எனவும் ஔவைப் பாட்டி கூறலாயினார். அத்தோடு குருவுக்குத் தொண்டு செய்து அவரிடமிருந்து கல்வி அறிவைப் பெற்ற குரு குலக்கல்வி முறையும் அக்காலத்தில் வேரூன்றியிருந்தது. தெய்வத்துக்கு அடுத்த நிலையில் குரு போற்றப்பட்டு வந்ததினால் அக்காலக் கல்வி அர்த்தமுள்ளதாகியது; வாழ்க்கைக்கு வழிகாட்டியது; மன அமைதிக்கு வித்திட்டது.

தற்போது பாலர்களினால் நிரம்பி வழியும் முன்பள்ளிகள் அக்காலத்தில் தோற்றம் பெறவில்லை. ஐந்து வயதையடையும் வரையும் பிள்ளைகள் பெற்றோரின் பராமரிப்பிலேயே இருந்தனர். பெற்றோரும் மூத்தோரும் அவர்களுக்குக் கல்வி அறிவைப் புகட்டினர். மணல் மேல் அகர எழுத்துக்களை எழுதப் பழக்கினர். ஐந்து வயது பூர்த்தியாகிய பின்னர்

பிள்ளைகளைப் பாடசாலைகளுக்கு அனுப்பி அங்கு கல்வி பயிற்றுவித்தனர். இக்காலத்தில் பாவனையிலிருந்த பாடப் புத்தகங்களில் பாலர்களினால் விரும்பிப் படிக்கக் கூடிய - அவர்களுக்கு ஆர்வத் தைத் தூண்டும் விதத்திலான நல்ல படிப்பினைகளைப் புகட்டும் கதைகள், படங்கள் போன்றவை இடம்பெற்றிருந்தன. இவற்றைப் படித்ததினால் பிள்ளைகளின் சிந்தனை விரிவடைந்தது, ஒழுக்கம், கீழ்ப் படிவு, பெரியோரைக் கனம் பண்ணுதல், மாதா பிதா, குருவைப் போற்றுதல் போன்ற நற்பண்புகள், 'இளமையிற் கல்வி சிலை யில் எழுத்து' போல ஒவ்வொரு பிள்ளை யிடமும தழைத்தோங்கியதனாலேயே அவர்கள் பெரியவர்களாக வளர்ந்து சமு தாயத்தில் சிறப்பானதொரு இடத்தைப் பெற்றனர். அதனால் ஒவ்வொரு பெற் றோரும் தம் பிள்ளையின் பெயர் சொல்லி வாழலாயினர்.

முற்காலத்தில் வசதியாகவும் வளமா கவும் வாழ்ந்தவர்கள் தமது ஊர் சிறக்க, ஒன்றுபட, தமது சமூகம் வளர, அறம் தழைக்க, சைவம் வளர தத்தமது இயல்பு களுக்கு ஏற்ற விதத்தில் ஆலயங்களை அமைத்து அவற்றை நன்றாகப் பராமரித்து வந்துள்ளனர். இந்நிலை தொடர்ந்ததினால் ஆலயங்கள் ஒவ்வொன்றிலும் திருவிழாக் கள், பூசைகள், பொங்கல்கள் போன்றன மிக அமைதியாகவும், பக்திபூர்வமாகவும் இடம்பெறலாயிற்று. இதனால் நாடும், ஊரும், வீடும், உள்ளமும் அமைதிபெற லாயிற்று. அதுவே பொற்காலம் எனத் தற்போது வர்ணிக்கப்படுகிறது.

ஆலயங்களில் திருவிழாக்கள் ஆரம்ப மாகியதும் ஊர்மக்களே ஆலயச் சூழ லைத் துப்புரவு செய்வதோடு திருவிழா தொடர்பான சகல வேலைகளையும் தாமே முன்வந்து மனவிருப்பத்தோடு நிறை வேற்றி, இது எங்கள் திருவிழா என்ற உணர்வுடன் கொண்டாடும் போது அதன் சிறப்பு சொல்லுந்தரமன்று. ஒலி பெருக்கிச் சத்தங்கள் அறவே இல்லை, நாதஸ்வர இசை மாத்திரம் ஒலிக்கும். தகவல்களைப் பரப்பும் சாதனங்களாக சங்கும், சேமக் கலமும் திகழ்ந்தன. திருவிழாக்களில் ஊர்மக்கள் அனைவரும் திரண்டிருந்தத னால் ஆலயத் தொண்டுகளுக்கு ஆள் பற்றாக்குறையில்லை. மெய்யன்போடு இறைவனை வழிபட்டனர்; மன அமைதி பெற்றனர்; அர்த்தமுடைய வாழ்க்கை வாழ்ந் தனர். ஊரும் சிறந்திருந்தது. நாடும் அமை தியாக இருந்தது. இப் பாரம்பரியங்கள் செழுமை மிகுந்தவையாகவே விளங்கின.

பாடசாலைக் கல்வி மட்டுமே அக் காலத்தில் இருந்தது. தனியார் கல்வி நிலையங்கள் எதுவும் இல்லாத நிலை யில் ஒவ்வொரு ஆசிரியரும் தமது பொறுப்பினை நன்குணர்ந்து மிகுந்த ஆர்வமுடன் கல்வி புகட்டினர். பரீட்சை களுக்காக விசேட வகுப்புக்களை நடாத் தினர். கல்வியறிவில் பின்தங்கிய மாண வர்களுக்கும், ஒழுக்கம் தவறியவர்களுக் கும் பிரம்படி கிடைக்கப்பெற்றது. இதனால் கீழ்ப்படிவு, நல்லொழுக்கம், தன்னடக்கம், பொறுமை போன்ற நற்பண்புகள் தழைத்தோங்கலாயின. 'காலை எழுந்த வுடன் படிப்பு; மாலை முழுவதும் விளை யாட்டு' என்ற கோட்பாடு அனைத்துப் பள்ளி மாணவர்களினாலும் கடைப்பிடிக் கப்பட்டதனால் அவர்கள் தேகாரோக் கியம் மிக்கவர்களாகவும், விளையாட்டுக் களில் சாதனை படைத்தவர்களாகவும் திகழலாயினர். வீண்பொழுது போகக வேண்டிய தேவை இவர்களுக்கு இருக்க வில்லை.

சைவமும் நமது வாழ்வும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்தன. அந்தவகையில் எமது வாழ்வின் ஒவ்வொரு அம்சத்திலும் சமய விழுமியங்கள் முக்கியத்துவம் பெற்றிருந்தன. திருமண வைபவத்தினை எடுத்துக் கொண்டால் பெரும்பாலான திருமணங்கள் மணமகள் வீட்டிலேயே இடம்பெற்றன. உறவுகள் கூடி மணப்பந்தல் அமைத்து, சமையல் செய்து, வாழையிலையில் பரிமாறி, அம்மி மிதித்து, அருந்ததி பார்த்து திருமணங்கள் நடைபெறுவது வழக்கமாயிருந்தன. திருமணத்திற்கு குடும்ப சமேதரராய் வருகை தர வேண்டும் என்பதற்காக இரு வீட்டாரையும் சேர்ந்த ஆணும் பெண்ணுமாக ஒவ்வொரு வீட்டுக்கும் நேரில் சென்று அழைப்பர். அழைப்பிதழ் அச்சிட்டு விநியோகிக்கும் முறை அக்காலத்தில் இருக்கவில்லை. மரண வீடாயின் மேளம் அடித்து, ஊர்கூடி அழுது, பாடைகட்டி மயானத்திற்குக் காவிச் சென்று தீமூட்டி எரிப்பர்.

ஊரில் எழும் பிரச்சனைகளுக்கு நியாயம் நீதி போன்றவை நடுநிலையாளர்களால் முன்வைக்கப்படும் போது முழு ஊருமே அதனை ஏற்று ஒழுகியது. ஏற்க மறுத்தோர் இனங்காணப்பட்டு அந்நியப் படுத்தப்பட்டனர். இதன் காரணமாக அக் காலங்களில் பெரும்பாலானோர் நீதிமன்றங்களை நாடும் நிலை ஏற்பட வில்லை.

உணவு உற்பத்தியைப் பொறுத்தவரையில் இயற்கைப் பசளைகளையே அனைவரும் பயன்படுத்தினர். இவற்றின் விலையும் மலிவாக இருந்தது. அத்தோடு இவற்றை இலகுவில் பெற்றுக் கொள்ளக் கூடியதாகவுமிருந்தது. இயற்கை உரமிட்டு அறுவடை செய்யப்பட்ட பழங்கள், காய்கறிகள் தனிச்சுவை கொண்டவையாக மிளிர்ந்தன. இதனால் கொடிய நோய்கள் ஏற்படும் ஆபத்து இருக்கவில்லை. அனைவரதும் உடலாரோக்கியம் மேலோங்கியதனால் அவர்களது ஆயுட்காலம் மிக நீண்டதாகவே இருந்துள்ளது. தற்போது இயற்கைப் பசளையின் பாவனை பற்றிய விழிப்புணர்வு ஏற்பட்டு வருவது பழைமைகள் செழுமைபெறும் அறிகுறியாகக் கொள்ளலாம்.

முற்காலத்தில் வாழ்ந்த அனைவரினாலும் கடைப்பிடித்து ஒழுகப்பட்ட பழமைகள் செழுமையுற்றிருந்தமைக்கு மேலே விபரிக்கப்பட்டுள்ள விழுமியங்களே முழுமுதற் காரணங்களாக அமைந்திருந்தன. இன்றுள்ள நிலைமைகள் அன்றையவைபோல இல்லாதமைக்கு பழமைகள் முற்றாக மறக்கப்பட்டு, மறைக்கப்பட்டு நவீன வாழ்க்கை முறைகள் எதிர்மாறாகப் பின்பற்றப்படுவதனாலேயே நாடும், வீடும், ஊரும், உள்ளமும் அமைதியிழந்து அல்லலுறும் நிலை நீடித்துச் செல்கிறது.

பழமைகளையும், நவீனங்களையும் ஒப்பிட்டுப் பார்த்து, செழுமை மிகுந்த பழமைகளை மீண்டும் கைக்கொண்டொழுகுவதன் மூலம் மன அமைதி உட்பட அனைத்தும் அமைதி பெறும் எனத் துணிந்து கூறலாம்.

# பொருள் போகுமிடம் புண்ணியமே!

**து.சோமசுந்தரம்**

பொருளாளர், சைவசமய விவகாரக் குழு,

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்.

சைவசமய விவகாரக் குழுவானது தனது நோக்கங்களை எய்துவதற்காக சமயம் சார்ந்த பல்வேறு பணிகளை மிக நீண்டகாலமாகவே முன்னெடுத்து வருகின்றது.

கல்வியில் ஆர்வமுள்ள வறிய மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்குத் தேவையான கல்விசார் உபகரணங்களை வருடந்தோறும் மாநகரசபை எல்லைக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு வழங்கி வருவது தனிச்சிறப்பாகும். மேலும் சமீபத்திய போர் நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் மக்களின் அடிப்படைத் தேவைகளுக்கான நிதியுதவியையும் தாராளமாக வழங்கியுள்ளோம்.

எதிர்காலச் சந்ததியினர் அடக்கமுள்ளவர்களாக, ஒழுக்கசீலர்களாக வாழுவதற்கு சமய அறிவு இன்றியமையாததென்ற அடிப்படையில் கல்வித் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் யாழ் மாவட்டப் பாடசாலை மாணவர்களிடையே தரம் 4 முதல் தரம் 13 வரையிலான 10 தரங்களுக்கு அவர்களது பாடத்திட்டத்திற்கமைவான வினாக்களைக் கொண்ட சமய அறிவுப் பரீட்சையை நடாத்தி ஒவ்வொரு தரத்திலும் முதலாம் இடங்களைப் பெறுபவர்களுக்குத் தங்கப் பதக்கங்களும், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களைப் பெறுபவர்களுக்கு வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களையும், அதிவிசேடம் மற்றும் விசேட சித்திகளைப் பெற்றவர்களுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டு வருகின்றன. மாநகரசபையைப் பொறுத்த வரையில் இப்பணி மிகவும் பயனுள்ளதும், இலக்கை அடையக் கூடியதுமானதென்பதும் எனது பணிவான கருத்து.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக, நல்லைக் கந்தனின் வருடாந்த உற்சவ காலத்தில் நல்லைக் குமரன் மலரினை வெளியிட்டு வருகின்ற வரிசையிலே இவ் வருடம் வெளிவருவது 17ஆவது வெளியீடாகும். சைவசமய விவகாரக் குழுவினது தன்னலமற்ற பணிக்கு இம்மலர் நல்லதோர் எடுத்துக்காட்டாகும்.

மேற்குறிப்பிட்ட அனைத்துப் பணிகளையும் செவ்வனே நிறைவேற்றுவதற்கு குழுவின் தலைவர், செயலாளர் மற்றும் நிர்வாகசபை உறுப்பினர்களது அர்ப்பணிப்புடன் கூடிய பங்களிப்பே முழுமுதற் காரணமாகும். குழுவினது பணிகள் வளர்ந்தோங்குவதற்கும், உரிய காலங்களில் அவற்றை நிறைவேற்றுவதற்கும் அவனருளே எமக்குப் பக்கபலமாக உள்ளது.

பழமையும், பெருமையும் மிக்க சைவ சமயம் செழித்தோங்கி, நாட்டில் அமைதி சமாதானம் நிலவும் விதத்திலான பணிகளை எமது குழு முன்னெடுப்பதற்கு நல்லைக்கந்தன் எப்பொழுதும் துணைநிற்பான் என உறுதியாக நம்புகிறேன்.

# 2009இல் 'யாழ் விருதினை'ப் பெறும் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் உயர்திரு. கே.கணேஷ் அவர்கள்



யாழ்பாடி பெற்ற யாழ்ப்பாணம் 'சிவ பூமியென' திரு மூலரால் சிறப்பித்துக் கூறப்பட்ட பெரும்பதியாகும். 'யாழ்ப்பாணம் என்று சொன்னால் தேன்சுவை ஊறும்' என்றதொரு பாடலும் வழக்கில் உண்டு. இவ்வாறான பல்வேறு சிறப்புக்களுக்கு இலக்கணமாகத் திகழும் யாழ்ப்பாணத்தின் அரசாங்க அதிபராகக் கடமையாற்றி வருபவர் உயர்திரு கே.கணேஷ் அவர்கள்.

சமய, சமூக மற்றும் மருத்துவத்துறைகளில் தம்மை முழுமையாக அர்ப்பணித்துச் சேவையாற்றி வருபவர்களுக்கு வருடா வருடம் 'யாழ் விருது' வழங்கிக் கௌரவிக்கப்படல் வேண்டுமென்ற மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவினது உயர்வான நோக்கத்தின் அடிப்படையில் இவ்வருடம் சமூகப்பணியில் சிறப்பாகப் பணியாற்றி வரும் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு.கே. கணேஷ் அவர்களுக்கு இவ்விருது வழங்கப்படுகிறது.

இயற்கை அனர்த்தமாகிய சுனாமி யாழ் குடாநாட்டின் வடபகுதியைப் பெரிதும் தாக்கி ஏற்படுத்திய உயிரிழப்புக்களும், சொத்து அழிவுகளும் கணக்கிலடங்காது. இவற்றிற்கான நஷ்டஈடு மற்றும் நிவாரணங்களை உரிய நேரத்தில் பெற்றுத் தருவதில் அயராது பாடுபட்டதோடு, புதிய வீடமைப்புத் திட்டங்களை உருவாக்குவதிலும் முன்னின்ற அரச அதிபர் கணேஷ் அவர்களைப் பாராட்டாது இருக்க முடியாது.

2006ஆம் ஆண்டு உள்நாட்டு யுத்தம் உக்கிரமடைந்து ஏ-9 பாதையும் போக்குவரத்துக்காக மூடப்பட்டதனால் குடாநாட்டு மக்கள் உணவுப் பஞ்சத்தினை எதிர் நோக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது. உணவுப் பஞ்சத்தினால் எவரும் மரணிக்காது தேவையான உணவுவகைகளைப் பெற்று எம் உயிர்காத்த கர்ம வீரன் திரு.கணேஷ் ஆவார். தரைவழிப் பாதையூடான பிரயாண வசதிகள் நிறுத்தப்பட்டபோது கப்பல் மற்றும் விமானம் மூலமாகத் திருகோணமலை மற்றும் கொழும்புக்கு பிரயாண வசதிகளை ஏற்படுத்தித் தந்தமையை குடாநாட்டு மக்கள் எவரும் மறக்கமாட்டார்கள்.

ஏ-9 பாதையூடான போக்குவரத்துக்காக மாற்றுவழிகள் மூலமாக ஏற்பாடு செய்து நிலைமை சீரடைந்து வரும் போது இயற்கை அனர்த்தமாகிய 'நிஷா' புயலினால் குடாநாடு முழுமையாகப்

பாதிக்கப்பட்டது. இதற்கான நிவாரணப் பணிகளைத் துரிதகதியில் மேற்கொண்ட தோடு, இடம்பெயர்ந்து பாதுகாப்பான இடங்களில் தற்காலிகமாகத் தங்கியிருந்த வர்களுக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப்பொருட்கள் மற்றும் ஏனைய வசதிகளையும் பெற்றுத் தருவதில் முன் னின்றவர்களில் முதன்மையானவர் திரு.கணேஷ் அவர்களேயாவார்.

நிஷா புயலினால் பெரும்பாலான பயன்தரு மரங்களும், நிழல் மரங்களும் வேரோடு சாய்ந்ததினால் வீதிப் போக்கு வரத்து தடைப்படலாயிற்று. அனைத்து வீதிகளும் வீழ்ந்த மரங்களினாலும், அவற் றின் கிளைகளினாலும் சூழப்பட்டதோடு, நீரோட்டமும் தடைப்பட்டு மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு இடம்பெயரலா யினர். நிஷாவின் அனர்த்தத்தினால் மாநகர சபைப் பிரதேசம் முழுமையாகப் பாதிக்கப்பட்டது. வீதிகளிலிருந்த அனைத் தையும் அகற்றுவதற்குரிய வாகன வசதி கள் மாநகரசபையிடம் இல்லாதிருந்தமை யினால் இதுபற்றி அரசாங்க அதிபர் திரு.கணேஷ் அவர்களினது கவனத்திற் குக் கொண்டு வரப்பட்டது. வீதிகளில் தேங்கியிருந்த கழிவுகள் மற்றும் குப்பை களை அகற்றுவதற்கும், அவற்றை உரிய இடங்களில் தொடர்ச்சியாகக் குவிப்பதற் கும் தேவையான வாகன வசதிகளைப் 'ஹலோ ரஸ்ட்' நிறுவனத்திடமிருந்து பெற்றுத் தந்துவியமையை யாழ் நகர மக்களும், மாநகர சபையும் என்றும் நன்றி யுடன் நினைவில் நிறுத்தும் என்பதில் ஐயமில்லை.

ஒப்பீட்டு ரீதியில் முன்னைய காலங் களைப் போலன்றி தற்போது யாழ் அரச அதிபருக்கும், மாநகரசபைக்கும் நல்லுற வும், பரஸ்பர புரிந்துணர்வும் இருப்பதன் காரணமாக யாழ் நகர மக்களுக்கும், மாநகரசபைக்கும் பல நன்மைகள் கிடைக்கப்பெற்று வருகின்றன. காலத்துக் குக் காலம் அரச சார்பற்ற நிறுவனங் களிடமிருந்து இழுவைப் பெட்டிகளுடன் கூடிய உழவு இயந்திரங்களும், பிக்கப் வாகனமும் அரச அதிபரின் முயற்சியி னால் மாநகரசபைக்குக் கிடைக்கப் பெற்று வருகிறது.

முன்னர் திறந்தவெளியரங்கு அமைக் கப்பட்டிருந்த இடத்தில் 'கலாசார மண்டபம்' ஒன்றினை அமைப்பதற்கான நிதியுதவியை இந்திய அரசிடமிருந்து பெற்றுத் தரும் நடவடிக்கையிலும் எமது அரச அதிபர் ஈடுபட்டு வருவது எம் அனை வரினாலும் விதந்து பாராட்டப்பட வேண்டி யதே!

யாழ். குடாநாட்டு மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்ட சமயங்களில் எல்லாம் நேரகாலம் பாராது மிகுந்த அர்ப்பணிப்புடன் செயற்பட்டு மக்களது துன்பங்கள் மற்றும் துயரங்களைக் களைவதில் முன்னின்று உழைத்துவரும் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு.கே. கணேஷ் அவர்களது சேவை வரலாற்றுச் சிறப்புமிக்கது. அத்தகைய சிறப்புகளு டைய அவருக்கு இவ்வருடத்திற்கான யாழ் விருது வழங்கப்படுவதும் அவரது வினைத்திறன் மிக்க சேவைக்குக் கிடைக் கப்பெற்ற மகுடமாகும். இவ்வாறான ஒரு வருக்கு 'யாழ். விருது' வழங்குவதில் சைவசமய விவகாரக் குழு பெருமையும் நிறைவும் எய்துகின்றது.

**இ.இரத்தினசிங்கம்**
**செயலாளர்,**
**சைவசமய விவகாரக்குழு யா.மா.ச**

# யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்

## மன்றக் கீதம்

ஈழத் தமிழர்தம் இணையிலா நகரம்
யாழ் நகர் நீடு வாழியவே
யாழ் நகராட்சி மன்றம் வாழ்க
எம் தமிழ் வாழ்க வாழியவே
(ஈழத் தமிழர் ...)

ஆதியில் தமிழர் ஆண்டதொல் நகரம்
ஆரியச் சக்கர வர்த்திகள் நகரம்
பூதலம் புகழும் சங்கிலி மன்னன்
பொருபகை வென்ற புகழ்பெறு நகரம்
(ஈழத் தமிழர் ...)

ஏழிசை வல்லோன் யாழிசை பாணன்
இனியநற் பரிசாய்ப் பெற்ற யாழ்ப்பாணம்
ஆழிசூழ் உலகம் புகழ்கலைக் கூடம்
அறிஞர்கள் கலைஞர்கள் அவதார பீடம்
(ஈழத் தமிழர் ...)

தமிழர்கள் முஸ்லீம் மற்றுள பேரும்
தாயிவள் பேணும் சோதர ராவர்
நமதரும் பண்பும் கலை கலாசாரம்
நல்விருந் தோம்பிக் காப்பவள் வாழ்க
(ஈழத் தமிழர் ...)

கடலலை வீசும் மீன்வளம் பொங்கும்
கழனிகள் தோறும் கனிவளம் தங்கும்
மடல்வரி தென்னை கமுகுகள் வாழை
மண்வளஞ் சிந்திப் பொலிபவள் வாழ்க
(ஈழத் தமிழர் ...)

அழகிய வீதி கடைத்தெரு கல்வி
அளித்திடு கூடம் தொழில்நிலை யங்கள்
எழிலுறு கோட்டைக் கோபுரம் கோயில்
இனியநற் சோலை கொண்டவள் வாழ்க
(ஈழத் தமிழர் ...)

வேத மந்திரம் கீத மொலிக்கும்
விளங்கிடு குர்ஆன் நாதமொலிக்கும்
ஓதிடு பைபிள் போத மொலிக்கும்
ஓங்கிய கோபுர மணிகள் ஒலிக்கும்
(ஈழத் தமிழர் ...)

# நல்லைக் குமரன் மலர் - 2009

### மணங்கமழ பங்களித்த உங்களுக்கு

## எங்கள் உளங் கனிந்த நன்றிகள்

2009ம் ஆண்டின் "நல்லைக்குமரன்" பதினேழாவது மலருக்கு ஆசிச் செய்திகளையும் வாழ்த்துச் செய்திகளையும் வழங்கிய ஆதீன முதல்வர்கள் மற்றும் சைவப் பெரியோர்களுக்கும்

பல சிரமங்கள் மத்தியிலும் தம் ஆக்கங்களைத் தந்துதவிய அறிஞர் பெருமக்களுக்கும் மலருக்கு விளம்பரங்கள் தந்து, உந்து சக்தியாக இருந்த வர்த்தகப் பெருமக்களுக்கும், நிதி நிறுவனங் களுக்கும் இவ் விளம்பரங்களைப் பெற்றுத்தந்துதவிய ஓய்வுபெற்ற சிறாப்பர் திரு.த. கனகசபை அவர்களுக்கும்,

மலரை அழகுற அச்சிட்டுத் தந்துதவிய மதி கலர்ஸ் அச்சகத்தினருக்கும் இன்னும் பல வழிகளிலும் மலரின் வரவுக்குப் பங்களித்த அன்புள்ளங்கள் அனைவருக்கும் எமது உளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, நல்லைக்குமரனின் அருட்கடாட்சம் எல்லோருக்கும் கிடைக்க அவன்தாள் இறைஞ்சு கின்றோம்.

**சைவசமய விவகாரக்குழு**
**யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்**



# யாழ் மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக்குழு–2009



**முன் வரிசை இடமிருந்து வலம் இருப்பவர்கள்:**

செல்வி பொ.புஸ்பலதா, திரு ந.விஜயசுந்தரம் (பதிப்பாசிரியர்), திரு இ.இரத்தினசிங்கம் (செயலாளர்), திரு மு.செ.சரவணபவ (தலைவர்), திரு து.சோமசுந்தரம் (பொருளாளர்), திரு த.கனகசபை (விளம்பர அனுசரணையாளர்), திருமதி சி.பாலமுரளி.

**பின் வரிசை இடமிருந்து வலம் நிற்பவர்கள் (நி.ச.உறுப்பினர்கள்):**

திரு நா.இரகுமார், திரு சி.சிவராஜேஸ்வரன், திரு சோ.கணேசநாதன், திரு கு.விஜயகுமார், திரு து.இராஜன், திரு பு.ஆறுமுகதாசன், திரு ச.லோகசிவம் , திரு ப.சிவஞானவேல் , திரு ஞா.மோகனசுந்தரம் ,திரு சி.கிருஷ்ணமூர்த்தி .

# நல்லைக் குமரன் மலர்

## 2009

## விளம்பரங்கள்



பாடிப் பணிந்துன்னை பகலிரவாய் துதித்தோம்!
தமிழினம் காத்து வாழ்விக்க வேண்டுமென்று
சிரம் தாழ்த்தி வணங்குகிறோம் உன் திருவடியை!

மோட்டார் சயிக்கிள் உலகில் புகழ் பெற்ற ஸ்தாபனம்

# அருள் விநாயகர் ரேடேர்ஸ்

இங்கே
புத்தம் புதிய மோட்டார் சயிக்கிள்கள், அதற்கேற்ப உதிரிப்பாகங்கள்,
ஜெனறேற்றர் வகைகள், சோலர் வகைகள் எல்லாம்
நம்பிக்கை, நாணயம், மலிவு விலையில்
பெற்றுக் கொள்ள நாட வேண்டிய இடம்



## அருள் விநாயகர் ரேடர்ஸ்

இல 108, 106, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 2225558

கிளை: அருள்விநாயகர் மோட்டோர்ஸ்
262, கண்டி வீதி,
சாவகச்சேரி.



நல்லூர் முருகன் திருத்தலம் வந்து "அரோகரா" என கரங்கள் உயர்த்தி வணங்கினால்
பாவங்கள் துன்பங்கள் அத்தனையும் மறைந்திடும்

# பெஷன் ஹவுஸ்

அலுமினியம், எவர் சில்வர் பாத்திரங்கள் , சிறுவர் சயிக்கிள்கள்
ஆலயங்களிற்கேற்ற வெண்கலப் பொருட்கள்
மன விருப்பத்திற்கேற்ப அன்பளிப்புப் பொருட்கள்
விஞ்ஞான உலகத்திற்கேற்ப மின் விளையாட்டுப் பொருட்கள்



இன்னும் பல பொருட்கள் நியாய விலையில் கிடைக்கும் கவர்ச்சியான ஓர் இடம்

# FASHION HOUSE

No. 65, K.K.S Road, Jaffna.
T.P 021 222 8713

அதிகாலை நாலரை ஆலய மணி ஒலிக்க
முருகா! நின் புகழ்பாடி சாந்தியுடன் சமாதானம்
கிடைத்திட தங்கரதமேறி காட்சி தந்திடப்பா!

ஆஹா! ஓஹோ!! என முருகன் தேரடியில் அமைந்துள்ள ஒரு சிற்றுண்டிச்சாலை
இங்கே



ஐஸ்கிறீம்
மரக்கறி றோல்ஸ்
பழவகை ஐஸ் வகைகள்
நெஸ்கேவ்

இன்னும் பற்பல சிற்றுண்டி ஆர்வலர்க்கு ஒரு வரப்பிரசாதமான இடம்
சுத்தம், சுகாதாரம் அழகுற அமைந்த சிற்றுண்டிச்சாலை
உள்ளே சென்றால் பலதையும் உண்ண வேண்டும் என்ற ஆசை ஏற்படும்.
நல்லூரான் தேரடிதனில் அமைந்துள்ள தனிப் பெரும் சிற்றுண்டிசாலை
விஜயம் செய்து பாருங்கள்!

# பழமுதிர்ச்சோலை

624A, பருத்தித்துறை வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

---

அபிஷேகக் கந்தனாக மாவிட்டபுரத்தில், அர்ச்சனை கந்தனாக நல்லூரில்
அன்னக் கந்தனாக செல்வச்சந்நிதியில்
எழுந்தருளியிருக்கும் முருகா நம்மினத்தைக் காத்தருள்வாய்



# காப்புறுதி

ஸ்ரீ லங்கா காப்புறுதி கூட்டுத் தபனம்
முழுமையாக அரசுடைமையாக்கப்பட்டு விட்டது.
தயங்காது ஒவ்வொருவரும் காப்புறுதி
செய்து கொள்ளுங்கள்.
புதிய புதிய திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
விபரங்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள்

7, குமாரசாமி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

த.கனகசபை
அமைப்பாளர்
இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம்.

நாளும் பொழுதும் உனை வேண்டி
நான் செய்கருமம் எல்லாம் முருகன் துணையன்றோ
அவன் தாழ் வணங்கி நெஞ்சிருத்தி பூசிக்கின்றேன்.



## அண்ணா! அண்ணா!! அண்ணா!!!

ஆம் யாழ் நகரில் சிறிதாக, பெரிதாக உச்சஸ்தானத்தில்
வளர்ந்து நிற்கும் ஒரு சிறு கைத்தொழில் ஸ்தாபனம்

**பெருமையுடன் 28.06.2009 அன்று**

அண்ணா
பொன்விழா

கொண்டாடப்பட்டுள்ளது.

**"முயற்சி உண்டேல் இகழ்ச்சி இல்லை"**
**என்ற முது மொழிக்கு இணங்க**
**இன்று பரந்துபட்ட தொழில் ஸ்தாபனமாக வளர்ந்துள்ளது.**

# அண்ணா ஜீவாகாரம்

கர்ப்பிணித் தாய்மாருக்கும் சிறார்களுக்கும் ஏற்ற
போசாக்கு நிறைந்த சத்துமா
அண்ணாவின் மற்றைய தயாரிப்புக்கள்
அண்ணா கோப்பி, அண்ணா பற்பொடி, அண்ணா பத்தி, பச்சை அரிசி மா,
ஆட்டாமா, வறுத்த அரிசி மா, உழுத்தம்மா, அண்ணா ரொபி வகைகள்
இன்னும் பல உற்பத்திகள் கலப்படம் கிடையாது.

**உள்ளூர் உற்பத்திக்கு**
**உற்சாகம் கொடுங்கள்.**

**அண்ணா கோப்பி கடை**
**நவீன சந்தை ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**தொ.பே.222 1299**

தலைமையகம்
தொ.பே: 021 222 3565

அன்றும் முருகன் எம்முடன்! இன்றும் முருகன் எம்முடன்!! என்றும் முருகன் எம்முடன்!!!
அவன் தாழ் வணங்கி அமைதி பெற்றிடுவோம்



# எரிக்கணேஷ்

விழிதான் முக்கியம் அதன் மீது விழிப்பாய் இருங்கள்

40 வயதை அடைந்தவர்கள் எழுத வாசிக்க கஷ்டப்பட்டால் இளைஞர் யுவதிகள் தலைவலியால் கஷ்டப்பட்டால் நிச்சயம் கண்தான் குறைபாடு. இலவச கண் பரிசோதனை முகப்பொலிவுக்கு, சங்குப்பல்கட்ட, மிதப்புபல் கட்ட, ப்ல்லுக்கு கிளிப் போட்டுக்கொள்ள நாடுங்கள்

# ERIC GANESH

80, கே.கே.எஸ். வீதி,
சுண்ணாகம்.

546, 556, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்
T.P: 222 2456

91, கே.கே. எஸ். வீதி,
கொக்குவில்.

அரக்கரை அழித்து அறங்காக்க பிறந்தவனே
நம்மவர் அவலங்கள் தீர்த்திட வாருமையா!



புது பொலிவில்

# ஜீ. எஸ். லிங்கநாதன் அன் கோ.

சும்மா பெயர் மட்டுமல்ல, அது பெயர் பெற்ற ஒருபிடவை ஸ்தாபனம்
மணமகள் பட்டு பிடவைகளுக்கு பெயர் பெற்ற இடம்
அது மட்டுமா பஞ்சாபி சேட் சூட் துணிகள் குழந்தைகளுக்கேற்ப
ரெடி மேட் ஆடைகள் கவர்ச்சியான இடம் விஜயம் செய்து பாருங்கள்

# ஜீ. எஸ். லிங்கநாதன் அன் கோ.

# G. S. LINGANATHAN & CO.

13,14, பெரியகடை,
யாழ்ப்பாணம்.
T.P:- 222 3139

47, பெரியகடை,
யாழ்ப்பாணம்.
T.P:- 222 8107



நல்லைக் குமரனின் வருடாந்த திருநடனம்
உருகாத நெஞ்சையும் உருக வைத்து அருள் புரிவான்

கண் வைத்திய நிபுணர்களால் சிபார்சு செய்யும்
கண்ணாடிகளை
சரிவர பெற்றுக் கொள்ள நாட வேண்டிய இடம்

எஸ். எம். பெர்னாண்டோ

அன்றும் இன்றும் என்றும் கண்ணாடிகளுக்கு
பெயர் பெற்ற இடம்

S.M. FERNANDO

580, Hospital Road, Jaffna.
520, Hospital Road, Jaffna

T.P: 222 3254
222 4367



எண்ணற்ற அழகிய தோற்றத்தில் முருகன் திருநடனம்

நாமும் எண்ணற்ற வகையில் பல வர்ண
படங்களை கணனி மூலம் தயாரித்து வழங்குகிறோம்.

மங்கள நிகழ்வுகள் அதிநவீன கனடா தயாரிப்பு கணனி மூலம் சிறந்த வீடியோகமராவின் துணைகொண்டு வீடியோப்படம் பிடித்திடவும் அதிநவீன புகைப் படக்கருவிகள் மூலம்வர்ணக் கலவையாக கலர்கறுப்பு வெள்ளை புகைப்படங்கள் பிடித்திடவும் திருமணம் பூப்புனித நீராட்டுவிழா என்பவற்றின் வர்ணக் கறுப்பு வெள்ளை படங்கள் மூலம் சிறந்த முறையில் அல்பம் தயாரித்திடவும்

卍 卍

அரவிந்

வீடியோ & போட்டோ

LOCAL, IDD, FAX, தொலைத் தொடர்புசேவை

இல. 309, நாவலர் வீதி, ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

T.P 222 2190
0777162339

தமிழ் உலக காவல் தெய்வம் முருகன்
அவனை நினைந்துருகினால் துன்பமெல்லாம் அகன்றிடும்



வீ.எம்.கே என்றால் தங்க ஆபரணம் தான் நினைவுக்கு வருகிறது
அந்த ஸ்தாபனம் ஒரு பெயர் பெற்ற ஆபரண மாளிகை

அசல் 22 கரட்டில் புதிய புதியடிசைன்களில் மங்கையரின்
கவர்ச்சிக்கு ஏற்றவாறு செய்து கொடுக்கப்படும்.

நவ நாகரீக நங்கையர் விஷேடமாக நாடுவது

# வீ.எம்.கே ஜுவெல்லர்ஸ்

# V.M.K JEWELLERS

105, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:-021 222 7339

புதிய வீ.எம்.கே ஜவல்லர்ஸ்,
நவீன சந்தை கட்டிடம்,
கண்டிவீதி,
சாவகச்சேரி.
T.P:-0712324412

நீ இருக்கப் பயமேன் நமக்கிந்த மானிலத்தில்
தீராத கவலைகள் தீர்த்திடும் நல்லையின் நாயகனே



ஆறுமுகப் பெருமான் ஒளி வீசும் தங்கம் நகைகள் அணிந்து ரதபவனி வருகின்றார். நவநாகரீக மங்கையரே நீங்களும் ஒளி வீசும் 22 கரட் தங்க நகைகளை அணிந்து முருகனை தரிசிக்கக் கூடாதா நாடுங்கள்

# பாலகிருஷ்ணா ஆபரணமாளிகை

விதம் விதமான டிசைன்களில் 22 கரட் தங்க நகைகளைச் செய்து கொள்ள வசதியாக
நல்லூரான் முன்னாலேயே !!

# Balakrishna Jewel House

616. பருத்தித்துறை வீதி.
நல்லூர். யாழ்ப்பாணம்,

முருகா! நாம் நலமுடன் வாழ நல்லதோர் காட்சி தந்து நல்லருள் புரிவாயப்பா!



# JAFFNA TRADERS
# யாழ்ப்பாண வணிக நிலையம்

புதிய இடம்

JT

புதுமை பொலிவு

- பலசரக்குப் பொருட்கள்
- அரிசிவகைகள்
- தும்புத்தயாரிப்பு
- நைலோன் கயிறுகள்
- பொதி செய்யப்பட்ட பொருட்கள் (Packed Items)பெற்றுக்கொள்ளலாம்

**கண் கவர்ச்சியான காட்சி கூடம்**

**ஒரே இடத்தில் வீட்டு தேவைகள் அத்தனையும் பெறும் வாய்ப்பு**

336, 338, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். **T.P: 021 2229453**

---

# யாழ்ப்பாண இரும்பகம்

**T.P: 5589**

# ஏசியன் பெயின்ற்ஸ்

*32, ஸ்ரான்லி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

**T.P: 222 7028**

**யாழ்–கொழும்பு–யாழ்**
**பாரஊர்தி சேவை போக்குவரத்து.**

# J.T. ரான்ஸ்போட்ஸ் சேவிஸ்

135, ஆட்டுப்பட்டி வீதி,
கொழும்பு–13

**T.P: 011 4987935**

# BANK OF CEYLON ANNUAL REPORT 2008

# BUSINESS HIGLIGHTS

Bank of ceylon

BOC

Bankers to the Nation

- BOC rated No.1 Brand in the country by Brand Finance Lanka
- Only Srilankan commercial bank with security of state ownership rated 'AA (lka)/ Stable outlook' by Fitch
- Highest ranked Srilanka in Bankers Almanac
- Stable capital base exceeding Rs.23 billion with a 15.9% Capital Raidio, the highest among Srilankan banks
- Asset base valued at Rs.484 billion, the largest in the Sri lanka banking system
- Rs.60 billion in turnover, 20% of all banks in the country
- Single borrower exposure capacity in excess of Rs.10 billion
- Widest customer base with circa 7.5 million accounts
- Leader in treasury poeration with over 50% of local foreign exchange market
- Leader in NRFC accounts with 30% market share
- Leader in corporate & retail lending with a portfolio exceeding Rs.281 billion coupled with lowest NPA Ratio at 4.9%
- Worldwide network with over 600 foreign correspondents
- Only Srilankan bank operating in london,.chennai and Male
- Leader in inward foreign remittances with over 50% market share
- Largest islandwide network withover 700 service points; 673 connected on - line
- Raised total of Rs.6.7 billion from the Srilanka capital market via two subordinated 5 -years debentures, one denominated in rupees and listed, the other denominated in us$



நல்லை எம்பெருமானே! திசையெலாம் அருள்
பரப்பும் நல்லை கந்தா, தமிழர் நலம் காக்கும் தெய்வமல்லோ நீ!

# NEW RAGAMS
## Padducholai

ஆகா என்ன ராகம் காதுக்கு இனிமையாக இருக்குதே!
இல்லை இல்லை அது மனதுக்கு இனிமை தரும் ராகம்ஸ் பட்டுச்சோலை
அங்கே தான் நாகரீக நங்கையர் விரும்பிய
தெரிவுக்காக நாடிச் செல்கிறார்கள். ஒருமுறை மட்டும் விஜயம் செய்து பாருங்கள்

**முகூர்த்தப் பட்டுப்புடவைகள், ரெடிமெட் ஆடைகள்**
**புதிய புதிய ரகம் நிறைந்த இடம்**

# நியூ ராகம்ஸ்

இல. 24, 7, 8, நவீனசந்தை, உட்புறம்,
யாழ்ப்பாணம்.

T.P:021 222 7179



அழகன் முருகனை பாடிப்பணிந்து அருள்பெறலாம்
பன்னிரு கரத்தான் துணை கொண்டு போக்கலாம் எம் துன்பமெலாம்

தரம் மிக்க பேப்பர் வகைகளையும் எசன்ஸ்
வகைகளையும் பெற்றுக் கொள்ள நாடுங்கள்

○ரோணியோ பேப்பர் ○போஸ்டர் பேப்பர் ○ரைப்பிங் சீற் ○நியூஸ் பிறிண்ட்
○பாங் பேப்பர் ○பர்சுப் பேப்பர் ○பொக்ஸ் போட் ○சிப் போட் ○பிறிஸ்டல் போட்

**ஆகிய சகல விதமான பேப்பர் வகைகளையும் அச்சகத்துக்குத் தேவையான**
**மை வகைகளையும் வேண்டிய அளவிலும்**

ஐஸ் கிறீம், குளிர்பானம், கேக் வகைகள், பிஸ்கற், இனிப்பு, பீடா ஆகியவை தயாரிப்பதற்கு
வேண்டிய சகல மூலப் பொருட்களையும்

*ஊதுபத்தி, சாம்பிராணி, விளைவு சூடம், வாசனைத்திரவியங்கள், ஆயுள்வேத மருந்து வகைகள் தயாரிக்கும் மூலிகை வகைகள், குங்குமம், குங்குமப் பூ, எண்ணெய், நெய், மற்றும் சாப்பாட்டு இரசாயனப் பொருட்கள் பிஸ்கட் சொக்லேட், ரொபி வகைகளுக்கும், நாடவேண்டிய ஒரே இடம்*

# பெற்றார் எசன்ஸ் சப்ளையர்ஸ்

104, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

T.P:-0212222386

நாளும் அருள் சுரக்கின்ற முருகனை போற்றுவோம்
நாளும் காலை மலர் மணம் வீசுகின்றது என்ன ஆனந்தம்



"மலர்" புடவையகத்திலும் பல்வேறு ரசனையுடன் வர்ண கவர்ச்சியில்
சிறுவர் தொடக்கம் பெரியவர் வரை எழில் நங்கையர்க்கும் நவு நாகரிய
மங்கையர்க்கும் ஏற்ற கவர்ச்சியான தயார் அணி புடவைகள்
வந்து பாருங்கள் உங்கள் விருப்பிற்கு தெரிவு செய்யலாம்.

மலர் தேடி வாருங்கள் . அங்கே உங்கள் விருப்பத்திற்கேற்ப

சிறுவர் ரெடிமேட் ஆடைகளா பட்டுப்பிடவைகளா

சேட் சூட் துணிகளா பஞ்சாபிகளா

அப்பப்பா! விரும்பிய தெரிவுக்கு
இங்கேதான்.

# மலர் புடவையகம்

எல்லாமே ஒரே இடத்தில் தெரிவு செய்து திருப்தியுடன் செல்லலாம்

67-A-18 பெரிய கடை, யாழ்ப்பாணம். T.P :2222791





நாலரை மணி ஓசை கேட்டதும் எழுந்து முருகன் திருவடி பணிந்து நடப்பதெல்லாம்
நல்லதாய் நடக்க உன் திருவருள் வேண்டுமையா!

புதுமண பெண்கள் அமைவது நல்ல ராசிக்கு அவர்கள் தெரிந்து அணிய விரும்புவீது
நல்ல அலங்கார புடவை ராசியான மணமக்களுக்கு ராசியான புடவையகம் தேடி வாருங்கள்
எம்மிடம் தெரிவு செய்வதற்கு ஏராளம் புடவை தினுசுகள்

• எல்லாம் அமைவது கைராசியில்தான் எதற் கெடுத்தாலும் நல்லராசி வேண்டும் என்பார்கள். நல்ல காரியங்கள் செய்ய ராசி சுபமுகூர்த்த மணமகள் பட்டுப் புடவைகள் வாங்க நல்ல ராசியான கடை பார்க்க வேண்டும்.

இங்கே வாருங்கோ அதோ......

# ராசி சில்க்ஸ்

.....போட் தெரிகிறதே அங்கே

போனால் நீல ராசியாக வேண்டிய பட்டு புடைவைகள் தெரிவு செய்யலாம்
இங்கே மணமக்கள் ஆடைகள் ஏராளம் உங்கள் விருப்பிற்கேற்ப தெரிவு செய்து
குதூகலத்துடன் புது வாழ்வை ஆரம்பிக்கலாம் .

ராசி சில்க்ஸ்
70 (7IA) நவீன சந்தை உட்புறம்,
யாழ்ப்பாணம்.
T.P 021- 222 5571

நல்லி சில்ஸ்
121 /1 மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
T.P 021- 222 5573




தேவர்கள் குறைதீர்த்த முருகன் நீயல்லவோ சூரபத்மன்
கதை முடித்த சூரனும் நீயல்லவோ திக்கு திசை தெரியாது
நம்மினம் காக்க தேரேறி அருட்காட்சி தந்திடப்பா.

# லிங்கன்

## கிறீம் ஹவுஸ்

லிங்கன் என்றால் நினைவுக்கு வருவது ஐஸ்கிறீம்

சுவைத்துப் பாருங்கள் சுகாதாரமுறைப்படி தயாரிக்கப்பட்ட

- ஸ்பெசல் ஐஸ்கிறீம்
- சொக்லேட் ஐஸ்கிறீம்
- நட்ஸ் ஐஸ்கிறீம்
- புருட்சலட் ஐஸ்கிறீம்
- ஜெலி ஐஸ்கிறீம்
- மஸ்கட்
- அங்கர் பட்டர்
- வெனிலா ஐஸ்கிறீம்
- மட்டன் கேக் வகைகள்
- மிக்சர்
- லட்டு
- ஸ்பெசல் பீடா

**அத்தனையும் ஒரே இடத்தில்**

யாழ் நகரில் அதி விசேட பல் சுவை ஸ்தாபனம் என்றால் அது லிங்கமே தான் உள்ளே சென்றால் கண் குளிரும், மனம் குளிரும், சுவை குளிரும், திருப்தி குளிரும் விஷயம் செய்து பாருங்கள்.

# Lingan

## cream house

**119. Kasthuyar Rd,**
**Jaffna.**

நாளும் பொழுதும் முருகா உனை நினைந்து உள்ளம் உருகி கேட்டவரம்
தந்திட தங்கரமேறி காட்சி தந்திடுவாய்



- அழகு சாதனப் பொருட்கள்,
- தையல் நூல் வகைகள்,
- எவர் சில்வர் பிளாஸ்ரிக்,
- அலுமினியப் பாத்திரங்கள்,
- நவநாகரீக நங்கையருக்கு ஏற்ற லேஸ்,
- பாக் வகைகள்,
- சிறுவர்களின் பாடசாலை உபகரணங்கள்,

ஆஹா அதுமட்டுமா ! சிறுவர்களுக்கு அதி நவீன விளையாட்டுப் பொருட்கள்
மொத்தமாக, சில்லறையாக நியாய விலையில் பெற்றுக் கொள்ள

# ஜெகனி அழகு மாடம்

361, கே.கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே 222 3227

நல்லையம்பதி குடிகொண்ட முத்துக் குமரா
இத்தரை மக்கள் உள்ளம் சாந்தி பெற தங்கரத காட்சி தந்திடுவாய்



**உள்நாடு வெளிநாடுகளில் இருக்கும் உங்கள் உறவுகளுக்கு
பொதிகளை , V.D.O கசட்டுக்கள் ஆவணங்கள் எதுவானாலும் துரித கதியில்
உரியவர் கைகளில் சென்றடையவும்,**

WESTERN UNION Money Transfer

FedEx Express

உலகின் எந்தப்பாகத்தில் இருந்தும் பணத்தை

# "WESTERN UNION"

மூலம் ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும்,

எமது சேவையை பெற்றவர்கள் மீண்டும் மீண்டும் தொடருகிறார்கள்.
புதியவர்கள் இடத்தைத் தேடுகிறார்கள். அவர்களுக்கு இதோ!

# திருமுருகன் கொம் நெற்

46, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி யாழ்ப்பாணம்.

259, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்

*e-mail:- thirumuruglan@lycosmail.com*







# மக்கள் மனமறிந்த வங்கி
# மக்கள் வங்கி

Sisu Udana

- எமது பிள்ளைகளின் எதிர்காலத்தை வளமாக்கும் நோக்கில் "சிசு உதான" சேமிப்புக் கணக்கை மக்கள் வங்கி எமது பிள்ளைகளுக்கு வழங்குகின்றது.
- 5–18 வரை வயதுள்ள பிள்ளைகளுக்கு ரூ.100/= இனை வைப்புச் செய்து "சிசு உதான" கணக்கை ஆரம்பிக்கலாம்.
- பாடசாலைகளில் மக்கள் வங்கியின் "சிசு உதான" வங்கிப் பிரிவில் அல்லது வேண்டியதொரு மக்கள் வங்கிக் கிளையில் "சிசு உதான" கணக்கை ஆரம்பிக்கலாம்.
- சேமிப்புத் தொகை அதிகரிப்புக்கேற்ப கவர்ச்சிகரமான பரிசுகள்.

மக்கள் மனமறிந்த வங்கி
மக்கள் வங்கி

PARINATHA
Senior Citizens Account

PEOPLE'S BANK
Vanitha Vasana

People's Bank
JanaJaya
Save for progress

எந்த இடர் வரினும் முருகா! உன் திருவடி நினைந்து உருகி
உன் திருவருள் வேண்டி நிற்கின்றேன்



யாழ்நகர் வந்ததும் பளிச்சென்று தெரிவது :

# ஸ்ரீ ராஜன் பான்சி ஹவுஸ்

பலவிதமான அன்பளிப்புப் பொருட்கள் பாடசாலை உபகரணங்கள்
பலவித மாணவர் புத்தகப் பைகள்
அழகு சாதனப் பொருட்கள் வாசனைப் பொருட்களையும்
தற்கால அவசர தேவைக்கு கண்கவர் டிசைன்களில் கவறிங் நகைகள்.
தரமான நியாய விலையில் பெற்றுக்கொள்ள .........

65, 66, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.



வெள்ளை மணல் பரப்புதனில் நடனமாடி வரும் முருகா
நித்தம் உனை வணங்கி நல்லருள் தர வேண்டி நிற்கின்றோம்
அழகே முருகன் அவன் அழகுடன் காட்சிதர மனதுக்கு எல்லை இல்லா ஆறுதல்

# Vele Murugan
## TRADERS

எமது இல்லத்தையும் அழகுற பல வர்ணம் பூசி அழகுடன் அமைத்தால் ஆஹா!
என்ன ஆனந்தம் உங்கள் இல்லத்தை அழகு படுத்தசகல விதமான
வர்ண பூச்சு வகைகளும் ஒயில் பெயின்ற் வகைகளும் விரும்பி தெரிவு செய்ய தேடிவரும் இடம்

# வேல் முருகன்
## வாணிப நிலையம்

56A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.



கருணை கூர் முகங்களாறுங் கரங்கள் பன்னிரண்டும் கொண்ட
ஆறுமுகப்பெருமானே தங்கரத மேறிவந்து எமக்கு
அமைதி தந்திடுவாய்!

**ஓஹோ! என**

சைவ பிரியர்களுக்கும் விரதமிருப்பவர்களுக்கும்
ஒரு வரப்பிரசாதமாக மலர்கிறது

யாழ் நகர் மத்தியிலே திறம்பட இயங்கும்
சைவ உணவகம்

**அது தான்**

# ஸ்ரீ சரவணபவன்

**நகர மத்தியில் ஓர் சைவ உணவகம்**

பல கால ஹொட்டல் அனுபவம் பெற்ற நாம்

சைவ பிரியர்களுக்கு ஏற்றவாறு சிற்றுண்டி வகைகள்,

மதிய உணவு, பலகார வகைகள் தயார் செய்கின்றோம்

**மக்கள் தேடி வரும் அதி உயர் சைவ உணவகம்.**

**"ஓடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்"**

195/57 காங்கேசன்துறை வீதி.
யாழ்ப்பாணம்


Hatton National Bank
TV
Game
Show
ரூ.120 மில்லியன்
பெறுமதியான பரிசுகள்
HNB
PATHUM
VIMANA
2009
Change your life
நாளாந்த பணச் சீட்டிழுப்பு
A daily cash prize
of Rs. 20,000
வருட இறுதி பிரீமியம் சீட்டிழுப்பு
வருட இறுதி மாபெரும் சீட்டிழுப்பு
2009
வாராந்தம் ஒரு மில்லியன் ரூபாய்
வெற்றியாளர்
TV Game show
பிராந்தியச் சீட்டிழுப்பு
HNB
PATHUM
VIMANA
2009
Change your life


SRI LANKA
LIFE
SRI LANKA LIFE
மினிமுத்து
SRI LANKA LIFE
திவி திலின
SRI LANKA LIFE
SRI LANKA LIFE
பிரகுண
SRI LANKA LIFE
Freedom

எண்ணி எண்ணி நான் செய்கருமம் எல்லாம் முருகன் துணையன்றோ!
நாளும் பொழுதும் அவன் தாழ் வணங்கி முருகநாமம் நெஞ்சிருத்தி பூசிக்கின்றேன்.

கட்டிடப் பிரியர்களே!
றோபியலாக் எமல்சன் பெயின்ற் எனாமில் பெயின்ற்
வகைகள் எம்மிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

உங்கள் தோட்டப் பயிர்களை வளர்த்தெடுத்துப் பாதுகாப்பதற்கு
இதோ விவசாய இரசாயனப் பொருட்கள் மற்றும் பல வகைப் பொருட்கள்
சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

விவசாயிகளே மேற்கூறிய இரண்டிற்கும் வடமாகாண ஏக விநியோகஸ்தராக நியமிக்கப்பட்டுள்ளோம்
அத்துடன் நாம் *(show Wallace)* கம்பனியின் யாழ் ஏஜன்டாக நியமிக்கப்பட்டுள்ளோம்.

# சிவா பிறதர்ஸ்

141, ஆட்டுப்பட்டித்தெரு,
கொழும்பு - 13
**Fax - 0112470038**

205, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
TP - 2225497

தமிழ்த் தெய்வம் நல்லூர் முருகனின் அருள் கடாட்சம்
எல்லோருக்கும் கிடைக்கட்டும்.

# TCT Multi Trade Centre
# ரிசிரி பல்பொருள் விற்பனை நிலையம்

தியாகி அறக்கொடை நிறுவனத்தின் சமூகப்பணிக்கான நிதி பெறும் நோக்குடன்
ஆரம்பிக்கப்பட்ட ஒரேயொரு பல்பொருள் விற்பனை நிலையம்

மலிந்த விலையில் ஒரு சுப்பர் மார்க்கட்
விஜயம் செய்து பாருங்கள்
உண்மை விளங்கும்.



"இலாப நோக்கமின்றி சேவை நோக்குடன்
தரமான பொருட்களை நியாயமான விலையில் விற்பனை செய்யும் இடம்"

தொ.இல. 021 222 8025

527, நாவலர் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

# வடமாகாண
# புற்று நோய், எயிட்ஸ் நோய்
# தடுப்புச் சங்கம்

## புற்று நோய் சார்பான எமது பணிகள்

நோயாளர்களை இனம்காணல். குறிப்பாக ஆரம்ப நிலையில் இனம் காண நடவடிக்கைகள் மேற்கொள்ளல்

இனம் காணப்பட்ட நோயாளர்கள் உடன் தகுந்த சிகிச்சை பெற வழிவகுத்தல்

ஆதரவற்ற நோயாளர்களுக்கும் இளம் நோயாளர்களுக்கும் சாத்தியமான வழிகளில் உதவுதல்

சமூக நல நிறுவனங்களுடன் இணைந்து சங்கச் செயற்பாடுகளை விரிவு படுத்தல்

புற்று நோய் சார்பான சமூக சுகாதாரக்கல்வியை சகல மட்டங்களிலும் பிரசாரம் செய்தல்

## எயிட்ஸ் நோய் சார்பான எமது பணிகள்

இந் நோய் சார்பான சுகாதாரக் கல்வியை உரிய இயக்குனர்கள் மத்தியில் மேற்கொண்டு வருமுன் காத்தல் நடவழக்கைகளை ஊக்குவித்தல்

**எம் பணி சிறக்க நிதி உதவியை வேண்டுகின்றோம்**
**புதிய அங்கத்தவர்கள் எம்முடன் இணைந்து**
**செயற்பட அழைக்கின்றோம்.**
**நன்றி.**

# வடமாகாண
# புற்று நோய், எயிட்ஸ் நோய்
# தடுப்புச் சங்கம்

124,3ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.



அழகே ஒளியாய் நல்லூரில் அமைந்தாய் முருகா!

அழகே வீடாய் அமைந்திடவேண்டி
அழகுற அமைக்க நாடுவது

## அதற்காக நாடுங்கள்

# விமாகி

நாகரீக உலகத்திலே நவநாகரீகமாக இல்லம் அமைத்திட இந்தோனேசியா,
தாய்லாந்து , சீனா இந்தியா ஆகிய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட
தரைமாபிள், சுவர்மாபிள், கொமட் வகைகள், குளியலறை இணைப்புக்கள்அன்பளிப்புப் பொருட்கள்,
கிளாஸ், மாபிள், பீங்கான், கப்பன்சோசர் என்பவற்றை மனத்திருப்தியுடன் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய இடம்
கொழும்பு – யாழ்ப்பாணம் லொறி போக்குவரத்து சேவையும்
மேற்கொள்கிறோம் என்பதை மகிழ்வுடன் அறிய தருகிறோம்.

தலைமையகம்
டாம் வீதி, கொழும்பு: 12
*T.P:* 0112423030

27, மின்சார நிலைய வீதி
யாழ்ப்பாணம்
*T.P:* 222 6738



நல்லூரான் திருவருள் வேண்டி கூடும் மெய்யடியார்களே!
கோமாதாவாகிய நாமும் தெய்வீகமாக தெரிய வில்லையா?



## "சிந்தியுங்கள்"

கோமாதா எங்கள் குலமாதா
பசுவைக் கொல்லோம் பயன் பல பெறுவோம்
பசு இருக்கும் வீட்டில் மகாலட்சுமியினுடைய கிருபை நிச்சயம்
பசுவை வளர்ப்பவர்கள் - பேணுபவர்கள் - துன்பம்
விளைவிக்காதவர்கள் போன்றவர்களுக்கு
சகல தெய்வங்களினது ஆசீர்வாதமும் லட்சுமி
கடாட்சமும் கிடைக்கும்



பசுவில் முக்கோடி தேவர்கள், லட்சுமி, விஷ்ண, சிவன்
வாசம் செய்யம் இடம்

சிந்தித்து செயற்படுங்கள்

"வேணியின் வேணவா பசுவதை நிறுத்தல்"

# வேணி களஞ்சியம்

165, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

T.P - 22 2661, 2046

சங்கிலியன் வணங்கிய சிறப்புயர் முருகன் தலமதிலே
சங்கத் தமிழ் நின்றுயர்ந்த சான்றுகள் இன்றும் மிளிருதப்பா

41 ஆண்டுகளாக உங்கள் நன் மதிப்பைப் பெற்ற

# காவடி மார்க் கற்பூரம்



கற்பூரம் என்று கேட்காதீர்கள்

# காவடி

SINCE 1967

என்று கேட்டு வாங்குங்கள்

## என்றும் நின்று நிலைக்கும் ஜோதி மயம் காவடி கற்பூரம் என்றும் தரும்

தயாரிப்பாளர்கள்

Ms Sons Group Of Companies
672/3, Galle Road.
Off Mayura Mw, Ratmalana,
Phone 636818

ஏக விநியோகஸ்தர்கள்:
பிரபா ரேடிங்கம்பனி
31 கபேஸ் லேன், கொழும்பு - 11
329426 422750

SINCE 1967

நல்லூர் முருகன் திருவடி நினைந்து வலம்வந்து வணங்கினால்
துன்பமெல்லாம் நீங்கி அருள் தந்து அமைதியை
தந்திடுவான் முருகன்.



# சுந்தர்சன்

யாழ் வீதி, மானிப்பாய்

சகல விதமான மின்சார பரிசுப் பொருட்களையும்,

மின் சாதனங்களையும்,

பி.வி.சி பைப் வகைகளையும்,

நீர் தாங்கிகளையும்,

வீட்டுத் தளபாடங்களுக்கான

அனைத்து இலத்திரனியல் உபகரணங்களையும்

**ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள**
**நாட வேண்டிய இடம்**

# SUNDHARSON

Distributors of Electrical Items and
Electrical appliances.

யாழ் வீதி, மானிப்பாய்.



நல்லூர் முருகன் திருவடியை நாடினால் கிடைத்திடும் எமக்கு பேரின்பபேறு

ஐஸ்கிறீம், குளிர்பானம், கேக் தயாரிப்புக்கள், இனிப்பு வகை, உற்பத்தி மூலப் பொருட்கள், சகலவிதமான வாசனைத்திரவியங்கள், சாப்பாட்டு இரசாயனப்பொருட்கள், ரொபி மற்றும் பிஸ்கட் வகைகள், இன்னும் பற்பல உற்பத்திப்பொருட்கள்.

முன்னணி உற்பத்திகளான "சமபோச", "சமஹன்", "கண்ணா" மார்க் கற்பூரம், டெல்மேஜ் டிஸ்றிபியூரர்ஸ் ஆகியவற்றுக்கும் "Vimal Brand" உற்பத்திகளுக்கும் வடமாகாண முகவராக

**Mycola Soft drinks, "Crystal" போத்தலில் அடைக்கப்பட்ட குடி நீர்!யாழ்நகரில் நாம் முகவராக நியமிக்கப்பட்டுள்ளோம்.**

# ஸ்ரீகாந் எசன்ஸ் & குறோசறி

161, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(சத்திரச்சந்திக்கு அருகாமை)

T.P:- 021 222 2219



காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி – முருகா
உன் திரு நடனம் காண வந்தோம் அருள் தந்திடுவாய்

பட்டுப்புடவை, ரெடிமேட் ஆடைகள், பேபி சூட், சாறிக்கேற்ற பிளவுஸ் பீஸ்

தையல் வேலைகளுக்கு ஏற்ற பொருட்கள், எல்லா சைஸ்களிலும் பொலித்தீன்

மேசை விரிப்பு, குறோசறி பாக் சைஸ்கள்

*அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள நாடுங்கள்*

*பெயர் பெற்ற ஸ்தாபனம்*



# அங்கலின் ரெக்ஸ்ரைல்

55, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.

T.P: 0777031382, 021 222 3145
fax 021 222 3145

அருள் மிகு முருகனை பாடி பணிந்து
துன்பமெலாம் நீக்கி அருள் தந்து எமை காத்தருள்வாய் கந்தா!

# பூபாலசிங்கம் புத்தகசாலை

வாராந்த மாதாந்த சஞ்சிகைகள் விண்ணப்பப் படிவங்கள்
பாலர் வகுப்பு முதல் பட்டதாரி வகுப்பு வரையான சகல நூல்களும்
பிறந்ததின வாழ்த்து மடல்கள்
திருமண வாழ்த்து மடல்கள்
காகிதாதிகள், அலுவலக பாடசாலை உபகரணங்கள்
ஆகியவற்றிற்கும்
யாழ், கொழும்பு சகல புதினப்பத்திரிகைகளுக்கும் யாழ் நகரில்
கலையகமாக மிளிரும் ஸ்தாபனம்

340, செட்டியார் தெரு,
கொழும்பு.
011 2422321

4, ஆஸ்பத்திரி வீதி, (பஸ்நிலையம்)
யாழ்ப்பாணம்.
T.P:- 222 6693

ஆவணி மாதமதில் நல்லூர் திருப்பதியில் முருகன் திருவிளையாடல்!
முருகனை பூஜிக்கும் மலர் "நல்லைக்குமரன்" மலரல்லவோ!
வாழ்த்தி வணங்கி நிற்கின்றோம்.

# ரூபா

## பன்முக வர்த்தக ஸ்தாபனம்

பின்வரும் நிறுவனங்களின் உற்பத்தி பொருட்களை
சில்லறையாகவும் மொத்தமாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

சிமித்கிளைன் பீச்சம் மக்யூட்ஸ் லிமிட்.
ஹேமாஸ் மார்க்கற்றிங் பிறைவேற் லிமிடெட்.
றெக்கிற் பென்கைசர் லங்கா லிமிட்.
ஏபி மோர் லங்கா பிறைவேற் லிமிட்.
சிலோன் பிஸ்கட்ஸ் லிமிட்.

# RUBA VERSATILE TRADERS

*104, Stanly Rd, Jaffna.*
*T.P: 222 2479, 222 8330*

வெள்ளை மணல் பரப்பிலே நடன மாடும் முருகா!
தோகை மயில் மீதேறி வீதிவலம் வந்து
நம் மக்கள் துன்பமதை களைத்திடுவாய்!



"கணேசன்" என்றாலே பழம் பெரும் புடவை அகம் தான்
அங்கே நங்கையர் விரும்பும் கண்கவர் பட்டுப்புடவைகள்,
பல வர்ண சேலைகள், சல்வார் ஆடவர் சிறுவர் சிறுமியருக்கேற்ற ரெடிமேட் ஆடைகள்
நிறைந்திருக்கிறது. ஒருமுறை விஜயம் செய்தால் பெருமையுடன் திரும்புவீர்கள்!

வாருங்கள் பாருங்கள் தெரியுங்கள்

# கணேசன்
## ரெக்ஸ்ரைல்ஸ்

201, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

T.P: 222 2830



காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி - முருகா
உனதருள் வேண்டி நல்லையம்பதி நாடி வந்தோம்
அமைதி தந்திடுவாய்.



தங்க ஆபரண உலகில் ஒரு உன்னதமான இடம்
மென்மைக்கு மெருகேற்றும் இளமைக்கு எழிலூட்டும்
கலைநயம் மிக்க அதி நவீன டிசைன்களில்
தரம் குன்றா 22 கரட் தங்கப் பவுணில்
நங்கையர் விருப்பத்திற்கேற்ப
நகைகள் செய்து குறித்த தவணையில் கொடுக்கப்படும்

# அசோகா
## நகை அகம்

111, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

T.P: 021 2226290

காலங் குறிப்பறிந்து சாலப் பொருத்தமெனா ஞானப் பழமவனின்! வீதிப் பெருவிழாவின்!
சூழல் சுகாதாரங் கற்று பெரியோரால் காலம் தினம் தோறும் கலை நயத்துடனே நல்லைக்குமரன்
தனை நாளும் பொழுதும் படித்திடவே நல்லையருளே வேண்டும் நாயகனே!

சுத்தத்தின் செல்வன் என்று மக்களால் மகுடம் சூடப்பெற்று
அன்றும்! இன்றும்! என்றென்றும்! தனக்கே உரிய தத்துவத்தில்
என்றும் மங்காத சைவ உணவகம்

# மலாயன் கபே



பெண்களுக்கு பிரத்தியேக இடம்

36,38, பெரிய கடை வீதி,
யாழ்ப்பாணம்.

T.P:- 021 222 2373
FAX:- 021 222 2373



செல்லப்பசுவாமிகளும் யோகர் சுவாமிகளும் நல்லூர் முருகனே தஞ்சமென
நல்லூரான் திருத்தலத்தில் வீற்றிருந்து தெய்வீகம்
அடைந்தார்கள் என்றால் அது முருகன்அருளன்றோ



மின்சார வீதியிலே அழகாக காட்சி தருகிறது
சீவம் ரெக்ஸ்ரைல்
அழகுடனும் புது பொலிவுடனும் திகழும்புடவையகம்
சிறுவர் தொடக்கம் பெரியவர்கள் வரை ஏன்! நவ நாகரிக பெண்களும்
விரும்பி தெரிவு செய்யக் கூடிய இடம்
விஜயம் செய்து பாருங்களேன்!

புதுமைப் பொலிவுடன் புதிய புடவையகம்,
அழகான காட்சியறை புதிய புதிய புடவைதினுசுகள்
நவ உலகத்திற்கேற்ப அழகிய ரெடிமேட் ஆடைகள்,
சிறுவர் தொடக்கம் பெரியவர் வரை
நங்கையரும் கூட விரும்பி தெரிவு செய்யக்கூடிய இடம்

# சீவம் ரெக்ஸ்ரைல்

14A, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

T.P:- 222 6749

வருங்காலம் வளமான வாழ்வதனை மக்கள் பெற்றிட
நல்லூரானின் திருவருள் கொண்டு புதிய சத்திரசிகிச்சை முறைகளை
அறிமுகம் செய்கிறோம்.



# யாழ்.வைத்தியசாலை மற்றுமொரு புதிய சேவை

இனிவரும் காலங்களில் இச்சத்திர சிகிச்சைகளுக்காக மக்கள் கொழும்பிற்கு செல்ல வேண்டியதில்லை.

# லாப்பிரஸ் கோப்பி (LAPAROSCOPY)




முறையிலான சத்திரசிகிச்சை கமரா மூலம் நோயாளிக்கு வலியில்லாமல் சிறு துவாரத்தினூடாக சத்திரசிகிச்சை செய்தல், இச்சிகிச்சை மூலம் கீழ்க்காணும் நோய்களுக்குச் சிகிச்சையளிக்கமுடியும்.

- ✓ பித்தப்பை அகற்றும் சத்திரசிகிச்சை (LAPAROSCOPIC CHOLECYSTECTOMY)
- ✓ குடல்வளரி அகற்றும் சத்திரசிகிச்சை (LAPAROSCOPIC APPENDICECTOMY)
- ✓ நோய் நிருணய சத்திர சிகிச்சை. (DIAGNOSTIC LAPAROSCOPY)
- ✓ கர்ப்பப்பை, சூலகத்தில் இருக்கும் கட்டிகளை அகற்றுவது
- ✓ பெண்களின் மலட்டுத்தன்மைக்கான காரணத்தை கண்டறிதலும் சிகிச்சையளித்தலும்.

குறைந்த கட்டணத்தில் நிறைந்த சேவை

மேற்படி சிகிச்சைகள் யாவும் பிரபல பெண்நோயியல் மகப்பேற்று சத்திரசிகிச்சை நிபுணர்களாலும் பொது சத்திர சிகிச்சை நிபுணர்களாலும் மேற்கொள்ளப்படுகின்றது.

## NEW YARL HOSPITAL

**315, PALALY ROAD, THIRUNELVELY, JAFFNA.**

**T.P: 021 222 3533, 021 222 1011**



முருகா! முருகா!! என கைகூப்பி நினைந்துருகி
உன்திரு நடனம் காண வந்தோம் அருள்தந்து காத்திடுவாய்

என்றும் உங்கள் தேவைகளுக்கு

கோவில் அபிஷேகப் பொருட்கள்
அத்திவார சாமான்கள்
நாள்சரக்கு வகைகள்
கும்பாபிஷேக சாமான்கள்

CSK

பொன்னாங்கன்னி தைலம்
கூந்தல் வளர்ச்சிக்கும்
மூல குளிர்ச்சிக்கும்
நரை மயிரை கறுப்பாக மாற்றுவதற்கும் சிறந்தது.

வைத்தியர்களுக்குத் தேவையான
சூரணம் தைலம், எண்ணெய் வகைகள், லேகியம், செந்தூரம்,
குளிகை வகைகள், பஸ்பம் எப்போதும் பெற்றுக் கொள்ள நாடுங்கள்.

# க. செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்

**சித்த ஆயுர்வேத மருந்துகள், அபிஷேகப் பொருள்கள் விற்பனையாளர்.**

4, பலாலி வீதி,
2, ம் ஒழுங்கை,
[ஆரியகுளம் சந்திக்கு அருகாமை]
யாழ்ப்பாணம்.

5 [76], மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.இ. **222 2912**

ஓடோடி வந்தோம் முருகா! உன் திருவடிகாண
கோடிவரம் தரவேண்டும் ஆறுமுகமாகி

**யாழ் மக்களுக்கு ஒரு நற்செய்தி!**
**மக்களுக்கு அரிய சேவை.**



# குடும்ப வைத்திய நிலையம்
# INSTITUTE OF FAMILY MEDICINE

யாழ் மக்களிற்கு கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக
இலவச மருத்துவ ஆலோசனையும், சிகிச்சையும் அளிக்கப்படுகின்றது.

**பார்வையிடும் நேரம் மாலை 4 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை**
**திங்கள் முதல் சனி வரை**

125, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

T.P: 2228100

நடை நடந்து முருகன் அருள் பெற கரங்கூப்ப
கருணை கூர்ந்து அருள் தருவாய் முருகா!

# லக்ஸ்மி காகிதாதிகள்

ஆரம்ப வகுப்பு முதல் அனைத்து வகுப்புகளுக்குமுரிய
பிரபல ஆசிரியர்களின் தமிழ் ஆங்கில மொழி மூலமான புத்தகங்கள்,
பயிற்சிகள் வினாப்பத்திரங்கள், மும்மொழி அகராதிகள், காரியாலய,
பாடசாலை உபகரணங்கள்

இன்னும் பற்பல மாடசாலை மாணவர்களுக்கு தேவையான
உபகரணங்கள் அத்தனையும் ஒரே இடத்தில்
பெற்று நன்மையடையலாம்.
மங்கள நிகழ்வுகளுக்குரிய
அழைப்பிதழ்கள், றெஜிபோம் வர்ண எழுத்துக்கள்.

**அழகான காட்சி அறை மலிவான விற்பனை.**
**ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்.**



இல. 2, நவீன சந்தை கட்டிடம்
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

# கந்தவேலன் ரேடர்ஸ்



Multilac Colour Bank
வர்ண உலகில் புரட்சி.



Multilac

**Multilac Colour Bank**

மிக உயர்ந்த தரம்
ஆகக் குறைந்த விலை

உயர் தரச் சான்றிதழ்களுக்கு
இப்போது
அதிகம் செலவு செய்யாதீர்கள்.

WINNER OF NATIONAL & NCE GOLD AWARDS FOR EXPORT EXCELLENCE

T.P: 021 2222822

ஈன்லி றோட்,
யாழ்ப்பாணம்.

தினம் தினம் முருக நாமம் கூறி சிறப்புறு பணிகள் செய்து
உன் திருவடி தொழுதெழ அருள் தாருமையா!

நங்கையரோ விரும்புவது நாகரீக மாற்றம். அதற்கேற்றவாறு
நடை உடைகளிலும் மாற்றம்
என்றும் இளமையை விரும்புவது நங்கையர்.
என்றும் அழகை விரும்புவது நங்கையர் என்றும்
இளவரசியாக இருக்க விரும்புவது நங்கையர் அது தான் என்னவோ!
நங்கையர் இளவரசி சேலைச் சோலைக்கு படையெடுப்பது! எங்கே.



# இளவரசி
## சேலைச் சோலை

வாருங்கள்!
பாருங்கள்!
தெரியுங்கள்!
நாடுங்கள்
திருப்தியுடன் செல்வீர்

57, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

T.P:- 021 222 2503



"ஆறுமுகன்" காட்சிகாண பத்து விரல் கரங்களை உச்சியில் வைத்து
முருகா முருகா என கூவி அழைக்க தங்க ரதத்தில் காட்சி தந்திடப்பா



நவநாகரீக
நங்கையர்களே!

# சிவகணேசன்
## ரெக்ஸ்ரைல்

யாழ் நகரில் மக்கள் போற்றும் மகத்தான ஜவுளிகளின் சங்கமம் விரும்பிய விலையில்
வேண்டிய விருப்பத்திற்கு கண்ணைக்கவரும் பல வர்ணப் பட்டு பிடவைகள்
நாகரீக நங்கையரும் மணப் பெண்களும் தேடி வரும் இடம்
சுபமூர்த்தப் பட்டுப் பிடவைகளின் தெரிவிடம்

41, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

021 222 2063



எல்லையில்லா இன்பந்தந்து அடியவர் மனதில் குடிகொண்ட
வேலவா துன்பமெலாம் களைந்திட தங்கரதம் ஏறிவா முருகா!!

தங்கம் என்றால் தங்கம் தான்
தங்க ஆபரணங்களுக்கு என்றும் ஈடுஇணையற்ற ஸ்தாபனம்
நம்பிக்கை, நாணயத்துடன் நன் மங்கையர் நாடும் இடம்
22 கரட்டில் தங்க நகைகள் புதிய புதிய
டிசைன்களில் செய்யும் ஸ்தாபனம்

# சாரங்கா நகை மாடம்

157/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

109, மின்சார நிலைய வீதி
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 2228911

தொ.பே: 021 2226972

புதிய பொலிவுடன் கொழும்பில் உதயமாகி நடைபெறுகின்றது.
இணை நிறுவனம்

# சாரங்கா ஜுவல்லறி

55, செட்டித்தெரு,
கொழும்பு-11

T.P: 2434971 Fax: 0112434071

55, Sea Sheet,
Colombo 11.



சிவனின் மைந்தா! சிவனுக்கு உபதேசம் செய்தனையோ
தமிழன் தெய்வம் முருகன்! அல்லலுறும் தமிழினத்திற்கு உன் உபதேசம் தான் என்ன?

கலை வாணியின் தோற்றமே அழகு தான்
வீணையை கையில் ஏந்தி நிற்கும் அழகும் அழகேதான்
அந்த அழகுக்கும் விஞ்சி நிற்பது தங்க ஆபரண அணி கலன்கள்
அதனால் என்னவோ நகை மாளிகைக்கும்
"கலைவாணி" பெயர்! அது மிளிர்ந்த அழகை கொடுக்கிறது

அழகுக்கு அழகூட்டும் பற்பல டிசைன்களில் ஆபரணங்களை செய்வதற்கும்
பெற்றுக்கொள்வதற்கும் விரைந்து தேடும் இடம்

22 கரட்டில் விரும்பிய டிசைன்களில் நங்கையர் தேடி வரும் இடம்

# கலைவாணி
## நகை மாளிகை

தங்கப்பவுன் நகை வியாபாரம்

111, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

T.P: 2227356



தந்தைக்கு உபதேசம் செய்த வேல் முருகா
வந்த வினை வேரறுக்கும் வண்ணமயில் வாகனனே
தந்திடுவாய் உன் அருள் தனை!

41 வருட சேவையில் ....

# பரிமளா ஸ்ரோர்ஸ்

மகப்பேற்றுத் தாய்மாருக்கும், மழலைகளின் வளர்ச்சிக்கும், பூப்பெய்திய மங்கையருக்கும்
கட்டுடல் வேண்டி நிற்கும் காளையருக்கும், விளையாட்டில் வெற்றிபெற வீரர்களுக்கும்
வீராங்கனைகளுக்கும், குடும்பத்தில் அங்கத்தவர்கள் அனைவருக்கும்
அருமருந்தாகத் திகழ்வது

**நல்லெண்ணை உலகில் முன்னணி வகிப்பது V.S.P.**

## V.S.P. ஸ்பெஷல் லக்ஷ் ஓயில்

**பரிமளா ஸ்ரோர்ஸ்**

26, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

T.P 2222785





அழகும் கருணையுமே உருவமாகஅற்புத கோலம் காட்டி
அடியவரின் உள்ளம் கவர்ந்த முருகா! தமிழர் நலம் காக்க தேரேறி வாருமையா!

மின்னுவதெல்லாம் பொன்னல்ல மின்னுவதோ மின்னுவதாகவே இருக்க வேண்டும்
அது தான் தங்க நகை மனம் கவரும் கண்கவர் டிசைன்களுடன்
அமைக்கப்பட்ட ஆபரணங்கள் வாங்குவதற்கு

மங்கையர் நாடி வரும் இடம்:

# நித்யா நகை மாடம்

இல :- 149 -02, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.

021 222 3479

## கவசன்
நகைமாடம்

**129, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

இறைவா! இறைவா! என முருக நாமம் ஒலித்து
நல்லூரான் திருவடியை [illegible] தங்கரதமேறி காட்சி தாருமையா!

பாடசாலைகளுக்கோ, காரியாலயங்களுக்கோ தேவையான கருவிகள்
அத்தனையும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

# பேப்பர் ஹவுஸ்

இதோ யாழ் நகரில் பாடசாலை மற்றும் காரியாலய உபகரணங்கள்
அச்சுக்கூடங்களுக்குத் தேவையான பல வர்ண பற்பல காகிதாதிகள்
மாணவ மாணவிகளுக்கு தேவையான புதிய டிசைன்களில் பைகள்
கவர்ச்சி தரும் அப்பியாசக் கொப்பிகள் அனைத்துக்கும் நாடவேண்டிய இடம்



கணனி உபகரணங்கள் மற்றும் பல
பொலித்தீன் றோல் வகைகள் "அற்லஸ்" டிஸ்றிபியுடர்ஸ்
மொத்த சில்லறை விற்பனையாளர்கள்

300, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P:- 222 5343

திருவீதி எங்கும் பஜனைகள், காவடி ஆட்டம், முருகன் நாமங்கள் பலபாடி அடியவர்
குறைகளைய ஆறுமுகமாகி தேரேறிவா



நகை உலகில் ஓர் அற்புதம்
காலத்தால் அழியாத கற்பனைக்கு எட்டாத
அற்புத படைப்புகள்
நவ நாகரிக நங்கையரை மேன் மேலும் அழகுற
புத்தம் புதிய டிசைன்களில் மிளிர்ந்திடும் நகைகள்
**வாருங்கள், பாருங்கள் வாங்கி**
**மனத் திருப்தியுடன் செல்வீர்கள்**

# நியூ நகுலா ஜுவல்லறி

தங்கத்தின் தரம் என்றும் நிரந்தரம்
தங்கப் படைப்புக்கள் தங்கத்தின் தரம் என்றும் நிரந்தரம்
தங்கம் என்றால் தரம் தவறாமல் நாடுமிடம் நகுலா நகை மாடம்
காலத்தால் அழியாத – கற்பனைக்கு எட்டாத அற்புத படைப்புக்கள்
நவீன உலகத்திற்கேற்ப இணையற்ற
புத்தம் புதிய டிசைன்களில்

74, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P 222 5511

T.P :- 021 222 3473

நியூ லலிதாஸ் ஜுவல்லறி
171, கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.


சிறிய முதலீடு... குறுகிய காலம்... மன ஆறுதல்... பெரியவனானதும் பெரிய தொகை...
இசுறு
சிறுவர் கணக்கு
உங்கள் பிள்ளைக்கு 18 வயதாகும் போது ரூபா 1,000,000 வரை
கொமர்ஷல் வங்கியின்
இசுறு சிறுவர் சேமிப்புத் திட்டம்
• பிறந்த நாள் முதல் 16 வயது வரை உங்களுடைய பிள்ளைகளுக்கு அபூர்வமான சேமிப்புத்திட்டம்
• உங்களுக்கு ஏற்ற மாதிரி இரண்டு முதலீட்டுத் தெரிவுகள்
மாதாந்தம் (ரூபா 100 முதல் ரூபா 2,500 வரை)
முழுத்தொகை (ரூபா 1,000 முதல் ரூபா 117,000 வரை)
• வைப்பாளர்களுக்கு இலவச ஆயுள் காப்புறுதி
கொமர்ஷல் வங்கி



நாற்புறமும் வெள்ளை மணல் பரப்பி நடு வீதியில் குடி கொண்ட முருகா
தோகை மயில் மீதேறி வீதி வலம் வந்து
அடியவரின் துன்பமதை களைந்திடுவாய்

நங்கையரே! நங்கையரே! நீங்கள் விரும்புவது
அழகான பலவர்ண புதிய ஆடைகளல்லவா அலக்கழியத் தேவையில்லை
கடைகளெல்லாம் ஏறி இறங்கத் தேவையில்லை
ஒரே இடத்தில் ஒரே பார்வையில் விரும்பிய ஆடைகளைப் பெற்று
மன நிறைவோடு திரும்பலாம் நேரே வாருங்கள்

# கோபிகா
## ஆடையகம்

5/4 (3.ம), நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

T.P: 021 222 2377

# NSB TRIPLE A FIXED
# தேசிய சேமிப்பு வங்கி

26.06.2009 இல் அறிமுகப்படுத்தும்
அதி உயர் வட்டி வீதத்துடன் கூடிய புதிய திட்டம்.
வட்டி வீதம் 20%

## NSB TRIPLE A FIXED

25 000/- ரூபாவிற்கு மேற்பட்ட எந்தவொரு வைப்பிற்கும்
5 வருட முடிவில் 20% வட்டி
மூன்று வருட முடிவில் 18% வட்டி



அத்துடன்

அடகு சேவைக்கான வட்டி 19% மாக குறைக்கப்பட்டுள்ளது என்பதை
மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.



# யாழ் நகரில்

ஐஸ்கிறீம் உலகில் ராஜாவாக விளங்குவது

# ராஜா கிறீம் ஹவுஸ்

தன்னிகரில்லா சிறப்போடு மக்களை கவர்ந்திருக்கும் ஸ்தாபனம்

சொக்லட் கிறிப்ஸ் ராஜா ஸ்பெஷல் ஐஸ்கிறீம்

வனிலா ஐஸ்கிறீம் ஜெலி ஐஸ்கிறீம்

நட்ஸ் ஐஸ்கிறீம் புருட்சலட் ஐஸ்கிறீம்

சொக்லட் ஐஸ்கிறீம்

கட்லட், மட்டன், றோல், பற்றீஸ், மஸ்கட், கேக் வகைகள்,
மைசூர் பாகு, மீக்சர், குளிர்பானம்

யாவற்றையும் ஒரே இடத்தில் சுவைத்து மகிழ்ந்திட

# RAJA
## CREAM HOUSE

மக்கள் விருப்பத்திற்கேற்ப புதியகிளை ஒன்று
திறந்து வைக்கப்பட்டுள்ளது.

புதியகிளை

36, Kasthuriar Road,
Jaffna.

36, Kasthuriar Road,
Jaffna.



சுற்றி வரும் ஒளி மிளிரும் அழகன்
நல்லூர் எம்பதிதனில் வீற்றிருந்து வரமளிக்கு முருகனன்றோ

# SKT
# மகாலட்சுமி
## ஜீவல்லர்ஸ்

இந்திய ஆபரண டிசைன்களில் உங்கள் இளமைக்கு மெருகூட்டும்
கண்கவர் 22 கரட்டில் தங்க நகைகள் பெற்றுக் கொள்ள நாடுங்கள்
பெயருக்கேற்ற ஸ்தாபனம்.

ராஜா தியேட்டர் அருகாமை
213B, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தொ.பே: 021 222 8461





நல்லையெம் பதியினில் அழகுற வீற்றிருந்து
அடியவர்களை நின் பால் கவர்ந்திழுத்து அருள்
பாலிக்கும் முருகா தங்கரதமேறி காட்சி கொடுத்திடப்பா!

# கரன் எலக்ரிக்கல்

இயங்குகிறது. இங்கு சகல விதமான மின்சார உபகரணங்களையும்
சில்லறையாகவும் மொத்தமாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

**Orange Electricals** க்கு நாம் வட மாகாண ஏக விநியோகஸ்தர்கள்.

## Distributors of all kinds of Orange Electrical accessaries

T.P: 021 2228772
T.P: 021 2224505

100, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.



ஞானிகள் உருவாகி அற்புதம் காட்டிய நல்லை
திருநகரில் முருகன் எழுந்தருளி காட்சி தருங்கால்
எத்தனை துன்பங்களும் மறைந்திடும்

யாழ் நகரில் மூன்று சந்தியில் பிரகாசமாக அமைந்துள்ளது

ஸ்ரீ முத்துமாரி அம்மன் பல்பொருள் வாணிபம்

ஆஹா! என்ன கவர்ச்சி அற்புதமான பல்பொருள் காட்சி
உள்ளே சென்றால் "சுப்பர் மார்கட்" தான்

ஒரே இடத்தில் வீட்டுக்கு தேவையான
அத்தனை பொருட்களையும் ஒரே
இடத்தில் மலிவாக பெற்றுக்
கொள்ளலாம் விஜயம் செய்யுங்கள்

# ஸ்ரீ முத்துமாரி அம்மன்
# பல்பொருள் வாணிபம்

இல.342, 344, 346 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

T.P No: 2228666



சோதனையும் வேதனையும் வாழ்வில் விளையாட தொடங்கியதேன் வேலவா!
காத்திடுவாய்! தந்திடுவாய் அருளமுதம்

உலகளாவிய காலணி பெயர் பாட்டா
அதிலே விரும்பி
தெரிவு செய்வதற்கு தகுந்த ஒரே இடம்.

"பாட்டா" என்றால் காலணி
பற்பல வடிவமைப்பில் பற்பல நிறங்களில்
நவீன காலத்திற்கேற்ப
வரவழைத்து விற்பனை செய்யும்
பாட்டா முகவர்

# யாழ் காலணியகம்

JARL TRADE CENTRE

ஆஸ்பத்திரி வீதி,
இல. 11, நவீன சந்தை. (வெளிப்புறம்)
T.P:- 2223152

நானிலம் போற்றும் நல்லைக்குமரனை
நெஞ்சுருக நினைத்தால் அகன்றிடும் துன்பமெல்லாம்



# ஈஸ்வரன் றேடிங் கோ

ஹுமாலா ஹீறோ துவிச்சக்கர வண்டிகள் மற்றும் உதிரிப்பாகங்கள்
விற்பனையில் முன்னணியில் நிற்பவர்கள்

ஹீறோ் துவிச்சக்கர வண்டிகள்
ஹீறோ துவிச்சக்கர வண்டிகளின் உதிரிப்பாகங்கள்
நேரடியாக இறக்குமதி செய்பவர்கள்

**நாம் இப்பொழுது கொழும்புக்கும் யாழ்ப்பாணத்திற்கும்
A9 வீதியூடாக லொறி போக்குவரத்து செய்கிறோம்.**

# ESWARRAN TRADERS

69, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
☎ 021 222 2813, 021 222 3590, 011 222 4317

கார்த்திகை கந்தா! கலியுக வரதா!!
தங்கரதமேறி அருள் தந்து எம்மை காத்திடய்யா!!!



# சீமாட்டி

122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
*T.P: 021 2228564*

தரமான சுபமுகூர்த்தப் பட்டுப் புடவைகளின் கைராசியான ஸ்தாபனம்
அனைத்துப் புடவைகளின் மொத்த சில்லறை வியாபாரம்
பெயருக்கேற்ற ஸ்தாபனம்!
யாழ் நகரில் தேடித்தேடி நாடுவது" சீமாட்டியே "

*Wholesale & Retail*

# MANGAI SILKS

*Dealers in Textiles*

15, நவீன சந்தை, மங்கை சில்க்
சுன்னாகம்.

*Specialist in Wedding Sarees*

நாலரை மணி ஓசை கேட்டு எழுந்து வணங்கி
நலம் பல செய்து நல்லருள் தந்து காத்திடுவாய்



கடந்த 50 வருடகால மக்கள்
அன்புக்குரிய நிறுவனமாக
விளங்கும்

# E.S.P.நாகரத்தினம்
## சக நிறுவனம்

இன்று
வானுயர புகழோங்கி நிற்கிறது

தொண்டு, உண்மை கொண்டு மக்கள்
மனதில் இடம் பிடித்த பெருந்தகையின் ஸ்தாபனம்
யாழ் நகரில் துவிச்சக்கர மற்றும்
அதற்கு தேவையான உதிரிப்பாகங்கள்
அத்தனையும் விற்பனை முன்னணியில்
மேலோங்கி நிற்கிறது

ஷோமாலா காட்சி அறை புதிய கட்டிடத்தில்
திறந்து வைக்கப்படுகிறது.
அழகிய கட்டிடம், அழகிய காட்சியறை
விற்பனையாளரின் துரித சேவை, துவிச்சக்கர
வகைகளையும் அதற்குரிய அத்தனை பாகங்களையும்
ஒரே இடத்தில் பெற்று
சந்தோஷமடையுங்கள்.

## E.S.P.நாகரத்தினம்
### சக நிறுவனம்

52, 54 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 222 3096



சரவணப் பொய்கையின் சண்முக மலரே!
சஞ்சலம் தீர்த்திடும் கந்த வடிவேலா!! தங்கரதமேறி காட்சி தந்திடுவாய்!!!

# மைதிலி நகைமாடம்

நங்கையரின் ஒரே ஆசை தங்களை அழகு படுத்துவது அதற்கு தங்க ஆபரணங்கள் தான் முன்னணி வகிக்கிறது அதற்கும் இதோ இருக்கிறது புதிய நகைமாடம் அதுதான்

**மைதிலி நகைமாடம் புதிய இடம் கண்கவர் காட்சியகம்**
**விரும்பிய தெரிவுக்கு நங்கையர் நாடிவரும் இடம்**

**89, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**கிளை**
**79Z, செட்டியார் தெரு,**
**கொழும்பு.**

T.P **222 7902**





எந்தன் தெய்வம் நீயல்லோ
எனக்கு என்றும் அருள் தருபவனே
வண்ணமயில் கோலமுடன் காட்சி தந்திடப்பா!

உலகெங்குமிருந்தும் ஒரு சில நிமிடங்களில் பாதுகாப்பாக
பணத்தைப் பெற்றுக் கொள்ள இலகுவழி
யாழ்ப்பாணத்தில் MMBL உபமுகவர்

WESTERN UNION

# ஸ்ரீமுருகன் தொலைத்தொடர்பகம்

பணப் பரிமாற்றம்

உலகெங்குமிருந்து உங்கள் உறவினர்கள் WESTERN UNION
மூலம் பணம் அனுப்பி பணப்பரிமாற்றம் இலக்கம்
(MTCN 10 இலக்கங்கள்) கிடைத்து விட்டதா?
ஒரு சில நிமிடங்களில் உங்கள் கைகளில் பணம் கிடைக்க

## SRI MURUGAN
## TELE COMMUNICATION & AGENCY POST OFFICE

303,K.K.S.Road,
Jaffna.

T.P:0094-21-222 2670, 5392
Fax: 0094-21-2223214
e.mail: srimurugan@eureka.lk

# யாழ் நகரில் முதலாவது

முற்றிலும் நவீனமயப்படுத்தப்பட்டு குளிரூட்டப்பட்ட ஸ்தாபனம்.

# Annai Nagaa Food City



Annai Nagaa Food City

புதுப்பொலிவுடன்

- சுத்தமாக பொதி செய்யப்பட்ட மளிகைப் பொருள்கள்.
- பதப்படுத்தப்பட்ட உணவு வகைகள்
- எலிபன் ஹவுஸ் ஐஸ்கிறீம் வகைகள்
  (குறைந்த விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்)
- இறக்குமதி செய்யப்பட்ட பழ வகைகள், பழரசங்கள் மற்றும் குளிர்பான வகைகள்.
- அன்பளிப்பு, அழகுசாதன வாசனைத் திரவியங்கள்.
- சிறுவர்களுக்கான ஆடைகள், பாடசாலை உபகரணங்கள்,
  எழுது கருவிகள் மற்றும் பிளாஸ்ரிக் பொருள்கள் அனைத்தும்
  ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள

வாடிக்கையாளர் நலன் கருதி இரவு 7.00 மணி வரை திறந்திருக்கும்.

KEELLS

## அன்னை நாகா பூட் சிற்றி

175, K.K.S. Road, Jaffna. T.P - 021 5515, 021 7875



நல்லூர் முருகா! நாளும் பொழுதும் உனை வேண்டி நயமுடன்
புதுவாழ்வு தந்தாயப்பா நன்றெலாம் செழித்திட உன் திருப்பாதம் இறைஞ்சுகின்றேன்.

புதிய இடம் புதுமைப்பொலிவு அழகான காட்சிக்கூடம்

# இராஜேஸ்வரி

உங்களுக்கு வேண்டிய புதுவகையான ஆடைகள், கண்கவர் பஞ்சாபிகள்

சிறுவர் பெரியவர்களுக்கு றெடிமேட் உடைகள் என்பவற்றை வாங்கி மகிழ்ச்சி அடையுங்கள்
கொழும்பு "பாஷன்களுக்கு நிகர் யாழ்ப்பாணத்தில் "ராஜேஸ்வரி ரெக்ஸ்ரைல் தான்"

# இராஜேஸ்வரி ரெக்ஸ்ரைல்

இராஜேஸ்வரி ரெக்ஸ்ரைல்
புதிய இடமல்லவா லாபகரமான
விற்பனை ஒரு முறை விஜயம் செய்தால்
இராஜேஸ்வரியின் பெருமிதம் தெரியும்
வாருங்கள் பாருங்கள்

105, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
T.P - 222 6953

TIENS

# யாழ் மண்ணில் முதன் முறையாக புதியதோர் அறிமுகம்

நோயின் அறிகுறிகள் தோன்றுவதற்கு முன்னமே நோயினை இல்லாமல் ஆக்கிவிடுங்கள்

தற்போது உலகளாவிய ரீதியில் 191 நாடுகளில் இயங்கிவரும் சீனா நாட்டின் தலைசிறந்த நிறுவனங்களில் ஒன்றான Tianshi நிறுவனத்தின் தலைசிறந்த வல்லுநர்களால் உருவாக்கப்பட்ட

## சீரான இரத்த ஓட்ட மசாஜர்

## BLOOD CIRCULARIVE MASSAGER

### உங்கள் ஆரோக்கியம் உங்கள் கையில்

"சீரான இரத்த ஓட்டம் இதயத்தைப் பாதுகாக்கும் இதயம் உடல் உறுப்புக்கள் அனைத்தையும் பராமரிக்கும்."

தீவிர உடற்பயிற்சிகள் எதுவுமின்றி பல நோய்களை தீர்த்து வைக்கின்றது.



**இக்கருவியை உபயோகப்படுத்தும்போது ஏற்படும் நன்மைகள்**

- உடல் எடையைக் குறைக்கிறது.
- உடலில் கொழுப்பைக் குறைக்கிறது.
- உடலில் சீரான இரத்த ஓட்டம் நடைபெறுகிறது.
- இருதயம் சம்பந்தமான நோய். (Heart Attack)
- உடலிலுள்ள அசுத்தங்கள், நச்சுப் பொருட்கள் வெளியேறுகிறது.
- இரத்தக் குழாயிலும் அதன் பாதையிலும் உள்ள அடைப்புகளை நீக்குகிறது.
- இரத்த அழுத்தம், சர்க்கரை நோய், பக்கவாதம், மார்பு வீக்கம் முதுகுவலி, முழங்கால் வலி, மூட்டுவலி, மலச்சிக்கல், சீரணக்கோளாறு, தூக்கமின்மை போன்றவற்றிற்கு குறுகிய காலத்தில் தீர்வாகிறது.



TIANSHI நிறுவனம் 1992இல் LI JIN YUAN என்பவரால் சீனாவில் ஆரம்பித்து 1995இல் NET WORK MARKETING கம்பனியாக மாற்றப்பட்டது. தற்போது 191 நாடுகளில் இயங்கி வருகின்றது.



இதன் பெயர் வைப்ரோகியூர் (VIBROCURE) பல ஆண்டு ஆராய்ச்சிக்கு பிறகு கண்டறியப்பட்டது. புவியீர்ப்பு விசையை சாதகமாகக் கொண்டு இது வடிவமைக்கப்பட்டுள்ளது. இது இரத்தத்திலுள்ள நச்சுப் பொருட்களையும் கழிவுப் பொருட்களையும் சுழற்சி முறையில் இயக்கி கழிவு உறுப்புக்கள் வழியாக வெளியேற்றுகிறது. இதன் மூலம் உடல் உள்ளுறுப்புக்கள் அனைத்திற்கும் அதிகமான இரத்த ஓட்டத்தையளிக்கிறது.



இந்த நிறுவனத்தின் பொருட்கள் அனைத்தும் உலக அளவில் ISO 9002, FDA, UN, W.H.O. போன்ற நிறுவனங்களின் சான்று பெற்றுள்ளது

அதிர்வுகளின் ஆராய்ச்சிகளின்படி இக்கருவியை உபயோகப்படுத்தும் போது எதுவித பக்கவிளைவுகளும் ஏற்படாது



| | | |
|---|---|---|
| **MR.P.AMBIKAIKUMAR.**<br>ABOORPA HEALTH CARE CENTRE,<br>216, TEMPLE ROAD, NALLUR,<br>JAFFNA. 0776670108. | **DR.A.RAKAVAN.**<br>RAKAVO HOSPITAL, G.P.S. ROAD,<br>KALVIYANKADU, JAFFNA.<br>0602215095, 0773068979 | **POWER GYM**<br>230A, NAVALAR ROAD,<br>AANAIPPANTHY JUNCTION<br>JAFFNA. 0779900020 |
| SUN CITY FHRMACY & GROCEREY,<br>No: 518, HOSPITAL ROAD,<br>JAFFNA. 0779152359 | **RAKAVO HOSPITAL**<br>13/3, BEACH ROAD,<br>KURUNAKAR,<br>JAFFNA. 0773068979 | **MR.T.AGEEPAN.**<br>WILSON ROAD,<br>MADDUVIL EAST,<br>CHAVAKACHCHERY.<br>0775230063 |

குறிப்பு :


மதி கலர்ஸ்
பிறிண்டர்ஸ்
ஸ்கிறின், ஓப்செற், டிஜிற்றல் பிறிண்டிங்
அன் டிசைனிங்.
15/2, முருகேசர் லேன், நல்லூர், யாழ்ப்பாணம்.
T.P: 021 2229285

# நல்லைக்குமரன் மலர் 2009



தவத்திரு குடைச் சுவாமிகள்

## யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக்குழு